ஸ்ரீ:

## ஸ்ரீப்ருந்தாரண்ய மாஹாத்மியம்

என்கிற

# திருவல்லிக்கேணி

## ஸ்தல புராணம்.

ஸ்ரீப்ரஹ்மாண்ட புராண ஸ்லோகங்களும்,
முன்னோரின் தமிழ் வசனமும்

ஸ்ரீ. உ. வே. அ. வீ. நரஸிம்ஹாசார்யரால்
பரிசோதிக்கப்பட்டு

ஸ்ரீ உழுதமங்கலம்
மானம். நரஸிம்மலு நாயுடுவின் குமாரர்
சிந்தாதிரிப்பேட்டை, M. N. அய்யுலு நாயுடு என்கிற
M. N. ஆளவந்தார் இராமாநுஜ தாஸர் அவர்களால்
விஜயஸ்ரீ சித்திரைமீ திருவோணத்தன்று
வெளியிடப்பட்டது.

...ல் சிவில் இஞ்ஜினீயர் அண்டு கண்ட்ராக்டர்,
... தெருவு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்-2.

1949—1953

*All rights reserved*

2-0-0

ஸ்ரீ:

# ஸ்ரீப்ருந்தாரண்ய மாஹாத்மியம்

என்கிற

# திருவல்லிக்கேணி

# ஸ்தல புராணம்.

ஸ்ரீப்ரஹ்மாண்ட புராண ஸ்லோகங்களும்,
முன்னோரின் தமிழ் வசனமும்

ஸ்ரீ. உ. வே. அ. வீ. நரஸிம்ஹாசார்யரால்
பரிசோதிக்கப்பட்டு

ஸ்ரீ உழுதமங்கலம்
மானம். நரஸிம்மலு நாயுடுவின் குமாரர்
சிந்தாதிரிப்பேட்டை, M. N. அய்யுலு நாயுடு என்கிற
M. N. ஆளவந்தார் இராமாநுஜ தாஸர் அவர்களால்
விஜய௵ சித்திரை௴ திருவோணத்தன்று
வெளியிடப்பட்டது.

மெக்கானிகல் சிவில் இஞ்ஜினீயர் அண்டு கண்ட்ராக்டர்,
47, ஐயாமுதலி தெருவு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்-2.

**1949—1953**

*All rights reserved*

Q223:38.2111'K
N53

---

ஸ்ரீ. உ. வே. மஹாவித்வான். ஸ்ரீ காஞ்சீபுரம் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின் திருவடிஸம்பந்தியும், ஸ்ரீ உழுதமங்கலம் ஸ்ரீ மானம் நரஸிம்மலு நாயுடுவின் குமாரருமான M. N. அய்யுலு நாயுடு என்கிற M. N. ஆளவந்தார் இராமாநுஜ தாஸர் அவர்களால், தமது ஜ்யேஷ்டப்ராதாவான ஸ்ரீமான் M. N. வரதராஜராமாநுஜ தாஸர் அவர்களின் ஞாபகார்த்தமாக இந்த ஸ்ரீப்ருந்தாரண்ய மாஹாத்மியம் அச்சிட்டு, விஜய சித்திரை திருவோணத்தன்று வெளியிடப்பட்டது.

---

ARCHIVES LIBRARY
110008
EGMORE, MADRAS-



ஸ்வாமி எம்பெருமானர்.

# முகவுரை

இந்தப்புராணம், ப்ருந்தாரண்யமாஹாத்மியமென்றும், கைரவிணீ மாஹாத்மியமென்றும், திருவல்லிக்கேணி மாஹாத்மியமென்றும் திருவல்லிக்கேணி ஸ்தலபுராணமென்றும் வழங்கப்படுகிறது. இந்தத் திவ்யதேசத்திற்குப் புஷ்கரிணியைப்பற்றி, கைரவிணீயென்று ஸம்ஸ்க்ருதத்திலும், திருவல்லிக்கேணியென்று தமிழிலும் திருநாமம் ஏற்பட்டிருக்கிறது. கைரவமென்று அல்லிக் கொடிக்குப் பெயர். அதையுடைய தீர்த்தமாகையால், கைரவிணீயென்று பெயர்: அதன்பர்யாயமே திருவல்லிக்கேணி யென்பது. இந்தத் திவ்யதேசத்துக்கு, ப்ருந்தாவனமென்றும் ப்ருந்தாரண்யமென்றும் இந்தப்புராணத்தில் திருநாமம் ஏற்பட்டிருக்கிறது. ப்ருந்தா என்றால் துலசியென்றும், இது துலசிக்காடாயிருந்தபடியால் இதற்கு அந்தத்திருநாமம் வந்ததென்றும் தெரிகிறது. துலஸீவனமென்றும் துலஸீகானனமென்றும் ப்ருந்தாவநமென்றும் ப்ருந்தாரண்யமென்றும் கூறுவதால், இவையெல்லாம் ஓரேபொருளுடையன என்று ஏற்படுகிறது.

இந்தத் திவ்யதேசத்தில் ஐந்து எம்பெருமான்களும் ஐந்து புண்யதீர்த்தங்களும் உள்ளன. இந்தப்ருந்தாரண்யத்தில், ப்ருகு அத்ரி மரீசி மார்க்கண்டேயர் ஸுமதி ஸப்தரோமா ஜாலி என்று ஏழு மஹர்ஷிகள் தவம்புரிந்தார்கள். இந்தத் திவ்ய தேசத்துக்கு அடையாளம் காட்டுவதற்காக, முதலத்தியாயத்தின் திருநீர் மலையைப்பற்றி ஸங்க்ரஹமாகவும், மைலாப்பூரைப் பற்றி விசேஷமாகவும் நிரூபித்துள்ளார். மயிலாப்பூரில் ஸுப்ரஹ்மண்யனுடைய வைபவத்தையும் கொஞ்சம் காட்டியுள்ளார். 40-ஆம் சுலோகம் முதல் முழுவதும் ப்ருந்தாரண்ய மாஹாத்மியமும், கைரவிணீமாஹாத்மியமும் விரிவாயுள்ளன. மற்றும் ஒன்பதாமத்தியாயம் முழுவதும் கைரவிணீமாஹாத்மியமே. பத்தாவது அத்தியாயத்திலும் 510-ஆம் ஸ்லோகம் முதல் 532½ வரை கைரவிணீமாஹாத்மியம் விளக்கமாயுள்ளது.

இரண்டு மூன்று ஆகிய இரண்டு அத்யாயங்களில் வேதவல்லித்தாயார் ஆவிர்பாவமும் திருக்கல்யாணமும் மந்நாதனுடைய வைபவமும் கூறப்பட்டுள்ளன. மந்நாதனை ரங்கநாத

னென்றும் வழங்குவர். மூலவர் சயநத்திருக்கோலமாகையால், இந்த வ்யவஹாரம் ஏற்பட்டதாகும்.

" யதோமந்நாத இத்யாஹ-வேதவல்லீஸுசிஸ்மிதா,
ததோமந்நாத இத்யேவ-விஸ்ருதோபுவநத்ரயே" (146½)

என்ற ஸ்லோகத்தினல், வேதவல்லித்தாயார் மந்நாதனென்று சொன்னபடியால், மந்நாதனென்ற திருநாமம் ஏற்பட்டதென்று இந்தப் புராணமே சொல்லுகிறது. திருமங்கையாழ்வார் என்னையாளுடையப்பனென்று இத்திருநாமத்தின் பொருளேயே விளக்கிக்காட்டியுள்ளார். என்னையாளுடையப்பனென்றே பெரியோர்கள் வழங்குகிறுர்கள். மூன்றுமத்தியாயத்தின் கடைசியில் இம்மந்நாதனுடைய ஆவிர்ப்பாவத்தைக் காட்டும் ஸ்லோகம்

" மாகமாஸே மஹாதேஜா: த்வாதஸ்யாம் ஸஹரிஸ் ஸ்வயம்,
ப்ராதுராஸ ப்ருகோஸ்தஸ்ய ஹ்யாஸ்ரமே புண்யகர்மண:"()

என்பது. மூன்றுமத்தியாயத்தோடு மந்நாதன்வைபவம் முடிவடைகின்றது. இந்த மந்நாதன், ப்ருகுமஹர்ஷிக்கு ப்ரத்யக்ஷமானவர்.

இந்த திவ்யதேசத்தில் எழுந்தருளியிருக்கும் ஐந்து எம்பெருமான்களேயும் திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம் செய்திருக்கிறுர். திருமொழியில் இரண்டாம் பத்தில் மூன்றும் திருமொழி முழுவதும் இந்தத்திவ்யதேசவிஷயமே. அதில் இந்த மந்நாதன் விஷயமான பாசுரம், இரண்டாவது 'வேதத்தை' இத்யாதி. திருமழிசைப்பிரான் நான்முகன் திருவந்தாதியில் இந்த மந்நாதனே ஒரு பாசுரத்தினல் மங்களாஸாஸநஞ்செய்துள்ளார். அந்தப் பாசுரம் :—

" தாளா லுலகமளந்த வசைவேசொல்
வாளா கிடந்தருளும் வாய்திறவான்—நீளோதம்
வந்தலேக்கும் மாமயிலே மாவல்லிக்கேணியான்
ஐந்தலேவாய் நாகத்தணே " என்பது.

பேயாழ்வார் இந்தத்திவ்யதேசவிஷயமாகப் பொதுவாக ஒரு பாசுரம் ஸாதித்துள்ளார்: அந்தப் பாசுரம் :—

" வந்துதைத்த வெண்டிரைகள் செம்பவள வெண்முத்தம்
அந்திவிளக்குமணிவிளக்காம்—எந்தை
ஒருவல்லித்தாமரையாள் ஒன்றியசீர்மார்பன்
திருவல்லிக்கேணியான் சென்று " என்பது.

## அழகியசிங்கர் வைபவம்.

நான்கு ஐந்து ஆறு ஆக மூன்று அத்யாயங்கள், அழகிய சிங்கர் வைபவத்தைக் கூறுகின்றன. இவருடைய ஆவிர்ப்பாவ ஶ்லோகங்கள் :—

“ ஸததர்ஶ விமர்நஸ்ய மத்யே பாஸ்கரரோசிஷ:,
ஆஸீநம் பரமம் தேவம் நரஸிம்ஹஸ்வரூபிணம் (204)
ஶாரதாப்ரதீகாஶம் ஶாரதேந்துஸமாநநம்,
ரக்தோத்பலதலாபாக்ஷம் ஸடாபடலபீஷணம் ” (205)

என்பவை. இவரைப்பற்றின திருமங்கையாழ்வார் மங்களா சாஸநப் பாசுரம்–முன்சொன்ன விற்பெருவிழவென்கிற திரு மொழிப்பதிகத்தில் எட்டாவது பாசுரம் :—‘ பள்ளியிலோதி ’ இத்யாதி. இவர் அத்ரிமஹர்ஷிக்கு ப்ரத்யக்ஷம். இவரைத் தெள்ளியசிங்கரென்று பெரியோர்கள் அநுஸந்திப்பர்: இதுவும், ‘ தெள்ளியசிங்கமாகிய தேவை ’ என்கிற திருமங்கையாழ்வார் பாசுரத்தைப்பற்றி வந்ததாக இருக்கலாம்.

## சக்ரவர்த்தித்திருமகன் வைபவம்

ஏழாவது அத்யாயம் முழுவதும், சக்ரவர்த்தித்திருமகன் வைபவத்தை யுட்கொண்டது. இவருடைய ஆவிர்ப்பாவ ஶ்லோகங்கள் :—

“ கேநசித்த்வத காலேந த்யாயதஸ்தஸ்யவை முநே:,
உதங்முகஸ்ய புரத: ப்ராதுராஸ ஜகத்குரு: (347)
யாத்ருகாஸீத் புராராமோ ராஜ்ஞோ தஶரதஸ்யஹி,
ப்ராத்ருபிஸ்ஸஹிதஸ்தாத்ருக் ஸஸீத: ப்ரத்யத்ருஶ்யத ” ()

என்பவை. இவரைப்பற்றின திருமங்கையாழ்வார் மங்களாசா ஸநப்பாசுரம், ஷெபதிகத்தில் ஏழாவது பாசுரம் “ பரதனும் தம்பி சத்துருக்கனும் ” இத்யாதி. இவர், மதுமானென்னும் மஹர்ஷிக்கு ப்ரத்யக்ஷமானவர்.

## பார்த்தஸாரதி வைபவம்

எட்டாவது அத்யாயம் பெரும்பாலும் பார்த்தசாரதி வைப வத்தை விசேஷமாகச் சொல்லுகிறது. இவ் வெம்பெருமான் வ்யாஸ மஹர்ஷியால் ப்ரதிஷ்டை செய்யப்பெற்றவர்: ஆத்ரேய மஹர்ஷியால் ஆராதிக்கப்பட்டவர். இவரைப்பற்றின ஶ்லோ கங்கள் :—

"ஸஇதாநீமபி முநேத்ருஶ்யதே தத்ரமாநவை:,
ருக்மிண்யாசாநிருத்தேநப்ரத்யும்நேநச ஸேவித: (406½)
ஹலாயுதேநஸஹிதஸ்ததா ஸாத்யகிநா ஸஹ,
பார்த்தஸாரதி ரித்யேவவிஶ்ருதோ ஜகதீதலே" (407½)

என்பவை. இவரைப்பற்றின திருமங்கையாழ்வார் மங்களாஶாஸநம்-2-ஆம்பத்து, 3-ஆந் திருமொழியில் 1-3-4-5-6-ஆக ஐந்து பாசுரங்கள்.

துண்டீர மண்டலத்தில் ஸுமதியென்ற மஹாராஜன் இருந்தான்: அவன் திருவேங்கடமுடையானை வெகுகாலம் ஸேவித்து, பாரதயுத்த நிர்வாஹஞ் செய்த ஸ்ரீ க்ருஷ்ணனை ஸேவிக்கவேணுமென்று சிந்தை கொண்டான். திருவேங்கடமுடையானும், "ப்ருந்தாரண்யமென்கிற புண்ய க்ஷேத்ரத்துக்குப் போவாய். அங்கு உன் மனோரதப்படியே ஸேவை ஸாதிப்போம்" என்று சொல்லியருள, அப்படியே ஸுமதி மஹாராஜன் ப்ருந்தாரண்யத்தை யடைந்து பார்த்தஸாரதியை ஸேவித்து சைத்ரமாஸத்தில் மஹோத்ஸவமும் செய்வித்தான் என்று இங்கு விசேஷமாகச் சொல்லப்பட்டுள்ளது.

## தேவப்பெருமாள் வைபவம்

எட்டாவது அத்யாயத்தின் கடைசியில் 432-ஆம ஶ்லோகம் முதல் அத்யாயம் முழுவதும் தேவப்பெருமாள் விஷயம். இவர் ஸப்தரோமாவென்னும் மஹர்ஷியின் ப்ரதிஷ்ட்டை. இவரைப் பற்றின ஶ்லோகம்:—

"ஸோபி ஸம்ப்ரதிஸர்வேஷாம்ப்ராணிநாம் கோசரீபவந்,
வரதோநாம தேவேஶோத்ருஶ்யதே தத்ரவைஹரி:" (436)

என்பது. இவரைப்பற்றின திருமங்கையாழ்வார் மங்களாஶாஸநப்பாசுரம்.—ஷி பதிகத்தில் ஒன்பதாவது "மீனமர் பொய்கை" இத்யாதி.

## தீர்த்த வைபவம்

ஒன்பதாவது அத்யாயம் முழுவதும் கைரவிணீதீர்த்த மாஹாத்மியம். பத்தாவது அத்யாயத்தில் இந்த்ரதீர்த்தம் முதலிய ஐந்து தீர்த்தங்களின் மாஹாத்மியம் கூறப்பட்டுள்ளது. இந்த்ரதீர்த்த மாஹாத்மியம்–497½, 498½ ஶ்லோகங்கள். ஸோம தீர்த்த மாஹாத்மியம்—497½, 500½ ஶ்லோகங்கள். மீநதீர்த்த

மாஹாத்மியம்—501½, 502½ ஸ்லோகங்கள். இந்த மீனதீர்த்தத்தையே 'மீனமர் பொய்கை' என்று திருமங்கையாழ்வார் அருளிச் செய்துள்ளார்.

அக்கினிதீர்த்த மாஹாத்மியம்—503½, 504½ ஸ்லோகங்கள். விஷ்ணுதீர்த்த மாஹாத்மியம்—505½, 506½, 507½ 508 ஸ்லோகங்கள். இதற்குமேல் 509-முதல் 532-வரையில் மறுபடியும் கைரவிணீதீர்த்த மாஹாத்மியம்: இதற்குமேல், பலஸ்ருதி. இந்த ப்ரகாரம், இந்தப் புராணம் முடிகிறது.

இந்தப் புராணத்தை அச்சிட வேண்டுமென்னும் அபிப்ராயம், வெகுகாலமாய்ப் பலர்க்கும் இருந்தது. இப்பொழுது பகவத் ஸங்கல்பத்தால் அது நிறைவேறிற்று.

இதில், பல பிழைகள் ஏற்பட்டிருக்கக்கூடுமாகையால், அவைகளைப் பெரியோர்கள் திருத்திக்கொண்டு எமக்கும் தெரிவிக்கவேணுமாய்ப் ப்ரார்த்திக்கிறோம்.

இதை அச்சிடுவிக்கிற விஷயத்தில் ஸ்ரீ உ. வே. வைத்தமாநிதி முடும்பை கோபாலக்ருஷ்ணமாச்சார்யஸ்வாமி செய்தன ஸ்ரீகோசம் ஸாதித்தது, அச்சுக்கு எழுதின காபியை ஆமூலாக்ரம் கடாக்ஷித்துச் சோதித்துக் கொடுத்தது, அதை மாத்ருகையுடன் ஒத்திட்டுப்பார்த்தது, ப்ரூப் பார்த்தது முதலியனவாகும்.

அ. வீ. நரஸிம்ஹாசார்யர்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# முன்னுரை.

ஆஸ்திகரான ஸ்ரீவைஷ்ணவர்காள்! திருவல்லிக்கேணி என்ற இந்த நாமதேயம் கைரவிணி என்ற தீர்த்த விசேஷப் பெயரின் மொழிபெயர்ப்பாகி, ஸ்தலத்திற்கே பெயராயிற்று: அப்படியுள்ள இந்த ஸ்தலத்தின் மகிமையைத் தெரிந்துகொள்ளவேணுமென்ற எண்ண முடையார் எவர்க்கும் அதற்கு ஸாதநமாக இருப்பது, இந்த ஸ்தலத்தைப்பற்றிய புராணமே யாகும்.

இந்த ஸ்தலபுராணம், ஸ்ரீப்ரஹ்மாண்ட புராணத்தில் ஸ்ரீ ப்ருந்தாரண்ய மாஹாத்ம்யம் என்ற பெயரோடு பத்து அத்தியாயங்களைக் கொண்டதாய்ப் பிராசீந ஸ்ரீகோசங்களிற் காணப்படுகின்றது. இந்த ஸ்தல புராண ஸ்லோகங்கள், பொருளை இனிது விளக்கும்படி முன்னேரெழுதிய தமிழுரைநடையைக் கொண்டுள்ளன. ஆகவே இந்தப்புராணப் பதிப்பு, எல்லோர்க்கும், கூறியுள்ள விஷயத்தை இனிது தெரிவிக்கும்.

அவ்வாறான உரைநடையோடுள்ள இந்த ஸ்தலபுராணம் நன்கு பரிசீலித்து அச்சிடப்பட்டிருப்பது, மிகவும் பாராட்டத் தக்கது. இதில், புராணத்தை அச்சிடுவதோடு நில்லாமல், இந்த திருவல்லிக்கேணியின் மங்களாசாசனப் பாசுரங்களும் அவற்றின் பொருளும் நன்கு அமைந்திருக்கின்றன. மேலும் இந்த திவ்விய தேசத்தின் ஸுப்ரபாதஸ்லோகங்களும் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளன; ஆகவே, இந்த க்ரந்தம், பலருக்கும் உபயோகமாகுமென்பது, அடியேனது முழு நம்பிக்கை.

17, துளசிங்கப் பெருமாள்
கோவில் தெருவு,
திருவல்லிக்கேணி,
சென்னை, 7-3-'53.

இப்படிக்கு
வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யர்.

ஸ்ரீ

# முன்னுரை

"விண்மீதிருப்பாய் மலைமேல் நிற்பாய் கடல் சேர்ப்பாய் மண்மீதுழல்வாய் இவற்றுளெங்கும் மறைந்துறைவாய்" என்று நம்மாழ்வாரருளிச் செய்தபடியே எம்பெருமான் பரவ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சைகளென்கிற ஐந்து நிலைமைகளையுடையனாயிருப்பன். "வைகுண்டேது பரே லோகே ச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி:, ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ் ஸஹ" என்கிறபடியே ஸ்ரீ வைகுண்டத்திலெழுந்தருளியிருக்கும் நிலை பரத்வமெனப்படும். வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த ரூபேண திருப்பாற்கடலில் எழுந்தருளியிருக்கும் நிலை வியூஹ மெனப்படும். ஸ்ரீ ராமகிருஷ்ணாத்யவதார நிலை விபவ மெனப்படும். "பரந்ததண் பரவையுள் நீர் தொறும் பரந்துளன்" என்கிறபடியே கருதரியவுயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையும் நிலை அந்தர்யாமித்வ மெனப்படும். கோயில் திருமலை பெருமாள் கோயில் திருநாராயணபுரம் திருவல்லிக்கேணி முதலான திவ்ய தேசங்களிலும் க்ருஹங்களிலும் தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவமாய்க் கொண்டு எழுந்தருளியிருக்கும் நிலை அர்ச்சாவதார மெனப்படும்.

இவ்வைந்து நிலைமைகளுள் பர வ்யூஹ விபவ அந்தர்யாமித்வங்கள் நான்கும் இப்போது நமக்குப் பயன்படாதனவாக, *பின்னானார்வணங்குஞ் சோதியாய், ஆச்ரயிப்பதற்குரிய ஸௌலப்யாதி குணங்கள் இருட்டறையில் விளக்குப்போலே ப்ரகாசிக்குமிடமான அர்ச்சாவதார மொன்றே நமக்குப் புகலாயிருக்கும். அர்ச்சாவதாரங்களுக்குள்ளே ஆழ்வார்களின் மங்களாசாஸனம் பெற்ற திவ்யதேசங்களே தலைசிறந்து விளங்குவன. இத்தகைய திவ்ய தேசங்களுக்குள்ளும், பார்த்தன்தன் தேர்முன்னின்ற ஸௌலப்யமும் கீதோபதேசம் செய்தருளின பரத்வமும் பொலியுமிடமான திருவல்லிக்கேணி என்னும் தலம் தனிச்சிறப்புப் பெற்றதாகும். முதலாழ்வார்களுடன் திருமழிசைப்பிரான் இத்தலத்தில் நெடுங்காலம் வாழ்ந்த பெருமையும் திருமங்கையாழ்வார் பதிகம்பாடப் பெற்ற பெருமையும் இத்தலத்திற்கு அமைந்துளது.

ஸ்ரீப்ருந்தாரண்ய க்ஷேத்ர மென்று புராணப்ரஸித்தி பெற்றவிடமான இத்தலத்தின் பெருமைகளை நாம் ஸ்தல புராணங் கொண்டே அறிய வேண்டியிருத்தலால் அத்தகைய ஸ்தல புராணம் இதுகாறும் அச்சிடப் பெறாதிருந்த குறையைத் தீர்த்து பாகவதமணியான ஸ்ரீமான் ஆளவந்தார் தாஸர் இத்தல புராணத்தை மிகஅழகிய முறையில் பெரியார்களைக் கொண்டு பிரசுரம் செய்வித்ததானது பக்தர்களுக்கு மிகப்பெரிய விருந்தென்னத்தட்டில்லை.

பக்தர்களனைவரும் இவ்வமுதத்தைப் பருகிக் களிப்பார்களாக.

இங்ஙனம்:

சின்ன காஞ்சீபுரம்
14-4-53

ஸ்ரீ காஞ்சீ. பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# அணிந்துரை

ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் ஸம்ஸாரி சேதனரான நம்மை உய்விக்கத் திருவுள்ளம் பற்றி அர்ச்சாரூபத்துடன் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திவ்ய தேசங்கள் பலவாம். அவற்றுள் "திருவல்லிக்கேணி" என்னும் திவ்ய தேசம் தனிச்சிறப்புப்பெற்றதாகும்.

"வார்த்தை யறிபவர் மாயவற்காளன்றி யாவரோ" என்பது பரமாசார்யரான நம்மாழ்வார் திவ்ய ஸூக்தியாம்.

"வார்த்தையறிபவர்-மஹாபாரத மெல்லாவற்றாலும் சொல்லிற்றாயிற்றது ஒரு வார்த்தைபாகாதே ப்ரயோஜனவத்தாவதிறே—வார்த்தை யாவது—"மாமேகம்" என்றத்தையிறே-இங்கு வார்த்தை என்கிறது. கீழடங்கலும் கடல் போலே; அதில் அம்ருதம் போலே இது. அவன் "என்னைப்பற்று" என்று சொல்லாநின்றால், இவர்கள் அவனையொழியவும் பற்றுவர்களோ. மாயவன்-ரஹஸ்யங்களெல்லாவற்றையும் வெளியிட்டானிறே என்பது ஈடுமுப்பத்தாறாயிரம்.

மேற்கூறிய திவ்ய ஸூக்தியையும், ஈடுமுப்பத்தாறாயிரத்தையும் காணுங்கால், "கையும் உழவுகோலும், பிடித்தசிறுவாய்க்கயிறும், ஸேனா தூளி தூஸரிதமான திருக்குழலும, தேருக்குக்கீழே நாற்றின திருவடிகளுமாய் நிற்கிற ஸ்ரீபார்த்தஸாரதியினுடைய சரணகமலங்களே நமக்கு ஆச்ரயிக்கத்தக்க விஷயம்" என்பது நன்கு விளங்குகின்றதன்றோ? இந்த எம்பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தலமிறே திருவல்லிக்கேணி.

'விற்பெருவிழவும் கஞ்சனும் மல்லும் வேழமும் பாகனும் வீழ
செற்றவன் தன்னை, புரமெரி செய்த சிவனுறு துயர் களை தேவை
பற்றலர் வீயக் கோல் கையில் கொண்டு பார்த்தன் தன்தேர்முன்நின்றானை
சிற்றவை பணியால் முடிதுறந்தானைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே.'

என்னும் திருமங்கை மன்னன் திவ்யஸூக்தி இங்கு அனுபவிக்கத்தக்கது.

இந்த திவ்யதேசத்திற்கு "ஸ்ரீப்ருந்தாரண்ய க்ஷேத்ரம்" என்று புராண ப்ரஸித்தி உண்டு. இத்திவ்ய தேசத்தின் பெருமைகளை ஸ்தல புராணங் கொண்டே அறிய வேண்டியிருக்கின்றமையின், ஸ்ரீமான். M. N. ஆளவந்தார் இராமாநுஜ தாஸர் இத்தலபுராணத்தை, எளிதில் யாவரும் அறியுமாறு மிக அழகிய முறையில் அமைந்த தமிழுரையுடனும், மற்றும் ஸுப்ரபாதம் முதலிய க்ரந்தங்களுடனும் அச்சிட்டு பக்தஜனங்களுக்கு பெரிய விருந்தாக அளித்திருக்கிறார்.

இந்நூலை ஆஸ்திகர் அனைவரும் அனுபவித்து ஆத்மோஜ்ஜீவனம் அடையுமாறு ஸ்ரீபார்த்தஸாரதி இன்னருள் புரிவானாக.

கோதாநிலயம்
மாதவன் ஸந்நிதி ஸமீபம்
23-4-53

இங்ஙனம்:
**வேங்கடாசாரியார்**
காரப்பங்காடு.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# முன் சொல்

ஸ்ரீ விஷ்ணு திவ்ய க்ஷேத்ரங்களில் ஒன்றாகிய திருவல்லிக்கேணியின் கண், பஞ்சேந்திரியங்களாகிய நச்சு நாகங்களால் நலிவுறுகிற சேதனர்கள் உய்யுமாறு ஜகத்பதியாகிய திருநாரணன் ஐவகையுருவில் அர்ச்சாவதாரங் கொண்டருளியுள்ளான். இவ்விஷயம் விரிவாக வரைந்துள்ளது வடமொழியில் ஸ்ரீபிருந்தாரண்ய மஹாத்மியம் என்னும் ஸ்ரீபிரம்மாண்ட புராணத்தின் ஓர் பகுதி. அதனை லோகோபகாரமாக வெளியிட சிந்தாதிரிப்பேட்டை வாசிகளான ஸ்ரீமான் மானம் நரஸிம்முலு நாயுடு எனும் செல்வனும், ஸ்ரீமதி தாயாரம்மாள் எனும் பெயரிய செல்வியும் புரிந்த தவப்பயன் என்ன தோன்றிய ஸ்ரீமான் வரதராஜராமாநுஜ தாஸர் அவாவினர். ஆயினும் அவர் ஆசை ஆர்வதற்குமுன்னர் திருநாடு அலங்கரித்தனர். அவரது தம்பியார் ஸ்ரீமான் ஆளவந்தார் இராமாநுஜ தாஸர் என்கிற தாஸ்ய நாமம் வகிக்கிற ஸ்ரீமான் M. N. அய்யுலு நாயுடு தம் தமையன் மநோரதத்தை தலைகட்டற்கு இந்த ஸ்ரீபிருந்தாரண்ய மஹாத்மியத்தை பெரியோர் அருளிய உரையுடன் வெளியிட்டனர். அதனோடு திருப்தி பெறாது இத்திருப்பதி ஸம்பந்தமானதும் முன்னோர் அருளியதுமான அனைத்தும் வெளியிடு மனத்தனராய் ஸ்ரீபார்த்தஸாரதி ஸுப்ரபாதம், ஆழ்வார்கள் பனுவல்களையும் உரையுடனும் ஸ்ரீபார்த்தஸாரதி மங்களம் மூலமும் அச்சிட்டு வெளியிட்டனர். இத்தகையோர் பல்லாண்டு பல்லாண்டாக வாழ்ந்து மற்றும் வைணவவுலகுக்கு நலங்களை இயற்றுவாராக!

25 சின்னதம்பி முதலி தெருவு,<br>திருவல்லிக்கேணி, சென்னை,<br>13-4-'53.

இங்ஙனம்:<br>அடியேன் இளையாழ்வார் தாஸன்.

---

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீருக்மிணீ சமேத ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமிநே நம:

வித்வான் கோயில் நம்மாழ்வாரய்யா அவர்களின்

# சிறப்புரை

ஸ்ரீமான் M. N. ஆளவந்தார் இராமாநுஜ தாஸர் அவர்கள் மிகவும் பக்தியுடன் பரம பாவனமான ஸ்ரீப்ருந்தாரண்ய மாஹாத்மியம் என்கிற திருவல்லிக்கேணி ஸ்தல புராணத்தை தெளிவான தமிழுரையுடன் அச்சிட்டு வெளியிட்டிருப்பது யாவரும் போற்றத் தக்கதே. ஸ்ரீவிஷ்ணுசித்தர் நாவலம் பெரிய தீவு என்று புகழ்ந்தருளிய ஜம்பு

## சிறப்புரை

த்வீபம் மிகச் சிறந்தது. ஜம்புத்வீபத்திலும் எம்பெருமானும், மெய்யடியார்களும் அவதரிக்கின்ற பாரத தேசம் மிகச்சிறந்தது. பாரததேசத்தின் வடபாகம் ஸ்ரீபதரியாஶ்ரமம் முதலான திவ்ய தேசங்களாலும், ஸ்ரீநைமிசாரண்யம் முதலிய புண்ணிய ஆரண்யங்களாலும், ஸ்ரீகங்கை முதலிய புண்ணிய நதிகளாலும் பகவதவதாரங்களினாலும், மகரிஷிகளின் அவதாரங்களினாலும், பெரும்புகழ் கொண்டுளது. பாரத தேசத்தின் தென்பாகமும், திருவரங்கம் பெரிய கோயில் முதலான திவ்ய தேசங்களாலும் ஸ்ரீதண்டகாரண்யம் முதலான புண்ணிய அரணயங்களாலும் திருக்காவேரி முதலான புண்ணிய நதிகளாலும் ஆழ்வார்களின் அவதாரங்களாலும் ஆசாரியர்களின் அவதாரங்களினாலும் பெரும்புகழ் கொண்டுளது. எனினும் வட நாட்டைவிட தென்னாடு பலமடங்கு திவ்ய தேசங்களால் மிகவும் விளங்குகின்றது. தென்னாட்டுக்குத் தலை நகரமாக விளங்குவது சென்னை மாநகரம். இத்தலை நகரத்திற்கு சிறந்த இரண்டு கண்கள் போன்றன, மா— மாமயிலையும் திருவல்லிக்கேணியும். இந்த இரண்டு ஸ்தலங்களையும் சேர்த்தே மஹான்கள் அனுபவித்தார்கள். இத்தால் மிகவும் சிறந்த திருவல்லிக்கேணியின் ஸ்தல புராணத்தை பக்த ஜனங்கள் யாவரும் படித்து பயனடைவது அவசியமாகும். 108 திவ்ய தேசங்களில் இஃதொரு திவ்ய தேசமாக கணக்கிடப்பட்டிருப்பினும் இதில் எழுந்தருளியிருக்கும் ஐந்து எம்பெருமான்களுக்கும் தனித்தனி மங்களாசாஸனங்கள் ஏற்பட்டிருப்பதால் கோயில் திருமலை பெருமாள் கோயில் திருவயோத்யை ஸ்ரீஅஹோபிலம் என்னும் ஐந்து திவ்ய தேசங்களுக்குள்ள பெருமை வாய்ந்தது இத்திருவல்லிக்கேணி என்னலாம்.

ஒரு கிராமத்தின் க்ஷேமத்தை பஞ்சாயத்தார்கள் கூடி நலனிழைப்பதைப்போல சம்சாரி சேதனோஜ்ஜீவனத்தை உத்தேசித்து வெகு அழகான கடற் கறையின் கண் அமைந்துள்ள இந்த திவ்ய தேசத்தில் ஐந்து எம்பெருமான்கள் கூடி ஒவ்வொருவரும் பஞ்சாம்ருதம் போல் பரமபோக்கியமாக எழுந்தருளி இருக்கின்றனர்.

ஸ்ரீப்ருந்தாரண்ய க்ஷேத்திர வைபவத்தில் இந்த ஐந்து எம்பெருமான்களுடைய மஹாத்மியங்கள் தெளிவாக தெரிவிக்கப்பட்டிருப்பதால் கற்றோர்கள் தாமுகப்பர் கல்வி தன்னிலாசையுள்ளோர் பெற்றோமென வுகந்து பின்பு கற்பர் என்கிறபடி ஸ்தல புராணம் தமிழில் வரவில்லை என்று நெடுங்காலம் எதிர்பாத்திருந்த பாகவதர்களின் விருப்பமானது ஸ்ரீமான் M. N. ஆளவந்தார் இராமாநுஜ தாஸர் அவர்களால் அச்சிட்டு வெளியிட்டிருக்கும் இந்த புராணத்தை படித்து திருப்திபடைந்து உகப்பர் என்பது உண்மை. இதை வெளியிட்டவரும் படிப்பவரும் ஸ்ரீப்ருந்தாரண்ய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீருக்மிணீ சமேத ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமியின் திருவருளுக்கென்று மிலக்காகி சதிராக வாழ்ந்திடுவர்.

ஜனரல் மர்சண்ட்
பார்த்தஸாரதி ஸந்நிதி
திருவல்லிக்கேணி
சென்னை 10-3-53.

இப்படிக்கு,
ஸ்ரீ வைஷ்ணவதாசானுதாஸன்
கோயில் நம்மாழ்வாரய்யா.

ஸ்ரீ

## பொருளடக்கம்

பக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீபார்த்தசாரதி ஸுப்ரபாதம் (பதவுரை) | ... | 1 |
| 2. | பேயாழ்வார் மங்களாசாஸன பாசுரம் (பதவுரை) | ... | 18 |
| 3. | திருமழிசைப்பிரான் மங்களாசாஸன பாசுரம்(பதவுரை)... | | 19 |
| 4. | திருமங்கையாழ்வார் மங்களாசாஸன பாசுரம் (பதவுரை)... | | 21 |
| 5. | முதல் அத்யாயம் ஸ்ரீப்ருந்தாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் | | 1 |
| 6. | 2-வது அத்யாயம் வேதவல்லித்தாயார் அவதாரமும் மங்காதன் ப்ருகுமஹருஷிக்கு ப்ரத்யக்ஷமானதும் ... ... | ... | 15 |
| 7. | 3-வது அத்யாயம் மன்னுதன் வேதவல்லியை ப்ரஹ்மாதி தேவர் ருஷிகள் முன்பாக திருமணம் செய்து கொள்ளல் ... | ... | 24 |
| 8. | 4-வது அத்யாயம் அத்ரிமுனிவர் தபசும், விகடமுனிவரும் | | 30 |
| 9. | 5-வது அத்யாயம் அத்ரிமுனிவருக்கு அழகியசிங்கர் ப்ரத்யக்ஷம் ... ... | ... | 35 |
| 10. | 6-வது அத்யாயம் அழகியசிங்கர், அத்ரி, ஜாபாலி முனிவர்களுக்கு மோக்ஷமளித்தலும் நித்யவாசம் பண்ண இச்சித்தலும் ... | ... | 42 |
| 11. | 7-வது அத்யாயம் ஶரபதர் குமாரரான மதுமானுக்கு ஸ்ரீராமபிரான் ப்ராத்ரு ஸீதா ஸஹிதமாக ப்ரத்யக்ஷமாதல் ... | ... | 49 |
| 12. | 8-வது அத்யாயம் ஆத்ரேயமஹருஷி ஸ்ரீ வேங்கடக்ருஷ்ணரை ஸகுடும்பமாக ப்ரதிஷ்டை செய்து ஆராதித்து மோக்ஷமடைதலும் ஸுமதி ராஜன் சைத்ர ப்ரஹ்மோற்சவம் நடத்தி மோக்ஷமடைதலும் ஸப்தரோமா மஹரிஷி கஜேந்த்ர வரதனை ப்ரதிஷ்டை செய்து ஆராதித்து மோக்ஷமடைதலும் ... | ... | 62 |
| 13. | 9-வது அத்யாயம் கைரவிணிதீர்த்த மஹிமை | ... | 74 |
| 14. | 10-வது அத்யாயம் கைரவிணிதீர்த்த மஹிமையும், மூத்கலர் கைரவிணி தீர்த்தத்திலுள்ள மீன்களை அனுக்ரஹித்தலும் ... | ... | 85 |
| 15. | அநுபந்தம் ... ... ... | ... | 95 |
| 16. | ஸ்ரீபார்த்தஸாரதி மங்கள ஸ்லோகங்கள் ... | ... | 96 |
| 17. | கீதாசார்யரே எம்பெருமானாராக அவதரித்தல் | ... | 97 |
| 18. | பேயாழ்வார் திருமழிசையாழ்வார் நித்யவாசம் | ... | 98 |
| 19. | வேங்கடக்ருஷ்ணர் கீதாசார்யர் வைபவம் | ... | 99 |
| 20. | ஸ்ரீக்ருஷ்ணாஷ்டகம் ... ... | ... | 102 |

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| | | ஸுப்ரபாதம் | |
| 7 | 15 | கோபாலகாசசா | கோபாலகாச்ச |
| | 28 | சஙக | சங்க |
| 8 | 31 | ஸ்ந்தாந: | ஸந்தாந: |
| | 32 | சாஸ்னத்தில் | சாஸனத்தில் |
| | | பெரிய திருமொழி | |
| 1 | 6 | வெழமும் | வேழமும் |
| | 14 | முஷ்டிககாதி | முஷ்டிகாதி |
| 3 | 23 | நெஞ்சு | நஞ்சு |
| 4 | 4 | கபைக்குறை | கடைக்குறை |
| | 15 | யகோத்ஸவ | மகோத்ஸவ |
| | 16 | கிராமத்தில் | கிரமத்தில் |
| | 28 | சத்துருக்கனும் | சத்துருக்கனனும் |
| 9 | 12 | வாகனருப் | வாகனராய் |
| | | பிருந்தாரண்ய மஹாத்மியம் | |
| 5 | 18 | ஸ்மாஹித: | ஸமாஹித: |
| 9 | 9 | வீபுல | விபுல |
| | 33 | விடுபடுகிறேனே | விடுபடுகிருனே |
| 11 | 33 | (65) | (56) |
| 12 | 34 | சந்த்ராயண | சாந்த்ராயண |
| | 31 | (51) | (61) |
| 14 | 26 | இதி ப்ரஹ்மாண்ட | இதி ஸ்ரீப்ரஹ்மாண்ட |
| 23 | 31 | புரணே | புராணே |
| | 32 | த்விதீயாத்zபாப: | த்விதீயோzத்யாய: |
| 32 | 13 | ஹ்த்ருபா | ஹ்ருத்யா |
| 63 | 3 | ஸமுத்யேரகம் | ஸமுத்யோகம் |
| 80 | 14 | மத்தவரண | மத்தவாரண |
| 84 | 21 | ப்ருந்தாரண்ப | ஸ்ரீ பிருந்தாரண்ய |
| 92 | 9 | வக்த்வ்யம் | வக்தவ்யம் |



ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி.

ஸ்ரீமதே ராமநுஜாய நம:



# ஸ்ரீ பார்த்தஸாரதி ஸுப்ரபாதமும் பதவுரையும்.

கௌஸல்யாஸுப்ரஜாராம ! பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே,
உத்திஷ்ட்ட நரஶார்த்தூல கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம்.

பதவுரை :—

கௌஸல்யாஸுப்ரஜாராம ! - கௌஸல்யைக்கு நல்ல பிள்ளையாகப் பிறந்த ராமனே, பூர்வா ஸந்த்யா - விடியற்கால ஸந்த்யை, ப்ரவர்த்ததே - ஆரம்பிக்கின்றது. நரசார்த்தூல ! - புருஷோத்தமனே, தைவம் - பகவானால் சாஸ்த்ரமூலமாக நியமிக்கப்பட்ட, ஆஹ்நிகம் - பகலில் செய்ய வேண்டிய கடமை, கர்த்தவ்யம் - செய்யவேண்டும். உன்னுடைய நியமனப்படி பகல் கடன்களைச்செய்ய எல்லோரும் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவற்றை அங்கீகரிக்கும் பொருட்டு, உத்திஷ்ட்ட - நீ எழுந்திருப்பாயாக.

உத்திஷ்ட்டோத்திஷ்ட்டகோவிந்த ! உத்திஷ்ட்டகருடத்வஜ !,
உத்திஷ்ட்ட கமலாகாந்த ! த்ரைலோக்யம் மங்கலம் குரு.

பதவுரை :—

கோவிந்த ! - கோவிந்தனே, உத்திஷ்ட்டோத்திஷ்ட்ட - எழுந்திரு எழுந்திரு, கருடத்வஜ ! - பெரிய திருவடியை த்வஜமாகவுடையவனே ! உத்திஷ்ட்ட - எழுந்திரு. கமலாகாந்த ! - ஸ்ரீமஹாலக்ஷ்மியின் மனத்துக்கினியனாயிருப்பவனே, உத்திஷ்ட்ட - எழுந்திரு, த்ரைலோக்யம் - மூன்று லோகங்களையும்; மங்கலம்குரு - மங்கலம் செய்வாயாக.

வந்தே ப்ருந்தாவநாந்தே மணிகணவிலஸத்ஸௌதஹர்ம்யே
[க்ருஹாட்யே,
ஸம்ராஜத்கைரவிண்யாஸ்தடபுவி க்ருணிமத்கோபுரேஸாலரம்யே,
ஆநந்தாக்யே விமாநே முநிகணவிநுதம் பார்த்தஸூதஞ்ச ராமம்,
ரங்கேஶம் ஸ்ரீந்ருஸிம்ஹம் கஜவரவரதம் ஸ்ரீக்ஷிதிப்யாம் ஸமேதம்.

பதவுரை :—

ஸம்ராஜத்கைரவிண்யாஸ்தடபுவி - தன்வைபவங்களால் விளங்குகிற கைரவிணியின் கரையில், மணிகணவிலஸத்ஸௌதஹர்ம்யே — மணி கண - ரத்னங்களின் ஸமூஹங்களால், விலஸத் - ப்ரகாசிக்கிற, ஸௌத - ராஜக்ருஹங்களையும், ஹர்ம்யே - தனிகர்களின் வாஸஸ்தானங்களையும் உடையதும், க்ருஹாட்யே - ஸாதாரணக்ருஹங்களால் நிறைந்திருப்பதும், க்ருணிமத் கோபுரே - (நாநாவித ரத்னங்களின்) ஒளிகளையுடைய கோபுர முடையதும், ஸாலரம்யே - மதிளால் அழகியதுமான, ப்ருந்தாவநாந்தே - ஸ்ரீப்ருந்தாரண்ய க்ஷேத்ரத்தில், ஆநந்தாக்யே-ஆநந்தமென்னும் பெயரை யுடைய, விமாநே - விமானத்தில் (வீற்றிருப்பவரும்), முநிகணவிநுதம் - முனிவர்களின் கூட்டங்களால் துதிக்கப்பட்டவரும், (ருக்மிணீஸத்ய பாமாஸமேதருமான), பார்த்தஸூதம்-ஸ்ரீபார்த்தஸாரதியையும், ராமம்- (சக்ரவர்த்தித் திருமகனென்று பெரியோர்களால் வழங்கப்படுகிற) ஸ்ரீராம பிரானையும், ரங்கேசம் - (என்னையாளுடையப்பனென்று திருமங்கையாழ் வாரால் மங்கலாசாஸனம் பண்ணப் பெற்றவரும் ஸ்ரீதேவி பூதேவிகளோடு கூடினவருமான) ரங்கநாதனையும், ஸ்ரீந்ருஸிம்ஹம் - (உபயநாய்ச்சிமார் களோடு கூடிய)அழகிய சிங்கரையும், ஸ்ரீக்ஷிதிப்யாம் ஸமேதம் - ஸ்ரீதேவி பூதேவிகளோடுகூடிய, கஜவரவரதம் - கஜேந்த்ரவரதனென்கிற தேவப் பெருமாளையும், வந்தே - ஸேவிக்கிறேன், பார்த்தஸூதம் - பார்த்தனென் றால் அர்ஜுனன், ஸூதனென்றால் ஸாரதி, அர்ஜுனனுக்கு ஸாரத்யம் பண்ணினபடியால் பார்த்தஸாரதியென்ற பெயர் வந்தது.

மாதஶ் ஸ்ரீர் ஜகதாமஶேஷஜகதாந்நாதஸ்ய பர்த்து: ப்ரியே !
தத்வக்ஷஸ்ஸ்த்தலநித்யவாஸிநி ஸதா ஸ்ரீவேதவல்ல்யாஹ்வயே,
ப்ருந்தாரண்ய நிவாஸி யோகிஸதநே ஸம்பூய வாராந்நிதே:,
மந்நாதாமரபூருஹேண ஸஹிதே, நைஶம் ப்ரபாதம் ஶுபம்.

பதவுரை :—

ஜகதாம் மாத.! - ஜகன்மாதாவே, ஸ்ரீ: - ஸ்ரீயென்னும் திருநாம முடைய ஸ்ரீமஹாலக்ஷ்மியே, அசேஷஜகதாம் - ஸர்வஜகத்துக்கும், நா தஸ்ய-நாதனான, பர்த்து: - பர்த்தாவுக்கு, ப்ரியே! — ப்ரியமாயிருப்பவளே, ஸதா தத்வக்ஷஸ்த்தலநித்யவாஸிநி - அவனுடைய திருமார்பில் ஒரு க்ஷண மும் பிரியமாட்டாமல் நித்யவாஸம் பண்ணுபவளே, ஸ்ரீவேதவல்ல்யா

ஹ்வயே-ஸ்ரீவேதவல்லி யென்னும் திருநாமமுடையவளே, ப்ருந்தாரண்ய நிவாஸியோகிஸதநே - இந்த ப்ருந்தாரண்ய க்ஷேத்திரத்தில் நித்யவாஸம் பண்ணுகிற ப்ருகுமஹர்ஷியின் திருமாளிகையில், வாராந்நிதே: ஸம்பூய - திருப்பாற்கடலினின்றும் வந்து ஆவிர்ப்பவித்து, மந்நாதாமரபூருஹேண - மன்னுதனுகிற கற்பவ்ருக்ஷத்தோடு, ஸஹிதே - கூடியவளே, (உனக்கு) சுபம் நைசம் ப்ரபாதம் - சுபமான இரவின் விடிவு (ஸுப்ரபாதம்).

ஸ்ரீமத்வேதலதாம் ஶ்ரிதாம்ருதலதாம் ப்ருந்தாவநே ஸம்ஸ்த்திதாம்,
ஸம்யக்த்ருஷ்டபராவரேண முநிநா ஸம்வர்த்திதாம் தத்திதாம்,
லப்த்வா தாம் ஸமுபேத்ய துக்தஜலதேஸ் தத்தத்தநாமா வஸந்,
மந்நாதாஶ்ரிதகல்பபூருஹ ! விபோ ! தே ஸுப்ரபாதம் ஹரே !.

பதவுரை :—

ச்ரிதாம்ருதலதாம் - ஆச்ரிதர்களுக்குக் கற்பகக்கொடிபோன்றவளும், ப்ருந்தாவநே - ப்ருந்தாரண்யக்ஷேத்திரத்தில், ஸம்ஸ்த்திதாம் - நித்யவாஸம் பண்ணுமவளும், ஸம்யக்த்ருஷ்டபராவரேண - (நெஞ்சென்னும் உட்கண்ணல்) பராவரதத்த்வங்களை நன்றாகக் கண்டறிந்த, முநிநா-ப்ருகுமஹர்ஷியால், ஸம்வர்த்திதாம்-நன்கு வளர்க்கப்பட்டவளும் தத்திதாம் - அந்த ப்ருகு மஹர்ஷிக்கு ஹிதமாயிருப்பவளும், தாம் - அப்படி ப்ரஸித்தி பெற்றவளுமான, ஸ்ரீமத் வேதலதாம் - எல்லாப் பெருமைகளும் வாய்ந்த ஸ்ரீவேதவல்லியை, துக்தஜலதே:-திருப்பாற்கடலினின்றும், ஸமுபேத்ய - எழுந்தருளி, லப்த்வா - திருமணம் புணர்ந்து, தத்தத்தநாமா - அவளால் கொடுக்கப்பட்ட மந்நாதனென்னும் திருநாமத்தையுடையவனாய், வஸந்(அஸி) - இங்கு நித்யவாஸம் பண்ணுகிறாய். ஆச்ரிதகல்பபூருஹ !- ஆச்ரிதர்களுக்குக் கல்பவ்ருக்ஷம்போல் எல்லா அபீஷ்டங்களையும் கொடுப்பவனே, விபோ ! - எல்லாத்திறமைகளும் அமைந்தவனே !, ஹரே ! -ஆச்ரிதர்களுடைய அனிஷ்டங்களையெல்லாம் போக்குமவனாகையால் ஸ்ரீஹரி, யென்னும் திருநாமமுடையவனே !, மந்நாத-என்னையாளுடையப்பனே !, தே ஸுப்ரபாதம் - உனக்கு நல்விடிவு.

ஸமஸ்த கல்யாண குணைகதாம்ந:,
ஸ்வஶக்திலேஶோத்த்ருத பூதலஸ்ய,
ப்ரஹ்லாதபக்தே: பரிவர்த்தகஸ்ய,
மந்நாத நாம்நஸ்தவ ஸுப்ரபாதம்.

பதவுரை :—

ஸமஸ்தகல்யாணகுணைகதாம்ந: — திருக்கல்யாண குணங்களுக்கெல்லாம் முக்யமான வாஸஸ்த்தானமாய், ஸ்வசக்திலேசோத்த்ருதபூதலஸ்ய - தன் சக்திலேசத்தால் பூமியை உத்தரித்தவனாய், ப்ரஹ்லாதபக்தே: - ப்ரஹ்லாதனுடைய பக்தியை, பரிவர்த்தகஸ்ய — மேன்மேலும்

வளர்ப்பவனுமாய், மந்நாதநாம்ந: - மந்நாதனென்னும் திருநாமமுடைய தவ - உனக்கு ஸுப்ரபாதம் - நல்விடிவு.

இந்த மந்நாதன் ஸந்நிதியில் வராஹப்பெருமாளும் அழகிய சிங்கரும் எழுந்தருளியிருக்கிறார்களாகையால் அதைத் தெரிவிக்கும்பொருட்டு வராஹப்பெருமாளைக் காட்டுகிற 'ஸ்வசக்திலேசோத்த்ருதபூதலஸ்ய' என்கிற பதமும், அழகிய சிங்கரைக் காட்டுகிற 'ப்ரஹ்லாதபந்தே: பரிவர்த்தகஸ்ய' என்கிற பதமும் இந்த ச்லோகத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றனவென்றுணர்க.

ஸ்ரீமத்கைரவிணீஸரோவரதடே நித்யம் தப: குர்வதே,
ஸம்யக்ஜ்ஞாநவதாம் வராய ப்ருகவே தத்வா த்வபீஷ்டம் வரம்,
லப்த்வா தஸ்ய ஸுதாம் ஜகத்த்ரயமுதே தஸ்மை ப்ரஸந்நஸ்யதே
மந்நாதாத்யஹி ஸுப்ரபாதமகிலாந் த்ராதும் ப்ரஸீத ப்ரபோ!

பதவுரை :—

மந்நாத!—ஓ மந்நாதனே, ப்ரபோ! - எல்லாத்திறமைகளும் அமைந்தவனே, ஸ்ரீமத் கைரவிணீஸரோவரதடே - பற்பல சிறப்புக்கள் வாய்ந்ததும் ஸரஸ்ஸுக்களில் ச்ரேஷ்ட்டமுமான கைரவிணியென்னும் ஸரதுவின் கரையில், நித்யம் - இடைவிடாமல், தப: குர்வதே - தவம்புரிகின்றவரும், ஸம்யக்ஜ்ஞாநவதாம் வராய - சிறந்த ஜ்ஞானமுடையவர்களில் சிறந்தவருமான, ப்ருகவே - ப்ருகுமஹர்ஷியின் பொருட்டு, அபீஷ்டம் - இஷ்டமான, வரம் - வரத்தை, தத்வா - கொடுத்து, ஜகத்த்ரயமுதே - மூன்று லோகங்களும் களிக்கும்படி, தஸ்ய ஸுதாம் - அவருடைய குமாரத்தியான வேதவல்லியை, லப்த்வா — மணம்புரிந்து, தஸ்மை - அவருக்கு, ப்ரஸந்நஸ்ய-ப்ரஸன்னனான, தே - உனக்கு, அத்ய — இப்பொழுது, ஸுப்ரபாதம் - நல்விடிவு. அகிலாந் - எல்லோரையும், த்ராதும் - பாதுகாக்க, ப்ரஸீத - அருள்புரிவாயாக.

ஸ்ரீமந்! தராபரவிமோசநதீக்ஷிதம் த்வாம்,
ஸம்போதயந்தி விதிஶங்கர ஶக்ர முக்க்யா:,
ஸ்வாமிந்! ஜகத்த்ரயவிபோ! யதுவம்ஶநாத!
ஸ்ரீபார்த்தஸூதே! பகவந்! தவ ஸுப்ரபாதம்.

பதவுரை :—

ஸ்ரீமந்! - பெரிய பிராட்டியாரோடு நித்ய யோகமுடையவனுய் ஸ்ரீ மானுயிருப்பவனே! தராபரவிமோசநதீக்ஷிதம் - பூபாரத்தை போக்க தீக்ஷித்துக்கொண்டிருக்கிற, த்வாம் - உன்னை, விதிசங்கரசக்ரமுக்யா: - ப்ரஹ்மா ருத்ரன் இந்த்ரன் முதலியவர்கள், ஸம்போதயந்தி - எழுப்புகிறார்கள். ஸ்வாமிந்! - எங்களை யாளும் பெருமானே, ஜகத்த்ரயவிபோ! - மூன்று லோகங்களுக்கும் ப்ரபுவே, யதுவம்சநாத! -

யதுவம்சத்துக்கு நாதனாய் அவதரித்தவனே, ஸ்ரீபார்த்தஸூத! - ஸ்ரீ பார்த்தஸாரதியே! பகவந்-ஜ்ஞாநசக்த்யாதிசாட்குண்ய பரிபூர்ணனாய் பகவானென்னும் திருநாமம் படைத்தவனே, தவ - உனக்கு, ஸுப்ர பாதம் - நல்விடிவு. 'தராபரதீக்ஷிதம்' என்ற இடத்தில் 'பரித்ராணாய ஸாதூநாம் விநாசாயச துஷ்க்ருதாம்' என்று துஷ்டநிக்ரஹ சிஷ்டபரி பாலனங்களிரண்டும் அவதாரப்ரயோஜனமானாலும் சிஷ்டபரிபாலனமே முக்யமென்பது பெரியோர்களின் கொள்கை. துஷ்டநிக்ரஹம் ஸங்கல்ப மாத்ரத்தாலே ஆகலாம். சிஷ்டபரிபாலனமோவென்றால் அப்படியன்று; அவர்களுடைய பரிமாற்றங்களுக்குத் தகுந்தபடி திருமேனியோடு நேரே வந்து ஸேவை ஸாதிக்க வேண்டுமாகையாலே. ஆயினும் ஸ்ரீ பாகவதத்தில் 'பூமிர்த்ருப்தந்ருபவ்யாஜ' இத்யாதியால் க்ருஷ்ணாவதாரத்துக்கு துஷ்ட நிக்ரஹத்தை முக்யமாகச் சொல்லியிருக்கையால் இங்கும் அதை உட் கொண்டு 'தராபரவிமோசநதீக்ஷிதம்' என்று கூறப்பட்டதென்றுணர்க. சிஷ்டபரிபாலனமே முக்யமானாலும் ததர்த்தமாகையால் துஷ்ட நிக்ர ஹமும் முக்யமேயென்று கருத்து.

பாஸ்வாந் விகாஸயதி பங்கஜ குட்மலாநி,
பத்மாகரேஷு பரிகூஜித ஸாரஸேஷு,
கூஜந்தி பஞ்ஜர ஶுகாஸ்ஸஹ ஶாரிகாபி:,
ஸ்ரீபார்த்தஸூத ! பகவந் ! தவ ஸுப்ரபாதம்.

பதவுரை :—

பரிகூஜிதஸாரஸேஷு - நாற்புறங்களிலும் ஸாரஸப்பறவைகள் கூவப் பெற்ற, பத்மாகரேஷு-தாமரைக்குளங்களில், பங்கஜ குட்மலாநி தாமரைமொக்குகளை, பாஸ்வாந் - ஸூர்யன், விகாஸயதி - தன் கிரணங்களால் மலரச் செய்கிறான். பஞ்ஜரசுகா: - கூடுகளிலிருக்கின்ற கிளிகள், சாரிகாபிஸ்ஸஹ - சாரிகைகளோடுகூட, கூஜந்தி - பொழுது விடிந்தமையால் உணர்ந்து கூவுகின்றன. ஸ்ரீபார்த்தஸூத ! பகவந் ! - ஸ்ரீபார்த்தஸாரதி பகவானே, தவ-உனக்கு, ஸுப்ரபாதம். சாரிகையென் பது பூவையென்று ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி ஸாதிக் கிறார். 'பூவை பைங்கிளிகள்' என்றும் 'பூவைகள்போல் நிறத்தன்' என்றும் திருவாய்மொழி. சாரிகையென்றால் பெண்கிளியென்று சிலர்; மைனாக் குருவியென்று சிலர். 'மம்பேப்ரீதிவிசிஷ்டாஸா மத்தோ லக்ஷ்மண சாரி கா, யஸ்யாஸ்தச்ச்ருபதே வாக்யம் சுக பாதமரேர் தச' என்று ஸ்ரீரா மாயண அயோத்யாகாண்டத்தில் ஐம்பத்து மூன்றாம் ஸர்க்கத்தில் 22ஆம் ச்லோகம் ஸ்ரீராமன் லக்ஷ்மணனைப் பார்த்துச் சொல்லுகிற வாக்யம்- அதற்கு வ்யாக்யானங்களிலும் சாரிகாபதத்துக்கு அர்த்தம் புலப்பட வில்லை.

வீணம் ப்ரக்ருஹ்ய முநிவாஹந யோகிவர்யோ,
காநம் கரோதி ஸஹ தும்புரு நாரதாத்யை:,
ஸங்கீதவாத்ய நிபுணாஸ்தவ ஸுப்ரபாத-
காதா: படந்தி யதுநந்தந ! ஸுப்ரபாதம்.

பதவுரை :—

முநிவாஹநயோகிவர்ய: - யோகிகளில் சிறந்த முனிவாஹனர் - (திருப்பாணாழ்வார்), வீணம் - வீணையை, ப்ரக்ருஹ்ய-எடுத்துக்கொண்டு, தும்புருநாரதாத்யைஸ்ஸஹ - தும்புரு நாரதர் முதலியவர்களோடு, காநம் கரோதி - கானம் பண்ணுகிறார். ஸங்கீதவாத்யநிபுணா: - ஸங்கீத வாத்தியங்களில் ஸமர்த்தர்களான மற்றும் பலர், தவ - உன்னுடைய, ஸுப்ரபாதகாதா: - ஸுப்ரபாதத்தை அறிவிக்கிற பல காதைகளை, படந்தி-படிக்கிறார்கள், யதுநந்தந - யது வம்சத்தில் பிறந்து அதற்கு ஸந்தோஷத்தை விளைவிப்பவனே, (ஸ்ரீபார்த்தஸாரதீ ! உனக்கு), ஸுப்ரபாதம்.

திருப்பாணாழ்வார்க்கு முனிவாஹனரென்னும் திருநாமம் வந்ததற்குக் காரணம் அவர் வைபவத்தில் கண்டுகொள்வது.

ப்ரஹ்மாதயஸ்ஸுரபதிப்ரமுகா திகீஶா:,
ஸ்வஸ்வாதிகார நியதாஸ்தவ ஸைந்யநாதா:,
ஸம்ப்ரார்த்தயந்தி தவ ஸத்மபுரோவிபாகே,
ஸ்ரீபார்த்தஸூத ! பகவந் ! தவ ஸுப்ரபாதம்.

பதவுரை :—

ப்ரஹ்மாதய: - ப்ரஹ்மா முதலியவர்களும், ஸுரபதிப்ரமுகா: - இந்த்ரன் முதலிய, திகீசா - திக்பாலகர்களும், தவ - உன்னுடைய, ஸைந்யநாதா: – ஸேனபதிகளும், ஸ்வஸ்வாதிகாரநியதா: - தங்கள் தங்கள் அதிகாரங்களில் நிலைநின்றவர்களாய்க்கொண்டு, தவ ஸத்மபுரோவிபாகே - உன் திருக்கோயிலின் திருமுன்பே (வந்து), ஸம்ப்ரார்த்தயந்தி - ப்ரார்த்திக்கின்றார்கள். ஸ்ரீபார்த்தஸூத ! பகவந் !-ஸ்ரீபார்த்தஸாரதி பகவானே, தவ - உனக்கு, ஸுப்ரபாதம்.

கோபாங்கநாஸ்தவஹி மங்கலகீதகாநி,
காயந்தி காமஶரபீடிதகாத்ரயஷ்ட்ய:,
கோபால பாலக குலாநி விஸ்ருஜ்ய வத்ஸாந்,
த்வாம் ப்ரார்த்தயந்தி யதுஶேகர ! ஸுப்ரபாதம்.

பதவுரை :—

கோபாங்கநா: – கோபஸ்த்ரீகள், காமசரபீடிதகாத்ரயஷ்ட்ய: - மன்மதபாணங்களால் பீடிக்கப்பட்ட கொம்புபோன்ற சரீரங்களையுடையவர்களாய், தவ மங்கலகீதகாநி-உனக்கு மங்கலாசாஸநம் பண்ணுகிற பாட்டுக்களை, காயந்தி - பாடுகிறார்கள். கோபாலபாலககுலாநி - சிறிய

இடைப்பிள்ளைகள் கூட்டங்கூட்டமாய், வத்ஸாந்-கன்றுகளை, விஸ்ருஜ்ய-கட்டுக்களினின்று அவிழ்த்து விடுத்து, த்வாம் ப்ரார்த்தயந்தி-உன் வரவை எதிர்பார்க்கிறார்கள். யதுசேகர - யதுக்களுக்கு சிரோபூஷணமாய்மேன்மையை விளைப்பவனே, (ஸ்ரீபார்த்தஸாரதீ !, உனக்கு), ஸுப்ரபாதம்.

ஸ்நேஹப்ரதில்ருதபயோதரபாரயுக்தா:,
காவ: ஸ்வ வத்ஸஸஹிதா: பரிதோஷயுக்தா:,
வத்ஸாந் விஸ்ருஜ்யச பய: பரிதோஹயந்தி,
கோபாலகாஸ்தவ யதூத்வஹ ! ஸுப்ரபாதம்.

பதவுரை :—

ஸ்நேஹப்ரதிஸ்ருதபயோதரபாரயுக்தா: - கன்றுகளிடத்தில் ஸ்னேஹத்தினால் பால் பெருகப் பெற்ற மடிகளின் பாரத்தோடு கூடிய, காவ: - பசுக்கள், ஸ்வவத்ஸஸஹிதா: - தங்கள் கன்றுகளுடன்கூடினவாய், பரிதோஷயுக்தா: (ஸந்தி) - ஸந்தோஷத்தோடு கூடினவைகளாயிருக்கின்றன. கோபாலகாசச-இடையர்களும், வத்ஸாந்-கன்றுகளை, விஸ்ருஜ்ய - விடுத்து, பய: பரிதோஹயந்தி-பால் கறக்கின்றார்கள், யதூத்வஹ-யதுக்களை ஆபத்துக்களினின்று கரையேற்றிப் பாதுகாப்பவனே !, ஸ்ரீபார்த்தஸாரதீ !) (உனக்கு) ஸுப்ரபாதம்.

ப்ருந்தாவநே விஹரதாம் பஶுபாலகாநாம்,
ரக்ஷார்த்த மாத்தவரவேத்ர ! ஸுஶங்க்கபாணே !
ப்ராத்ரா ஸமேத ! ஸுமநோஹரபூஷணார்ஹ !
ப்ரோத்திஷ்ட்ட பார்த்தரதபாலக ! ஸுப்ரபாதம்.

பதவுரை :—

ப்ருந்தாவநே - ப்ருந்தாவனத்தில், விஹரதாம் பசுபாலகாநாம் - பசுக்களை மேய்த்துக்கொண்டு விளையாடுகிற இடையர்களை, ரக்ஷார்த்தம் - பாதுகாக்கும்பொருட்டு, ஆத்தவரவேத்ர ! - ஒரு கையில் சிறந்த பிரம்பைப் பிடித்துக்கொண்டு, ஸுசங்க்கபாணே !-மற்றொரு கையில் அழகிய சங்கந்தரித்தவனே, ப்ராத்ரா ஸமேத ! - ஜ்யேஷ்ட்டப்ராதாவான பலராமனோடு கூடினவனே, ஸுமநோஹரபூஷணார்ஹ - மிகவும் அழகிய ஆபரணங்களால் அலங்கரிக்கத்தகுந்தவனே, பார்த்தரதபாலக - அர்ஜுனனுடைய ரதத்தை ஒழுங்காக நடத்திப் பாதுகாக்கும் பிரானே, (ஸ்ரீபார்த்தஸாரதீ !) (உனக்கு) ஸுப்ரபாதம். ப்ரோதிஷ்ட்ட - எழுந்திருப்பாயாக.

'ஸுமனோஹரபூஷணார்ஹ' என்கிற இடத்தில் அத்யந்தஸுந்தரமான அங்கங்களுக்கு என்ன கண்ணெச்சில் வருகிறதோ என்று பரிவுடையவர்கள் அதிசங்கை பண்ணி அழகிய ஆபரணங்களால் மறைக்க வேண்டிய அங்கங்களையுடையவனே ! என்று கருத்து.

ப்ருந்தாவநாந்தர மநோஜ்ஞவநாந்தரேஷு,
நாநாதருப்ரவரஶோபிஜலாஶயேஷு,
கூஜத்விஹங்கமகணேஷு மதுவ்ரதாநி,
காயந்தி பார்த்தரதநாயக ! ஸுப்ரபாதம்.

பதவுரை :—

நாநாதருப்ரவரசோபிஜலாசயேஷு - பல வகைப்பட்ட சிறந்த வ்ருக்ஷங்களால் விளங்குகிற ஜலாசயங்களை (நீர் நிலைகளை) உடையவைகளும், கூஜத்விஹங்கமகணேஷு - கூவுகின்ற பறவைகளின் கூட்டங்களை உடையவைகளுமான, ப்ருந்தாவநாந்தரமநோஜ்ஞவநாந்தரேஷு - ப்ருந்தாவனத்தினிடையிலுள்ள அழகிய வனாந்தரங்களில், மதுவ்ரதாநி - வண்டுகள், காயந்தி - பாடுகின்றன. பார்த்தரதநாயக ! - பார்த்தன் தன் தேர்முன் நின்று தேர் நடத்துந்திறமையினால் பாரதஸமரத்தை முடித்த மஹானுபாவனே, (ஸ்ரீபார்த்தஸாரதீ !) (உனக்கு) ஸுப்ரபாதம்.

(மதுவ்ரதாநி) என்ற இடத்தில் நபும்ஸக நிர்த்தேசம் 'ஸத்வாநி என்ற விசேஷ்யத்தை உட்கொண்டதா யிருக்கலாமென்று தோன்றுகிறது.

மந்தார குந்தவர கைதக மாதவீநாம்,
ஆமோத நிர்ப்பரவநாந்தரநிஸ்ஸ்ருதோ zஸௌ,
மந்தாநில: ப்ரஸரதி ப்ரவர: ப்ரபாதே,
ஸ்ரீபார்த்தஸூத ! பகவந் ! தவ ஸுப்ரபாதம்.

பதவுரை :—

மந்தாரகுந்தவரகைதகமாதவீநாம் - சிறந்த மந்தாரபுஷ்பங்கள் குந்த புஷ்பங்கள் கைதக புஷ்பங்கள் மாதவி புஷ்பங்கள் இவைகளின், ஆமோத நிர்ப்பரவநாந்தரநிஸ்ஸ்ருத: - வாஸனைகள் நிறைந்த வனாந்தரங்களில் ஸஞ்சரித்து அவ்வாஸனைகளோடு வெளி வருகின்ற, ப்ரவர: - சிறப்புற்ற, மந்தாநில: - இளங்காற்றானது, ப்ரபாதே - விடியற்காலத்தில், அஸௌ - இதோ, ப்ரஸரதி - வீசுகின்றது. (ஆதலால்) ஸ்ரீ பார்த்தஸூத ! பகவந் ! - ஸ்ரீபார்த்தஸாரதி பகவானே, தவ - உனக்கு, ஸுப்ரபாதம்.

மந்தாரமென்பது ஐவகையான கற்பவ்ருக்ஷங்களில் ஒன்று. 'பஞ்சைதே தேவதரவோ மந்தார: பாரிஜாதக:, ஸ்ந்தாந: கல்ப வ்ருக்ஷச்ச பும்ஸிவா ஹரிசந்தநம்' என்று நாமலிங்கானுசாஸனத்தில் அமரஸிம்ஹனால் சொல்லப்பட்டது. மந்தாரமென்று தனியே ஒரு புஷ்ப வ்ருக்ஷமென்றும் சொல்லலாமென்று தோன்றுகிறது; பண்டிதர்கள் ஆராய்ந்து கொள்க. குந்தமென்பது 'மாக்யம் குந்தம்' என்று அமரஸிம்ஹனால் கூறப்பட்டது. குருந்தமென்று தமிழில் அர்த்தம் எழுதியிருக்கிறார்கள். கைதகம் - தாழம்பூ. மாதவி - குருக்கத்தி யென்று கூறுகிறார்கள், (கொழுங்கொடி

முல்லையின் கொழுமலரணவிக் கூர்ந்தது குணதிசை மாருதமிதுவோ) என்றபடி காலையம்பொழுது தோன்றியதற்கு குணதிசைமாருதம் மந்தமாக வீசுதல் ஸூசகமாதலால் அதைச்சொல்லி 'நல்விடிவு ஆகுக' என்று எழுப்புகின்றனர்.

ஸம்புல்லகைரவஸரோவரநீரஸம்ஸ்த்தா:,
ஹம்ஸாஸ்ஸசக்ரமிதுநாஸ்ஸஹஸாரஸைஶ்ச,
தீரேது தேஶிககணைஸ்ஸஹ ஸம்விவாதாந்,
தந்வந்தி பார்த்தரதநாயக! ஸுப்ரபாதம்.

பதவுரை :—

ஸம்புல்ல கைரவஸரோவரநீரஸம்ஸ்த்தா: - நன்றாக மலர்ந்திருக்கிற ஆம்பல் புஷ்பங்களையுடைய ஸரஸ்ஸுக்களின் ஜலங்களில் ஸுகமாயிருக்கின்ற, ஹம்ஸா: - ஹம்ஸங்கள், ஸசக்ரமிதுநா: - சக்ரவாகமிதுனங்களோடு கூடினவைகளாய், ஸாரஸைச்சஸஹ - ஸாரஸப்பறவைகளோடுங்கூடி, (தெய்வத்தன்மை பொருந்திச் சிறந்த ஞானமுடையவைகளாகையால்) தீரே தேசிககணைஸ்ஸஹ - கரையில் இருப்பவரும் ஜ்ஞானானுஷ்ட்டான பரிபூர்ணராய் ஆசார்யபதம் நிர்வஹிக்க வல்லருமான பெரியோர்களின் கூட்டங்களோடு, ஸம்விவாதாந் - தத்த்வஹிதபுருஷார்த்த விஷயமான சிறந்த வாதப்போர்களை, தந்வந்தி - நடத்துகின்றன. பார்த்தரதநாயக! - பார்த்தன் தன் தேர்முன் நின்று அத்தேர் நடத்துந்திறமையினால் பாரதப்போர் முடித்த பிரானே!, (ஸ்ரீபார்த்தஸாரதீ! உனக்கு) ஸுப்ரபாதம்.

இந்த ச்லோகத்தில் 'நீரில் ஹம்ஸங்கள் முதலியன ஒலிக்கின்றன: அதற்கு ஏற்ப கரைகளிலே ஆசார்யர்களோடு (மாணாக்கர்கள்) பலவகை ஸம்வாதங்களைத் தாம் தெளியும் பொருட்டுச் செய்கின்றனர். (இப்படிப்பட்ட க்ஷேத்திரத்திலுள்ள) பார்த்தஸாரதியே! உனக்கு ஸுப்ரபாதம்' என்று கருத்துக்கொள்ளலாமென்று ஒரு பெரியோர் எழுதுகிறார். பூர்வார்த்தம் தனிவாக்யார்த்தமாகவும் உத்தரார்த்தம் தனிவாக்யார்த்தமாகவும் கொள்ளவேண்டும்; எப்படியெனில் பூர்வார்த்தத்தில் கூஜந்தி என்ற பதம் கூட்டிக்கொள்ளவேண்டும். உத்தரார்த்தத்தில் சிஷ்யா: என்ற பதம் கூட்டிக்கொள்ளவேண்டும். ஸம்புல்ல...ஸம்ஸ்த்தா:, ஹம்ஸா:, ஸசக்ரமிதுநா:, ஸாரஸைச்சஸஹ, கூஜந்தி, ஒலிக்கின்றன. நீரில் ஹம்ஸங்கள் முதலியன ஒலிக்கின்றன. தீரேது-(அதற்கு ஏற்ப) கரையிலே, சிஷ்யா: - மாணாக்கர்கள், தேசிககணைஸ்ஸஹ - ஆசார்யகணங்களோடு, ஸம்விவாதாந் - பலவகை ஸம்வாதங்களை, தந்வந்தி - (தாம் தெளியும் பொருட்டுச்) செய்கின்றனர். என்று பொருள்.

அசேதனமான பறவை முதலியவைகளும், ஜ்ஞானிகளாய் நல்ல தெளிவுடன் பேசுகின்றனவென்பது புராணங்களிலும் மற்றும் காவ்ய

நாடகாதிகளிலும் காணக்கூடிய விஷயமேயாகையால் ஹம்ஸங்கள் பெரியோர்களோடு வாதம் செய்வது எப்படியென்று ஸந்தேஹிக்க வேண்டியதில்லை.

ஸத்தேஶிகாஸ் ஸகலஶாஸ்த்ரவிதாம் வரிஷ்ட்டா:,
த்வத்ப்ரோக்ததிவ்ய சரமார்த்த நிவிஷ்டபாவா:,
காஸாரயோகிமுகதேஶிகஸூக்தி நிஷ்ட்டா:,
திஷ்ட்டந்தி கிங்கரக்ருதௌ தவ ஸுப்ரபாதம்.

பதவுரை :—

ஸகலசாஸ்த்ரவிதாம் - ஸகலசாஸ்த்ரங்களையும் அறக்கற்ற மாந்தர்களுள், வரிஷ்ட்டா: - சிறந்தவரும், த்வத்ப்ரோக்ததிவ்ய சரமார்த்த நிவிஷ்டபாவா: - நீ அருளிச்செய்த திவ்யமான சரமச்லோகார்த்தத்தில் நிலைநின்ற மனமுடையவரும், ஸத்தேசிகா: - ப்ரஹ்மமென்று சொல்லப்படுகிற உன்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளை உள்ளபடி அறிந்தவராகையால், 'ஸந்தமேநந்ததோ விது:' - என்கிறபடியே ஸத்துக்களென்று பேர்பெற்று ஜ்ஞாநாநுஷ்ட்டான பரிபூர்ணராய் பரோபதேசம் பண்ண வல்லரும், காஸாரயோகிமுகதேசிகஸூக்திநிஷ்ட்டா: - பொய்கையார் முதலிய ஆழ்வார்களின் அருளிச்செயல்களில் நிஷ்டையுடையருமான பெரியோர்கள், தவ கிங்கரக்ருதௌ திஷ்ட்டந்தி - உனக்குக் கைங்கரியம் பண்ண ஸித்தமாயிருக்கின்றார்கள், (ஸ்ரீபார்த்தஸாரதீ!) தவ - உனக்கு ஸுப்ரபாதம். 'தத்தேசிகா:' என்று பாடமானபோது தச்சப்தம் ப்ரஸித்தி வாசகம். ப்ரஸித்தரான பெரியோர்களென்று பொருள்.

ஸ்ரீபட்டநாதக்ருதிபிஸ்தவ மங்கலாநி,
ஶம்ஸந்தி தேஶிகவராஸ்த்வமிதப்ரபாவா:,
கோதாஸுஸூக்திபிரபி ப்ரதிபோதயந்தி,
ஸ்ரீபார்த்தஸூத! பகவந்! தவ ஸுப்ரபாதம்.

பதவுரை :—

அமிதப்ரபாவா: - ஜ்ஞாநம் விரக்தி சாந்தி முதலிய ஸத்குணங்களால் அளவற்ற வைபவங்களையுடையவர்களும், தேசிகவராஸ்து - ஜ்ஞாநாநுஷ்ட்டான பரிபூர்ணராய் ஆசார்யபதம் நிர்வஹிக்க வல்லவர்களில் சிறந்தவருமான பெரியோர்கள், ஸ்ரீபட்டநாதக்ருதிபி: - பெரியாழ்வாரென்னும் பெயர்பெற்ற ஸ்ரீபட்டநாதஸூரியின் பாசுரங்களை உட்கொண்டு, தவ மங்கலாநி-உன்னுடைய மங்கலாசாஸனபரமான பாசுரங்களை, சம்ஸந்தி-விண்ணப்பஞ்செய்கிறார்கள், கோதாஸுஸூக்திபிரபி-ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவை யென்கிற அழகிய திவ்யப்ரபந்த பாசுரங்களாலும், ப்ரதிபோதயந்தி-(உன்னை) எழுப்புகிறார்கள், ஸ்ரீபார்த்தஸூத! பகவன்! ஸ்ரீபார்த்தஸாரதி பகவானே!, தவ-உனக்கு, ஸுப்ரபாதம்.

தேசிகவராஸ்து-து அவ்யயம், பெரியோர்களின் வைலக்ஷண்யத்தைக் காட்டுகிறது.

ஸூர்யோதயே க்ரஹகணாஸ்த்விதரே ஸுரேந்த்ரா:,
ஆஜ்ஞாம் தவைவ நிஜவைபவஸம்ப்ரயுக்தா:,
ஸம்ப்ரார்த்த்ய தோஷிது மிஹாத்ய ஜகத்பதிம் த்வாம்,
திஷ்ட்டந்தி பார்த்த்ரத நாயக! ஸுப்ரபாதம்.

பதவுரை :—

ஸூர்யோதயே-ஸூர்யோதயஸமயத்தில், க்ரஹகணா:-ஸூர்யன் முதலிய க்ரஹக்கூட்டங்களும், இதரே-ஸுரேந்த்ரா :-மற்றுமுள்ள தேவச்ரேஷ்ட்டர்களும், நிஜவைபவ ஸம்ப்ரயுக்தா :- தந்தம்முடைய வைபவங்களை வெளிப்படுத்திக்கொண்டு, தவ-உன்னுடைய ஆஜ்ஞாம்-நியமனத்தை, ஸம்ப்ரார்த்த்ய - ப்ரார்த்தித்து, ஜகத்பதிம் - ஜகத்ரக்ஷகனை, த்வாம் - உன்னை, தோஷிதும் - ஸந்தோஷப்படுத்துவதற்கு, அத்ய - இப்பொழுது, இஹ திஷ்ட்டந்தி-இங்குவந்து நிற்கின்றார்கள். பார்த்தரதநாயக ! - பார்த்தனுடைய ரதத்தைப் பாது காப்பவனே !, (ஸ்ரீ பார்த்தஸாரதீ ! உனக்கு) ஸுப்ரபாதம்.

நித்யார்ச்சநாம் ரசயிதும் விவிதோபஹாராந்,
வஸ்தூநி வஸ்த்ரவர திவ்யவிபூஷணாநி,
ஸங்க்ருஹ்ய வைதிகசிகாமணய: ப்ரபாதே,
திஷ்ட்டந்தி பார்த்தரதபூஷண ! ஸுப்ரபாதம்.

பதவுரை :—

வைதிக சிகாமணய :-வேதங்களின் கரைகண்டு அவற்றின் அர்த்தங்களை ஆராய்ந்தறிந்து அதன்படி அனுஷ்ட்டிக்கவல்லவராய் வைதிகர்களென்று பேர்பெற்ற அந்தணர்களுக்குச் சிரோபூஷணம்போன்ற பெரியோர்கள், விவிதோபஹாராந் - நானாவிதமான பூஜாத்ரவ்யங்களையும், வஸ்த்ரவர திவ்யவிபூஷணாநி - சிறந்த திருப்பரிவட்டங்களையும் திவ்யமான திருவாபரணங்களையும், வஸ்தூநி - மற்றும் வேண்டிய சிறந்த வஸ்துக்களையும், ஸங்க்ருஹ்ய - ஸித்தப்படுத்திக்கொண்டு, நித்யார்ச்சநாம் - உன்னுடைய நித்யாராதனத்தை, ரசயிதும் - நடத்தும் பொருட்டு, ப்ரபாதே - விடியற்காலத்தில், திஷ்ட்டந்தி - வந்து நிற்கின்றார்கள். பார்த்தரதபூஷண ! - பார்த்தனுடைய ரதத்திக்கு அலங்காரமாயிருப்பவனே !, (உனக்கு) ஸுப்ரபாதம் -

காஶ்மீரகேஸரயுதம் ஹரிசந்தநஞ்ச,
கஸ்தூரிகாஞ்ச கநஸாரவரம் க்ருஹீத்வா,
த்வாரி ஸ்த்திதாஸ்தவஹி தாஸகணாஸ்ஸமஸ்தா:,
ஸ்ரீ பார்த்தஸூத ! பகவந் ! தவஸுப்ரபாதம்.

பதவுரை :—

தவ தாஸகணுஸ்ஸமஸ்தா :-உன்னுடைய தாஸவர்க்கங்களெல்லாரும், காச்மீரகேஸரயுதம்-குங்குமப்பூவோடு கூடிய, ஹரிசந்தநஞ்ச-ஹரிசந்தன மென்கிற சிறந்த சந்தனத்தையும், கஸ்தூரிகாம்-கஸ்தூரியையும், கநஸார வரஞ்ச-சிறந்த பச்சைக்கர்ப்பூரத்தையும், க்ருஹீத்வா - எடுத்துக்கொண்டு, த்வாரி-உன்னுடைய திருவாசல் முன்னே, ஸ்த்திதா:-வந்து நிற்கிறார்கள். ஸ்ரீ பார்த்தஸூத ! பகவன் ! - ஸ்ரீ பார்த்தஸாரதி பகவானே ! தவ - உனக்கு, ஸுப்ரபாதம்.

ஸம்புல்ல பங்கஜநவோத்பல கைரவாணி
ஸச்சம்பகைர் மருவகை: க்ருதமாலிகாநி,
ஸங்க்ருஹ்ய தாவகஸமர்ச்சநமாதரேண
திஷ்ட்டந்தி கர்த்துமநகாஸ்தவ ஸுப்ரபாதம்.

பதவுரை :—

அநகா : — ப்ரயோஜனாந்தரபரதையாகிற குற்றமற்ற பெரியோர்கள், ஸம்புல்ல பங்கஜ நவோத்பலகைரவாணி - நன்கு மலர்ந்திருக்கிற தாமரைமலர்களையும் கருநெய்தல்மலர்களையும் ஆம்பல்மலர்களையும், ஸச்சம்பகைர் மருவகை: க்ருதமாலிகாநி - சிறந்த செண்பக மலர்களையும் மருக்களையும் கலந்து கட்டின பூமாலைகளையும், ஸங்க்ருஹ்ய - எடுத்துக் கொண்டு, தாவக ஸமர்ச்சநம் — உன்னுடைய திருவாராதனத்தை, ஆதரேண-ஆதரத்துடன், கர்த்தும்-நடத்த, திஷ்ட்டந்தி - வந்து நிற்கிறார்கள். (ஸ்ரீ பார்த்தஸாரதீ !) தவ - உனக்கு, ஸுப்ரபாதம்.

பாக்யாதிகாஸ்தவ பதாப்ஜநிவிஷ்ட பாவா:,
பீதாம்பராண்யபரிமேயவிபூஷணாநி,
ரத்நாநி காஞ்சநயுதாநி ஸமர்ப்பயந்தி
ஸ்ரீ பார்த்தஸூத ! பகவந் ! தவ ஸுப்ரபாதம்

பதவுரை :—

தவபதாப்ஜநிவிஷ்டபாவா: - உன்னுடைய திருவடித்தாமரைகளில் நிலைநின்ற மனமுடைய, பாக்யாதிகா: - மிகுந்த பாக்யசாலிகள், பீதாம்பராணி - பீதாம்பரங்களையும், அபரிமேயவிபூஷணாநி - விலையுயர்ந்த திருவாபரணங்களையும், காஞ்சநயுதாநி - ஸ்வர்ணத்தில் அழுத்தின, ரத்நாநி - ரத்னங்களையும் (ரத்னாபரணங்களையும்), ஸமர்ப்பயந்தி - ஸமர்ப்பிக்க வந்திருக்கிறார்கள், ஸ்ரீபார்த்தஸூத ! பகவந் ! - ஸ்ரீபார்த்தஸாரதி பகவானே !, தவ - உனக்கு, ஸுப்ரபாதம்.

ப்ராத: ப்ரயுக்த நவநீதபய:பலாநி
முத்காந்ந லட்டுக மநோஹரமிச்ரிதாநி,

ஸோபாயநாநிச ஸமர்ப்பயிதும் யதந்தே
ஸ்ரீ வைஷ்ணவாஸ்தவ யதூத்வஹ! ஸுப்ரபாதம்

பதவுரை :—

ஸ்ரீவைஷ்ணவா: - ஸ்ரீவைஷ்ணவர்கள், ப்ராத:ப்ரயுக்தநவநீதபய: பலாநி - விடியற்காலத்தில் கடைந்தெடுத்த வெண்ணெய்களையும் அப்போது கறந்த பால்களையும் பற்பல பழங்களையும், முத்காந்நலட்டுக மநோஹரமிச்ரிதாநி - பொங்கல் முதலிய திவ்யாந்நங்களோடும் லட்டு மனோஹரம் முதலிய பல திருப்பணியாரங்களோடும் சேர்த்து, ஸோபாய நாநிச - மற்றும் பல உபஹாரங்களோடும் கூடியவைகளாக, ஸமர்ப்பயிதும் - ஸமர்ப்பிக்க, யதந்தே - யத்னிக்கிறார்கள். யதூத்வஹ-யதுகுலத்தை உத்தரித்த மஹானுபாவனே ! (ஸ்ரீ பார்த்தஸாரதீ !) (உனக்கு) ஸுப்ர பாதம்.

பேரீம்ருதங்கபடஹாநக கோமுகாதி
வாத்யாநி கோஷயதி தாஸகணஸ்தவாக்ரே,
திஷ்ட்டந்தி நர்த்தநபரா கணிகாஸ்ஸமஸ்தா:
ஸ்ரீபார்த்தஸூத ! பகவந் ! தவ ஸுப்ரபாதம்.

பதவுரை :—

தவதாஸகண: - உன்னுடைய தாஸவர்க்கம், பேரீம்ருதங்கபட ஹாநககோமுகாதி வாத்யாநி – பேரி ம்ருதங்கம் படஹம் ஆனகம் கோமுகம் முதலிய வாத்யங்களை, தவ அக்ரே - உன் திரு முன்பே, கோஷயதி - முழக்குகின்றது. கணிகாஸ்ஸமஸ்தா:–தேவதாஸிகளெல்லோரும், நர்த்தநபரா:-திஷ்ட்டந்தி – நர்த்தனஞ் செய்து கிஞ்சித்கரிக்க ஸித்தமாயிருக்கின்றார்கள். ஸ்ரீபார்த்தஸூத ! பகவந் ! -ஸ்ரீ பார்த்தஸாரதிபகவானே !, தவ் - உனக்கு, ஸுப்ரபாதம்.

ஹஸ்தீந்த்ர மூர்த்நி த்ருத காஞ்சந கும்ப தீர்த்தம்
சத்ராவ்ருதம் வித்ருத சாமரயுக்மமாராத்,
ஸ்ரீமந்! ப்ரபோ! தவஹி மங்கலமஜ்ஜநாய
ஸ்ரீபார்த்தஸூத! பகவந்! தவ ஸுப்ரபாதம் !

பதவுரை :—

ஸ்ரீமந் - நித்யமான ஸ்ரீயோகமுடையவனே !, ப்ரபோ ! - ஸமஸ்த லோகங்களையும் அடக்கியாளவல்லனே ! ஸ்ரீபார்த்தஸூத - ஸ்ரீபார்த்த ஸாரதியே !, பகவந் !-ஷாட்குண்யபரிபூர்ணனே!, தவ மங்கலமஜ்ஜநாய - உன்னுடைய மங்கல ஸ்நானத்திற்காய, ஹஸ்தீந்த்ரமூர்த்நி த்ருத காஞ்சந கும்ப தீர்த்தம் -கஜேந்த்ராழ்வான் திருமுடியில் வைக்கப்பட்ட ஸ்வர்ண கும்பதீர்த்தமானது, சத்ராவ்ருதம்-மேலே குடை பிடிக்கப் பெற்றதும், ஆராத் வித்ருதசாமரயுக்மம் - இருபுறங்களிலும் இரண்டு சாமரங்கள் வீசப்

பெற்றதுமாய், (உபாஹ்ருதம் - எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவரப்பட்டது.) தவ - உனக்கு, ஸுப்ரபாதம்.

த்வத்ஸேவநாய ஸகலத்ரவிடாகமாநாம்
வக்தா பராங்குஶமுநிஸ் ஸ்வபதப்ரபந்நை:,
ராமாநுஜோऽபி க்ருதநித்யஸமஸ்தக்ருத்ய:
த்வத்த்வாரி திஷ்ட்டதி விபோ! தவ ஸுப்ரபாதம்.

பதவுரை :—

ஸகலத்ரவிடாகமாநாம் - த்ராவிடவேதங்களென்று ப்ரஸித்தி பெற்ற திவ்யப்ரபந்தங்களையெல்லாம், வக்தா - ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு அருளிச்செய்து அவ்வழியாலே உலகத்தை வாழ்வித்த மஹானுபாவரான, பராங்குசமுநி: - நம்மாழ்வாரும், ராமாநுஜோऽபி - ஸ்ரீபகவத் ராமாநுஜாசார்யரென்று புகழ்பெற்ற எம்பெருமானாரும், க்ருதநித்ய ஸமஸ்தக்ருத்ய: - நித்ய கர்மானுஷ்ட்டானங்களை யெல்லாம் முடித்துக்கொண்டு, ஸ்வபதப்ரபந்நை: - தம் திருவடிகளில் ஆச்ரயித்த முதலிகளோடு, த்வத்ஸேவநாய - உன்னை ஸேவிக்கும் பொருட்டு, த்வத்த்வாரி - உன் திருக்கோயிலின் திருவாசலில், திஷ்ட்டதி - எழுந்தருளியிருக்கிறார்கள். தவ - உனக்கு, ஸுப்ரபாதம்.

பராங்குசமுநி: திஷ்ட்டதி, ராமாநுஜோऽபி திஷ்ட்டதி என்று தனித்தனியே அந்வயம். நம்மாழ்வாரும் எழுந்தருளியிருக்கிறார்; எம்பெருமானாரும் எழுந்தருளியிருக்கிறார் என்று பொருள். அதனால் ஏற்பட்டதாத்பர்யத்தை எழுந்தருளியிருக்கிறார்களென்று கூறியிருக்கிறதென்று கண்டுகொள்க. நம்மாழ்வார் ஒரு காலாந்தரத்திலவர், எம்பெருமானாரும் பின்னிட்ட ஒரு காலாந்தரத்திலவர்; ஆகையால் இவ்விருவர்க்கும் சேர்த்தி கிடையாது. இவ்விருவரும் தம் திருவடிகளில் ஆச்ரயித்தவர்களோடு உன்னை ஸேவிக்க வந்திருக்கிறார்களென்று சொல்லுவது எப்படி பொருந்துமென்று இங்கு ஒரு ஸம்சயம் உண்டாகக்கூடும். அர்ச்சாவதாரமாக எழுந்தருளியிருக்கிறவர்களைப்பற்றிச் சொல்லிற்றென்று கொள்ளலாம். தவிர நித்யஸூரிகளாயிருக்கிறவர்கள் பெருமாள் ஸேவிக்க வந்திருக்கிறார்களென்றும் கொள்ளலாம். 'தேஷாம் ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி' என்று அவர்களுக்குத் திருவுள்ளமானால் யதேஷ்டமாக ஸஞ்சரிக்கலாமாகையால் அவ்வழியிலும் இது பொருந்தும்.

உத்திஷ்ட்ட லக்ஷ்மணகுரோ! ஸஹ ஸீதயாத்ய
தர்மம் விவர்த்தய விபோ! ஜய பாலயாஸ்மாந்,
தாஸாந் குருஷ்வ ஸஹஸா தவ கிங்கராம்ஶ்ச
தே ஸுப்ரபாதமதுநா ரகுவம்ஶநாத!

பதவுரை :—

லக்ஷ்மணகுரோ ! - லக்ஷ்மணனுக்குத் தமையனே !, ஸீதயா ஸஹ - ஸீதையோடுகூட, அத்ய - இப்பொழுது, உத்திஷ்ட்ட - நித்ரையை விட்டு எழுந்திருப்பாயாக. விபோ! - எல்லாவற்றையும் நடத்த வல்லவனே !, தர்மம் - (ஆச்ரிதஸம்ரக்ஷணமாகிற உன்) தர்மத்தை, விவர்த்தய - வளர்த்துப் பாதுகாப்பாயாக. ஜய - சத்ருக்களையெல்லாம் வென்று ஸர்வோத்கர்ஷத்துடன் விளங்குவாயாக. அஸ்மாந் - (உன் திருவடிகளில் எல்லா வடிமைகளும் செய்ய வேண்டுமென்று அபேக்ஷிக்கிற) எங்களை, பாலய - பாதுகாப்பாயாக. தாஸாங்குருஷ்வ-ஸஹஸா தவகிங்கராம்ச்ச - எங்களை தாஸ்யச்சுவடறிந்தவர்களாகப் பண்ணி,விரைவில் கைங்கர்யவ்ருத்திநிஷ்டர்களாகவும் பண்ணுவாயாக. ரகுவம்சநாத – ரகுவம்சத்தை வளர்த்துப் பாதுகாத்த ஸ்ரீராமபிரானே !, அதுநா - இப்பொழுது, தவ - உனக்கு, ஸுப்ரபாதம். லக்ஷ்மணகுரோ என்கிற இடத்தில், லக்ஷ்மணனைத் தகப்பனாகவுடையவனே என்றும் பொருள் கூறலாம். 'நஸம்வ்ருத்த:பிதாமம' என்று சொன்னபடி லக்ஷ்மணனைத் தகப்பனாக நினைத்திருந்தானென்று தெரிகிறது. 'ஸீதயா ஸஹ' என்கிற இடத்தில் 'நகச்சிந்நாபராத்யதி' என்று புருஷகாரபூதையான ஸீதாபிராட்டியோடுகூட எழுந்தருளியிருந்து எங்கள் குற்றம் பாராமல் கடாக்ஷித்தருள வேண்டுமென்று கருத்து.

ஸ்ரீமந்! கஜேந்த்ரவரதாஸ்ரிதபாரிஜாத!
ஸ்ரீ வைநதேய புஜமூலவிபூஷணாட்ய!,
இந்த்ராதி தேவகணபூஜிதபாத பத்ம!
ஸ்ரீமந்! வரப்ரத! ஸுரேஸ்வர! ஸுப்ரபாதம்!!

பதவுரை :—

ஸ்ரீமந் - ஸ்ரீஸம்பந்தம் நித்யமாகப் பெற்று ஸ்ரீமானாயிருப்பவனே!, கஜேந்த்ரவரத - ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய அபேக்ஷிதத்தைத் தலைக்கட்டி ஸ்ரீ கஜேந்த்ரவரதன் என்று திருநாமம் பெற்றவனே!, ஆச்ரிதபாரிஜாத! - ஆச்ரிதர்களுக்குக் கல்பகவ்ருக்ஷம்போல் அபேக்ஷிதங்களையெல்லாம் கொடுப்பவனே !, ஸ்ரீவைநதேயபுஜமூலவிபூஷணாட்ய - பெரிய திருவடியின் தோள்களில் வந்து தொங்குகிற பற்பல திருவாபரணங்களால் நிறைவாளனாயிருப்பவனே!, இந்த்ராதிதேவகணபூஜித பாதபத்ம - இந்த்ரன் முதலிய தேவக்கூட்டங்களால் பூஜிக்கப்பட்ட பாதாரவிந்தங்களையுடையவனே !, வரப்ரத! - வரதனே!, 'ஸ்வர்க்காபவர்க்கயோரேகம் வாஞ்ச்சத்ப்யோ தததே த்வயம்' என்றாற்போலே ஆச்ரிதர்களின் அபேக்ஷிதங்களை ஒன்று பத்தாகக் கொடுக்கையால் வந்த வரதராஜனென்னும் திருநாமத்தையுடையவனே !, ஸ்ரீமந்! - இப்புகழால் நித்யோஜ்ஜ்வலனாயிருப்பவனே !, ஸுரேச்வர ! - தேவாதிராஜனே !, (உனக்கு) ஸுப்ரபாதம்.

ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ! ஜகதாம் ஜநிஹேது பூத!
ஸம்பாலநாந்த கரணுதிஷு ஜாகரூக!
அந்த: ப்ரவிஸ்யச நியந்த்ருதயா பவாஸ்மாந்
ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ! பகவந்! தவ ஸுப்ரபாதம்.

பதவுரை :—

ஸ்ரீமந்! ந்ருஸிம்ஹ! - 'நாரஸிம்ஹவபு: ஸ்ரீமாந்' என்றும் அழகியான் தானே அரியுருவன் தானே' என்றும் சொல்லுகிறபடியே நரஸிம்ஹரூபியாய்க்கொண்டு அழகாயிருப்பவனே!, ஜகதாம் ஜநிஹேது பூத- ஜகத்துக்களின் ஸ்ருஷ்டிக்குக் காரணமாயிருப்பவனே!, ஸம்பாலநாந்த கரணுதிஷு ஜாகரூக! – ஸ்திதி ஸம்ஹாராதிகளில் ஜாகரூகனுயிருப்பவனே!, ஸ்ரீமந்! - ஸ்ரீமஹாலக்ஷ்மியோடிணைபிரியாதிருப்பவனே!, ந்ருஸிம்ஹ-நரங்கலந்த சிங்கமாய்த் தோன்றினபடியால் நரஸிம்ஹனென்னும் திருநாமமுடையவனே!, பகவந்—ஜ்ஞாந பல ஐச்வர்ய வீர்ய சக்தி தேஜஸ்ஸுக்களென்கிற ஷட்குணங்கள் நிறைந்தவனே!, அஸ்மாந் அந்த: ப்ரவிச்ய நியந்த்ருதயா பவ - எங்களுக்குள்ளே புகுந்து எங்களை உன்னிஷ்டப்படி நியமித்து நடத்துவாயாக. (அழகிய சிங்கனே!), தவ - உனக்கு, ஸுப்ரபாதம். 'ததோந்யத்ராபி த்ருச்யதே' என்னும் அநுசாஸநத்தினுல், 'அஸ்மாந்' என்று இரண்டாம் வேற்றுமை.

ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ! தவ மங்கலமஸ்து நித்யம்
ஸூர்யேந்து தாரக ஸமாந மஹ: ப்ரரோஹை:,
நைஶந்தம: ப்ரஸரமாந்தரமப்யபாஸ்தம்,
ஸ்வாமிந்! ந்ருஸிம்ஹ! பகவந்! தவ ஸுப்ரபாதம்!

பதவுரை :—

ஸ்ரீமந்! ந்ருஸிம்ஹ! - பெரிய பிராட்டியாரோடு நித்யஸம்ச்லேஷமுடைய அழகிய சிங்கனே!, தவ நித்யம் மங்கலம் அஸ்து – உன்னுடைய இந்த அழகுக்குக் கண்ணெச்சில் வாராதபடி ஸர்வகாலமும் மங்கலம் உண்டாகுமாக. ஸூர்யேந்து தாரகஸமாந மஹ: ப்ரரோஹை: - ஸூர்யன் சந்த்ரன் நக்ஷத்திரங்கள் இவைகளோடு ஸமானமான உன்தேஜோவிலாஸங்களால், ப்ரஸரம் நைசம் தம: ப்ரஸரம் ஆந்தரம் தமோऽபி அபாஸ்தம் - முழுதும் பரவின இரவின் இருள் போக்கப்பட்டாற்போல் எங்கள் அந்தக்கரணத்தில் நிரம்பியுள்ள அஜ்ஞானமாகிற காடாந்தகாரமும் போக்கப்பட்டது. ஸ்வாமிந்! - உன் சொத்தான எங்களை ஆள்கின்ற ஸ்வாமியே!, ந்ருஸிம்ஹ பகவன்! - நரஸிம்ஹ பகவானே!, தவ-உனக்கு, ஸுப்ரபாதம். 'அபாஸ்ய' என்று பாடமானபோது எங்களுடைய அஜ்ஞாநாந்தகாரத்தைப் போக்கியருள வேணுமென்று ப்ரார்த்தனை ஆகிறது. 'அப' என்னும் உபஸர்க்கத்தோடு கூடின 'அஸு நிரஸநே' என்கிற தாதுவின் லோட்மத்யமபுருஷ ஏகவசநம்.

காவ்யோ ऽபி பூர்வதிஶி ஸம்ஸ்த்தித பர்வதஸ்த்தோ
வாசாம்பதிர் ஹிமகரோ ऽஸ்தமிதோ பபூவ,
பக்ஷீ நிநாதமபி பஞ்ஜரக: கரோதி,
ஸ்ரீமந்! ந்ருஸிம்ஹ! பகவன்! தவ ஸுப்ரபாதம்.

பதவுரை :—

காவ்யோऽபி - சுக்ரனும், பூர்வதிசி ஸம்ஸ்த்தித பர்வதஸ்த்த: - கிழக்கு திக்கிலுள்ள உதய பர்வதத்தில் வந்து நிற்கின்றான். சுக்ரோதய மாய்விட்டதென்க. வாசாம்பதி: - ப்ருஹஸ்பதியும், அஸ்தமிதோ பபூவ - அஸ்தமித்தான். ஹிமகர: - சந்த்ரனும், அஸ்தமிதோ பபூவ-அஸ்தமித்தான்' பஞ்ஜரக: - கூடிலிருக்கிற, பக்ஷீ-அபி - கிளிப்பறவையும், நிநாதம் - 'ஸ்ரீ ஹரிர்ஹரி:' இத்யாதி சப்தத்தை, கரோதி - செய்கிறது. ஸ்ரீமந், ந்ருஸிம்ஹ ! பகவன் ! - அழகிய நரஸிம்ஹ பகவானே!, தவ - உனக்கு!! ஸுப்ரபாதம்.

ஸ்ரீ பார்த்தஸாரதி ரகூத்தம வேதவல்லீ-
மந்நாத ஸௌம்யநரஸிம்ஹ வரப்ரதாநாம்,
யே ஸுப்ரபாதமநிஶம் ப்ரபடந்தி தேஷாம்,
ப்ரஹ்மேஶ்வராத்யஸுலபம் ஸுலபம் பதம் ஸ்யாத்.
ஸ்ரீ பார்த்தஸாரதி ஸுப்ரபாதம் முற்றிற்று.

பதவுரை :—

ஸ்ரீ பார்த்தஸாரதி ரகூத்தம வேதவல்லீ மந்நாத ஸௌம்ய நரஸிம்ஹ.வரப்ரதாநாம் - ஸ்ரீ பார்த்தஸாரதி சக்ரவர்த்தித் திருமகன் வேதவல்லித்தாயார் மந்நாதன் அழகியசிங்கர் தேவப்பெருமாள் இவர்களுடைய, ஸுப்பாதம் - ஸுப்ரபாத விஷயமான இந்த ப்ரபந்தத்தை, யே - எவர்கள், அநிசம் - தினந்தோறும், ப்ரபடந்தி - ஆதரவுடன் படிக்கிறார்களோ, தேஷாம் — அவர்களுக்கு, ப்ரஹ்மேச்வராத்யஸுலபம் - ப்ரஹ்மருத்ராதிகளுக்கும் கிடைக்க அரிதான, பதம் - பரமபதமானது, ஸுலபம் ஸ்யாத் - ஸுகமாகக் கிடைக்கும்.

ஸ்ரீரஸ்து

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ப்ருந்தாரண்ய நிவாஸாய பலராமாநுஜாயச,
ருக்மிணீப்ராணநாதாய பார்த்தஸூதாய மங்கலம்.
ஸ்ரீ பார்த்தஸாரதி ஸுப்ரபாதமும் பதவுரையும் முற்றிற்று.

---

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பேயாழ்வார் அருளிச்செய்த

# மூன்றாந் திருவந்தாதி.

வந்துதைத்த வெண்திரைகள் செம்பவள வெண்முத்தம்
அந்திவிளக்கு மணிவிளக்காம்—எந்தை
ஒருவல்லித் தாமரையாள் ஒன்றியசீர் மார்பன்
திருவல்லிக் கேணியான் சென்று.

பதவுரை :—

ஒரு அல்லி தாமரையாள்-அழகிய இதழ்களையுடைய தாமரைப்பூவை இருப்பிடமாகவுடைய பிராட்டி, சென்று ஒன்றிய சீர்மார்பன்-வந்து பொருந்திய அழகிய திருமார்பையுடையவனும், வந்து உதைத்த வெண் திரைகள் செம்பவளம் வெண்முத்தம்-வந்து வீசுகின்ற வெளுத்த அலைகளிலுண்டான சிவந்தபவழங்களும் வெளுத்த முத்துக்களும், அந்தி விளக்கும் அணி விளக்கு ஆம்-ஸந்தியாகாலத்தை விளக்குகின்ற மங்களதீபங்களாக ஆகப்பெற்ற, திருவல்லிக்கேணியான்-திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருப்பவனுமான பெருமான், எந்தை-எனக்கு ஸ்வாமி.

திருப்பாற் கடலில் நின்றும் தம் திருவுள்ளத்துக்கு வரும்போது திருவல்லிக்கேணியில் தங்கி வந்தானென்கிறார் போலும். முதலிரண்டடிகள் திருவல்லிக்கேணிக்கு விசேஷணம். அருகிலுள்ள கடலில் அலைகள் மோதும்போது சிவந்த பவழங்களும் வெளுத்த முத்துக்களும் கொழிக்கப்படுகின்றன ; அவை ஸாயம் ஸந்தியா காலத்தில் ஏற்றப்படுகின்ற மங்கள தீபமோ எனலாம்படி யிருக்கின்றனவாம். சில விளக்குகள் செந்நிறமான ஒளியை யுடையனவாயும் சில விளக்குகள் வெண்ணிறமான வொளியை யுடையனவாயும் இருப்பதுண்டாகையாலே செந்நிறப்பவழங்களும் வெண்ணிற முத்துக்களும் திருவிளக்காகச் சொல்லப்பட்டன திருவல்லிக்கேணியில் எப்போது பார்த்தாலும் திருவிளக்கேற்றப்பெற்ற மாலைப்பொழுதாகவே காணப்படுமென்று கருத்து. இப்படிப்பட்ட திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருக்கின்ற திருமாமகள்கொழுநன் எனக்கு ஸ்வாமி—என்றாராயிற்று.

'ப்ரவாளம்' என்னும் வடசொல் பவள மெனவும், 'முக்தா' என்னும் வடசொல் முத்து எனவும், 'ஸந்த்யா' என்னும் வடசொல் அந்தி யெனவும் திரிந்தன.



ஸ்ரீ பேயாழ்வார்.



திருமழிசையாழ்வார்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருமழிசைப்பிரான் திருவாய்மலர்ந்தருளிய

# நான்முகன் திருவந்தாதி

---

தாளா லுலக மளந்தவசவே கோல்
வாளா கிடந்தருளும் வாய்திறவான்—நீளோதம்
வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக் கேணியான்
ஐந்தலைவாய் நாகத் தணை.

பதவுரை :—

நீள் ஓதம்-பெரிய அலைகள், வந்து அலைக்கும்-கரையிலே வந்துவீசப் பெற்ற, மா மயிலை-மயிலாபுரிக்கு அடுத்த, மா வல்லிக்கேணியான்-திருவல்லிக்கேணியில் நித்யவாஸம் பண்ணுகிற ஸர்வேச்வரன், ஐ தலை வாய் நாகத்து அணை-ஐந்து தலைகளையும் ஐந்து வாய்களையுமுடையனான திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே, வாளா-வெறுமனே, கிடந்தருளும்-சயனித்திரா நின்றான், வாய் திறவான்-வாய் திறந்து ஒன்றுமருளிச்செய்வதில்லை. (இப்படியிருப்பதற்குக் காரணம்) தாளால்-திருவடியாலே, உலகம் அளந்த அசவே கொல்-உலகங்களை அளந்ததனாலுண்டான ஆயாஸமோ?

திருவல்லிக்கேணியில் ஸ்ரீபார்த்தஸாரதிப் பெருமாளாக நின்ற திருக்கோலமாய் ஸேவைஸாதித்திருப்பது தவிர, நாகத்தணைக்கிடந்த பெருமானாக ஸேவைஸாதிக்கிற திருக்கோலமும் உண்டாகையாலே அந்த திவ்யமங்கள விக்ரஹத்தி லீடுபட்டுப் பேசுகிற பாசுரம் இது.

அர்ச்சாவதாரங்களிலே எம்பெருமான்கள் நிற்பதும் இருப்பதும் கிடப்பதும் ஒருபடிபட்டே யிருக்குமேயன்றி ஒருநாளும் மாறமாட்டா தென்பதும் ஒருநாளும் சோதிவாய் திறந்து பேசியருள்வதில்லை யென்பதும் ஆழ்வார்கட்குத் தெரிந்திருக்கச் செய்தேயும் கரைபுரண்ட ப்ரேமத்தின் கனத்தினால் அர்ச்சாவதார ஸமாதியையும் குலைத்துப் பறிமாறப் பார்ப்பார்கள்; நம்மாழ்வார் திருவாய்மொழியில் "கொடியார்மாடக்

கோளூரகத்தும் புளிங்குடியும், மடியாதின்னே நீ துயில் மேவி மகிழ்ந்தது தான், அடியாரல்லல் தவிர்த்தவசவோ? அன்றேல் இப்படிதான் நீண்டு தாவிய அசவோ பணியாயே” (8—3—5) என்றும், “கிடந்த நாள் கிடந்தாய் எத்தனை காலங்கிடத்தி உன் திருவுடம்பசையத், தொடர்ந்து குற்றேவல் செய்து தொல்லடிமைவழிவருந் தொண்டரோர்க்கருளித், தடங்கொள் தாமரைக் கண்விழித்து நீயெழுந்து உன் தாமரைமங்கையும் நீயும், இடங்கொள் மூவுலகுந் தொழவிருந்தருளாய் திருப்புளிங்குடிக் கிடந்தானே!” (9—2—3.) என்றும் அழகாகப் பேசினர். இவ்வாழ்வார் தாமும் திருச்சந்தவிருத்தத்தில் “நடந்தகால்கள் நொந்தவோ?... காவிரிக்கரைக் குடந்தையுள், கிடந்தவாறெழுந்திருந்து பேசு வாழி கேசனே!” என்றார். அப்படியே இப்பாசுரத்திலும்—சோதிவாய் திறந்து ஒரு வார்த்தையும் அருளிச் செய்யமாட்டாமல் நெடுங்காலமாகவே அரவணையின் மேல் ஏகரீதியாக எம்பெருமான் பள்ளி கொண்டிருக்கிறனே!, காடும் மேடும் கல்லும் கரடுமான பூமியை முன்பொருகால் அடியிட்டு அளந்தருளினதாலுண்டான ச்ரமம் இன்னும் ஆறவில்லை போலும்; என்கிறார். பேசாதே வாளா கிடந்தருள்வதும் நீர்க்கரையைப் பற்றிக் கண்வளர்ந்தருள்வதும் ஆயாஸத்தின் மிகுதியினல் என்றிருக்கிறார்கள் போலும்.

‘அயர்வு’ என்பது ‘அசவு’ என மருவிற்றென்ப. ‘அசைவு’ என் பாருமுளர்.

திருவல்லிக்கேணி என்பது தொண்டைமான் சக்ரவர்த்தியின் பிரார்த்தனையின்படியே திருவேங்கடமுடையான் கண்ணனாகத் தனது குடும்பத்தோடு ஸேவைஸாதித்த தலம். இத்தலத்துப் புஷ்கரிணி அல்லிப்பூக்கள் நிறையப் பெற்றதனல் கைரவிணி யென்று வடமொழியிலும் திருவல்லிக்கேணி யென்று தென்மொழியிலும் பெயர்பெறும். இந்தப் புண்ணிய தீர்த்தத்தின் பெயரே இத்தலத்திற்குப் பெயராயிற்றென்றுணர்க. இது மயிலையை அடுத்திருக்கிறபடியால் “மாமயிலை மாவல்லிக்கேணி” எனப்பட்டது.

ஸ்ரீ

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

# பெரிய திருமொழி—2-ம் பத்து 3-ம் திருமொழி

## விற் பெருவிழவும்

விற்பெருவிழவும் கஞ்சனும் மல்லும்
வேழமும் பாகனும் வீழச்
செற்றவன் தன்னைப் புரமெரி செய்த
சிவனுறு துயர்களை தேவை
பற்றலர்வீயக் கோல் கையில்கொண்டு
பார்த்தன்தன்தேர் முன் நின்றானைச்
சிற்றவை பணியால் முடிதுறந்தானைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே. 1

(பத உரை.) வில்பெருவிழவும் – தனுர்யாகோத்ஸவமும், கஞ்சனும்–கம்ஸனும், மல்லும்–சாணூரமுஷ்டிககாதி மல்லவர்க்கமும், வேழமும்–குவலயாபீடமென்னும் யானையும், பாகனும்–யானைக்காரனும், வீழ–விழும்படி, செற்றவன்தன்னை–ஸம்ஹரித்தவனாய், புரம்எரி செய்த–த்ரிபுரதஹனம் பண்ணின, சிவன்–ருத்ரன், உறு–அடைந்த, துயர்–குருபாதக பீடையை, களை–போக்கின, தேவை–ஸ்வாமியாய், பற்றலர்–சத்ருக்கள், வீய–நசிக்கும்படி, கோல்–முட்கோலை, கையில்–கையிலே, கொண்டு–பிடித்துக்கொண்டு, பார்த்தன்தன்–அர்ஜுநனுடைய, தேர் முன்–தேர்முன்னே, நின்றானை–ஸாரதியாய் நின்றவனாய், சிற்றவை–மாற்றுத் தாயான கைகேயியுடைய, பணியால்–சொல்லைக் கொண்டு, முடி–(பட்டாபிஷேகம் பண்ணக்கொண்டுவந்த) கிரீடத்தை, துறந்தானை–பரித்யஜித்தவனான ஸ்ரீபார்த்தஸாரதியை, திருவல்லிக்கேணி–திருவல்லிக்கேணியிலே, கண்டேன்–காணப் பெற்றேன்.

விற்பெருவிழவும்—தாத்பர்யம்—கஞ்சன் தன்னை வர வழைத்து வதிப்பதற்காக வியாஜகமாக ஏற்படுத்தின தனுர்யா கோத்ஸவத்தையும் அக்கம்ஸனையும் அவன் வைத்த சாணூராதி மல்லர்களையும் குவலயாபீடமென்னும் யானையையும் அதன் பாக னையும் அழித்தவனும், த்ரிபுரஸம்ஹாரம் பண்ணின ருத்ரனு டைய குருபாதகத்தைப் போக்கினவனும் துர்யோதனாதி சத்ரு வர்க்கங்கள் தொலையும்படி கையில் கோலைக்கொண்டு அர்ஜுனனு டைய தேரில் ஸாரதியாய் நின்றவனும், முன்பு ராமாவதாரத் தில் கைகேயினுடைய வார்த்தையைக் கேட்டு ராஜ்யப் பட்டாபி ஷேகத்தைத் துறந்து வனவாஸஞ் சென்றவனுமாகிய பார்த்த ஸாரதியைத் திருவல்லிக்கேணியில் காணப்பெற்றேன்.

வேதத்தை வேதத்தின் சுவைப்பயனை
விழுமிய முனிவர் விழுங்கும்
கோதிலின் கனியை நந்தனூர் களிற்றைக்
குவலயத்தோர் தொழுதேத்தும்
ஆதியை அமுதை என்னையாளுடை
அப்பனை ஒப்பவரில்லா
மாதர்கள் வாழும் மாடமாமயிலைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே. 2

(ப. உ.) வேதத்தை-வேதத்தை விபூதியாகவுடையவனாய், சுவை-(ஆச்ரயித்தவர்களுடைய) ருசிக்குத் தக்கபடியாக, வேதத் தின்-வேதோக்தகர்மாநுஷ்ட்டானத்தினுடைய, பயனை-பலத்தைக் கொடுக்குமவனாய், விழுமிய முனிவர்-ச்லாக்யரான ஸனகாதி முனிவர்கள், விழுங்கும்-அநுபவிக்கிற, கோது இல்-கோது இல் லாத, இன்-இனிய, கனியை-பலம்போலே நிரதிசய போக்ய னாய், நந்தனூர்-ஸ்ரீநந்தகோபர்க்கு, களிற்றை-ஆனைக்கன்று போலேயினியனாயிருக்குமவனாய், குவலயத்தோர் தொழுது எத்தும்-பூமியிலுள்ளவர்கள் ஆச்ரயித்து ஸ்தோத்திரம் பண்ணு கிற, ஆதியை-ஜகத்காரண பூதனாய், அமுதை-அம்ருதம்போலே போக்யனாய், என்னை ஆளுடை-என்னை அடிமைகொண்ட, அப் பனை-உபகாரகனானவனை, ஒப்பவர்-(தங்களுக்கு) ஸத்ருசரான வர்கள், இல்லா-இல்லாத, மாதர்கள்-ஸ்திரீகள், வாழும்-வாழு மதாய், மாடம்-மாடங்களையுடைத்தாய், மா-செல்வம் நிறைந்த மயிலை-மயிலாப்பூரைப் படைவீடாகவுடைய, திருவல்லிக்கேணிக் கண்டேன்?

வேதத்தை—வேதஸ்வரூபனும் ஆச்ரயித்தவர்களுடைய ருசிக்குத்தக்கபடி வேதங்களில் சொல்லப்பட்ட கர்மங்களுக்குப் பலப்ரதனும் ச்லாக்யரான முனிவர்கள் அநுபவிக்கிற நிர்த்துஷ்டமான இனியபழம் போன்றவனும், ஸ்ரீநந்தகோபனுக்கு ஆனைக் கன்றுபோல் இனியனும் பூமியிலுள்ளவர் ஆச்ரயித்து ஸ்தோத்ரம் பண்ணுகிற ஜகத்காரணபூதனும், அம்ருதம்போல் போக்யனும் என்னை அடிமை கொண்ட உபகாரகனுமானவனை, தங்களுக்கு ஒப்பில்லாத மாதர்கள் வாழுமதாய் மாடங்களையுடையதாய் மைலாப்பூரைப் படைவீடாகவுடையதுமான திருவல்லிக்கேணியில் காணப்பெற்றேன்.

வஞ்சனை செய்யத் தாயுருவாகி
வந்தபேய் அலறிமண் சேர
நஞ்சமர்முலையூடு உயிர் செகவுண்ட
நாதனைத் தானவர் கூற்றை
விஞ்சைவானவர் சாரணர் சித்தர்
வியந்துதி செய்யப் பெண்ணுருவாகி
அஞ்சுவையமுதம் அன்று அளித்தானைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே. 3

(ப. உ.) வஞ்சனைசெய்ய-(க்ருஷ்ணனை)வஞ்சிக்கைக்காக, தாயுருவாகிவந்த-தாய்வடிவு கொண்டு வந்த, பேய்-பூதனையானவள், அலறி-கதறிக்கொண்டு, மண்-பூமியிலே, சேர-விழும்படியாக, நெஞ்சு அமர்-விஷம் நிறைந்த, முலை ஊடு-முலை வழியே, உயிர்-(அவள்) ப்ராணன், செக-போம்படி, உண்ட-அமுது செய்தருளின, நாதனை-ஸர்வ சேஷியாய், தானவர்-அஸுரர்களுக்கு, கூற்றை-ம்ருத்யுவாய், விஞ்சைவானவர்-வித்யாதரர், சாரணர்-சாரணர், சித்தர்-ஸித்தர் (முதலான தேவர்கள்,) வியந்து-ஆச்சர்யப்பட்டு, துதிசெய்ய-ஸ்தோத்திரம் பண்ணும்படி, பெண் உருவாகி-பெண் வடிவைக்கொண்டு, அன்று-இந்த்ரன் ப்ரஷ்டைச்வர்யனான காலத்திலே, அம்-அழகிய, சுவை-ரஸத்தையுடைய, அமுதம்-அம்ருதத்தை, அளித்தானை-தேவதைகளுக்குக் கொடுத்தவனை, திருவல்லிக்கேணிக் கண்டேன்.

வஞ்சனை செய்ய—வஞ்சிப்பதற்காகத் தாய் வடிவம் கொண்டுவந்த பூதனை கதறிக்கொண்டு மாளும்படி விஷங்கலந்த முலைவழியாக அவளுயிரை உண்ட நாதனை அசுரர்களுக்கு ம்ருத்யுவாய் தேவதைகள் ஆச்சர்யப்பட்டு ஸ்தோத்திரம் பண்

ணும்படி பெண்ணுருவங்கொண்டு அழகிய ருசியையுடைய அம்ருதத்தைத் தேவர்களுக்குக் கொடுத்தவனைத் திருவல்லிக்கேணியில் காணப்பெற்றேன். விஞ்சை—வித்யை வியந்து கபைக்குறை.

இந்திரனுக் கென்று ஆயர்கள் எடுத்த
எழில்விழவில் பழநடைசெய்
மந்திர விதியில் பூசனைபெறாது
மழைபொழிந்திடத் தளர்ந்து * ஆயர்
எந்தம்மோடு இனவா நிரைதளராமல்
எம்பெருமான்! அருளென்ன
அந்தமில் வரையால் மழை தடுத்தானைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே. 4

(ப. உ.) இந்திரனுக்கு—இந்திரனுக்கு விருந்திடக் கடவோமென்றுஆயர்கள் இடையர்கள்,எடுத்த—ஸங்கல்பித்த,எழில்—அழகிய, விழவில்—யகோத்ஸவத்திலே, பழநடை செய்—முன்பு செய்து போரும் கிரமத்தில், மந்திர விதியில்—மந்த்ரோக்தமானபடியே, பூசனைபெறாது பூஜையை (அவன்) பெறாமையாலே, மழை—கல்வர்ஷத்தை, பொழிந்திட—வர்ஷிப்பிக்க, ஆயர்—இடையர், தளர்ந்து—மிகவும் நொந்து, எம்பெருமான்! எமக்கு சுவாமியானவனே! எந்தம்மோடு—எங்களுடன், இனம்—இனமினமான, ஆநிரை—பசுத்திரளும், தளராமல்—நோவுபடாதபடி, அருள்—ரக்ஷித்தருளவேணும், என்ன—என்று அர்த்திக்க, அந்தம் இல்—அளவிட வொண்ணாதபடியான, வரையால்—கோவர்த்தன மலையாலே, மழை—அம் மழையை, தடுத்தானை—பரிஹரித்தவனை, திருவல்லிக்கேணிக் கண்டேன்.

இந்திரனுக்கென்று—இடையர்கள் இந்திரனுக்கு வர்ஷாத்தமாக விருந்திடுவதை ஸ்ரீகிருஷ்ணன் தடுக்க இந்திரன் கோபித்து மழை பொழிய, அப்பொழுது இடையர்கள் எம்பெருமானே! எங்களையும் எங்கள் பசுக்களையும் காத்தருளவேணுமென்ன, அப்பொழுது கோவர்த்தநமலையை எடுத்து மழையைத் தடுத்து அவர்களைக் காத்த எம்பெருமானைத் திருவல்லிக்கேணியில் காணப்பெற்றேன்.

இன் துணைப்பது மத்து அலர்மகள் தனக்கும்
இன்பன் நற்புவிதனக்கு இறைவன்
தன் துணை ஆயர்பாவை நப்பின்னை
தனக்கு இறை மற்றையோர்க் கெல்லாம்

வன் துணை * பஞ்சபாண்டவர்க்காகி
வாயுரை தூது சென்றியங்கும்
என் துணை * எந்தை தந்தைதம்மானைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே. 5

(ப. உ.) இன்-(தன் மனஸ்ஸுக்கு) இனிய, துணை-துணையாய், பதுமம்-தாமரைப் பூவைப் பிறப்பிடமாக வுடைய; அலர்மலர் தனக்கும்-பெரிய பிராட்டியார்க்கும், இன்பன்-போக்கியனாய், நல்-எல்லாவற்றையும் பொறுக்கும் தன்மையளான, புவிதனக்கு-ஸ்ரீபூமிப் பிராட்டிக்கு, இறைவன்-வல்லபனாய, தன் துணை-தன்னையே துணையாக வுடையனாய், ஆயர்பாவை-இடைப் பெண்ணான, நப் பின்னை தனக்கு-நப்பின்னைப் பிராட்டிக்கு, இறை-ஸ்வாமியாய், மற்றையோர்க்கு எல்லாம்-அல்லாத எல்லார்க்கும், வல்துணை-வலிய துணையாய், பஞ்சபாண்டவர்கவர்க்கு-பஞ்ச பாண்டவர்களுக்கு, ஆகி-எல்லா வுறவுமுறையும் தானேயாய்க்கொண்டு, வாய் உரை-அவர்கள் சொன்ன வார்த்தைகளை சென்று-துர்யோதனாதிகள் பக்கலிலே போயறிந்து, தூது இயங்கும்-ஸ்ரீ தூது எழுந்தருளினவனாய், என் துணை என்னைப் போல்வார்க்கெல்லாம் ஸஹாய பூதனாய், எந்தை தந்தை தம்மானை-என் குலநாதனானவனை, திருவல்லிக்கேணிக் கண்டேன்.

இன் துணை—தன் மனத்திற்கினிய துணையான பெரிய பிராட்டியார்க்கு ப்ரியனும் பூமிப் பிராட்டியார்க்கு வல்லபனும் தன்னையே துணையாக வுடைய நப்பின்னைப் பிராட்டியார்க்கு ஸ்வாமியும், இப்படி யிருக்கையாலே மற்றெல்லோருக்கும் வலிய துணையா யிருப்பவனும், பஞ்ச பாண்டவர்களுக்குத் தூது சென்று தன் சௌலப்யத்தை வெளியிட்டு என்போல்வர்க்கெல்லாம் ஸஹாய பூதனும் என்குல நாதனுமானவனைத் திருவல்லிக்கேணியில் காணப்பெற்றேன்.

அந்தகன்சிறுவன் அரசர் தமரசற்கிளையவன்
அணியிழையைச் சென்று
எந்தமக்கு உரிமை செய்யெனத் தரியாது
எம்பெருமான்! அருளென்ன
சந்தமல்குழலா ளலக்கண் நூற்றுவர்தம்
பெண்டிரும் எய்தி நூலிழப்ப
இந்திரன் சிறுவன் தேர்முன் நின்றானைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே. 6

(ப. உ.) அந்தகன்-குருடனான த்ருதராஷ்டிரனுடைய, சிறுவன்-பிள்ளையாய், அரசர்தம் அரசற்கு-ராஜராஜனான துர்யோதனனுக்கு, இளையவன்-தம்பியான துச்சாஸநன், அணி-அலங்கரிக்கப்பட்ட, இழையை-ஆபரணங்களுடையளான த்ரௌபதி பக்கலிலே, சென்று-போய், (சூதிலே உன்னையும் தோற்றார்கள் ஆகையாலே) எந்தமக்கு-எங்களுக்கு, உரிமை செய்-அடிமை செய், என-என்ன, தரியாது-(அவள் அந்யசேஷத்வத்தைப்) பொறுமல், எம்பெருமான்!-என் ஸ்வாமி! .அருள்-என் பக்கல் க்ருபைபண்ணி ரக்ஷிக்க வேணும், என்ன-என்று அர்த்திக்க, அல்- இருண்ட, சந்தம்-நிறத்தையுடைய, குழலாள்-குழலையுடையளான த்ரௌபதி பட்ட அலக்கண்-துக்கத்தை, நூற்றுவர் தம்-துர்யோதன ப்ராதாக்களான நூற்றுவருடைய பெண்டிரும் பார்யைகளும், எய்து-அடைந்து, நூல்-மங்களஸூத்ரத்தையும், இழக்க-இழக்கும்படியாக, இந்திரன் சிறுவன்-இந்த்ர புத்ரனான அர்ஜுனனுடைய, தேர் முன்-தேரின் முன்னே, நின்றானை-நின்று ஸாரத்தியம் பண்ணினவனை, திருவல்லிக்கேணிக் கண்டேன்.

அந்தகன் சிறுவன்—குருடனான த்ருதராஷ்ட்ரனுடைய பிள்ளையும், ராஜராஜனான துரியோதனனுக்குத் தம்பியுமான துச்சாஸனன் அலங்ருதையான த்ரௌபதியிடம் வந்து 'நீ சூதிலே ஜயிக்கப்பட்டாய். ஆகையாலே நீ எங்களுக்கு அடிமை செய்யவேண்டு' மென்ன, அவள் அதைப் பொறுக்கமாட்டாமல் ஸ்வாமீ! என்னை ரக்ஷிக்கவேணுமென்ன, அவளுடைய துக்கத்தையெல்லாம் துர்யோதனாதிகளுடைய ஸ்திரீகள் மாங்கல்யத்தையிழந்து அனுபவிக்கும்படி பண்ணின பார்த்தஸாரதியைத் திருவல்லிக்கேணியில் காணப்பெற்றேன்.

பரதனும்தம்பி சத்துருக்கனும்
இலக்குமனோடு மைதிலியும்
இரவும் நண்பகலும் துதிசெய்ய நின்ற
இராவணாந்தகனை எம்மானை
குரவமே கமழும் குளிர்பொழிலூடு
குயிலோடு மயில்கள் நின்றால
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தரியாத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே. 7

(ப. உ.) பரதனும்-ஸ்ரீபரதாழ்வானும், தம்பி-அவனுக்குத் தம்பியான, சத்துருக்கனும்-ஸ்ரீசத்துருக்கநாழ்வானும், இலக்குமனேடு-இளையபெருமாளோடு (கூட) மைதிலியும்-பிராட்டியாரும், இரவும்-ராத்திரியிலும், நல்-(பதார்த்த ப்ரகாசகமாய்) விலக்ஷணமான பகலும்-பகலிலும், துதி செய்ய-ஸ்தோத்திரம் செய்ய, நின்றவனை-எழுந்தருளியிருக்குமவனை, எம்மான்-எனக்குஸ்வாமியாய், இராவணாந்தகனை-ராவணனை ஸம்ஹரித்த சக்ரவர்த்தித் திருமகனை, குரவம்-குரவ மலர்கள், கமழும்-பரிமளிக்கிற, குளிர்-குளிர்ந்த, பொழிலூடு-சோலைக்குள்ளே, குயிலோடு-(பாடுகிற) குயில்களோடு, மயில்கள்-மயில்களானவை, நின்று-ஒருபடிப்பட நின்று, ஆல-ஆடுமதாய், இரவியின் கதிர்கள்-ஸூர்ய கிரணங்கள் (சோலைச் செறிவாலே) நுழைதல் செய்தரியா-ஒருகாலும் நுழைந்தரியாத, திருவல்லிக்கேணிக் கண்டேன்.

பரதனும்—பரதாழ்வானும் சத்ருக்னாழ்வானும் இளையபெருமாளும் ஸீதாபிராட்டியும் இரவு பகலென்கிற விபாகமின்றிக்கே ஸ்தோத்திரம் பண்ணும்படி எழுந்தருளியிருக்கிற ராவண ஸம்ஹாரஞ் செய்த சக்ரவர்த்தி திருமகனை குரவம் முதலியவை கமழாநின்ற பொழில்களிடையில் குயில்கள் பாடவும் மயில்கள் ஆடவும் பெற்று, சோலைச் செறிவாலே ஸூர்யகிரணங்கள் நுழையப் பெறாத ச்ரமஹரமான திருவல்லிக்கேணியில் காணப் பெற்றேன்.

பள்ளியிலோதி வந்ததன் சிறுவன்
வாயில் ஓராயிர நாமம்
ஒள்ளிய வாகிப்போத ஆங்கதனுக்கு
ஒன்றுமோர் பொறுப்பிலனாகி
பிள்ளையைச்சீறி வெகுண்டு தூண்புடைப்பப்
பிறை யெயிற் றனல் விழிபேழ்வாய்
தெள்ளிய சிங்கமாகிய தேவைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே. 8

(ப. உ.) பள்ளியில்-வித்யாசாலையிலே, ஓதி-படித்துவிட்டு வந்த-தன்னருகே வந்த, தன் சிறுவன்-தன்பிள்ளையான, ப்ரஹ்லாதாழ்வானுடைய வாயில்-திருப்பவளத்தில், ஓராயிர நாமம்-(ஸர்வேச்வரனுடைய) ஒரு ஆயிரம் திருநாமங்கள், ஒள்ளிய வாகி-அழகாக, போத-தன்னடையேவர, ஆங்கு-அவ்விடத்திலே,

அதனுக்கு-அப்படி எம்பெருமான் திருநாமங்களைச் சொல்லிய தற்கு, ஒன்றும் ஓர்-சற்றாயினும், பொறுப்பு இலனாகி-பொறுமை யில்லாதவனாய்க்கொண்டு, பிள்ளையை-தன் புத்ரனை, சீறி வெகுண்டு-மிகக் கோபித்து, தூண்-(அவன் நட்ட) தூணை, புடைப்ப-அடிக்க, (அதிலே) பிறை-மூன்றாம்பிறை போன்ற, எயிறு-பற்களையும், அனல்-நெருப்புப்பொறிகள் சிந்தா நின் றுள்ள, விழி-கண்களையும், பேழ்வாய்-பெரிய வாயையுமுடைத் தாய், தெள்ளிய-தெளிந்திருந்துள்ள, சிங்கமாகிய-ந்ருஸிம்ஹா வதாரஞ் செய்தருளின, தேவை-தேவனை, திருவல்லிக்கேணிக் கண்டேன்.

பள்ளியிலோதி—ப்ரஹ்லாதாழ்வான் கல்விச்சாலையில் ஓதி வந்து பகவந்நாமங்களைச் சொல்ல அதைப் பொறுக்கமாட்டா மல் மிகவும் கோபித்துத் தூணைத் தட்ட அதில் ந்ருஸிம்ஹ ரூபி யாய்த் தோன்றின பகவானைத் திருவல்லிக்கேணியில் காணப் பெற்றேன்.

மீனமர்பொய்கை நாள்மலர் கோய்வான்
வேட்கையினோடு சென்றிழிந்த
கானமர் வேழம் கையெடுத்தலறக்
கரா அதன் காலினைக்கதுவ
ஆனையின் துயரம்தீரப் புள்ளூர்ந்து
சென்று நின்று ஆழிதொட்டானைத்
தேனமர் சோலை மாடமாமயிலைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே. 9

(ப. உ.) மீன் அமர் பொய்கை-மீன்கள் பொருந்திய மடு விலே, நாள்-அப்போதலர்ந்த, மலர்-புஷ்பங்களை, கொய்வான்-பறிக்கவேணுமென்கிற, வேட்கையினோடு-ஆசையோடே, சென்று இழிந்த-வந்திழிந்ததாய், கான்-காட்டிலே, அமர்-ஸ்வைரஸஞ் சாரம் பண்ணக்கடவ, வேழம்-தானயானையானது தன், கை-தும் பிக்கையை, எடுத்து-உயரயெடுத்து, அலற-பிளிறும்படி, கரா-முதலையானது, அதன்-அதனுடைய, காலினை-காலை, கதுவ-கவ்வ (அந்த சமயத்திலே), ஆனையின்-ஸ்ரீகஜேந்த்ராழ்வானு டைய துயரம்-துக்கம், தீர-தொலையும்படி, புள் ஊர்ந்து-பெரிய திருவடியை மேற்கொண்டு, சென்று-விரைந்துவந்து, நின்று-அப்பொய்கைக் கரையிலே நின்று, ஆழி தொட்டானை-திருவா ழியை விடுத்த ஸ்வாமியை, தேன் அமர்-தேன் மாறாத, சோலை-

சோலைகளாலே சூழப்பட்ட, மாடமாமயிலைத் திருவல்லிக்கேணிக் கண்டேன்.

மீனமர் பொய்கை—நெடுநாள் புஷ்பங்களைத் தேடிக் கிடைக்காமல் வருந்தின கஜேந்திராழ்வான் புஷ்பித்திருக்கிற ஒரு தடாகத்தைக்கண்டு அதில் புஷ்பத்தைப் பறித்து எம்பெருமான் திருவடிகளிலே ஸமர்ப்பிக்க வேண்டுமென்கிற பெரிய ஆவலோடு இழிய அங்கே ஒரு முதலை அதன் காலைக் கவ்வ, அந்த கஜேந்திராழ்வான் பறித்த புஷ்பத்தை அவன் திருவடிகளிலே ஸமர்ப்பிக்க வேண்டுமேயென்று பெரிய வருத்தத்துடன் துதிக்கையைத் தூக்கிக்கொண்டு கதற, அவ்வானையின் துயரம் தீரும்படி கருடவாகனருய்க்கொண்டு அவ்விடம் சென்று திருவாழியை ப்ரயோகித்த பெருமானை, வண்டுகள் அமர்ந்த சோலைகளும் மாடங்களும் நிறைந்த மயிலையோடுகூடின திருவல்லிக்கேணியில் காணப் பெற்றேன்.

மன்னுதண் பொழிலும் வாவியும் மதிளும்
மாடமாளிகையும் மண்டபமும்
தென்னன் தொண்டையர் கோன்செய்த நல்மயிலைத்
திருவல்லிக்கேணி நின்றானை
கன்னி நல்மாடமங்கையர் தலைவன்
காமருசீர்க் கலிகன்றி
சொன்ன சொல்மாலை பத்துடன் வல்லார்
சுகமினிதாள்வர் வானுலகே. 10

(ப. உ.) மன்னும்—நித்யமாய், தண்—குளிர்ந்திருந்துள்ள, பொழில்—சோலைகளையும், வாவியும்—நீர்நிலைகளையும், மாடம்—மாடங்களையும், மாளிகையும்—மேல்மச்சுள்ள க்ருஹங்களையும், மண்டபமும்—மண்டபங்களையுமுடைத்தாம்படி, தென்னன்—பாண்டிய மஹாராஜாவின் வம்ஸத்தவனாய், கன்னி—அரணாகப் போகும்படியாய், நல்—நன்றாயிருந்துள்ள, மாடம்—மாடங்களையுடைத்தான, மங்கையர்—திருமங்கையிலுள்ளார்க்கு, தலைவன்—ப்ரதாநராய், காமர்—அழகிய, சீர்—ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயையுடையவரான, கலிகன்றி—ஆழ்வார், தொண்டையர்—தொண்டை நாட்டிலுள்ளவர்களுக்கு, கோன்—தலைவனான தொண்டைமான் சக்ரவர்த்தி செய்த—ப்ரதிஷ்டிப்பித்த, நல்—அழகாயிருந்துள்ள, மயிலைத் திருவல்லிக்கேணி—மயிலாப்பூரைப் படைவீடாகவுடைய திருவல்லிக்கேணியில், நின்றானை—நின்றவன் விஷயமாக, சொன்ன—

அருளிச்செய்ததாய், சொல்மாலை-சப்த ஸந்தர்ப்பமான, பத்துடன்-பத்துப்பாட்டுக்களையும், வல்லார்-அப்யஸிக்க வல்லவர்கள், இனிது சுகம்-நித்தியாநுபவம் பண்ணும்படியான, வானுலகு-பரமபதத்தை, ஆள்வர்-கிட்டப்பெறுவர்கள்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

மன்னுதண் பொழிலும்—நித்யமாய்க் குளிர்ந்திருந்துள்ள பொழில்களும் நீர் நிலங்களும் அரணாகப்போகும்படியான மதில்களும் மாடங்களும் மாளிகைகளும் மண்டபங்களும் மற்ற நன்மைகளும் எல்லாம் உண்டாகும்படி தொண்டைமான் சக்ரவர்த்தியால் சீர்திருத்தம் செய்யப்பெற்ற மயிலையோடுகூடின திருவல்லிக்கேணியில் நின்றவன் விஷயமாக, அரணான நல்ல மாடங்களையுடைய திருமங்கையிலுள்ளார்க்கு ப்ரதாநராய் அழகிய வைஷ்ணவ ஸ்ரீயை யுடைய திருமங்கையாழ்வார் அருளிச்செய்த சப்த ஸந்தர்ப்பமான இப் பத்துப் பாட்டுக்களையும் அப்யஸிக்க வல்லவர்கள் நித்யானுபவம் பண்ணும்படி ஆநந்தமயமான பரமபதத்தைக் கிட்டப் பெறுவார்கள்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்தில்—மூன்றாம் திருமொழி முடிந்தது.



பலராமர், ருக்மிணீ, ஸ்ரீவேங்கடக்ருஷ்ணஸ்வாமி,
ஸாத்யகி, ப்ரத்யும்நர், அநிருத்தர்,
ஸ்ரீபார்த்தசாரதிஸ்வாமி.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



# ப்ருந்தாரண்ய மாஹாத்மியம்

ஸ்ரீஸைலேஸ தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்,
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம்முநிம்.
லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுந மத்யமாம்,
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம்.

யோநித்ய மச்யுத பதாம்புஜ யுக்ம ருக்ம
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாயமேநே,
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ ஸரணம் ப்ரபத்யே.

மாதாபிதா யுவதயஸ்தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்,
ஆத்யஸ்ய ந:குலபதேர் வகுலாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரி யுகலம் ப்ரணமாமி மூர்த்நா.

பூதம் ஸரஶ்ச (ஸரஸ்ய) மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலஸேகர யோகிவாஹாந்,
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஸமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்.

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்,
ப்ரஸந்நவதநம் த்யாயேத் ஸர்வவிக்நோபசாந்தயே.
யஸ்ய த்விரதவக்த்ராத்யா: பாரிஷத்யா: பரஶ்ஶதம்,
விக்நம் நிக்நந்தி ஸததம் விஷ்வக்ஸேநம் தமாச்ரயே.

முதலத்தியாயம்

தேவதேவ மஹாதேவ நீலகண்ட ஜகத்குரோ
ச்ருதம் மயாகிலம் ஸம்யக் மாஹாத்ம்யம் விஷ்ணுஸம்ஸதாம்.

வாரீர் தேவர்களுக்கும் தேவதையாய் நீலகண்டராய் மஹா தேவநாமகரான ஜகத்குருவே! எம்பெருமானுடைய திவ்ய தேசங்களுடைய ஸமஸ்தமான மாஹாத்ம்யமானது நன்றாக என்னாலே கேட்கப்பட்டது.

நத்ருப்திர் ஜாயதே மேத்ய வைபவம் ச்ருண்வதோ ஹரே:

ஹரியினுடைய வைபவத்தைக் கேளாநின்ற எனக்கு இப்போது த்ருப்தி உண்டாகவில்லை.

அதுநா நைமிசாரண்யம் ப்ராப்தவாநஹமவ்யயம்
புண்யம் புண்யதமைர் நித்யம் ஸேவிதம் முநிஸத்தமை:. (2)

இப்போது நான் புண்யதமாளான ரிஷிச்ரேஷ்டாளாலே நித்யவாஸம் பண்ணப்பட்டதாய் அபிவ்ருத்தமாய் தர்மாதி புருஷார்த்தப்ரதமான நைமிசாரண்யத்தை அடைந்தேன்.

தத்ராத்ராக்ஷம் முநிவராந் ஸப்தர்ஷீம்ஶ்ச மஹாத்மந:
அந்யாநபி மஹாபாகாந் பகவத்பக்தி பாவிதாந். (3)

அந்த நைமிசாரண்யத்திலே மிகவும் ஜ்ஞாதாக்களாய் மனனசீலாளான ரிஷிகளுக்குள்ளே ச்ரேஷ்டாளான ஸப்தரிஷிகளையும் பகவத்பக்தியோகத்தாலே ச்லாகயாளாயும் மஹாபாக்யவான்களுமான வேறே சில ரிஷிகளையும் கண்டேன்.

ஸநத்குமாரோ பகவாந் தேஷாம் மத்யே மஹாத்மநாம்
ஆஸீநஶ்ச மயா த்ருஷ்ட: வஸூநாமிவ வாஸவ:. (4)

மஹாத்மாக்களான அந்த ரிஷிகளுடைய மத்யத்திலே இராநின்றும் தபஸ்வியுமான ஸனத்குமாரர் அஷ்ட வஸுக்களுடைய நடுவில் இராநின்ற தேவேந்திரன்போல் என்னாலே காணப்பட்டார்.

தமப்ரமேய விபவம் தாம்ஶ்ச த்ருஷ்ட்வா மஹாமுநீந்
ததாச்ரமபதம் திவ்யம் ப்ரவிஷ்டோ ஹ்ருஷ்டமாநஸ:. (5)

நான் திவ்யமான அந்த ஆச்ரமத்தை ப்ரவேசித்து அவாங்மனஸகோசரமான வைபவத்தையுடைய அந்த ஸனத்குமாரரையும் தபஸ்விகளான அந்த மஹர்ஷிகளையும் ஸேவித்து மிகவும் ஸந்துஷ்டனானேன்.

கதா : கதயதாம் தேஷாம் ஶௌநகோ வாக்யமப்ரவீத்
ஸநத்குமாரம் தேவேஶம் ஜ்வலந்தம் ஸ்வேநதேஜஸா. (6)

பகவத்கதைகளை ஒருவர்க்கொருவர் சொல்லாநின்ற அந்த மஹர்ஷிகளுடைய நடுவே தன்னுடைய தபஸ்ஸினாலே விளங்கா நின்ற தேவச்ரேஷ்ட்டரான ஸனத்குமாரரைப் பார்த்து சௌனகர் வக்ஷ்யமாணப்ரகாரமாக ஒரு வார்த்தை சொன்னார்.

ஶௌநக:—ஜம்பூத்வீபே புராணஸ்ய புருஷஸ்ய கதாப்ருத: (7)
அஷ்டோத்தரஶதாநீதி ஸ்தாநாநி பகவந் ச்ருதம்
தாந்யநுக்ரமஶஶ் ஶ்ரோதும் இச்சாமி முநிபுங்கவ. (8)

வாரீர் த்ரிகாலவேதியான ஸனத்குமாரரே! முன்னாலே, ஜம்பூத்வீபத்திலே கௌமோதகீதாரியான புராணபுருஷனுக்கு நித்யமான வாஸஸ்தானங்கள் நூற்றெட்டென்று என்னாலே கேட்கப்பட்டது. வாரீர் முனிச்ரேஷ்ட்டரான ஸனத்குமாரரே! அந்த திவ்யதேசங்களை க்ரமமாகக் கேட்க வேணுமென்று இச்சிக்கிறேன்.

ஶௌநகேநைவமுக்தஸ்து முநிநா பாவிதாத்மநா
ஸநத்குமாரோ பகவாந் இதம் வசநமப்ரவீத். (9)

தபஸ்வியான ஸனத்குமாரரோ வென்றால் மனனசீலராய் த்யானம் பண்ணப்பட்ட பரமாத்மாவை உடைத்தான சௌனகராலே இப்படி ப்ரச்னம் பண்ணப்பட்டவராய்க்கொண்டு வக்ஷ்யமாண ப்ரகாரமாக ஒருவார்த்தை சொன்னார்.

அஷ்டோத்தர ஶதாந்யேவ ஸ்தாநாந்யத்ர மஹாமுநே
விஷ்ணோஸ்தஸ்யாநுபூர்வ்யேண கதயாமாஸ தாநி ஸ:. (10)

வாரீர் மனனசீலரான சௌனகரே! இந்த ஜம்பூத்வீபத்திலே எம்பெருமானுக்கு முக்யமான ஸ்தலங்கள் நூற்றெட்டு உண்டென்று அந்த ஸனத்குமாரரானவர் அந்த எம்பெருமானுடைய ஸம்பந்தமுள்ள திவ்ய தேச வைபவங்களை க்ரமமாகச் சொன்னார்.

ததஸ்தேநாந்தரா கிஞ்சித் ப்ருந்தாவநமிதி ச்ருதம்
விஷ்ணோஸ் ஸ்தாநம் மஹத் புண்யமிதி ஸங்கீர்திதம் ததா. (11)
தத்ராபி மூர்த்தய:பஞ்ச ஸந்தி விஷ்ணோர் மஹாத்மந:
இதி ஸம்ப்ரஸ்துதம் தேந தத்ர தச்ச மயாச்ருதம். (12)

அதற்குமேல் அந்த ஸனத்குமாரராலே அந்த திவ்ய தேசங்களுக்குள்ளே ஓரானொரு திவ்யதேசமானது ப்ருந்தாவனமென்று சொல்லப்பட்டது. அந்த ப்ருந்தாவனமானது விஷ்ணுவுக்கு வாஸஸ்தானமென்றும் மிகவும் ஸகலபுருஷார்த்தப்ரதமென்றும் சொல்லப்பட்டது. அந்த ப்ருந்தாவனத்திலேயும் பரமாத்மாவான விஷ்ணுவுக்கு அஞ்சுவிதமான திவ்யமங்கள விக்ரஹங்களும் உண்டென்று அந்த ஸனத்குமாரராலே ப்ரஸ்தாவிக்கப்பட்டது. அந்த திவ்யதேசவைபவம் சொல்லுமளவில் கீழே சொல்லப்பட்ட ப்ருந்தாவனவைபவம் என்னாலே கேட்கப்பட்டது.

தச் ச்ருத்வா தத்ர தேவேஶ த்வாம் த்ரஷ்டும் ப்ராப்தவானஹம்
இமம் கிரிவரம் ரம்யம் கைலாஸம் சந்த்ரஶேகர. (13)

வாரீர் தேவச்ரேஷ்ட்டரான சந்த்ரசேகரரே! அந்த ப்ருந்தாவனவைபவத்தைக் கேட்டு உம்மைப் பார்க்கும் பொருட்டு நான் பர்வதச்ரேஷ்ட்டமான கைலாஸத்தை அடைந்தேன்.

குத்ர தத்புவி தேவேஶ ப்ருந்தாரண்ய மிதிச்ருதம்
ஸ்தாநம் விஷ்ணோர் மஹத் தஸ்ய மூர்த்தய: பஞ்ச காஸ் ததா.

வாரீர் தேவச்ரேஷ்ட்டரான சம்புவே! ப்ருந்தாரண்யமென்று சொல்லப்பட்ட எம்பெருமானுக்கு வாஸஸ்தானமாய் மஹத்தான திவ்ய தேசந்தான் எவ்விடத்திலே? அந்த திவ்ய தேசத்திலே எழுந்தருளியிருக்கிற எம்பெருமானுடைய ஐந்து திவ்யமங்கள விக்ரஹங்கள்தான் எப்படிப்பட்டதுகள்?

தத்ர கிஂ தீர்த்தமித்யுக்தம் ப்ரஶஸ்தம் முநிபிர்ப்புவி
கிந்தஸ்ய வைபவஞ்சாபி தீர்த்தஸ்யச தயாநிதே,
ஏதத் ஸர்வம் மம ப்ரூஹி ச்ரோதுமிச்சாமி தத்த்வத:. (15)

இந்த பூமியிலே அந்த ப்ருந்தாவனத்திலே ரிஷிகளாலே ப்ரஶஸ்தமாகச் சொல்லப்பட்ட தீர்த்தம் எது? அந்த தீர்த்தத்தினுடைய வைபவம் எப்படிப்பட்டது. வாரீர் தயாநிதியான சம்புவே! இதெல்லாவற்றையும் நான் தத்த்வமாகக் கேட்கவேணுமென்று இச்சிக்கிறேனாகையால் கீழே என்னாலே ப்ரச்னம் பண்ணப்பட்ட எல்லா வ்ருத்தாந்தத்தையும் நீர் எனக்குப் பரக்கச் சொல்லவேணும்.

மஹேச்வர உவாச—

கோவா வக்தும் ஸமர்த்தோஸ்தி வைபவம் கைடபத்விஷ:
தேவாஸ்ஸுரர்ஷயஸ்ஸர்வே ஸமேதாஸ் ஶுத்தமாநஸா:.
ஸப்ரஜாபதயஶ்சாபி பஹுபிர் ப்ரஹ்மவத்ஸரை:
வக்தும் வைபவமேதேஷாம் நஶக்தா இதிமேமதி:. (17)

கைடபாஸுரவிஜயியான ச்ரிய:பதியினுடைய வைபவத்தைச் சொல்ல ஸமர்த்தனான புருஷன் இந்த லோகத்தில் எவன் தான் இருக்கிறான்? சுத்தமனஸ்காளான ப்ரஹ்மாதிஸமஸ்த தேவதைகளும் நாரதாதி தேவர்ஷிகளும் தக்ஷாதிநவப்ரஜாபதிகளோடே கூடினவர்களாயும் இன்னம் அனேக ரிஷிகளோடே கூடினவர்களாய்க் கொண்டும் அந்த ப்ருந்தாவனத்தில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமான்களென்ன அதிலிருக்கும் புண்யதீர்த்தங்களென்ன இதுகளுடைய எல்லாவைபவத்தையும் அனேக ஸம்வத்ஸரங்களாலும் சொல்ல ஸமர்த்தர்களன்றென்று எனக்குத் தோன்றுகிறது.

ததாபி தவ வக்ஷ்யாமி பக்தியுக்தஸ்ய நாரத
யந்மயா விதிதம் கிஞ்சித் தச்ச்ருணுஷ்வ ஸ்மாஹித:. (18)

அப்படியானாலும் வாரீர் நாரதரே! என்னாலே யாதொரு வைபவம் ஸங்க்ரஹமாக அறியப்பட்டிருக்கிறதோ அந்த ப்ருந்தாவனவைபவத்தை பக்தியுக்தரான உமக்குச் சொல்லுகிறேன். நீர் ஸாவதானமனஸ்கராய்க்கேளும்.

தோயாத்ரிரிதி விக்யாத: பர்வதப்ரவரோ மஹாந்
தத்ராஸ்தே பகவாந் தேவ: ஸ்ரீபதிர் கருடத்வஜ:. (19)
நித்யம் ஸம்ஸேவிதஸ்ஸர்வைர் தேவாஸுரமஹர்ஷிபி:
மஹாபாகவதைச் சாங்யைர் ஜ்ஞாதபூர்வஸ்த்வயா முநே. (20)
யத்ர ஸம்ஸாரஜலதி மத்யமக்நாந் ஸமுத்தரந்
மநுஜாந் மாதவோதேவ: க்ருபாபரவஶோऽவதி. (21)

ச்ரிய:பதியானவர் க்ருபாபரவசராய் எந்த பர்வதத்தில் நித்யவாஸம் பண்ணுநின்றுகொண்டு ஸம்ஸாரஸாகரமத்யமக்னரான மனுஷ்யர்களை உத்தரிப்பியாநின்றுகொண்டு ரக்ஷியாநிற்கிறாரோ, அப்படி ப்ரஸித்தமாயும் மஹத்தரமுமான திருநீர்மலையென்கிற ஒரு பர்வதம் உண்டு. அந்தப் பர்வதத்திலே கருடத்வஜராயும் ஷாட்குண்ய பரிபூர்ணராயும் தேவதேவருமான

ச்ரிய:பதியானவர் ஸமஸ்தமான தேவதைகளென்ன அஸுரா ளென்ன இன்னம் மற்றுமுள்ள மஹாபாகவதாளென்ன இவர் களாலே எப்போதும் ஸேவிக்கப்பட்டவராய் எழுந்தருளியிருக்கி ருரென்று, வாரீர் நாரதரே! உம்மாலே பூர்வமே அறியப்பட் டிருக்கிறுரன்றோ.

தத உத்தரபூர்வஸ்யாம் திஶிதீரே மஹோததே:
காசிதஸ்தி முனிச்ரேஷ்ட்ட புரீ தேவபுரீசுபா. (22)

வாரீர் நாரதரே! அந்தத் திருநீர்மலைக்கு ஈசான்ய திக்கிலே ஸமுத்ரத்தினுடைய கரையிலே அமராவதிபோல் மங்கள கரையாயிருக்கிற ஒரு பட்டணம் இருக்கிறது.

உத்யாநாம்ரவணேபேதா பதாகாத்வஜமாலிநீ
வஜ்ரவைடூர்யசித்ராங்கைர் கோபுரைஶ்சவிராஜிதா. (23)

த்ருடவப்ரா ஸுவிஸ்தீர்ண நாநாரத்னஸமேதிதா
கவாடை:காஞ்சநமயைர் முக்தாஜாலவிபூஷிதை:. (24)

தோரணைர்வஜ்ரகடிதைஸ் ஸம்ருத்தா ஸர்வதஶ்ஶுபா
ப்ராஸாதகணஸங்கீர்ண சந்த்ரஶாலாவிராஜிதா. (25)

சந்தநாகருதூபைஶ்ச ஸர்வதஸ்ஸம்ப்ரதூபிதா
ஶோபிதாத்யுச்சசிகரைஸ் ஸுதாதவலிதைர்க்ருஹை:. (26)

கேலிக்ருஹைர்மனோஜ்ஞைஶ்ச யுக்தா.தாராக்ருஹைரபி
நாநாமணிவிசித்ரைஶ்ச தேவாயதநமண்டலை:. (27)

தத்ரதத்ரவிராஜந்தீ சந்தநாகருதூபிதை:
ஹ்ருஷ்டபுஷ்டஜநாகீர்ண ஸர்வஸௌபாக்யபாவிதா. (28)

அந்தப் பட்டணமானது எப்படிப்பட்டிருக்கிறதென்றுல் உத்யான வனங்களிலிருக்கிற தித்திப்பு மாமரங்களோடு கூடின தாயும் தோரணபங்க்தியை உடையதாயும் வஜ்ரவைடூர்யாதி ரத்னங்களால் இழைக்கப்பட்ட ப்ரதேசங்களை உடைத்தான கோபுரங்களாலே விளங்கப்பட்டதாயும் த்ருடமான ப்ராகாரங்களை உடைத்தாயும் மிகவும் விசாலையாயும் நாநாவிதமான ரதகஜாதி ச்ரேஷ்ட்டமான வஸ்துக்களாலே வ்ருத்தி பண்ணப்பட்டதாயும் முத்துக்களால் அலங்க்ருதமாயும் தங்கமயமான கதவுகளோடு கூடினதாயும் வஜ்ரகசிதங்களான பஹிர்த்வாரங்களோடு கூடின தாயும் ஸர்வப்ரகாரத்தாலும் மங்கலகரையாயும் அனேக ப்ராஸா தங்களாலே நிபிடையாயும் சந்த்ரசாலா சோபிதையாயும் அகரு

சந்தனதூபங்களாலே தூபிதமான ப்ரதேசங்களை உடைத்தாயும் அத்யந்தம் உன்னதங்களாயும் ஸுதையினாலே வெளுப்பாகப் பண்ணப்பட்டுமிருக்கிற க்ருஹங்களினாலே சோபிதையாயும் மனோஜ்ஞங்களான லீலாக்ருஹங்களோடும் தாராக்ருஹங்களோடும் கூடியதாயும் நானாரத்னகசிதங்களாயும் அகருசந்தனப் புகைகளாலே தூபிதங்களாயிருக்கிற கோயில்களுடைய ஸமூஹங்களாலே அங்கங்கே ப்ரகாசியாநின்றும் ஹ்ருஷ்டபுஷ்டாளான ஜனங்களாலே ஸம்பூர்ணையாயும் ஸமஸ்த ஐச்வர்யங்களினாலே கொண்டாடப்பட்டதாயுமிருக்கிறது.

மயூரநகரீ நாம விச்ருதா புவநத்ரயே. (29)

அந்தப்பட்டணமானது மூன்று லோகங்களிலேயும் மயூரநகரியென்று ப்ரஸித்தையாயிருக்கிறதன்றோ.

மஹாதபஸாஃஃராத்ய ப்ரஹ்மாணம்லோகஸத்க்ருதம்
யாம் லேபே வ்ருஷபோ ராஜா விச்வகர்மவிநிர்மிதாம். (30)

வ்ருஷபனென்கிற ராஜச்ரேஷ்டனானவன் லோகஸத்க்ருதரான ப்ரஹ்மாவை மிகவும் தபஸ்ஸினாலே ஸந்தோஷிப்பித்து அந்த ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்தாலே விச்வகர்மாவினாலே ஸ்ருஷ்டையான எந்தப் பட்டணத்தை அடைந்தானோ.

யத்ர மந்தாரகாக்யாய முநயே சூத்ரயோநயே
ப்ரஸந்நஷ்ஷண்முகஸ்ஸாக்ஷாத் அபீஷ்டாந் ப்ரததௌ வராந்.

எந்தப் பட்டணத்திலே ஷண்முகனானவன் சூத்ரஜன்மாவாய் மந்தாரகனென்று பேரை உடைத்தான ரிஷியின்பொருட்டு எதிரே ப்ரஸன்னனாய்க் கொண்டு அந்த மந்தாரகரிஷிக்கு இஷ்டங்களான வரங்களைக் கொடுத்தானோ.

ததாப்ரப்ருதி தத்ரைவ பக்தவாத்ஸல்யயோகத:
ப்ரபுஶ்ஶக்திதரோத்யாபி ஸந்நிதிம் குருதே ஸதா. (32)

அந்த மயூரநகரியிலே சக்திதரனாய் ப்ரபுவான ஸுப்ரஹ்மண்யனானவன் அது முதலாக பக்தனான அந்த மந்தாரகனென்கிற ரிஷியினிடத்திலே வாத்ஸல்யத்தினால் இப்போதும் ஸர்வகாலமும் ப்ரத்யக்ஷமாயிருக்கிறான்.

யத்ராமண்யகமுத்வீக்ஷ்ய ஸ்வர்க்கஸ்யவச ஸம்பதம்
விஹாயால்பதயா ஸ்வர்க்கம் யத்ர ரேமே ஸஶக்திப்ருத். (33)

சக்திதரனான அந்த ஸுப்ரஹ்மண்யனானவன் எந்த மயூர நகரியினுடைய மனோஜ்ஞதையையும் ஸ்வர்க்கஸம்பத்தைப் போன்ற ஸம்பத்தையும் பார்த்து இந்தப் பட்டணத்தைக்காட்டிலும் ஸ்வல்பமாயிருக்கையினாலே ஸ்வர்க்கத்தை விட்டு எந்த மயூர நகரியிலே க்ரீடியாநிற்கிறானோ.

ஸாலைஸ்தாலைஸ்தமாலைஶ்ச ஹிந்தாலைஶ்சம்பகைரபி
நாலிகேரைஶ்ச புந்நாகை: சூதைஸ்ஸ்வாதுபலைரபி. (34)
ஸிந்துவாரைர்கந்தபூரைர் பீஜபூரைர்த்தவைரபி
அஶோகை:பாடலீபிஶ்ச வகுலைர்வஞ்சுலைரபி. (35)
ஏவம்பஹுப்ராகீர்ணு வ்ருக்ஷை:புஷ்பபலாந்விதை:.

திவ்ய கந்த திவ்யரஸ திவ்ய புஷ்ப திவ்யபலங்களாலே வணக்கப்பட்ட ஸாலதால தமால ஹிந்தால நாலிகேர சூத புன்னாக சம்பக ஸிந்துவார பீஜபூர கந்தபூர தவாசோக பாடல வகுல வஞ்சுலாதிகளான இப்படிப்பட்ட அனேக வ்ருக்ஷாதிகளாலே நிபிடையாயிருக்கிறதோ.

காஸாரைஸ்ஸாரஸாவாஸை: ஸ்வச்சஸ்வாதுதஸம்யுதை:
சக்ரவாகாநுசரிதை: காரண்டவநிஷேவிதை:
ஸங்கீர்ணு ஸர்வத: புல்லபத்மகல்ஹாரகேஸரை:. (37)

தெளிந்தும் ருசியான தீர்த்தயுக்தங்களாயும் ஸாரஸபக்ஷிகள் சக்ரவாகபக்ஷிகள் காரண்டவபக்ஷிகள் இவைமுதலான அனேக ஜலபக்ஷிகளாலே வஸிக்கப்பட்டதுகளாயும் விகஸிதங்களான பத்ம கல்ஹார கேஸரங்களை யுடையதுகளான தாமரையோடைகளினாலே யாதொரு பட்டணமானது நாலு பக்கங்களிலேயும் ஸம்பூர்ணையாயிருக்கிறதோ.

மாயேதி மாதவீசேதி மயூரநகரீதிச
படந்தி வைஷ்ணவீசேதி யந்நாமாநி புராவித:. (38)

மஹர்ஷிகளானவர்கள் எந்தப் பட்டணத்தினுடை பேர்களை மாயையென்றும் மாதவியென்றும் மயூரநகரியென்றும் வைஷ்ணவியென்றும் சொல்லாநிற்கிறார்களோ.

ஏவம்விதாயாஸ்தஸ்யாஸ்து நகர்யாஹ்யவிதூரத:
ப்ருந்தாவநமிதிக்யாதம் தத்வநம் தேவபூஜிதம். (39)

இப்படிப்பட்ட அந்த மயூரநகரிக்கு ஸமீபத்திலே தேவபூஜிதமாய் ப்ருந்தாவனமென்று ப்ரஸித்தமான ஒருவனம் இருக்கிறது.

உத்தரஸ்யாங் திஸிஷ்யேதத் தஸ்யா: பூர்யா மஹத் வநம்,
கோதண்ட சதமாத்ரந்து நகரீவநயோஸ் தயோ:. 40

அந்த மயூரநகரியென்ன ப்ருந்தாரண்யமென்ன இவைகளினுடைய நடுவிலே நூறுவில்கடை விஸாலமான இந்த ப்ருந்தாவநமானது மயூரநகரியினுடைய வடக்கு திக்கிலே இருக்கிறது.

தத்து ரம்யம் முநிஸ்ரேஷ்ட்ட துலஸீகாநநாபிதம்,
விபிநம் வீபுலஸ்ரீகம் அனேகதருஸங்குலம். (41)
ஸேவிதம் முநிஸார்த்தூலேஸ் ஸுசோபி விமலோதகை:,
ப்ருந்தாவநமிதி க்யாதம் திரிஷு லோகேஷு விஸ்ருதம். (42)

வாரீர் ரிஷிஸ்ரேஷ்ட்டரான நாரதரே! துலஸீவநமென்று ப்ரவஸித்தமாய் ரம்யமான வநமோவென்றால் அதிக ஸம்பத்தை உடைத்தானதாயும் அனேக வ்ருக்ஷ ஜாதிகளாலே நிபிடமாயும் நிர்மலங்களான தெளிந்த தீர்த்தங்களாலே மிகவும் அழகாயும் ரிஷிஸ்ரேஷ்ட்டாளான ப்ருக்வாதிகளாலே ஸேவிதமாயும் ப்ருந்தாவனமென்று பேரை உடைத்தானதுமாய் மூன்று லோகத்திலேயும் ப்ரவஸித்தமாயிருக்கிறது.

விஷ்ணோர் பகவதோ யத்ர மூர்த்தயஸ்ஸந்தி நாரத,
யத்ரநித்யம் ஹரிஸ்ஸாக்ஷாத் தேவதேவோ ஜகத்குரு:,
ஆத்மாநம் பஞ்சதா க்ருத்வா வஸத்யமிதவிக்ரம:. (43)

வாரீர் நாரதரே! எந்த ப்ருந்தாவனத்திலே ஷாட்குண்ய பரிபூர்ணராய் வ்யாபகரான ஸ்ரிய:பதியினுடைய திவ்ய மங்கள விக்ரஹங்கள் இருக்கிறதோ, அந்த ப்ருந்தாவனத்திலே அமித விக்ரமராய் தேவதேவராய் ஆஸ்ரித விரோதி நிரஸன ஸீலராய் ஜகதாசார்யரான எம்பெருமான் தன் திருமேனியை அஞ்சு விதமாகச் செய்துகொண்டு ஸாக்ஷாத்காரமாய் நித்யவாஸம் பண்ணுகிருரோ.

மஹாபாதக யுக்தோபி யத்ர கத்வா விமுச்யதே,
நதத் கோநாம ஜாநாதி ப்ருந்தாரண்யம் மஹாமுநே. (44)

வாரீர் நாரதரே! யாதொரு புருஷனனவன் மஹா பாதக யுக்தனயிருந்தாலும் எந்த ப்ருந்தாவனத்திலே போய் அந்த பாபங்களினின்று விடுபடுகிறேனே, அந்த வனத்தை எவன்தான் அறியான்?

துலஸீகாநநே யஸ்து முஹூர்த்தமபி திஷ்ட்டதி,
ஸ வாஜபேய யஜ்ஞஸ்ய பலமாப்நோதி புஷ்கலம். (45)

யாதொரு மனுஷ்யன் ப்ருந்தாவனத்திலே முஹூர்த்த காலமாகிலும் இருக்கிறானோ, அவன் வாஜபேயயஜ்ஞ பலத்தை விசேஷமாக அடைகிறான்.

ஸ்வப்நேऽபி யஸ்து விப்ரேந்த்ர தத்கதிம் கலயேந்நர:,
ததர்த்த பலமாப்நோதி ஸது பச்யதி ஜாகரே. (46)

வாரீர் நாரதரே! யாதொரு புருஷன் ஸ்வப்னத்திலே யாகிலும் அந்த ப்ருந்தாவனத்தைக் குறித்து யாத்ரை பண்ணு கிறானோ, அந்த புருஷன் ஸ்வப்னாந்தத்திலே யாத்ரை தடஸ்த்த மாகக் காண்கிறான். யாத்ரா பலத்தையும் அடைகிறான்.

யே வஸந்தி ததா தத்ர ப்ருந்தாவநவிபூஷிதே,
திர்யஞ்சோऽபி பதம் யாந்தி தேவிஷ்ணோரமிதௌஜஸ:. (47)

ப்ருந்தாவனத்திலே அலங்க்ருதமான அந்த ப்ரதேசத்திலே எதுகள் வஸியா நிற்கிறதுகளோ, அதுகள் திர்யக்ஜாத்யுத் பன்னங்களாயிருந்தாலும் அமிதௌஜஸ்ஸான விஷ்ணுவினு டைய பதமான வைகுண்ட்டத்தை அடையா நிற்கிறதுகள்.

யஸ்து தத்கச்சதி நரோ பக்திஹீநோபி காரணாத்,
தஸ்ய பாபாநி நச்யந்தி க்ரீஷ்மாம்பாம்ஸீவ ஸர்வத:. (48)

யாதொரு புருஷன் பக்திஹீனனாயிருந்தாலும் ஓரானொரு ஹேதுவினாலே அந்த ப்ருந்தாவனத்தை அடைகிறானோ, க்ரீஷ்ம காலத்திலே ஜலங்கள் சோஷிக்கிறமாபோலே அவனுடைய பாபங் கள் முற்றும் நசியா நிற்கிறதுகள்.

துலஸீகாநநம் கச்சந் உந்மத்தோऽபி யத்ருச்சயா,
விமுச்யதே ஸர்வபாபை: ஶரதீவ கநைர்நப:. (49)

யாதொரு புருஷன் உன்மத்தனாயினும் யத்ருச்சயா அந்த ப்ருந்தாவனத்தை அடைந்தாலும் சரத்காலத்திலே ஆகாச மானது மேகங்களினாலே விடுபடுமாபோலே அந்த புருஷனான வன் ஸமஸ்த பாபங்களாலும் விடுபடுகிறான்.

யஸ்து கச்சதி தத்வித்வாந் பக்திஶ்ரத்தாபுரஸ்ஸர:,
ஸ விஷ்ணுபதமாப்நோதி தத்துலாநந்த்யமேதிச. (50)

எந்த வித்வானோவென்றால் பக்தி ச்ரத்தைகளை முன்னிட்ட வனாய்க்கொண்டு அந்த ப்ருந்தாவனத்தைக் குறித்துப் போகி

ருனே, அந்த புருஷன் பரமபதத்தை அடைகிருன்; அவனுடைய குலம் அபிவ்ருத்தமாகா நிற்கிறது.

ப்ருந்தேத்யக்ஷரயுக்மந்து துலஸீத்யக்ஷரத்ரயம்,
ஸங்கீர்த்தயதி யோநைவ தஸ்ய புண்யமநந்தகம். (51)

யாதொரு புருஷன் ப்ருந்தா என்கிற இரண்டக்ஷரத்தையும் துலஸி என்கிற மூன்றக்ஷரத்தையும் ஸங்கீர்த்தனம் பண்ணு நிற்கிருனே, அந்த க்ஷணமே அவனுடைய புண்யமானது அபிவ்ருத்தமாகாநிற்கிறது.

யஸ்து ப்ராதஸ் ஸமுத்தாய யத்ரகுத்ர வஸந்நபி,
துலஸீவனமித்யேதத் வதந் யாதி பராங்கதிம். (52)

யாதொரு புருஷனேவென்ருல் எந்த தேசத்திலே இரா நின்ருலும் ப்ராதக்காலத்திலே எழுந்திருந்து இந்த ப்ருந்தா வனத்தை, துலஸீவனமென்று சொல்லாநிற்கிருனே, அவன் உத்தம கதியை அடைகிருன்.

ப்ராதக்காலே சுசிர் பூத்வா யஸ்து பக்திஸமந்வித:,
ப்ருந்தாவநமிதி ஹ்யேதத் பஞ்ச க்ருத்வோ ஜபந்நர:. (53)

விதூய பாபாந் ஸகலாந் காமாந் ப்ராப்யேஹ மாநவ:,
அந்தேச தத் பதம் யாதி யதநந்தமநாதிச. (54)

தத்ஸந்ததி பவாஸ்ஸர்வே மஹாபாகவதா முநே,
பவந்தி பரமாத்மாநம் ப்ராப்நுவந்தி மநீஷிண:. (55)

யாதொரு புருஷனேவென்ருல் பக்தியுக்தனுய்க்கொண்டு ப்ராதக் காலத்திலே சுசியாயிருந்து ப்ருந்தாவனமென்று ப்ரஸித்தமான இந்த திவ்ய தேசத்தை அஞ்சு தரம் ஜபிக்கிருனே, அவன் ஸமஸ்த பாபங்களினின்றும் விடுபட்டவனுய் தர்மாதி ஸகல புருஷார்த்தங்களையும் இஹலோகத்திலே அடைந்து அந்த்யத்திலே எந்த ஸ்தானமானது அனுதியாயும் அனந்தமாயும் இருக்கிறதோ, அப்படிப்பட்ட பரமபதத்தை அடையாநிற்கிருன். வாரீர் நாரதரே! அவனுடைய ஸந்ததியிலே உண்டாயிருக்கிற ஸமஸ்தமானவர்களும் ஜ்ஞாதாக்களும் பரம பாகவதர்களுமாய் எம்பெருமானை அடையா நிற்கிருர்கள்.

கீயதேச புராகீத: கதாசித் காரணுந்தரே,
ஸுமேருசிகரே தேவை: ச்லோகோऽயம் ஸஹஸங்கதை: (65)

ஓரானொரு கால விசேஷத்திலே ஒரு காரியப்பாடாக மேரு பர்வதத்தினுடைய சிகரத்திலே சேர்ந்த தேவதைகளினாலே இந்த ச்லோகமானது சொல்லப்பட்டது.

ஸ்தாநேஷு வைஷ்ணவேஷ்வேஷு ப்ருந்தாரண்ய மநுத்தமம்
ஸுரேஷு மாதவஶ் ஶ்ரேஷ்ட்ட: தத்பக்தேஷுச ஶங்கர: ()

தேவதைகளுக்குள்ளே ஶ்ரிய:பதியானவர் எப்படி ஶ்ரேஷ்ட்டரோ, அவருடைய அடியார்களுக்குள்ளே சிவன். எப்படி ஶ்ரேஷ்ட்டனோ, அப்படி அவனுடைய திவ்ய தேசங்களுக்குள்ளே இந்த ப்ருந்தாவனமானது ஶ்ரேஷ்ட்டமாயிருக்கிறது.

தஸ்மாந்நாரத குத்ராபி தத்ஸமந் நாவலோக்யதே,
முக்திக்ஷேத்ரம் மநுஷ்யாணும் க்ஷேத்ரம் ப்ருந்தாவனு
பிதம். (58)

அப்படி தேவதைகளால் சொல்லப்பட்டிருக்கிறபடியால் வாரீர் நாரதரே! ப்ருந்தாவனமென்று பெயரை உடைத்தான இந்த க்ஷேத்ரமானது மனுஷ்யாளுக்கு முக்தி விளையுமிடம்- தத்துல்யமான திவ்ய தேசத்தை எவ்விடத்திலேயும் பார்க்கவில்லை.

யஸ்து தத்கச்சதிநரோ ப்ருந்தாரண்யம் மஹாமதி:,
தஸ்யாபராதம் குர்வந்தோ கச்சந்தி நரகாயுதம். (59)

புத்திமானை எந்த புருஷனேவென்றால் அந்த ப்ருந்தாவனத்தைக் குறித்துப் போகா நிற்கிறானே அந்த புருஷனை எவர்கள் நிந்தியா நிற்கிறார்களோ அவர்கள் நரகாயுதத்தை அடையா நிற்கிறார்கள்.

ப்ருந்தாவனமிதி ஹ்யேதத் நாஸ்த்யக்ஷரசதுஷ்டயம்,
வதநே யஸ்ய மூக்க்கஸ்ய தம் த்ருஷ்ட்வா ஸ்நாநமாசரேத்(60)

ப்ருந்தாவனமென்கிற இந்த அக்ஷரசதுஷ்டயத்தை எவன் த்வேஷத்தால் உச்சரியானோ அந்த மூர்க்கனைப் பார்த்தால் ஸசேல ஸ்னானம் பண்ணக்கடவன்.

துலஸீகாநநம் கந்தும் ப்ரவ்ருத்தம் யோ நிவாரயேத்,
தஸ்ய பாபாத்மநோ தேஹம் ஸ்ப்ருஷ்ட்வா சாந்த்ராயணஞ்
சரேத். (51)

யாதொரு புருஷனானவன் ப்ருந்தாவனத்தைக் குறித்துப் போகையிலே புறப்பட்ட புருஷனைத் தடுப்பானோ அவன் தேஹத்தை ஸ்பர்சித்தால் சந்த்ராயணவ்ரதம் பண்ணக்கடவன்.

ப்ருந்தாவனமிதி ஹ்யேதத் நவதேத் யோ விமூடதீ:,
தம் கர்த்தபம் ஸமாரோப்ய ராஜா ராஷ்ட்ராத் விவாஸயேத்.()

எந்த மூடபுத்தியானவன் ப்ருந்தாவனமென்கிற அந்த திவ்ய தேசத்தை வாக்கினாலும் சொல்மாட்டானோ அவனை கர்த்தாபாரோஹணம் செய்வித்து ராஜாவானவன் தன் ராஜ்யத்தினின்றும் துரத்தக்கடவன்.

ப்ருந்தாவனமிதி ஹ்யேதத் நச்ருதம் யேநவைருஷா,
தச் ச்ரோத்ரே த்வக்நிதப்தேந ஸீஸேநாபூரயேத் ஸுதீ:. (63)

எவனாலே கோபத்தினாலே இந்த ப்ருந்தாவனமென்கிற திவ்ய தேசமானது கேட்கப்படாதோ, புத்திமானான ராஜாவானவன் உருக்கின ஈயத்தினாலே அவன் காதுகளை நிறைக்கக்கடவன்.

துலஸீகாநநம் யஸ்து மநஸாऽபி நசிந்தயேத்,
தந்மநஸ் ஸர்வபாபாநாம் நிலயம் முநிஸத்தம. (64)

யாவனொருவன் ப்ருந்தாவனத்தை மனஸ்ஸினாலும் நினையானோ, வாரீர் நாரதரே! அவனுடைய மனஸ்ஸு ஸகலபாப மூலமாகா நிற்கிறது.

கோநாபி கீர்த்திதே தஸ்மிந் ப்ருந்தாரண்யேऽஞ்சலிந்நர:,
நகரோதி விமூடாத்மா நரகாநாப்நுயாத் த்ருவம். (65)

யாதொரு மனுஷ்யனானவன் மிகவும் மூடமனஸ்ஸை உடையவனாய்க்கொண்டு எவனாலேயாகிலும் ப்ருந்தாவனமென்று சொல்லப்படா நின்றவளவில் அஞ்சலி செய்யானோ, அவன் நரகங்களை நிச்சயமாய் அடையக்கடவன்.

யோ நபஶ்யதி பாபாத்மா ஸ்வப்நேऽபி துலஸீவநம்,
ஸசக்ஷுஷா யுதோவாபி ஜாத்யந்தோ நாத்ர ஸம்சய:. (66)

யாதொருவன் ஸ்வப்னத்திலேயும் துலஸீவனமென்கிற இந்த ப்ருந்தாரண்யத்தைப் பார்த்திரானோ, அவன் விசாலமான கண்களோடு கூடியிருந்தும் பிறவிக்குருடனாகாநிற்கிறானென்கிறதில் ஸம்சயமில்லை.

தத்ர கைரவிணீநாம ஸரஸீ புல்லபங்கஜா,
கைரவோத்பலஸஞ்ச்சந்நா காசிதஸ்தி மஹாமுநே. (67)

வாரீர் நாரதரே! அப்படிப்பட்ட ப்ருந்தாவனத்திலே விகஸிதங்களான தாமரஸ புஷ்பங்களினாலேயும் ஆம்பல்களினாலேயும் நெய்தல்களினாலேயும் அலங்கரிக்கப்பட்டிருக்கிற ஓரானொரு கைரவிணியென்கிற ஸரஸ்ஸானது இருக்கின்றது.

தத்ர ஸ்நாத்வா விமுச்யந்தே ஸர்வபாபைஶ்ச மாநவா:,
ஸம்ஸாரஜலதௌ மக்நா: மஜ்ஜநாதத்ர நாரத,
விதூதநிகிலாகௌகா கச்சந்தி பரமாம் கதிம். (68)

மனுஷ்யாளானவர்கள் அந்த ஸரஸ்ஸிலே ஸ்னானம் பண்ணி ஸர்வ பாபங்களினின்றும் விடுபடுகிறார்கள். வாரீர் நாரதரே! இந்த ஸரஸ்ஸிலே ஸ்னானமாத்ரத்தினாலே ஸம்ஸார ஜலதிமக்னாளான மனுஷ்யாள் போக்கடிக்கப்பட்ட ஸகல பாப ஸமூஹங்களை யுடையவர்களாய்க்கொண்டு பரம புருஷார்த்த லக்ஷண மோக்ஷத்தை அடையாநிற்கிறார்கள்.

அஸ்யா ஜலமுபஸ்ப்ருஶ்ய பீத்வா த்ருஷ்ட்வாபி மாநவ:,
முச்யமாநோ பவாகௌகைர் கச்சத்யந்தே பதம் ஹரே:. (69)

புருஷனானவன் இந்த கைரவிணீ தீர்த்தத்தை ஸ்பர்சித்தாலும் பானம் பண்ணினாலும் பார்த்தாலும் பாப ஸமூஹங்களினாலே விடுபட்டவனாய்க்கொண்டு பகவத் பதத்தை அடையா நிற்கிறான்.

யஸ்து கைரவிணீதீரே தத்தரங்காநிலாவ்ருதே,
நித்யம் வஸதி தர்மாத்மா தத்வசம் யாதி மாதவ:. (70)

யாதொரு புருஷனானவன் அந்த கைரவிணீயினுடைய தரங்காநிலாவ்ருதமான கரையிலே நித்யவாஸம் பண்ணா நிற்கிறானோ ஶ்ரிய:பதியான எம்பெருமான் அவனிட்ட வழக்காகா நிற்கிறான்.

ஏதத் விதித்வா முநிவர்ய யோவை
முக்திம் முகுந்தாததிகந்துகாம:,
ப்ருந்தாவநே நிர்மமதீ: கரோதி
பக்திம் ஸமாப்நோதி ஸஸர்வகாமாந். (71)

இதி ப்ரஹ்மாண்ட புராணே மஹேஶ்வர நாரத ஸம்வாதே ஸ்ரீப்ருந்தாரண்ய மாஹாத்ம்யே ப்ரதமோऽத்யாய:.

வாரீர் ரிஷிஶ்ரேஷ்டரான நாரதரே! யாதொரு புருஷனானவன் இந்த ப்ருந்தாவன வைபவத்தை அறிந்து நிர்மமனாய் முக்திப்ரதனான எம்பெருமானாலே மோக்ஷத்தை அடைய இச்சித்தவனாய் பகவத் பக்தியைப் பண்ணுகிறானோ, அவன் ஸமஸ்த காமங்களையும் அடைகிறான். முதலத்யாயம் முற்றிற்று.

# இரண்டாவது அத்யாயம்.

நாரத:—

தத்ர யா மூர்த்தய: பஞ்ச விஷ்ணோஸ்ஸந்தீதி விச்ருதா:,
தா: ச்ரோதுமஹமிச்சாமி பரம் கௌதூஹலம் ஹிமே. (72)

வாரீர் மஹேச்வரனே! அந்த ப்ருந்தாவனத்திலே எம்பெருமானுக்கு யாதொரு அஞ்சு விதமான திருக்கோலங்கள் இருக்கிறதுகளென்று ப்ரஸித்தமாயிருக்கிறதுகளோ, அந்த திவ்ய மங்கள விக்ரஹ விஷயமான விசேஷங்களை நான் கேட்க இச்சிக்கிறேன். அப்படி கேட்பதில் எனக்கு மிகவும் ஸந்தோஷமாயிருக்கிறது.

மஹேச்வர:—

யச் ச்ரோதுமிச்சஸி முனே கௌதூஹல ஸமந்வித:,
தத் ஸர்வம் கதயிஷ்யாமி யதாதத்வம் மஹாமுநே. (73)

வாரீர் புத்திமானன மனனசீலரான நாரதரே! ஸந்தோஷத்துடன் கூடினவராய் எந்த வைபவத்தைக் கேட்கிறதின் பொருட்டு இச்சியாநிற்கிறீரோ, அந்த ஸமஸ்தமான வைபவத்தையும் உண்மையாகச் சொல்லுகிறேன்.

புரா தத்ர கதாசித்வை ஸுபுண்யே துலஸீ வநே,
ப்ருக்வாத்யா முநயஸ்ஸப்த தபஸ்தேபுஸ் ஸுதுஷ்கரம். (74)

முன்னாலே, மிகவும் பாவனமாயிருக்கிற அந்த துலஸீவனத்திலே ஒருக்கால் ப்ருகு முதலான ஏழு பேர் மஹரிஷிகளானவர்கள் துஷ்கரமான தபஸ்ஸைப் பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

ப்ருகுரத்ரிர் மரீசிச்ச மார்க்கண்டேயஸ் ததாzபர:,
ஸுமதிஸ் ஸப்தரோமாச ததா ஜாலிச்ச ஸப்தம:. (75)
ஏதே பாவகஸங்காசா: பவநாம்புச்சதாசிந:,
தபச்சேருர் மஹத்கோரம் முநயோ மோக்ஷகாங்க்ஷிண:. (76)

இப்படி தபஸ்ஸு பண்ணும் ரிஷிகள் எவர்கள் என்றால், ப்ருகுவென்றும் அத்ரியென்றும் மரீசியென்றும் மார்க்கண்டேயரென்றும் ஸுமதியென்றும் ஸப்தரோமாவென்றும் அப்படியே ஜாலியென்றும் இவர்கள் ஜலம் வாயு சருகு இது முதலானதுகளை ஆஹாரமாக உடைத்தானவர்களாயும் தபஸ்ஸாலே அக்னி

போலே ப்ரகாசியானின்றும் மோக்ஷார்த்திகளான இந்த மஹர்ஷிகளானவர்கள் மிகவும் கோரமான தபஸ்ஸைப் பண்ணினுர்கள்.

ஏதஸ்மிந்நந்தரே காலே மத்யே துக்தபயோநிதே:,
அனந்தே புஜகாதீசே சாரதாம்புதபாண்டரே. (77)

ஶயாநஸ்ய ஜகத்ரக்ஷா ஜாகரூகஸ்ய காங்க்ஷிண:,
ஸுராஸுரகுரோர் விஷ்ணோர் லக்ஷ்ம்யாஶ்ச முநிஸத்தம,
கதாசித் ப்ரணயக்ரோத: ப்ராதுராஸீந் மநோஹர:. (78)

வாரீர் நாரதரே! இப்படி தபஸ்ஸு பண்ணிக்கொண்டிருக்கிற காலத்திலே, க்ஷீரஸமுத்ரத்தினுடைய மத்யத்திலே சரத்காலமேகம்போல் வெளுத்தும் ஸர்ப்ப ராஜாவாயிருக்கிற திருவனந்தாழ்வான்மேலே திருக்கண் வளர்த்தி செய்தருளாளின்றும் ஜகத்ரக்ஷண ஜாகரூகனுயும் ஆஶ்ரிதாளுடைய வரவை அபேக்ஷியாநின்றும் ஸுராஸுரகுருவான ஶ்ரிய:பதிக்கும் பெரிய பிராட்டியாருக்கும் ஒருகால் மனோஹரமான ப்ரணய கலஹமானது உண்டாச்சுது.

தஸ்மிந் ப்ரவ்ருத்தே லக்ஷ்மீஸ்து கோபஸம்ரக்த லோசநா,
வக்ஷ:பீடாத்ததா விஷ்ணோர் நிபத்ய த்ருதமாகதா. (79)
ததாஶ்ரமபதம் புண்யம் ப்ருந்தாரண்யம் மஹாத்மந:,
ப்ருகோர் முநிவராகீர்ணம் க்ருபயாம்புதி நந்திநீ. (80)

அப்படி ப்ரணய கலஹம் உண்டாயிருந்துள்ளவளவில் அப்போது க்ஷீராப்திநந்தினியமான பெரிய பிராட்டியாரோவென்ருல் கோபத்தாலே சிவந்த நேத்ரங்களை உடையவராய்க்கொண்டு விஷ்ணுவினுடைய வக்ஷ:பீடத்தினின்றும் இறங்கி ரிஷிஶ்ரேஷ்டராலே நிபிடமாய் பாவனமாய் ப்ருந்தாரண்யமென்று பேரை உடைத்தான மஹாதபஸ்வியான ப்ருகு மஹரிஷியினுடைய ஆஶ்ரம ஸ்தானத்தைக் குறித்து க்ருபையினுலே வேகமாக எழுந்தருளினுள்.

தத்ராகத்யாஶ்ரமே ரம்யே வபு: க்ருத்வாZதிகோமலம்,
கஸ்யாபி சந்தநதரோர் மூலே ஶிஶ்யே ஸுபாலிகா. (81)

அந்தப் பெரிய பிராடியாரானவன் ரம்யமான அந்த ப்ருக்வாஶ்ரமத்திலே வந்து மிக்வும் கோமலமான அப்ராக்ருத் திவ்ய மங்கல விக்ரஹத்தை தரித்துச் சிறு குழந்தையாய்க்கொண்டு ஒரானேரு சந்தனவ்ருக்ஷத்தினுடைய கீழே சயனித்துக்கொண்டாள்.

ததஃ கதாசித்தம் தேஸம் ஆஜகாம யத்ருச்சயா,
ப்ருகுஸ் ஸிஷ்யைஃ பரிவ்ருதோ மார்க்கண்டேயேந ஸம்யுதஃ. ()

அதற்குப் பிற்பாடு ப்ருகு மஹர்ஷியானவர் மார்க்கண்டேயரோடுகூடினவராய் சிஷ்யாளாலே சூழப்பட்டவராய்க்கொண்டு ஸ்வேச்சையாலே ஒருகால் அந்த ப்ரதேசத்தை அடைந்தார்.

தாந்த்ருஷ்ட்வா தத்ர விப்ரேந்த்ரஃ ஸுகுமாரீம் மனோஹராம்,
விஸ்மயம் பரமம் ப்ராப்தஸ் தேச தஸ்யாநுயாயிநஃ. (83)

அந்த ப்ரதேசத்திலே அந்த ப்ருகுமஹர்ஷியானவர் ஸுகுமாரியாயும் மனோஹரையாயுமிருக்கிற அந்தப் பெண்ணைப் பார்த்து மிகவும் ஆச்சர்யத்தை அடைந்தார். அவரைப் பின் செல்லா நிற்கிற அந்த மஹர்ஷிகளும் அப்படியே ஆச்சர்யத்தை அடைந்தார்கள்.

கிமேதச் சந்தநதரோ ரிதி மூலே குமாரிகாம்,
தேஜபஸ்யந் சாருஸர்வாங்கீம் தப்தஹாடக ஸந்நிபாம். (84)

புல்லபங்கஜ கர்ப்பாப பாணிபாததலோதராம்,
ஸர்வலக்ஷண ஸம்பந்நாம் கிஞ்சிதுந்மீலமூர்த்தஜாம். (85)

லஸல்லலாட பலகாம் ஸுப்ருவம் லலிதாநநாம்,
விகசேந்தீவராபாக்ஷீம் ஸுநாஸாம் மந்தஹாஸிநீம்,
ஆகுஞ்சிதாங்குலிகரத்வந்த்வாம் கம்ப்வாபகந்தராம். (86)

மிகவும் பாக்யவான்களான அந்த மஹர்ஷிகளானவர்கள் ஓட்வைத்ததங்கத்தோடே ஸமானமான தேஹகாந்தியை உடைத்தாயிருப்பவளாயும் அழகான ஸர்வாவயவங்களை உடைத்தானவளாயும் விகஸித்த தாமரஸ புஷ்பத்தினுடைய கர்ப்ப காந்தியைப்போன்ற காந்தியை உடைத்தான திருக்கைத்தலங்களென்ன திருவடிகளென்ன திருவுதரமென்ன இதுகளை உடைத்தாயிருப்பவளாயும் ஸர்வ லக்ஷண ஸம்பன்னையாயும் சுருண்டும் நீலமாயுமிருக்கிற திருக்குழல்களை உடையவளாயும் பலகைபோலே ப்ரகாசிக்கிற நெற்றியை உடைத்தானவளாயும் அழகான புருவங்களை உடைத்தானவளாயும் ஸுந்தரமான திருமுக மண்டலத்தை உடைத்தானவளாயும் விகஸித்த கருநெய்தல்களுடைய காந்தியைப்போன்ற காந்தியை உடைத்தான திருநயனங்களை உடைத்தானவளாயும் அழகான நாஸிகையை உடைத்தானவளாயும் புன்சிரிப்பை உடைத்தானவளாயும் சங்கம்போலே

அடி பெருத்து நுனி சிறுத்து த்ரிரேகாங்கிதமான கழுத்தை உடைத்தானவளாயும் ஆகுஞ்சிதமான விரல்களை உடைத்தான இரண்டு திருக்கைகளை உடைத்தானவளாயுமிருக்கிற அந்தப் பெண்ணை, சந்தனவ்ருக்ஷ மூலத்திலே இதென்னவென்று ஆச்சர்யபூரிதாளாய்ப் பார்த்தார்கள்.

அதோபஸ்ருத்ய தே ஸர்வே தஸ்துர் விஸ்மிதமாநஸா:,
முநயஸ்தாம் மஹாபாகாம் பஶ்யந்தோऽநிமிஷேக்ஷணா:. (87)

அப்படி பார்த்தபிறகு மஹாபாக்யவான்களான அந்த ரிஷிகளனைவரும் அந்தப் பெண்ணைக் கிட்டி இமையாத கண்ணராய்பாராநின்றுகொண்டு விஸ்மிதமனஸ்காளாயிருந்தார்கள்.

தத: கராப்யாமாதாய பாலாமிந்துநிபாநநாம்,
ப்ருகுஸ் ஸ்வமாஶ்ரமந்தூர்ண மாஜகாம மஹாமுநே. (88)

அதற்கு மேலே ப்ருகு மஹா முனிவரானவர், சந்த்ரனோடே ஸமானமான திருமுக மண்டலத்தை உடைத்தான குழந்தையைக் கைகளாலே எடுத்துக்கொண்டு தமதாச்ரமத்தைக் குறித்து த்வரையாக வந்தார்.

ஸ்வாஶ்ரமம் ஸமுபாகம்ய நிஜதாராநதாப்ரவீத்,
முநி: குமாரீமேதாம்வை ரக்ஷத்வமிதி ஸாதரம். (89)

ப்ருகுவானவர் ஸ்வாச்ரமத்தை அடைந்து ஸ்வபார்யையைப் பார்த்து இந்தப் பெண்ணை ஸாதரமாக ரக்ஷிப்பாயென்று சொன்னார்.

தாம் பஶ்யமாநாஸ்தாஸ்ஸர்வா ரிஷிபத்ந்யோ மநோஹராம்,
குமாரீம் விஸ்மயம் ஜக்முர் மஹதீஞ்ச ததா முதம். (90)

அதிமனோஹரமான அந்தப் பெண்ணை ஸமஸ்தமான ரிஷிபத்னிகளும் பாராநின்றுகொண்டு மஹத்தரமான ஆச்சர்யத்தையும் ஸந்தோஷத்தையு அடைந்தார்கள்.

தத: ப்ரமுதிதா லக்ஷ்மீமரக்ஷந் பாலிகாமிவ,
ஸாபி தாஸாம்ருஷிஸ்த்ரீணாம் ஜநயந்தீ பராம் முதம்,
வ்யவர்த்தத ப்ரதிதிநம் வர்ஷாஸ்விவ தரங்கிணீ. (91)

அதற்குப் பிற்பாடு அந்த ரிஷிபத்னிகளானவர்கள் ஸந்துஷ்டைகளாய்க்கொண்டு பெரியபிராட்டியாரைப் பெண்ணை வளர்த்தாற்போலே வளர்த்தார்கள். அந்தப் பெண்ணும் அந்த ரிஷிபத்னிகளுக்கு அதிகமான ஸந்தோஷத்தை உண்டு பண்ணு

நின்றுகொண்டு வர்ஷாகாலத்து நதியானதுபோல் ப்ரதிதினம் வளர்ந்தாள்.

ததஸ்தஸ்யா ப்ருகு: புண்யே வாஸரேZங்யைஸ்ஸஹர்ஷிபி:,
நாம சக்ரே முநிஶ்ரேஷ்ட்டோ வேதவல்லீதி நாரத. (92)

வாரீர் நாரதரே! அப்படி வளர்ந்த பிற்பாடு முனிச்ரேஷ்ட்டரான ப்ருகுவானவர் இதராளான ரிஷிகளோடே (ஸந்துஷ்டராய்க்கொண்டு) சுபதினத்திலே அந்தப் பெண்ணுக்கு வேதவல்லியென்று திருநாமம் சாத்தினர்.

ஸா தஸ்ய முநிஶார்த்தூல ஸஞ்சரந்த்யாஶ்ரமே ஶுபே,
ப்ருகோர்லக்ஷ்மீராஶ்ரமஸ்ய லக்ஷ்மீரிவஹி தேஹிநீ. (93)

இதஸ்ததஸ்ஸஞ்சரந்தீ லாலிதா தைர்மஹாத்மபி:,
ஶுஶ்ரூஷணபரா தேஷாமுவாஸ கதிசித்ஸமா:. (94)

வாரீர் நாரதரே! அந்த வேதவல்லியானவள் சுபமான அந்த ப்ருகுவினுடைய ஆச்ரமத்திலே ரூபீகரித்திருக்கிற ஆச்ரம லக்ஷ்மி போல் அந்தந்த ப்ரதேசங்களிலே ஸஞ்சரியாநின்றுகொண்டும் அந்த ரிஷிகளாலே கொண்டாடப்பட்டவளாய்க்கொண்டும் அந்த ரிஷிகளுக்கு சுச்ரூஷை பண்ணா நின்றுகொண்டு சில ஸம்வத்ஸரம் வாஸம் பண்ணிக்கொண்டிருந்தாள்.

அத தத்ராகமத் புண்யே ப்ருந்தாரண்யேZத்புதாக்ருதி:,
பகவாந் தேவதேவேஶோ வாஸுதேவஸ்ஸநாதந:. (95)

அதற்கு மேலே பாவனமான அந்த ப்ருந்தாரண்யத்திலே ஷாட்குண்ய பரிபூர்ணராய் நித்யஸூரிநிர்வாஹகராய் ஸனாதனரான வாஸுதேவரானவர் அத்புதாக்ருதியாய்க்கொண்டு எழுந்தருளினர்.

தருணம்புஜபத்ராக்ஷஸ் தப்தகாஞ்சநகுண்டல:,
யுகாயத புஜத்வந்த்வோ ராஜபுத்ர இவாபபௌ. (96)

அப்படி எழுந்தருளினவராயும் நுகத்தடி போலே நீண்ட இரண்டு திருக்கைகளை உடைத்தானவராயும் அப்போது விகஸித்த தாமரஸபுஷ்பத்தினுடைய இதழ்கள் போன்ற நயனங்களை உடையவராயும் ஒட வைத்த தங்கத்தாலே பண்ணப்பட்ட குண்டலங்களை உடைத்தானவராயுமிருக்கிற ஶ்ரிய: பதியானவர் ராஜபுத்ரனைப்போலே ப்ரகாசித்தார்.

தத்ர தாஞ்சாருஸர்வாங்கீம் வேதவல்லீமநிந்திதாம்,
புஷ்பாபசாயங் குர்வந்தீம் ததர்ஶாஶ்ரமவாஸிநீம். (97)

ராஜபுத்ராகாரராய் எழுந்தருளின ஸ்ரிய:பதியானவர் அந்த ஆச்ரமத்திலே வஸியாநின்றும் புஷ்பாபசாயத்தைப் பண்ணு நின்றும் அழகான ஸர்வாவயவங்களை உடையவளும் ஸாமுத்ரிக சாஸ்த்ரோக்த ஸகல லக்ஷணோபேதையுமான வேதவல்லியைப் பார்த்தார்.

தந்த்ருஷ்ட்வா ஸாபி ஸம்ப்ராந்தா கத்வா பித்ரே ந்யவேதயத்,
தச் ச்ருத்வா வசநந்தஸ்யா: ப்ருகு: பரமதார்மிக:. (98)
நிர்ஜகாமாஶ்ரமாத் தஸ்மாத் தந்ததர்ஶநவிஹ்வல:,
தஸ்ய தர்ஶநமாத்ரேண வாஸுதேவஸ்ய நாரத,
விநிர்மலமநாஸ்ஸோऽத புபுதே விஷ்ணுமவ்யயம். (99)

அந்த வேதவல்லி யென்கின்ற குமாரிகையும் அந்த பக வானைப் பார்த்து ஸம்ப்ராந்தையாய்க்கொண்டு கடுக நடையிட்டுத் தகப்பனுரையும்பொருட்டு அவரை அறிவித்தாள். பரம தார் மிகரான அந்த ப்ருகுவானவர் அந்த வேதவல்லியினுடைய வார்த்தையைக் கேட்டு ஆச்ரமத்தினின்றும் புறப்பட்டார். உடனே ஸமீபத்திலே மஹாபுருஷனையும் கண்டார். அதற்கு மேல் வாரீர் நாரதரே! அந்த வாஸுதேவனுடைய ஸேவையி னாலே நிர்மல சித்தராய்க்கொண்டு அந்த மஹாபுருஷனை அவ்ய யரான விஷ்ணுவாக அறிந்தார்.

மத்வா தம் ஶார்ங்கதந்வாநம் ப்ருகுர்விமலமாநஸ:,
ஆநந்தபாஷ்ப ஸம்யுக்தஸ் துஷ்டாவ மதுஸூதநம். (100)

அந்த ப்ருகுவானவர் அந்தப் பரமபுருஷனை ஶார்ங்கதன்வா வாக நினைத்து நிர்மலமனஸ்கராய் ஆனந்தபாஷ்பத்தோடே கூடின நேத்ரங்களையுடையவராய்க் கொண்டு மதுஸூதனனை வேதவேதாந்த வாக்யங்களாலே ஸ்தோத்ரம் பண்ணினர்.

நமோநமஸ்தே ஜகதீஶ நாத
நமோநமஸ்தேऽகிலதேவதேவ,
நமோநமஸ்தே பகவந் ரமேஶ
நமோநமஸ்தேऽண்டயுதாதிநாத. (101)

ஜகத்துக்கெல்லாம் நியாமகராயும் அனேகாண்ட நிர்வாஹ கராயும் ஸமஸ்தமான தேவதைகளுக்கும் தேவராயும் ஷாட் குண்ய பரிபூர்ணராயுமிருக்கிற வாரீர் ஸ்ரிய:பதியே! தேவரீ ருக்கு அனேகந்தரம் நமஸ்காரம்.

த்வத்தேஜஸேதம் ஜகதாவிபாதி
த்வச்சக்திலேஶாத் த்ரியதே ஸதாச,
த்வத்தத்தநாமாதிவிபேதமீஶ
வ்யாப்தம் த்வயா ஸர்வமஶேஷஶேஷிந். (102)

வாரீர் ஸர்வஸ்வாமியான ஶ்ரிய:பதியே! தேவரீராலே வைக்கப்பட்ட நாமாதிபேதங்களை உடைத்தான இந்த சராசராத்மகமான ஜகத்தானது தேவரீருடைய தேஜஸ்ஸாலே விளங்கா நிற்கிறது. தேவரீருடைய சக்திலேசத்தாலே எப்பொழுதும் தரிக்கப்படா நிற்கிறது. தேவரீராலே அந்தர்பஹிர்வ்யாப்தமாயுமிருக்கிறது.

ஸர்வாகமாஸ் த்வத்பதமாமநந்தி
ஸர்வேபுராணா முநயஶ்சதேவ,
ஶரீரமந்யத் தவசாஸ்த்யநந்த
தேஜோமயம் வ்யோம்நி பரே பராணம். (103)

வாரீர் ஶ்ரிய:பதியே! ஸமஸ்தமான வேதங்களும் புராணங்களும் ரிஷிகளும் தேவரீருடைய பதத்தை ப்ராப்யமாகச் சொல்லுகிறார்கள். வாரீர் ஸ்வரூபரூபகுணவிபூத்யாதிகளாலே அபரிச்சேத்யரே! எல்லாத்தத்வங்களுக்கும் பரமான பரமபதத்திலே உமக்கு விஜாதீயமான ஒரு திருமேனி உண்டாயிருக்கிறது.

த்வத்பாதபத்மத்வயமாஶ்ரயந்தே
யேவை நரா நிர்மலமாநஸாஸ்தே,
தத்தேபதம் நித்யமஶேஷதோஷ
விஹீநமாயாந்தி விஶுத்தஸத்த்வம். (104)

எந்த மனுஷ்யர்கள் தேவரீருடைய இரண்டு திருவடித் தாமரைகளையே உபாயமாகப் பரிக்ரஹிக்கிறார்களோ, நிர்மலமானஸரான அந்த மஹாபுருஷர்கள் அசேஷதோஷரஹிதமாய் சுத்தஸத்த்வாத்மகமான தேவரீருடைய அந்த ஸ்தானத்தை அடைகிறார்கள்.

தவாநுகல்பம் ஶதஶோ பவந்தி
ஜந்மாநி தர்மாகம பாலநாய,
தம் யே நஜாநந்தி நரா விமூடா:
தே யாந்த்யதஸ்த்வாம் விஹிதாவதாரம். (105)

வாரீர் மந்நாதனே! தேவரீருக்கு அவதாரங்களானதுகள் ஸமஸ்தமான தர்மங்களென்ன சாஸ்த்ரங்களென்ன இவைகளுடைய ரக்ஷணத்தின் பொருட்டுக் கல்பங்கள்தோறும் அநேக

மாக உண்டாகாநிற்கிறதுகள். எந்த மனுஷ்யரானவர்கள் மூடா ளாய்க் கொண்டு தேவரீரை சேதனஸம்ரக்ஷணார்த்தமான அவ தாரத்தை உடையவராக அறியார்களில்லையோ, அந்த முடாளா னவர்கள் நரகத்தை அடையாநிற்கிறார்கள்.

த்வச்சாஸநம் யே பரிபாலயந்தி
த்வம் தாங்நயஸ்யச்யுத தங்மஹார்க்கம்,
பிந்தந்தி யேதே நிரயே பதந்தி
ராஜ்ஞாமிவாபத்த்யகராஹி லோகே. (106)

எந்த புருஷாளானவர்கள் தேவரீருடைய திவ்யாஜ்ஞை யைப் பரிபாலனம் பண்ணுநிற்கிறார்களோ, வாரீர் ஸ்வாமின்! தேவரீர் அந்த மஹாபுருஷாளை அப்படிப்பட்ட பரமானந்தத்தை அடைவிப்பியாநிற்கிறீர். எந்த புருஷாள் தேவரீருடைய திவ் யாஜ்ஞையை விடாநிற்கிறார்களோ, அந்தப் பாபிகளானவர்கள் லோகத்திலே ராஜாக்களுக்கு அஹிதாளான புருஷாளானவர்கள் போலே நரகத்திலே விழாநிற்கிறார்கள்.

ஸர்வேச தேவாஸ் ஸஹிதாஸ் ஸ்வராஜ்ஞா
ஸர்வேச வேதாஸ் ஸபயோஜ ஜாதா:,
ஸ்தோதுங்ந ஶக்தா யமசேஷரூபம்
தம்த்வாம் கதம் ஸ்தோதுமஹம்ஹிஶக்த:. (107)

இந்த்ரனோடே கூடின ஸமஸ்தமான தேவதைகளும் ப்ரஹ்மாவோடே கூடிக்கொண்டிருக்கிற ஸமஸ்தமான வேதங் களும் யாதொரு தேவரீரை ஸ்தோத்ரம் பண்ணுவதின் பொருட்டு சக்தாளன்றே; அப்படிப்பட்ட அசேஷரூபியான தேவரீரை ஸ்தோத்ரம் பண்ணுவதின்பொருட்டு நான் எப்படி தான் ஸமர்த்தனாவேன்.

யஸ்ய ஸ்வரூபம் நவிது: புராணா:
மஹர்ஷயோ நிர்மலமாநஸாஸ்தம்,
த்வாம் ஸ்தோதுமத்யாஹமிஹ ப்ரவ்ருத்த:
இச்சாமி தர்த்தும் ஜலதிம்ஹி தோர்ப்பயாம். (108)

நிர்மலமானஸரான மஹர்ஷிகளும் புராணங்களும் யாதொரு தேவரீருடைய அப்படிப்பட்ட ஸ்வரூபத்தை அறியார் களோ, அப்படிப்பட்ட தேவரீரை ஸ்தோத்ரம் பண்ணுகிறதின் பொருட்டு நான் இவ்விடத்திலே ஸமுத்ரத்தைக் கை நீச்சலாய்

நீஞ்சித்தாண்டுகிறதின் பொருட்டு ப்ரவ்ருத்தனான புருஷன் போல் இச்சிக்கிறேன்.

ப்ரஸீத நாராயண சக்ரபாணே
ப்ரஸீத விஶ்வாதிக விஶ்வமூர்த்தே,
ப்ரஸீத தேவேஶ தயாம்புராஶே
ப்ரஸீத லக்ஷ்மீரமணாதிநாத. (109)

வாரீர் நாராயணனே! திருவாழியைத் திருக்கையிலே உடையவனே! சிதசித்ப்ரபஞ்சவிலக்ஷணனே! ப்ரபஞ்சத்தைத் திருமேனியாக உடையவனே! நித்யஸூரிநிர்வாஹகனே! க்ருபாஸமுத்ரமே! ஶ்ரிய:பதியே! எனக்கு நாதனே! தேவரீர் எனக்கு மிகவும் ப்ரஸன்னராக வேணும்.

தவாத்ய ரூபம் பகவந் ப்ரஸந்ந:
த்வமேவ மே தர்ஶய வாஸுதேவ,
ஜாநாமி லக்ஷ்மீபதி மப்ரமேயம்
த்வாமத்ய மத்பாக்யபலம் விபக்வம். (110)

வாரீர் ஸமஸ்தசேதனருக்கும் அந்தர் பஹிர்வ்யாபகரான வரே! தேவரீரே தேவரீருடைய அப்ராக்ருத திவ்ய மங்கள விக்ரஹத்தை எனக்கு இப்போதே ப்ரகாசிப்பிக்கவேணும். இப்போது நான் ஶ்ரிய:பதியான தேவரீரை அப்ரமேயமாய் பரிபக்வமான என்னுடைய பாக்ய பலமாக அறியா நிற்கிறேன்.

இத்யேவ முக்த்வா முநிஸத்தமோऽத
ப்ருகு: ப்ரலம்பீக்ருத சீரஜால:,
நநாம பூமௌ ரசிதாஞ்சலிர்வை
விச்சிந்ந மூலேவ லதா வநாந்தே. (111)

முனிச்ரேஷ்ட்டரான அந்த ப்ருகுவானவர் இந்த ப்ரகாரமாக ஸ்தோத்ரஞ் செய்து, தரையிலே விழாநிற்கிற மரவுரியை உடைத்தானவராய்க்கொண்டு, பத்தாஞ்சலிபுடராய், உத்யான வனத்திலே விச்சின்ன மூலையான கொடியானது போலே நமஸ்கரித்தார்.

இதி ஶ்ரீப்ரஹ்மாண்ட புராணே மஹேஶ்வர நாரத ஸம்வாதே ஶ்ரீப்ருந்தாரண்ய மாஹாத்ம்யே த்விதீயோऽத்யாய:.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

# மூன்றாவது அத்யாயம்.

நாரத:—

இத்யேவ முக்தோ முநிநா மஹாத்மா
விஷ்ணுர் விபுர் நாரத வீக்ஷிதோ ஹரி:,
த்ருஷ்ட்வா ப்ருகௌ பக்திமதிப்ரவ்ருத்தாம்
நிஜாந்தநும் ப்ராப தயாம்புராஶி:. (112)
நிஜாந்தநும் ப்ராப்ய நிஸர்க்க சித்ராம்
ப்ரஸந்நவக்த்ரோ ஹரிராயதாக்ஷ:,
ப்ருகும்நமந்தம் ப்ரஸமீக்ஷ்ய தேவ:
பயோதகம்பீரமிதம் பபாஷே. (113)

வாரீர் நாரதரே! மஹாநுபாவரான ப்ருகு மஹர்ஷியாலே சொல்லப்பட்ட தயாமூர்த்தியான ஶ்ரிய:பதியானவர் ப்ருகு மஹர்ஷியிடத்தில் விஸ்தாரமாக ப்ரவர்த்தித்த பக்தியைப் பார்த்து, தெளிந்த திருமுக மண்டலத்தையும் நீண்ட திருக் கண்களையு முடைத்தான ஸ்வாமியானவர் ஸ்பாவத்தாலே ஆச்சர்யகரமான நிஜஸ்வரூபத்தை அடைந்து தண்டன் ஸமர்ப் பியா.கிற்கிற ப்ருகுமஹர்ஷியைப் பார்த்து மேக கர்ஜ்ஜனம் போலே கம்பீரமாக ஒரு வார்த்தை அருளிச் செய்தார்.

தவப்ரஸந்நோzஸ்மி முநீஶ்வராத்ய
யத்த்வம் ப்ருகோ ஹீச்சஸி ரூபமேதத்,
த்ரஷ்டும் ததாலோகய மாமகம் வை
யதந்யதிச்சஸ்யத தே ததாமி. (114)

வாரீர் மஹர்ஷியே! யாதொரு என் நிஜஸ்வரூபத்தை ஸேவிக்கவேணுமென்று இச்சிக்கிறீரோ, அப்படிப்பட்ட ஸ்வரூ பத்தை ஸேவியும். இன்னம் இதரமானதை இச்சித்தால் அதை யும் கொடுக்கிறேனென்று ஸ்வாமியானவர் அருளிச் செய்தார்.

ஏதச் ச்ருத்வா வசஸ் ஸோzத வசநம் மதுவித்விஷ:,
உத்தாயா லோகயாமாஸ விஷ்ணும் ஹ்ருஷ்டமநா முநே. (115)

ப்ரஸந்ந வக்த்ராம்புஜமாயதாக்ஷம்
கிரீடிநம் நீரத நீலகாயம்,

நிஷ்டப்த சாமீகர சாருவஸ்த்ரம்
நிமக்நநாபிம் தநுவ்ருத்த மத்யம். (116)

ஸுதீர்க்க பாஹும் ஸுவிஶால பாலம்
ஸுநாஸ மீஷத்ஸ்மித சாருவக்த்ரம்,
ஸுசாரு கர்ணத்வய குண்டலாட்யம்
ஸுஜாதகம்ப்வாபஶிரோதராக்ரம். (117)

விஶாலவக்ஷஸ்த்தல மத்யுதக்ரம்
ம்ருணாலஸூத்ராமல யஜ்ஞஸூத்ரம்,
அரீஶஶங்காதிப ஶோபிபாஹும்
ஸுஜாதபங்கேருஹ சாருபாதம். (118)

ஸதம் த்ருஷ்ட்வா ஜகந்நாதம் ப்ருகுர்வை தபதாம் வர:,
நிபபாத புநர்ப்பூமௌ சிந்நமூல இவ த்ரும:. (119)

அந்த ப்ருகுமஹர்ஷியானவர் ஸ்வாமியினுடைய இந்த வார்த்தையைக் கேட்டு எழுந்திருந்து ஸந்துஷ்டசித்தராய் ஸ்வாமியினுடைய நிஜஸ்வரூபத்தை ஸேவிக்கிறார். ப்ரஸன்னமான தாமரஸபுஷ்பம்போன்ற திருமுகமண்டலத்தையும் நீண்ட திருக்கண்களையும் கிரீடத்தையும் மேகம்போலே கறுத்த திருமேனியையும் உருக்கப்பட்ட பொன்மயமான பீதாம்பரத்தையும் அழகான நாபீகமலத்தையும் ஸூக்ஷ்மமாயும் வ்ருத்தமாயுமிருக்கிற இடையையும் மிகவும் நீண்ட திருக்கைகளையும் விசாலமான திருநெற்றியையும் மனோஹரமான திருமூக்கையும் புன்சிரிப்பை உடைத்தான திருமுகமண்டலத்தையும் குண்டலங்களால் ப்ரகாசியாநின்ற திருக்காதுகளையும் அழகான சங்கம்போலே ப்ரகாசிக்கிற திருக்கழுத்தையும் அகன்ற திருமார்பையும் உடையவராயும் அத்யந்த முன்னதராயும் தாமரை நூல்போலே நிர்மலமான யஜ்ஞோபவீத முடையவராயும் சங்கசக்ரங்களால் ப்ரகாசிக்கிற திருக்கைகளையும் அழகான தாமரைப்பூப்போன்ற திருவடிகளையும் உடையவராயுமுள்ள இப்படிப்பட்ட ஸகல லக்ஷண ஸம்பன்னரான ஸ்வாமியை ப்ருகுமஹர்ஷியானவர் ஸேவித்து வேரறுந்த வ்ருக்ஷம்போலே பூமியிலே தண்டன் ஸமர்ப்பித்தார்.

உத்தாய ஸஹஸா பூய: க்ருத்வாசாபி ப்ரதக்ஷிணம்,
புந:புநஶ்ச குர்வாண: ப்ரணாமஞ்ச ப்ரதக்ஷிணம். (120)

அத்யந்தபக்தியுக்தோzஸௌ உந்மத்த இவ லக்ஷ்யதே,

எழுந்திருந்து, திரும்பியும் ப்ரதக்ஷிணம் பண்ணி, திரும்பியும் தண்டன் ஸமர்ப்பித்து அதிபக்தியோடே கூடிக்கொண்டு உன்மத்தன்போல் பரவசராய்க் காணப்பட்டார்.

ஸோZதிஹ்ருஷ்டமநா பூயோ நிபதந்நுத்பதந் புந:,
ப்ராவ்ருஷீவ ரராஜாஸௌ த்ருஷ்ட்வா மேகம் சிகாவல:(121½)

அதிஸந்துஷ்டசித்தரான அந்த ப்ருகுவானவர் புந: புந: தண்டன் ஸமர்ப்பித்துத் திரும்பியும் எழுந்திருந்து வர்ஷா காலத்தில் மேகத்தைக்கண்ட மயில்போலே ப்ரகாசித்து நர்த்தனம் பண்ணினர்.

ஸத்ருஷ்ட்வா விஷ்ணுமவ்யக்ரம் ப்ருகுர்வை தபதாம்வர:,
அமிதாநந்த ஜலதௌ மக்நோ நிஸ்சலதாம் யயௌ. (122½)
ஸ நிஸ்சலாப்யாம் நேத்ராப்யாம் பஸ்யமாநோ ஜகத்குரும்,
த்யக்தாந்யவிஷயஸ் ஸ்தப்தோ ரராஜ லிகிதோ யதா. (123½)

தபஸ்விகளில் ஸ்ரேஷ்டரான அந்த ப்ருகுமஹர்ஷியானவர் நிஷ்கல்மஷரான ஸ்வாமியை ஸேவித்து விஸ்தாரமான ஆனந்த ஸமுத்ரத்திலே மூழ்கி நிஸ்சலதையை அடைந்தார். அந்த ரிஷியானவர் நிஸ்சலமான கண்களால் ஸ்ரிய:பதியை ஸேவியாநின்றுகொண்டு இதர விஷயங்களை விட்டு ஸ்தப்தராய் சித்ரம் போலே ப்ரகாசித்தார்.

ஸதமுத்வீக்ஷ்ய பகவாந் ப்ருகுமாநந்த நிஸ்சலம்,
ஸ்நிக்த கம்பீர நிர்க்கோஷமிதம் வசநமப்ரவீத். (124½)

ஸ்ரிய:பதியானவர் ஆனந்தயுக்தரான ப்ருகுவைப்பார்த்து மதுரமும் கம்பீரமுமாக இப்படி அருளிச் செய்கிறார்.

ப்ரஸந்நேந மயா ப்ரஹ்மந் மாமகம் தர்ஸிதந்த்விதம்,
யத்தேZபிலஷிதம் ரூபம் த்வத்ப்ராக்தநதப:பலம்,
கிமந்யதிச்சஸி முநே தத் வதஸ்வ ததாமி தே. (126)

வாரீர் மஹர்ஷியே! உம்மாலே இச்சிக்கப்பட்டது எதுவோ அந்த ஸ்வரூபத்தைக் காண்பித்தேன். அது உம்முடைய பூர்வ ஜன்மஸுக்ருதபலம். வாரீர் முனிவரே! இதன்றிக்கே எந்த வஸ்துவை நீர் அபேக்ஷிக்கிறீரோ, அதைச் சொல்லும்: கொடுக்கிறேன்.

இத்யேவமுக்தஸ் தேநாத ப்ருகுர்பகவதா முநே,
பத்தாஞ்சலிபுடோ ஹ்ருஷ்ட: ப்ரோவாச மதுஸூதநம். (127)

ஶ்ரிய:பதியால் இப்படி சொல்லப்பட்ட அந்த ப்ருகுமஹர்ஷியானவர் முகுலீக்ருத கரதலராய் ஸந்துஷ்டசித்தராய் ஸ்வாமியைக் குறித்துச் சொன்னர்.

ப்ருகு:—தவ ப்ரஸாதாத் பகவந் மயேதம் ரூபமத்புதம்,
த்ருஷ்டம் ப்ரஹ்மாதிபிஶ்சைவ யோகிபிர்யத்துராஸதம். (128)

ப்ரஹ்மாதிகளாலும் யோகிகளாலும் அடையக் கூடாததான இந்த ஸ்வரூபத்தை, தேவரீர் கடாக்ஷத்தினலே அடியேன் ஸேவிக்கப்பெற்றேன்.

கிந்து த்வம் மாமகே தேவ ஹ்யாஶ்ரமே புண்யதர்ஶநே,
வஸ்துமர்ஹஸி விஶ்வாத்மந் தயாபார பயோநிதே. (129)

த்வாமர்ச்சயிது மிச்சாமி ஹ்யத்ரைவாநுதிநம் ப்ரபோ,
ப்ரயதேநாமுநா நித்யம் மார்க்கண்டேயேந ஸம்யுத:. (130)

ஸ்வாமிந்! ஸகலஜகத்ரூப! கருணம்புநிதே! என்னுடைய புண்யமான ஆஶ்ரமத்திலே வஸிக்கக்கடவீர். அதிபரிஶுத்த ஸ்வபாவரான மார்க்கண்டேயரோடுகூட ப்ரதிதினமும் இவ்விடத்தில் தேவரை ஆராதனம்பண்ண இச்சிக்கிறேன்.

ருத்ர:—இத்யுக்தோ பகவாந் பூயோ ப்ருகும் முநிவரம் ததா,
ப்ரத்யுவாச ஶுபாம் வாணீம் மேககம்பீரநிஸ்வநாம். (131)

இந்தப்படி ப்ருகு மஹரிஷியாலே ப்ரார்த்திக்கப்பட்ட ஶ்ரிய:பதியானவர் மேககர்ஜனம் போல் கம்பீரமாய் ஶுபகரமான சப்தத்தை உடைத்தான ப்ரத்யுத்தரத்தை அருளிச்செய்கிறர்.

ஸ்ரீபகவாந்—ததைவாஹம் கரிஷ்யாமி யதாபிலஷிதம் தவ,
கிஞ்சைதத் தபதாம் ஶ்ரேஷ்ட்ட ஶ்ரோதுமர்ஹஸி மே வச: ()

வாரீர் மஹர்ஷியே! உம்முடைய இச்சானுஸாரமாகப் பண்ணப்போகிறேன், என்னுடைய வார்த்தையைக் கேளீர்.

யாதவாத்ராஶ்ரமே புண்யே வேதவல்லீதி நாமத:,
வர்த்ததே ஸுகுமாரீ ஸா தேயா கந்யா மம த்விஜ. (133)

வாரீர் ப்ருகுவே! வேதவல்லியென்று பேரை உடையளாய் ஸுகுமாரியாய் உம்முடைய ஆஶ்ரமத்தில் வ்ருத்தி யடைகிற கன்னிகையானவள் என்பொருட்டுக் கொடுக்கத்தக்கவள்.

ஏவமுக்தோ ப்ருகுஸ்தூர்ணம் ஆஹ்வயாமாஸ தாம் ஶுபாம்,
ஸாऽபிதத்ராகதா தேவம் ததர்ஶோஜ்ஜ்வலவிக்ரஹம்: (134)
தம் த்ருஷ்ட்வா ஸா ஶுபாபாங்கீ பிதரம் வாக்யமப்ரவீத்.

இப்படி ஸ்ரிய:பதியினல் கேட்கப்பட்ட ப்ருகுமஹரிஷியானவர் அந்த வேதவல்லியைச் சீக்கிரமாக அழைப்பித்தார். அந்த வேதவல்லியானவள் அதிப்ரகாசமான திருமேனியை உடைத்தான ஸ்வாமியைக் கடைக்கண்பார்வையால் ஸேவித்துத் தகப்பனரான மஹர்ஷியைப் பார்த்துச் சொன்னுள்.

வேதவல்லீ— தாத மந்நாத ஏவாயம் நாத்ர கார்யா விசாரணு,
அஸ்யைவ பாணிம் க்ருஹ்ணுமி நாந்யஸ்ய யதி தே மதம். ()

வாரீர் தகப்பனரே! இந்த ஸ்வாமியே எனக்கு பர்த்தா. இதரனிடத்தில் உம்முடைய ஸம்மதி இருந்தாலும் நான் இவரையே விவாஹம் பண்ணிக்கொள்ளுகிறேன்.

ருத்ர:—ஏவமுக்தோzப்ரவீத் வாக்யம் யதிதே ரோசதே ஸுதே,
பாணிம் க்ருஹாண பத்ரந்தே நவிலம்பிது மர்ஹஸி. (136½)
ததோ ஹ்ருஷ்டமநாஸ் ஸோzத ஹுத்வா ஹுதபுஜம் ப்ருகு:,
யதாவத் கேஶவாயாஸ்மை ததௌ கந்யாம் மஹாமதி:.(137½)

வாராய் பெண்ணே! உனக்கு ருசித்ததேயானுல் இவரை விளம்பமில்லாமல் பாணிக்ரஹணம் பண்ணிக்கொள்ளென்று சொல்லி அந்த மஹர்ஷியானவர் ஸந்துஷ்ட சித்தராய் ஹோமாதிகளைப்பண்ணி யதாசாஸ்த்ரமாக ஸ்ரிய:பதியின்பொருட்டுக் கன்யகாதானம் பண்ணினர்.

புஷ்பவ்ருஷ்டி: பபாதாத நந்ருதுஸ்சாப்ஸரோகணு:. (138)
தேவதுந்துபயஸ்சாபி விநேதுர் ஜலதோபமா:,
தத்ர ஸர்வே ஸமாயாதா: தேவாஸ்ஸாக்நி புரோகமா:. (139)

மலர்மாரி பொழிந்தது; அப்ஸரஸ்ஸுக்களின் கூட்டம் கூத்தாடின; தேவதுந்துபிகள் மேகம்போல் கர்ஜ்ஜித்தன. அக்னியை முன்னிட்டுக்கொண்டு ப்ரஹ்மா முதலிய எல்லாத் தேவர்களும் அங்கு வந்தார்கள்.

ததோzப்ரவீத் ப்ருகும் ப்ரஹ்மா லோககர்த்தா ஸ்வயம் ப்ரபு:,
தந்யோzஸி த்வம் மஹாபாக யஸ்ய கேஹே ஹரிஸ்ஸ்வயம். ()
ஜக்ராஹ பாணிம் லக்ஷ்ம்யா வை ப்ரஸந்நோ பகவாந் முநே!,
யாமேநாமாஶ்ரமே தஸ்மிந் த்வம் பாலாம் ப்ராப்தவாநஸி.(141)
தாமவைஷி ஶ்ரியம் விப்ர நமஸ்யஸ்வ ஸுதாமிதி.
இத்யுக்த்வா தேவதேவேஶோ ப்ரஹ்மா ஸுரகணைஸ்ஸஹ,
ஸத்யலோகம் ஜகாமாஶு ப்ரணிபத்ய ஜநார்த்தநம். (142½)

லோககர்த்தாவாயும் ஸ்வயம்ப்ரபுவாயுமிருக்கிற ப்ரஹ்மாவானவர் ப்ருகுமஹரிஷியைக் குறித்துச்சொன்னர். யாதொரு உம்முடைய .க்ருஹத்தில் ஶ்ரிய:பதி லக்ஷ்மியைப் பாணிக்ரஹணம் பண்ணினரோ, அப்படிப்பட்ட நீர் தன்யரானீர். இந்த ஆஶ்ரமத்தில் எந்த கன்னிகையைப் பெண்ணுக அடைந்தீரோ, அவளே ஸ்ரீமஹாலக்ஷ்மியென்று அறியவேணும். ப்ரஹ்மா இந்தப்படி சொல்லி ஸ்வாமியை தண்டன்ஸமர்பித்து தேவதைகளோடுகூட ஸத்யலோகத்துக்குப் போனர்.

ப்ருகுஶ்ச ஸ மஹாதேஜா விஸ்மயம் பரமம் கத:,
நமேऽந்யஸ்ஸத்ருஶோऽஸ்தீதி மத்வா சிரமுவாஸ ஹ. (143½)

பின்பு மஹாதேஜஸ்ஸை யுடைத்தான அந்த ப்ருகுமஹர்ஷியானவர் மஹத்தான ஆச்சர்யத்தை அடைந்து எனக்கு ஸமானுள் ஒருவரும் இல்லையென்று எண்ணிக்கொண்டு சிரகாலம் வாஸம் பண்ணினர்.

மாகமாஸே மஹாதேஜா: த்வாதஶ்யாம் ஸஹரிஸ்ஸ்வயம்,
ப்ராதுராஸ ப்ருகோஸ்தஸ்ய ஹ்யாஶ்ரமே புண்யகர்மண:. ()

மஹா தேஜஸ்வியான அந்த ஹரியானவர் பரிசுத்தமான கர்மத்தை உடைத்தான அந்த ப்ருகுவினுடைய ஆஶ்ரமத்திலே மாகமாஸத்து த்வாதசியில் ஸ்வயம் ஆவிர்ப்பவித்தார்.

ததஸ்தஸ்மிந் திநே யஸ்து ப்ருந்தாரண்யே மஹாமதி:,
மந்நாதம் ப்ரணமேத் விப்ர: ஸயாதி பரமம் பதம். (145½)

ஆகையால் யாதொரு புத்திமானுன மனுஷ்யனுனவன் அந்த தினத்திலே ப்ருந்தாவனத்தை அடைந்து ஸ்வாமியை ஸேவிக்கிறானே அவன் ஸகலைஶ்வர்யத்தையும் அடைந்து அந்தத்தில் பரம பதத்தையும் அடைவன்.

யதோ மந்நாத இத்யாஹ வேதவல்லீ ஶுசிஸ்மிதா,
ததோ மந்நாத இத்யேவ விஶ்ருதோ புவநத்ரயே. (146½)

எந்த காரணத்தாலே வேதவல்லியானவள் ஸ்வாமியை மந்நாதரென்று சொன்னளோ, அதனலே மந்நாதரென்று த்ரிலோகத்திலேயும் ப்ரவஸித்தரானர்.

இதி ஸ்ரீப்ருஹ்மாண்ட புராணே மஹேஶ்வர நாரத ஸம்வாதே
ஸ்ரீப்ருந்தாரண்ய மாஹாத்ம்யே த்ருதீயோऽத்யாய:,
ஸ்ரீமத்வரவரமுநயேநம:.

---

## நாலாவது அத்யாயம்.

ருத்ர:—ததோzத்ரிரிதி விக்யாதோ யோ பாகவத ஸத்தம:,
தபஸ்தேபே மஹாதேஜா முநிரந்யைஸ் ஸுதுஷ்கரம். (147½)
முகுந்தாந் முக்திமந்விச்சந் தத்த்யாநாபாஸ்த கல்மஷ:,
சிரந்தபஶ்சசாராஸௌ தஸ்மிந் ப்ருந்தாவநே ஶுபே. (148½)

அதற்குப் பின்பு அந்த ப்ருந்தாரண்யக்ஷேத்ரத்தில் பாகவத ஶ்ரேஷ்டராயும் அதிகமான காந்தியையுடையவராயும் ஸ்வாமியினுடைய த்யானத்தினாலே பாபரஹிதராயுமிருக்கிற அத்ரியென்று ப்ரஸித்தரான மஹர்ஷியானவர் பெருமாளிடத்தினின்றும் மோக்ஷத்தை அடையவேணுமென்கிற இச்சையை உடைத்தானவராய்க்கொண்டு இதராளாலே அடையக்கூடாத தபஸ்ஸைப் பண்ணினார்.

தத: கதாசித்தம் தேஶம் ஆகதோ விகடோ முநி:,
தித்ருக்ஷுர்ப்பூமிபாகாம்ஶ்ச தீர்த்தாந்யாயதநாநிச. (149½)
பத்தநாநி நதீஶ்சைவ பர்வதாந் ஸஹகாநநாந்,
ஆஶ்ரமாணி முநீநாந்து பஶ்யந்நாயாத். ததாஶ்ரமம். (150½)

பின்பு விகடரென்கிற மஹர்ஷியானவர் பூப்ரதேசங்களையும் புண்யதீர்த்தங்களையும் திவ்ய தேசங்களையும் மஹா பட்டணங்களையும் புண்யநதிகளையும் காடுகளோடுகூடிக்கொண்டிருக்கிற பர்வதங்களையும் ரிஷிகளுடைய ஆஶ்ரமங்களையும் பாராநின்றுகொண்டு அத்ரிமஹாமுனியினுடைய அந்த ஆஶ்ரம ப்ரதேஶத்தைக் குறித்து வந்தார்.

தந்த்ருஷ்ட்வாzzஶ்ரமமவ்யக்ரம் ஶாந்தபக்ஷிம்ருகாயுதம். (151)
அத்யுச்சதருஸம்பாத மாநீல நவஶாத்வலம்,
ப்ருந்தாப்ருந்த ஸமாகீர்ணம் ஶிகாவல குலாகுலம். (152)
மணிபர்வதஸங்காஶைர் மத்தைர் கஜஶதைர்வ்ருதம்,
மதுபாநமதோந்மத்த மதுவ்ரதலதாயுதம். (153)
ஸரோபிர் விமலை: பூர்ணை: பத்மகைரவ ஶோபிதை:,
ஹம்ஸகாரண்டவாகீர்ணை: ஶோபிதம் ஸர்வதஶ்ஶுபம்,
முநிபிஶ்ச ஸமாகீர்ணம் விஸ்மயம் பரமம் யயௌ. (154½)

சாந்தியை உடைத்தான பஹுபக்ஷிம்ருகங்களோடே கூடிக்கொண்டும் மிகவும் உன்னதங்களான வ்ருக்ஷங்களாலே நெருக்கமாயும் மிகக் கருத்துப் புதிதான பச்சைப்புற்களை யுடைத்தாயும் துளசிகளாலே சூழப்பட்டும் மயில்களுடைய கூட்டங்களோடு கூடிக்கொண்டும் இந்த்ரநீலமணிபர்வதங்களோடு ஸமானங்களான மதித்த அனேக யானைகளோடு கூடிக்கொண்டும் மதுபானத்தாலே மதித்த வண்டுகளை யுடைத்தான கொடிகளாலே சூழப்பட்டும், நிர்மலங்களாய்ப் பரிபூர்ணங்களாய் தாமரஸபுஷ்பங்களாலும் ஆம்பல்களாலும் ப்ரகாசியாநின்றுகொண்டு, ஹம்ஸங்களென்ன நீர்க்காகங்களென்ன இதுகளை உடைத்தான மஹாஸரஸ்ஸுக்களாலே ஶோபிதமாயும் முனிகளாலே வஸிக்கப்பட்டதுமான அந்த அத்ரிமஹாமுனியினுடைய ஆஶ்ரமத்தைப்பார்த்து மிகவும் ஆஶ்சர்யத்தை அடைந்தார்.

விகடஸ்தத்வநம் ஸர்வம் பஶ்யமாந இதஸ்தத:,
ததர்ஶாத்ரிம் மஹாதேஜா ப்ரஹ்மாணமிவசாபரம். (155½)

வவந்தே சரணௌ தஸ்ய யதாகாவ்ய: ப்ரஜாபதிம்,
ப்ரணமந்தம் தமுத்தாப்ய பாதயோஸ்ஸ மஹாமதி:. (156½)

டரிஷ்வஜ்யச பாஹுப்யாம் பூஜாஞ்சக்ரே யதாவிதி,
தத: க்ருதபரீசாரம் க்ருதாஸந பரிக்ரஹம்,
அத்ரிர் மதுரயா வாசா தமித்யாஹ மஹாமுநே. (158)

விகட மஹாமுனியானவர் இப்படிப்பட்ட அந்த வனத்தை ப்ரவேசித்து நாலு பார்ஶ்வங்களிலேயும் பாராநின்றுகொண்டு மஹாதேஜஸ்கரான இரண்டாவது ப்ரஹ்மாவைப்போலே ப்ரகாசிக்கிற அத்ரிமஹாமுனியைப் பார்த்து, சுக்ரன் ப்ரஹ்மாவை ஸேவித்தாற்போலே அந்த ரிஷியினுடைய பாதங்களிலே ஸேவித்தார். மஹாபுத்திமானயிருக்கிற அந்த அத்ரிமஹாமுனியானவர் வந்தனஞ் செய்த விகட மஹாமுனியைக் கைகளாலே எடுத்து ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு யதாசாஸ்த்ரமாகப் பூஜையைப் பண்ணினர். பின்பு பூஜிக்கப்பட்டு ஆஸனத்திலே உட்கார்ந்திருக்கிற அந்த விகட மஹாமுனியைக் குறித்து அத்ரிமஹாமுனியானவர் மதுரமான வார்த்தையைச் சொன்னர்.

கஸ்த்வம் கிந்நாம தே ஸௌம்ய க:பிதா தே குதோபவாந்,
ஸர்வமேதத் யதாதத்த்வம் வக்துமர்ஹஸி ஸுவ்ரத. (159)

ஸௌம்யராய் நல்ல வ்ரதத்தை உடைத்தானவரே! நீர் ஆர்? உம்முடைய நாமதேயம் என்ன? தகப்பனர் ஆர்? எவ்விடத்திலிருந்து வந்தீர்? இந்த ஸமஸ்தத்தையும் தத்த்வமாகச் சொல்லக்கடவீர்.

ருத்ர:—இத்யுக்தஸ் தமுவாசேதம் விகடோத்ரிம் மஹாமுநிம்,
பகவந் ஸர்வமாக்யாஸ்யே யதாவத் தச் ச்ருணுஷ்வஹி. (160)

இப்படி அத்ரிமஹாமுனியினல் கேட்கப்பட்ட விகட மஹாரிஷியானவர் அந்த அத்ரிமஹாமுனியைக்குறித்து யதாவத்தாகச் சொல்லுகிறேன்: கேளும் என்றூர்.

விகட:—அஸ்தி ஜம்பூவநந்நாம கங்காதீரேzதிஶோபநம்,
நாநாதருஸமாகீர்ணம் நாநாபக்ஷிநிஷேவிதம். (161)

ஹ்த்ருயாநேகஸரோயுக்தம் வித்யாவத்த்விஜமண்டிதம்,
ஹ்ருஷ்டாநேக முநீந்த்ராட்யம் புஷ்டாநேகம்ருகத்விஜம். (162)

கங்கா தீரத்தில் அதிசுபகரமாயும் அனேக வ்ருக்ஷங்களாலே நிறைக்கப்பட்டும் அனேக பக்ஷிகளோடு கூடிக்கொண்டும் மனோஹரங்களான அனேக ஸரஸ்ஸுக்களோடு கூடியும் வித்யாவான்களான ப்ராஹ்மணர்களாலே அலங்கரிக்கப்பட்டும் ஸந்துஷ்ட சித்தாளான முனிஸ்ரேஷ்ட்டாளாலே சூழப்பட்டும் ஸந்துஷ்டங்களான ம்ருகங்களென்ன பக்ஷிகளென்ன இதுகளை உடைத்தானதுமான ப்ரஸித்தமான ஜம்பூவனமானது இருக்கிறது.

தத்ராஸ்தே கபிலோநாம முநி: பரம தார்மிக:,
தபஸா யஶஸாசாபி யஸ்ய நாஸ்தி ஸமோ புவி. (163)

தஸ்யாஸ்தி புத்ரஸ் தேஜஸ்வீ தருணஸ்தபதாம் வர:,
தஸ்யாஹ மௌரஸ: புத்ரோ விகடோநாம நாமத:. (164)

விஸ்ருஷ்டஸ்தேந திஷ்டாந்தம் ப்ரவிஷ்டேநாஸ்மி பாலிஶ:,
தத: ப்ரப்ருதி தத்ராந்யைர் முநிபி: பரிவர்த்தித:. (165)

யதாவதுபநீதஶ்ச ததாசாத்யாபிதோzஸ்மி தை:,
தத்ரைவ ஸுசிரம்காலம் குர்வம்ஸ்தேஷாம் மஹாத்மநாம் ()
ஶுஶ்ரூஷாமவஸம் ஹ்ருஷ்டோ முநீநாம் பாவிதாத்மநாம்.

அந்த வனத்திலே பரமதார்மிகரும் தபஸ்ஸினுலும் கீர்த்தியினுலும் பூமியில் இதராளோடு ஸமானமாகாதவருமான கபிலரென்கிற மஹர்ஷியானவர் இருக்கிறூர். தேஜோவானும் ரிஷி

களில் ஸ்ரேஷ்ட்டரரயும் தருணரென்று நாமத்தை உடையவராயு முள்ள அந்தக்கபிலமஹர்ஷியினுடையகுமாரருக்கு நான் குமா ரன். விகடனென்று என்னுடைய நாமம். அந்தத் தருணரானவர் லோகாந்தரத்தை அடைந்து அவராலே விடப்பட்டு அதிபாலனுன நான் அன்று முதல் அவ்விடத்திலிருக்கிற ரிஷிகளால் போஷிக்கப் பட்டும் யதாஸாஸ்த்ரமாக உபநயனம் பண்ணப்பட்டும் அத்யயன பரனுய் அவ்விடத்திலேயே பஹுகாலம் மஹானுபாவாளாயும் ப்ரஹ்மஜ்ஞானிகளாயுமிருக்கிற மஹர்ஷிகளுக்கு ஸுஸ்ருஷை பண்ணிக்கொண்டிருந்தேன்.

ததः கதாசிந்மாரீசோ மஹாதேஜாஸ்தபோதநः. (170)

ஜம்பூவநம் ஸமாகச்சத் பார்க்கவஸ்ய தித்ருக்ஷயா,
யதாவத் பார்க்கவேணுத பூஜிதஸ்ஸ மஹாமதி:. (171)

உபவிஷ்டஶ்ச மாரீசஸ் சகார விவிதா: கதா:,
ததः பப்ரச்ச பகவாந் பார்க்கவஸ்தம் மஹாமுநிம். (172)

பின்பு ஒருகால் தேஜஸ்வியாயிருக்கிற மாரீசரென்கிற ரிஷியானவர் பார்க்கவ மஹாரிஷியைப் பார்க்க வேணுமென்கிற இச்சையினுல் ஜம்பூவநத்துக்கு வந்தார். அந்த மாரீசரானவர் பார்க்கவராலே யதாவிதியாகப் பூஜிக்கப்பட்டு ஆஸனத்தில் இருந்துகொண்டு அனேக கதைகளைச் சொன்னுர். பின்பு பகவானுன பார்க்கவரானவர் அந்த மாரீசரைக் கேட்டார்.

பார்க்கவ:—யதா வதஸி மேரோஸ்த்வ மாகதோऽஸ்மீதி ஸுவ்ரத,
வார்த்தா தத்ரது கா வ்ருத்தா தேவர்ஷீணும் ஸமாகமே. (173)

ஸமாக்யாஹி முநிஶ்ரேஷ்ட்ட பரம் கௌதூஹலம் ஹி மே. ()

வாரீர் நல்ல வ்ரதத்தை உடைத்தான மாரீசரே! மேரு பர்வதத்திலிருந்து வந்தவராகச் சொன்னீர். அவ்விடத்தில் தேவ ரிஷிகள் ஸமுதாயத்தில் என்ன வ்ருத்தாந்தம்? அதைச் சொல் லும், எனக்குக் கேட்க மிகவும் குதூஹலம் உண்டாயிருக் கிறது.

விகட:—இத்யுக்தஸ்தம் ஸ மாரீச: ப்ரஹஸந் ப்ரத்யுவாசஹ,
ஶ்ருணுஷ்வ தந் முநிஶ்ரேஷ்ட்ட யந்மாம் த்வம் பரிப்ருச்சஸி.

இந்தப்படி பார்க்கவராலே கேட்கப்பட்ட மாரீசரானவர் பார்க்கவனைக்குறித்துப் புன்சிரிப்போடு கூடிக்கொண்டு ப்ரத்யுத்

தரம் சொன்னர். வாரீர் பார்க்கவரே! உம்மாலே யாதொரு வ்ருத்தாந்தம் வினவப்பட்டதோ அத்தைக் கேளும்.

மாரீச:—தத்ர தேவர்ஷயஸ்ஸித்தா: மருதஶ்ச ஸவாஸவா:. ()
ஸமாகதா மஹாத்மாந: வஸிஷ்ட்டஶ்ச மஹாயஶா:,
ததோzப்ரவீத் வஸிஷ்ட்டஸ்து தேஷாம் மத்யே மஹாத்மநாம்.

அந்த மஹாமேரு பர்வதத்திலே தேவரிஷிகளும் ஸித்தாள் தேவதைகள் இந்த்ரன் பஹுகீர்த்தியுக்தரான வஸிஷ்ட்டர் இவர்கள் அனைவரும் ஏகீபவித்தார்கள். மஹானுபாவாளான அந்த தேவரிஷிகள் தேவதைகள் மத்யையில் வஸிஷ்ட்டரானவர் சொன்னர்.

வஸிஷ்ட்ட:—துலஸீகாநநம்நாம தக்ஷிணஸ்யாந்திஶி ஸ்திதம்,
தத்ராத்ரிரிதி விக்யாதோ முநிஶ்சரதிவை தப:. (177)
தஸ்ய ப்ரஸந்நோ பகவாந் ஹரி: ப்ராதுர்பவிஷ்யதி.

தக்ஷிண திக்கிலே துலஸீவனமானது ப்ரஸித்தமாயிருக்கிறது. அவ்விடத்தில் ப்ரஸித்தரான அத்ரிமஹாமுனியானவர் மிகவும் தபஸ்ஸைப் பண்ணுகிருர். அவருக்கு ஶ்ரிய:பதி ப்ரஸன்னராய் ஸேவை ஸாதிக்கப் போகிருர்.

மாரீச:—இத்யேவ மப்ரவீத்விப்ரோ வஸிஷ்ட்டஸ்து மஹாமுநி:. (178)

வாரீர் பார்க்கவரே! இந்தப்படி வஸிஷ்ட்டர் சொன்னர்.

விகட:—இதிஹோவாச மாரீசஸ்தத்ர தச்ச மயா ஶ்ருதம்,
தச்ச்ருத்வாzஹம் வசோ விப்ர மாரீசஸ்ய மஹாத்மந:. (179)
த்ரஷ்டும் த்வாமிஹ வேகேந ஹ்யாகதோzஸ்மி மஹாமுநே.

இப்படி மாரீச மஹரிஷியானவர் பார்க்கவரைக் குறித்துச் சொல்ல நான் கேட்டு, அத்ரிமஹாமுனியே! உம்மை நான் ஸேவிக்கவேணுமென்று மஹாவேகத்துடன் வந்தேன்.

ருத்ர:—ஏதச்ச்ருத்வா சுபம் வாக்யம் விகடஸ்ய மஹாமுநே:,
ஹ்ருஷ்டோzத்ரிரிதிஹோவாச தம் பரிஷ்வஜ்ய பாணிநா(180½)

இப்படிக்கு விகடருடைய சுபகரமான வார்த்தையைக் கேட்டு அத்ரிமஹாமுனியானவர் அதிஸந்துஷ்டனுனேனென்று சொல்லி அந்த விகடரை ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு இவ்விதமாகச் சொன்னர்.

அத்ரி.—திஷ்ட்யா த்வமிஹசாயாத: ஸ்வாகதந்தே தபோதந. ()

வாரீர் தபஸ்ஸே தனமான விகடரே! தெய்வாதீனத்தினல் இவ்விடத்திற்கு நீர் ஸுகமாக வந்தீர்: உமக்கு நல்வரவா? என்று குசலப்ரச்னம் பண்ணினர்.

ருத்ர:—விகடோzப்யத்ரிணு தேந ஸத்க்ருதோ முநிபிஶ்ச ஸ:,
ந்யவஸத் ஸுஸுகம்தைஶ்ச ஸார்த்தம் பஹ்வ்யஸ்ஸமா முநே.

அந்த அத்ரிமஹாமுனியாலே இப்படி பூஜிக்கப்பட்ட விகடரானவர் அவ்விடத்திலிருக்கும் முனிகளோடேகூட பஹுகாலம் அவ்விடத்தில் வாஸம் பண்ணினர்.

இதி ஸ்ரீப்ரஹ்மாண்டபுராணே மஹேஶ்வரநாரதஸம்வாதே ஸ்ரீப்ருந்தாரண்யமாஹாத்ம்யே சதுர்த்தோzத்யாய:

நாலாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீமத்வரவரமுநயேநம:

---

# ஐந்தாவது அத்யாயம்.

---

ருத்ர:—தத்ரைவம் வஸதஸ்தஸ்ய ப்ருந்தாரண்யே ஸஹாத்ரிணு,
விகடஸ்யது விப்ரர்ஷே பஹவோ வத்ஸரா கதா:. (183)

அந்த ப்ருந்தாவனத்தில் அத்ரிமஹாரிஷியோடேகூட வாஸம் பண்ணுநிற்கிற விகட மஹாரிஷிக்கு அநேக வர்ஷங்கள் அதிக்ரமித்ததுகள்.

தத: கதாசித் ககநம் குர்வந்தீ விமலம் ஶநை:,
ஆஜகாம சரத் புல்ல காஶகோஶ விராஜிதா. (184)

பின்பு ஒருகால் ஆகாஶத்தை நிர்மலமாகப் பண்ணுநிற்பதும் விகஸித்த நாணல்களால் ப்ரகாஶிப்பதுமான ஶரத்காலமானது வந்தது.

அம்பரே வாரிதைர் முக்தே விமலே ஸஞ்சரந் ஶஶீ,
விரராஜ யதா பூர்ணே ஹம்ஸஸ்ஸரஸி ஶோபநே. (185)

பின்பு பூர்ணமான மானஸ ஸரஸ்ஸிலே எந்த ப்ரகாரம் ஹம்ஸமானது ப்ரகாசிக்குமோ, அப்படி மேகங்களால் விடுபட்டு நிர்மலமான ஆகாஶத்திலே சந்த்ரன் ப்ரகாஶித்தான்.

ப்ரஸந்நாஶ்ச திஶஸ்ஸர்வா: நத்யஶ்ச விமலோதகா:,
பபூவுஸ்ஸத்பரிஷ்வங்காதிவ சேதாம்ஸி யோகிநாம். (186)

ஸத்புருஷாளுடைய ஸம்பந்தத்தாலே பரிஶுத்தமாகும் யோகிகளுடைய மனஸ்ஸுபோலே ஸகல நதிகளும் திக்குக் களும் ப்ரஸன்னங்களாகவும் நிர்மலங்களாகவும் ஆச்சுதுகள்.

ராஜஹம்ஸாஶ்ஶனைர்பூமிமாஜக்முர் மதுராரவா:,
யதாzந்த தமஸிக்ஷீணே ரஶ்மயோzம்ருத ரோசிஷ:. (187)

அந்தகாரம் போனவளவிலே சந்த்ரனுடைய கிரணங்கள் எப்படி ப்ரகாஶத்தை அடையுமோ, அப்படி மதுரங்களான ஶப்தங்களை யுடைத்தான ராஜஹம்ஸங்கள் மெள்ளமெள்ள பூமியை ப்ரவேசித்தன.

தத: ப்ரபாதே விமலே தஸ்மிங் காலே மநோஹரே,
ஜகாம முநிபிஸ்ஸார்த்தம் ப்ராதஸ்ஸந்த்யா முபாஸிதும். (188)

பின்பு அதிநிர்மலமாயும் அதிமனோஹரமாயுமிருக்கிற அந்த ப்ராதக்காலத்திலே அந்த அத்ரியானவர் அனேகம் ரிஷிக ளோடே கூட ப்ராதஸ்ஸந்த்யை பண்ணுகைக்குப் புறப்பட்டார்.

ததோ கத்வேந்த்ரதீர்த்தாக்யம் ஸரஸ்ஸரஸிஜாவ்ருதம்,
க்ருதஸந்த்யாவிதிஸ் தைஶ்ச ஸ்வமாஶ்ரமமுபாகமத். (189)

பின்பு அந்த அத்ரியானவர் தாமரஸ புஷ்பங்களோடே கூடின இந்த்ரதீர்த்தமென்கிற பேரை உடைத்தாயிருக்கிற ஸரஸ்ஸிலே ஸ்னானம் பண்ணி ஸந்த்யாவந்தனாதிகளையும் நிறை வேற்றி மறுபடியும் தம்முடைய ஆஶ்ரமத்தை அடைந்தார்.

ஸ்வமாஶ்ரமமுபாகம்ய ஹுதஹவ்யஹுதாஶந:,
ஸுபவிஷ்டஸ்ஸ தைஸ்ஸார்த்தம் சகார விவிதா: கதா:. ()

இப்படி தம்முடைய ஆஶ்ரமத்தை அடைந்து ஔபாஸனாதி களை நிறைவேற்றி அந்த ரிஷிகளோடேகூட ஆஸனத்தில் இருந்துகொண்டு நானாவிதமான கதைகளைச் சொல்லிக்கொண்டி ருந்தார்.

ஏதஸ்மிந்நந்தரே ஶப்த: ப்ராதுராஸீந்மநோஹர:,
தூர்யநாதாநுசரிதோ மஹாநமரதுந்துபே:. (191)

புஷ்பவ்ருஷ்டிஶ்ச பதிதா ககநாத்ஸுமநோஹரா,
ஸேந்த்ரா தேவர்ஷயஶ்சைவ ஸகிந்நரமஹோரகா:. (192)

ப்ரவ்ருத்தந்ருத்தாஶ்ச ததா ஜகுரப்ஸரஸோzம்பரே,
ஸோzத்ரிரப்யத தாந்த்ருஷ்ட்வா தேவாந் ஶ்ருத்வாச தத்த்வநிம்.
பரம் விஸ்மயமாபந்ந உததிஷ்ட்டத் ஸஹைவ தை:. (193½)

இதுநடுவே அதிஶ்ராவ்யமான தூர்யாதி வாத்யங்களோடே கூடின தேவ துந்துபியினுடைய ஶப்தமானது கேட்கப்பட்டது. இன்னம் ஆகாஶத்தில்நின்றும் அதிமனோஹரமான புஷ்பவர்ஷமானது உண்டாச்சுது. ஆகாஶத்தில் தேவேந்த்ரனும் தேவதைகளும் ரிஷிகளும் கின்னரர்களும் உரகர்களும் வந்தார்கள். அப்ஸரஸ்ஸுக்கள் நடனம் செய்தார்கள். அந்த அத்ரியானவர் அந்த ஶப்தத்தையும் கேட்டு அந்த தேவதைகளையும் பார்த்து மிகவும் ஆஶ்சர்யயுக்தராய் அவர்களோடேகூட எழுந்திருந்தார்.

அதோத்தாய மஹாதேஜாஶ் ஶிஷ்யை: பரிவ்ருதைஸ்ததா,
விலோகயந் திஶஸ்ஸர்வாஸ்தஸ்த்தௌ தத்ர மஹாமுநி: ($194\frac{1}{2}$)

பின்பு சூழ்ந்துகொண்டிருக்கிற சிஷ்யர்களோடேகூட மஹாதேஜஸ்கராயும் மஹாமுனியாயுமிருக்கிற அத்ரி எழுந்து நாலு திக்குக்களையும் பார்த்துக்கொண்டிருந்தார்.

ததஸ்தஸ்யாக்ரதோ விப்ர ப்ராங்முகஸ்ய மஹாமுநே:,
ப்ராதுர்பபூவ ருசிரம் விமாநம் ஸூர்யஸங்நிபம். ($195\frac{1}{2}$)
கிங்கிணீஜால ஸங்நத்தம் வைடூர்யமயதோரணம்,
தப்தகாஞ்சந சித்ராங்கம் முக்தாஜாலவிபூஷிதம். ($196\frac{1}{2}$)

வாரீர் நாரதரே! கிழக்கு முகமாயிருக்கிற அத்ரி மஹர்ஷியினுடைய முன்னே ஸூர்யனோடே ஸமானமாயும் கிங்கிணிகளுடைய ஸமூஹத்தோடே கூடிக்கொண்டும் வைடூர்யமயமான தோரணங்களோடே கூடியும் உருக்கப்பட்ட பொன்போன்ற ஸ்வரூபத்தை உடைத்தாயும் முத்து ஸரங்களாலே அலங்கரிக்கப்பட்டுமிருக்கிற விமானமானது உண்டாச்சுது.

ஸ ததர்ஶ ததஸ்தஸ்ய பார்ஶ்வயோருபயோரபி,
வீஜந்தௌ சாமரே திவ்யே ஹேமதண்டே மநோஹரே. ()
அரஜே வாஸஸீ ஸூக்ஷ்மே வஸாநௌ தீர்க்கபாஹுகௌ,
புருஷாவமரப்ரக்யௌ ஸர்வாபரண பூஷிதௌ. ($198\frac{1}{2}$)

அந்த விமானத்தினுடைய உபய பார்ஶ்வங்களிலேயும் பரிஶுத்தங்களான வஸ்த்ரங்களை உடுத்துக்கொண்டு ஸர்வாபரண பூஷிதாளாயும் நீண்ட கைகளை உடைத்தாயும் ஸ்வர்ணதண்டங்களோடே கூடின சாமரங்களை வீசிக்கொண்டுமிருக்கிற தேவதைகளைக்காட்டிலும் ஶ்ரேஷ்ட்டாளான இரண்டு புருஷர்களை அத்ரியானவர் பார்த்தார்.

ததஸ்தஸ்ய மஹாபாகோ விமாநஸ்யார்க்க ரோசிஷ:. (199)
ப்ருஷ்ட்டதோzபஶ்யதத்யுக்ரம் உத்யந்தமிவ பாஸ்கரம்,
தைத்ய தாநவதர்ப்பக்நம் வைநதேயம் மஹௌஜஸம். (200)

பின்பு அத்ரியானவர் ஸூர்யஸமமான காந்தியை யுடைத்தான அந்த விமானத்தினுடைய பின் பக்கத்தில் உக்ரமாயும் உதித்திருக்கிற ஸூர்யனைப்போலவும் தைத்யாளென்ன தானவாளென்ன இவர்களுடைய கொழுப்பை அடக்காநின்றும் மஹத்தான தேஜஸ்ஸை யுடைத்தாயுமிருக்கிற கருடனைப் பார்த்தார்.

புரதோzஸ்ய விமாநஸ்ய தப்தசாமீகராபயா,
விராஜந்தம் வேத்ரயஷ்ட்யா விஷ்வக்ஸேநமபஶ்யத. (201)

உருக்கப்பட்ட பொன்வர்ணத்தை உடைத்தான பிரம்போடே கூடின ஸேனைமுதலியாரையும் இந்த விமானத்துக்கு முன்னே தண்டன் ஸமர்ப்பித்தார்.

அநந்தம் நாம நாகேஶம் அநந்தபலஸம்யுதம்,
வாமேச பார்ஶ்வேசாத்ராக்ஷீத் சந்த்ரபிம்பஸமப்ரபம். (202)

சந்த்ரபிம்பஸமானமான காந்தியை உடைத்தாயும் அளவற்ற பலங்களோடே கூடியுமிருக்கிற ஆதிஶேஷனையும் அந்த விமானத்துக்கு இடப்பார்ச்வத்திலே தண்டன் ஸமர்ப்பித்தார்.

ஸநகாதீந் மஹாதேஜாஸ் ததோzபஶ்யச்ச தக்ஷிணே,
பார்ஶ்வே பத்தாஞ்சலிபுடாந் பாஷ்பை: பிஹிதலோசநாந். ()

கைகளைக் கூப்பிக்கொண்டு ஆநந்த பாஷ்பங்களை உடைத்தாயிருக்கிற ஸனகாதி மஹர்ஷிகளையும் அந்த விமானத்துக்கு தக்ஷிண பார்ஶ்வத்திலே தண்டன் ஸமர்ப்பித்தார்.

ஸ ததர்ஶ விமாநஸ்ய மத்யே பாஸ்கரரோசிஷ:,
ஆஸீநம் பரமம் தேவம் நரஸிம்ஹ ஸ்வரூபிணம். (204)
ஶாரதாப்ரப்ரதீகாஶம் ஶாரதேந்து ஸமாநநம்,
ரக்தோத்பல தலாபாக்ஷம் ஸடாபடல பீஷணம். (205)
நாநாமணிகணகீர்ணம் பிப்ராணம் மகுடம் மஹத்,
வஸாநம் பீதவஸநம் மத்யாஹ்நார்க்காயுதப்ரபம். (206)
சதுர்பாஹூம் மஹாஸத்த்வம் பூஷணோத்தம பூஷிதம்,
தந்த்ருஷ்ட்வா ஸ மஹாதேஜா தேவதேவம் மஹாமுநே.(207)
ஸம்ஹ்ருஷ்ட: பரயா ப்ரீத்யா ப்ரணாமமகரோத்தத: (207½)

வாரீர் நாரதரே! அந்த அத்ரிமஹாமுனியானவர் ஸூர்யனைப்போலே ப்ரகாசிக்கிற விமான மத்யத்திலே சரத்கால மேகத்தோடே ஸமானராயும் சரத்கால சந்த்ரனைப்போலேயிருக்கிற திருமுகமண்டலத்தையுடைத்தாயும் செங்கழுநீரிதழினுடைய காந்திபோன்ற காந்தியை உடைத்தான திருக்கண்களை உடைத்தாயும் பிடரிமயிர்களின் ஸமூஹத்தாலே பயங்கரராயும் நானாரத்னங்களினாலே இழைக்கப்பட்ட மஹத்தான கிரீடத்தைத் தரியாநின்றும் மத்யாஹ்ன காலத்து ஸூர்யனைப்போன்ற பீதாம்பரத்தைச் சாத்திக்கொண்டும் நாலுதிருக்கைகளையுடைத்தாயும் அதிபராக்ரமத்தையுடைத்தாயும் ஶ்ரேஷ்டமான பூஷணங்களாலே அலங்கரிக்கப்பட்டும் மஹாதேஜஸ்ஸை உடைத்தானவராயும் நரஸிம்ஹஸ்வரூபியாய் விமான மத்யத்திலே எழுந்தருளியிருக்கிற ஸ்வாமியை அத்ரியானவர் அதிஸந்தோஷத்தை உடைத்தானவராய் மிகவும் ப்ரீதியினாலே தண்டன் ஸமர்ப்பித்தார்.

தத: ப்ரணம்ய சோத்தாய ஸம்ப்ரஹ்ருஷ்டதநூருஹ:,
பஶ்யமாநோ ஜகந்நாதம் ப்ரஸ்தோது முபசக்ரமே. (208½)

இப்படி தண்டன் ஸமர்ப்பித்து எழுந்திருந்து மயிர்க்கூச்சுக்களோடே கூடினவராய் ஸ்வாமியைப் பாராநின்றுகொண்டு ஸ்தோத்ரம் செய்ய யத்னம் செய்தார்.

தேவதேவ மஹாபாஹோ ஜகந்நாத ஜகத்குரோ,
நமஸ்தே புண்டரீகாக்ஷ நமஸ்தே விஷ்ணவே விபோ. (209½)

யத்குணா நைவ ஶக்யந்தே வக்தும் வர்ஷஶதைரபி,
தம் த்வாம் ஸ்தோதும் கதம் ஶக்த: ஸ்யாமஹம் புருஷோத்தம.

வாரீர் தேவாதீஶரே! மஹாபாஹுவே! ஜகந்நாயகரே! ஜகத்குருவே! புண்டரீகாக்ஷ! ப்ரபுவே! விஷ்ணுவான உமக்கு பூய: தண்டன் ஸமர்ப்பிக்கிறேன். அனேக காலத்தாலும் யாதொருத்தருடைய குணங்கள் ஸ்தோதுமஶக்யங்களோ, அப்படிப்பட்ட உம்மை ஸ்தோத்ரம் பண்ண நான் எப்படி ஶக்தனாவேன்?

நிரஞ்சநாய நித்யாயாநித்யாய விமலாத்மநே,
ஶுத்தாயசாவிகாராய த்ருஶ்யாயாத்ருஶ்யரூபிணே. (211½)

வ்யக்தாயாவ்யக்தரூபாய விமலாயாவிகாரிணே,
ஸத்யாயாஸத்யரூபாய ஸகுணாய மஹாத்மநே. (212½)

விஜ்ஞாநைகஸ்வரூபாய பரமாநந்தரூபிணே,
ப்ரஹ்மஸ்வரூபிணே தஸ்மை நமோ ருத்ரஸ்வரூபிணே. (213½)

விஷ்ணவே விபுதேந்த்ராய நமச்சக்ராத்மனே ஸதா,
ஜகஜ்ஜந்மக்ருதே தஸ்மை ஜகத்ஸ்திதிக்ருதே நம:. (214½)

வாரீர் ஸ்வாமியே! நிரஞ்சனராயும் நித்யராயும் அநித்ய ரூபியாயும் பரிசுத்தாத்மாவாயும் பரிசுத்தராயும் அவிகாரரா யும் த்ருச்யாத்ருச்யரூபியாயும் அவ்யக்தராயும் வ்யக்தராயும் ஸத்யாஸத்யரூபியாயும் குணஸஹிதராயும் ஜ்ஞானஸ்வரூபியா யும் ஆநந்தரூபராயும் ப்ரஹ்மஸ்வரூபியாயும் ருத்ரஸ்வரூபியாயும் விஷ்ணுஸ்வரூபியாயும் ஜ்ஞானிச்ரேஷ்டராயும் தேவேந்த்ரஸ்வ ரூபியாயும் ஜகத்துக்கு ஸ்ருஷ்டி ஸ்திதி கர்த்தாவாயுமிருக்கிற உம்மையும் பொருட்டு தண்டன் ஸமர்ப்பிக்கிறேன்.

ஸுராஸுராத்மனே தஸ்மை ஜகத்ஸம்ஹ்ருதி ஹேதவே,
யமாநிலாநலார்க்கேந்து க்ரஹநக்ஷத்ர ரூபிணே. (215½)

நம: ப்ரபஞ்சரூபாய ப்ரக்ருத்யாத்மந் நமோऽஸ்துதே,
பரமாத்ம ஸ்வரூபாய நமஸ்தேऽசேஷசேஷிணே. (216½)

அசேஷ ஜகதீசாய நமஸ்தே சேஷசாயினே,
கேசவாய நமோ நித்யம் நமோ நாராயணாயச. (217½)

மாதவாய நமஸ்துப்யம் கோவிந்தாய நமோநம:,
நமோऽஸ்து விஷ்ணவே நித்யம் மதுஸூதந தே நம:,
த்ரிவிக்ரம நமஸ்துப்யம் வாமநாய நமோநம:. (219)

தேவாஸுர ஸ்வரூபியாயும் ஜகத்ஸம்ஹாரஹேதுவாயும் யம ஸ்வரூபியாயும் வாயு ஸ்வரூபியாயும் அக்னி ஸ்வரூபியா யும் ஸூர்யசந்த்ரஸ்வரூபியாயும் க்ரஹநக்ஷத்ரஸ்வரூபியாயும் ப்ரபஞ்சஸ்வரூபியாயும் பரமாத்மஸ்வரூபியாயும் அசேஷ சேஷியாயும் ஸகலஜகதீசராயும் சேஷசாயியாயும் கேசவ ராயும் நாராயணராயும் மாதவராயும் கோவிந்தராயும் விஷ்ணு வாயும் மதுஸூதனராயும் த்ரிவிக்ரமராயும் வாமனராயுமிருக்கிற உம்மையும் பொருட்டு, ப்ரக்ருதிக்கு உயிராயிருப்பவரே! தண் டன் ஸமர்ப்பிக்கிறேன்.

ஸ்ரீதராய நமஸ்தேऽஸ்து ஹ்ருஷீகேசாய தே நம:,
நமோऽஸ்து பத்மநாபாய தாமோதர நமோऽஸ்து தே. (220)

விச்வாய விச்வரூபாய வஷட்காராய வேதஸே,
ஸ்வாஹாத்மனே நமோ நித்யம் ஓங்காராய ஸ்வதாத்மனே. (221)

நமோ வேதஸ்வரூபாய வேதவேத்யாய தே நம:,
யஜ்ஞாய யஜ்ஞகர்த்தாய யஜ்ஞபோக்த்ரேச தே நம:. (222)

நமோऽஸ்து லோககுரவே நமஸ்தே வேதயோநயே,
நித்யாய நிரவத்யாய நமஸ்தேऽநந்தஸாக்ஷிணே. (223)

அநந்தகுணபூர்ணாய நமோऽநந்தாய விஷ்ணவே,
நமஸ்ஸத்த்வாய ரஜஸே தமஸேச நமோநம:. (224)

நமஶ் ஶுத்தாய முக்தாய புத்தயேச சிதாத்மநே,
ஸ்தூலாய ஸூக்ஷ்மரூபாய குரவே லகவே நம:. (225)

நமோ துர்லபரூபாய நமஸ்தே ஸுலபாத்மநே,
நமஸ் ஸஹஸ்ரபாதாய ஸஹஸ்ரஶிரஸே நம:. (226)

ஸஹஸ்ரசக்ஷுஷே தஸ்மை நமஸ்தேऽநந்தபாஹவே,
அச்யுதாநந்த கோவிந்த விஷ்ணோ நரஹரே ஹரே.
ஜநார்த்தந ஜகந்நாத நாத துப்யம் நமோநம:. (227½)

ஸ்ரீதரராயும் ஹ்ருஷீகேஶராயும் பத்மநாபராயும் தாமோதரராயும் ஜகத்தாயும் ஜகத்ஸ்வரூபியாயும் வஷட்காரஸ்வரூபியாயும் ப்ரஹ்மஸ்வரூபியாயும் ஸ்வாஹாஸ்வரூபியாயும் ப்ரணவஸ்வரூபியாயும் ஸ்வதாஸ்வரூபியாயும் வேதஸ்வரூபியாயும் வேதவேத்யராயும் யஜ்ஞஸ்வரூபியாயும் யஜ்ஞநாதராயும் யஜ்ஞபோக்தாவாயும் லோககுருவாயும் வேதமூலராயும் நித்ய நிரவத்யராயும் அநந்தஸாக்ஷியாயும் பகுகல்யாணகுணபரிபூர்ணராயும் அநந்தராயும் விஷ்ணுவாயும் ஸத்வரஜஸ்தமஸ்ஸ்வரூபியாயும் சுத்தராயும் முக்தராயும் புத்திஸ்வரூபியாயும் சித்ஸ்வரூபியாயும் ஸ்தூலராயும் ஸூக்ஷ்மராயும் குருவாயும் லகுவாயும் துர்லபராயும் ஸுலபராயும் ஆயிரந்திருவடிகளை யுடைத்தானவராயும் ஆயிரந்திருக்கண்களும் ஆயிரந்திருமுடிகளும் அனேகந்திருக்கைகளும் உடைத்தானவராயும் அச்யுதாநந்த கோவிந்த விஷ்ணு நரஹரி ஜநார்த்தன ஜகந்நாதாதி திருநாமங்களை உடைத்தானவராயுமுள்ள தேவரீரைத் தண்டன் ஸமர்ப்பிக்கிறேனென்று அத்ரியானவர் ஸ்தோத்ரம் செய்து தண்டன் ஸமர்ப்பித்தார்.

இதி ஸ்ரீப்ரஹ்மாண்டபுராணே மஹேஶ்வரநாரத
ஸம்வாதே ஸ்ரீப்ருந்தாரண்யமாஹாத்ம்யே பஞ்சமோऽத்யாய:.
ஐந்தாவது அத்யாயம் முற்றிற்று.
ஸ்ரீமத்வரவரமுநயேநம:

---

## ஆறுவது அத்யாயம்.

---

ருத்ர:—இதி ஸ்துவந்தம் தேவர்ஷே முநிம்தம் பரமௌஜஸம்,
ஸ்தோத்ராவஸாநே தேவேஶ: ஸ்நிக்தமேததுவாசஹ. (228½)

வாரீர் நாரதரே! இப்படி ஸ்துதி பண்ணுகிற மஹாதேஜஸ்கரான அந்த அத்ரிமஹாரிஷியைப் பார்த்து ஸ்தோத்ராந்தத்திலே தேவாதிபதியாயிருக்கிற அழகிய சிங்கரானவர் ஸ்நேஹயுக்தமாயிருக்கும்படி ஸ்ரீஸூக்தியை இப்படி அருளிச் செய்தார்.

ஸ்ரீபகவாந்:—ப்ரஸந்நோ஽ஸ்மி மஹாபாக தவாஹம் முநிஸத்தம,
தபஸாநந்யலப்யேந ஸ்தோத்ரேணச விஶேஷத:. (229½)

வாரீர் மஹாநுபாவரான அத்ரியே! இதராளாலே செய்யக்கூடாததான உம்முடைய தபஸ்ஸினாலும் விசேஷமான ஸ்துதியினாலும் ப்ரஸன்னனானேன்.

ஸ்தோத்ரேணாநேந யோ நித்யம் மாமர்ச்சயதி மாநவ:,
தஸ்மை தத்யாமஹம் நித்யம் மஹர்ஷே மாமகம் பதம். (230½)

வாரீர் அத்ரியே! எந்த புருஷனானவன் என்னை இந்த ஸ்துதியினால் பூஜிக்கிறானோ, அவன்பொருட்டு என்னுடைய நித்யமான பதத்தைக் கொடுப்பேன்.

யத்யப்யஹம் மஹாபாக ஜாநாம்யேவ தவேப்ஸிதம்,
ததாபீச்சாமி பவத: ஶ்ரோதும் தந் முநிஸத்தம. (231½)

வாரீர் முனிஶ்ரேஷ்டரான அத்ரியே! உம்முடைய இஷ்டத்தை நான் அறிவேன், ஆனாலும் உம்மைக்கொண்டு கேட்க இச்சிக்கிறேன்.

ருத்ர:—ஏவம் வதந்தம் ஸமுநிர் வாஸுதேவம் ஸநாதநம்,
பத்தாஞ்சலிபுடோ மந்தம் இதமாஹ சுபம் வச:. (232½)

அந்த அத்ரி மஹாமுனியானவர் இப்படி அருளிச்செய்த ஸனாதனராயும் வாஸுதேவராயுமிருக்கிற அழகிய சிங்கரைக் குறித்துக் கைகூப்பிக்கொண்டு மந்தமாயும் சுபகரமாயுமிருக்கிற வார்த்தையை இப்படி சொன்னார்.

அத்ரி:—தந்யோ஽ஸ்ம்யநுக்ருஹீதோ஽ஸ்மி யஸ்யமேத்வம் மஹாபுஜ,
ப்ரஸந்நோ பகவந்நத்ய வதஸீத்தம் ஜகத்குரோ. (233½)

யதீச்சஸி மமஶ்ரோதும் வசஸ்த்வம் புவநேஶ்வர,
ஶ்ருணுஷ்வ ஸுமஹாபாஹோ! கதயாமி ததவ்யயம். (234½)

ஹே மஹாபராக்ரமசாலியே! ஜகத்குரோ! ஷாட்குண்ய பரிபூர்ணரே! இப்போது யாதொரு அடியேன்விஷயத்தில் ப்ரஸன்னராய்க்கொண்டு இந்த ப்ரகாரம் அருளிச் செய்கிறதோ, அப்படி சொல்லப்பட்ட நான் தன்யனுயும் அனுக்ரஹிக்கப்பட்டவனுயும் ஆனேன். வாரீர் ஜகந்நாதரே! எந்த வ்ருத்தாந்தத்தை என்னைக்கொண்டு கேட்க வேணுமென்று இச்சிக்கிறீரோ, அந்த வ்ருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன் கேளும்.

தவ ஸந்தர்ஶநேநைவ க்ருதக்ருத்யோ஽ஸ்மி ஸாம்ப்ரதம்,
ததாபி கிஞ்சித் வக்தவ்யமஸ்தி தச்ச்ருணு கேஶவ. (235½)

வாரீர் விரோதிநிரஸனஸ்வபாவரே! தேவரீருடைய ஸேவையால் தானே இப்போது நான் தன்யனுனேன். ஆனுலும் சொல்லத்தக்கதான ஒரு விண்ணப்பத்தைக் கேளும்.

மேதோஸ்ருக்பூயவிண்மூத்ர ஸ்நாயுமஜ்ஜாஸ்திபந்தநம்,
ந தர்த்தும் குத்ஸிதம் லோகே ஶரீரமிதமுத்ஸஹே. (236½)

ததத்ய த்வாம் ப்ரபந்நோ஽ஸ்மி முக்திம் மே தாதுமர்ஹஸி,
வஸ்தும் க்ஷணமபீஹாத்ய நக்ஷமாமி மஹீதலே. (237½)

கொழுப்பு எலும்புகள் ரக்தம் சவுர்த்தண்ணீர்கள் மலமூத்ராதிகளாலே கட்டப்பட்டும் குத்ஸிதமாயுமிருக்கிற இந்த சரீரத்தை தரிக்கைக்கு சக்தனல்லேன். இந்த பூமண்டலத்தில்க்ஷண காலமும் வாஸம் பண்ணப்பொறேன். ஆகையால், தேவரீரைக் குறித்து ப்ரபத்தி பண்ணலானேன். என்பொருட்டு முக்தியைக் கொடுக்கக் கடவீர்.

இதஞ்சாபி வசோ தேவ ஶ்ரோதுமர்ஹஸி மாமகம்,
தாதுஞ்ச மத்க்ருதே஽ஸ்யாபி ஜாலேஸ்து ஸுமஹாமதே:.
முக்திமர்ஹஸி தேவேஶ ப்ரஸந்நோ யதி மாதவ. (239)

வாரீர் ஶ்ரிய:பதியே! இன்னம் ஒரு அடியேனுடைய விண்ணப்பத்தைச் செவிசாத்தியருள வேணும். பின்னையும் அடியேன்விஷயத்தில் தேவரீர் ப்ரஸன்னரானது உண்டானுல் மஹா புத்திமானுன இந்த ஜாலி மஹர்ஷிக்கும் அடியேன் நிமித்தமாய் முக்தியை க்ருபை செய்தருள வேணும்.

ருத்ர:—இத்யேவமுக்தவந்தந்தம் அத்ரிம் பாவகஸங்நிபம்,
உவாச தேவதேவேஶோ முநிம் முநிவரோ஽வ்யய:. (240)

நித்யரான ஸ்வாமியானவர் இப்படி சொல்லாநிற்கிற அக்னி ஸமானரான அந்த அத்ரியைப் பார்த்து அருளிச் செய்தார்.

ஸ்ரீபகவாந்—தத்ததைவ கரிஷ்யாமி யதா வதஸி ஸுவ்ரத,
ஸர்வதைவ மஹாபாக ப்ரஸந்நோऽஸ்மி நஸம்ஶய:. (241)

வாரீர் நல்ல வ்ரதத்தை உடைத்தானவரே! ஸர்வ ப்ரகாரத்தாலும் ப்ரஸன்னனானேன். ஸம்சயம் இல்லை. ஆகையால், நீர் சொன்னபடி செய்கிறேன்.

அஹமத்ரைவ வத்ஸ்யாமி சிரம் ரம்யே தவாஶ்ரமே,
தவஹேதோர்மஹாபாக அங்யேஷாஞ்சாபி முக்தித:. (242)

உம்முடைய நிமித்தமாக இதராளான ஸகல ஜனங்களுக்கும் முக்தியைக் கொடுக்கிறவனாய்க்கொண்டு ரம்யமான இந்த உம்முடைய ஆச்ரமத்திலே வெகுகாலம் வஸிக்கிறேன்.

அயம் மநோஹரோ தேஶஸ்ஸம்புல்லதுலஸீவந:,
நாநா தருகணோபேதஸ் ஸர்வதஸ் ஸுகமாருத:. (243)

நாலு பக்கத்திலேயும் ஸுகமான காற்றை உடைத்தாயும் அனேக வ்ருக்ஷஸமூஹங்களோடே கூடியும் விகஸித்த துலஸீ வனத்தை உடைத்தாயுமிருக்கிற இந்த ப்ரதேசம் அதிமனோஹரமாயிருக்கிறது.

ஸரஶ்சேதம் மநோஹாரி புல்லபங்கஜகைரவம்,
ஹம்ஸ ஸாரஸ ஸங்நாதம் அதிஶீதாமலோதகம். (244)

விகஸித்த தாமரஸ புஷ்பங்கள் ஆம்பல்கள் இவைகளை உடைத்தாயும், ஹம்ஸங்களென்ன ஸாரஸபக்ஷிகளென்ன இவ்வைகளுடைய சப்தங்களோடே கூடிக்கொண்டும் அதிசீதலமாயும் நிர்மலமாயுமிருக்கிற உதகங்களோடு கூடிக்கொண்டுமிருக்கிற இந்த ஸரஸ்ஸானது அதிமனோஹரமாயிருக்கிறது.

இமேச முநயஸ் ஸர்வே விதூதாஶேஷ கல்மஷா:,
வஸந்த்யத்ர மஹாத்மாநோ யேசமே ஸம்ஶிதவ்ரதா:. (245)

எந்த ரிஷிகள் என் பொருட்டு தீக்ஷ்ணமான வ்ரதத்தை உடைத்தானவர்களாக வாஸம் பண்ணுகிறார்களோ, இவர்கள் பின்னையும் போக்கடிக்கப்பட்ட ஸகல பாபங்களை உடைத்தானவர்களான மஹானுபாவர்கள்.

மநோஜ்ஞஸ்ததயம் தேஶோ வாஸாய மம ரோசதே,
த்விபரார்த்தாவஸாநம்வா யாவத்த்விஜ பவிஷ்யதி.
தாவதத்ரைவ வத்ஸ்யாமி லோகாநாம் ஹிதகாம்யயா. (246½)

இப்படி மனோஹரமான இந்த ப்ரதேசத்திலே வாஸம் பண்ண எனக்கு ருசிக்கிறது. ப்ரஹ்மகல்பபர்யந்தம் ப்ரஜா ஸௌக்யத்தையும்பொருட்டு வஸிக்கப்போகிறேன்.

ஸம்ஸார மருகாந்தார பரிவர்த்தந கேதிநாம்,
தேஹிநாம் க்லேஶகிந்நாநாம் ஹிதாய ஹதசேதஸாம். (247½)

ஸம்ஸாரமாகிற மருகாந்தாரத்திலே ஸஞ்சாரத்தாலே உண்டான தாபத்ரயாதுராளாயும் பகவதலாபக்லேசத்தினாலே கின்னளாயும் புத்திஹீனளாயுமிருக்கிற மனுஷ்யாளுடைய ஹிதத்தையும்பொருட்டு வஸிக்கிறேன்.

கர்மணா துக்கஸம்ப்ராப்தி: து:கேந க்ரோதஸம்பவ:,
க்ரோதாதஜ்ஞாநஸம்ப்ராப்தி ரஜ்ஞாநாத் துஷ்க்ருதம்பவேத்.
ஏவமேவ நராஸ்ஸர்வே ப்ராம்யந்தி பவஸாகரே. (249)

கர்மத்தாலே துக்கம் உண்டாகும். துக்கத்தாலே க்ரோதம் உண்டாகும். க்ரோதத்தாலே அஜ்ஞானம் உண்டாகும். அஜ்ஞானத்தாலே பாபம் உண்டாகும். இப்படியே மனுஷ்யாள் ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்திலே சுழலுகிறார்கள்.

அஜ்ஞாநக்ரோதஸம்பூத துஷ்க்ருதைர்து:கபீடிதா:,
நவிஜாநந்தி மாமேவம்வித மீத்ருக் வ்யவஸ்திதா:. (250)

ஸர்வேச து:கஸந்தப்தா மாநவா மூடசேதஸ:,
ஈத்ருஶே ஜகதிஹ்யஸ்மிந் து:கஶோகபராயணே. (251)

அஜ்ஞானத்தாலும் கோபத்தாலுமுண்டான பாபம் உண்டு, அத்தாலுண்டான துக்கவிசேஷங்களாலே பீடிதாளாய் துக்கஶோகமயமான இப்படிப்பட்ட இந்த ஜகத்திலே இப்படிப்பட்ட என்னை அறியாமல் வஸிக்கிறார்கள்.

துர்லபஸ்ஸஹி தர்மாத்மா யோமாம் வேத்தி ஸநாதநம்,
கஸ்யசித் க்வசிதேவேஹ தர்மே புத்தி: ப்ரஜாயதே. (252)

திஷ்ட்யா தர்மாதவாப்நோதி ஹ்யர்த்தாந் யதி நர: க்வசித்,
காமாய யததே நூநம் அர்த்தாந் ப்ராப்யச மாநவ:,
அபவர்க்காய நைவாஸ்தி யதமாநோ மஹீதலே. (253½)

அனாதியான என்னை அறியத்தக்க மஹானுபாவன் துர்லபன். இந்த லோகத்திலே ஓரிடத்தில் ஒருவனுக்கு தர்மத்தில் புத்தி உண்டானால் அந்த தர்மத்தாலே அர்த்தத்தை அடைந்து காமத்தையும் பொருட்டு யத்னிக்கிறான். இந்த பூமியிலே மோக்ஷத்திலே யத்னமுடையவன் இல்லை.

தத்கதாசித் க்வசித் விப்ர ஜ்ஞாநீ ஜாயேத வைபுவி,
பஹுஜந்ம ஸஹஸ்ராணி மாமாராத்ய விதாநத:. (254½)

தஸ்ய பாபாநி பூயாம்ஸி யத்யபி ஸ்யுர்த்விஜோத்தம,
க்ஷமாமி தாநி ஸர்வாணி தஞ்சாஹம் நக்ஷிபாம்யத:. (255½)

வாரீர் அத்ரியே! பூமியிலே ஒருகால் ஓரிடத்தில் அனேக ஜன்மங்களிலே என்னை ஆராதித்து ஜ்ஞானி உண்டானேயானல் அவனுக்குப் பாபங்கள் கிடையாது. யத்யபி உண்டானுலும் அதுகளை நான் போக்கடிக்கிறேன். அந்த புருஷனை அதோ லோகத்தில் ப்ரவேசிப்பியாமல் நானே ரக்ஷிக்கிறேன்.

கதாசிதபி நாதர்மே தஸ்ய புத்தி: ப்ரஜாயதே,
ப்ரமாதாத் யதிகுர்யாத்வை கிஞ்சித் தந்நாஶயாம்யஹம்.(256½)

அப்படிப்பட்டவனுக்கு அதர்மத்தில் ஒருகாலும் புத்தி உண்டாகிறதில்லை. ப்ரமாதத்தாலே ஒருகால் கிஞ்சித்து உண்டானுலும் அதை நான் போக்கடிக்கிறேன்.

நபயம் க்வசிதப்யஸ்தி மத்பக்தாநாம் மஹாத்மநாம்,
தேஷாம் பிப்யதி ரக்ஷாம்ஸி பிஶாசாஶ்சைவ தாநவா:. (257½)

மஹாத்மாக்களான என்னுடைய பக்தாளுக்கு ஓரிடத்திலும் பயம் இல்லை. என் பக்தாளைக் கண்டால் பிசாசங்களென்ன ராக்ஷஸர்களென்ன அஸுரர்கள் என்ன இவர்கள் பயப்படுவார்கள்.

தேஷாம் தர்ஶநமாத்ரேண பத்தாஞ்சலிபுடா முநே,
அபஸர்ப்பந்தி தூதாஶ்ச யமஸ்ய பய மோஹிதா:. (258½)

என்னுடைய பக்தாளுடைய ஸேவை மாத்ரத்தினுலேயே யமதூதர்கள் பயமோஹிதாளாய்க் கைகளைக் கூப்பிக்கொண்டு தூர விலகிப்போகிறுர்கள்.

த்ருஷ்ட்வா ஸர்வே நமஸ்யந்தி மத்பக்தாந் தேவதாகணா:,
பூஜ்யாஸ்தேஷு மஹாத்மாநஸ் ஸர்வலோகஹிதைஷிண:. ()

ஸகல லோகஹிதசிந்தகர்களாயும் பூஜ்யாளாயும் மஹாத்மாக்களாயுமுள்ள என்னுடைய பக்தர்களை ஸகலமான தேவஸமூஹங்களும் தண்டன் ஸமர்ப்பிக்கிறுர்கள்.

நிந்தாம் யஸ்து கரோத்யேஷாம் மத்பக்தாநாம் விமூடதீ:,
குலபந்து ஸமாசாரைஸ் ஸயாதி நரகாயுதம். (260½)

எந்த புருஷனனவன் மூடனுய்க்கொண்டு என்னுடைய பக்தாளே நிந்திக்கிருனே, அவன் குலபந்துக்களோடுகூட நரகத்தை அடைவான்.

குலீநமகுலீநம்வா ஸூஶீலம்வாபஶீலிநம்,
துர்வ்ருத்தம்வா ஸூவ்ருத்தம்வா மத்பக்தம் நைவ நிந்தயேத்.()

என்னுடைய பக்தன் குலீனனுனுலும் துஷ்குலஜாதனுனுலும் நல்ல ஸ்வபாவ முடையவனுனுலும் துஸ்ஸ்வபாவனுனுலும் ஆசார முடையவனுனுலும் துராசாரனுனுலும் .அவனே நிந்திக்கவொண்ணுதிறே.

ஶூசிஸ்ஸர்வகலாதக்ஷோ யதாவத்ஸாங்க வேதவித்,
மத்பக்தஶ்சாப்யகுசலஸ் தயோரேஷ வரோ முநே. (262½)

ஸகலவித்யாபாரீணனுயும் பரிஶூத்தனுயும் ஸாங்கவேதவித்தாயுமிருக்கிற புருஷனேக்காட்டிலும் அகுசலனுன என் பக்தன் ஶ்ரேஷ்டன்.

அர்த்தகாம பரா யேயே யம்யம் தேவமுபாஸதே,
தேஷாமப்யஹமேவைகோ தத்யாம்தத்தந்முகேந தத். (263½)

எந்த புருஷர்கள் அர்த்தகாமபராளாய் எந்தெந்த தேவதையை உபாஸிக்கிறுர்களோ அவர்களுக்கு நானே அந்தந்த ரூபியாய்க் கொண்டு அந்தந்த பலன்களேக் கொடுப்பேன்.

யேச மாமேவ யாசந்தே ஹ்யர்த்த காமேஶ நரா புவி,
தேஷாமபி மஹாபாக தத்ததேவ ததாம்யஹம். (264½)

எந்த புருஷாள் என்னே அர்த்தகாமவிஷயங்களுக்காக ஆஶ்ரயிக்கிறுர்களோ, அவர்களுக்கு நான் அந்த பலத்தைக் கொடுப்பேன்.

தர்மார்த்தகாம மோக்ஷாக்யா: புருஷார்த்தாஶ் சதுர்விதா:,
தேஷாஞ்ச ஸூமஹாத்மாஸௌ மோக்ஷகாங்க்ஷீ விஶிஷ்யதே

மத்பக்தஸ்து மஹாத்மாzஸௌ ப்ராணை: ப்ரியதரோ மம,
ஏகாந்தீபூஜநீயஶ்ச ஸேவ்யஶ்சைவ ஜநஷ்மதாம். (266½)

லோகத்தில் புருஷார்த்தங்கள் தர்மமென்றும் அர்த்தமென்றும் காமமென்றும் மோக்ஷமென்றும் நாலுவிதங்கள். அதுக்குள்ளே மோக்ஷத்தில் இச்சையுடையவன் மஹாத்மாவாய் விலக்ஷணனுவன். இப்படிப்பட்ட மாஹாத்ம்யமுண்டான மஹானுபாவனுனவன் என்னுடைய பக்தன். அவன் எனக்கு மிகவும்

இஷ்டனுயும் பரமைகாந்தியாயும் பூஜிக்கத்தக்கவனுயும் லோகங்களுக்கு ஸேவிக்கத்தகுந்தவனுயுமாவான்.

த்வந்து ஜித்வேந்த்ரியக்ராமம் நிஸ்ஸ்ப்ருஹோzந்யேஷு
[வஸ்துஷு
மயிபக்திமதீவோக்ராம் க்ருதவாந் முநிஸத்தம. $(267\frac{1}{2})$

தவ தாஸ்யாம்யஹம் முக்திம் ப்ரஸந்நஶ்சாஸ்மி தேப்ருஶம்,
யந்நித்யம் விமலம் சுத்தம் தத்பதம் யாஹி மாசிரம். $(268\frac{1}{2})$

வாரீர் அத்ரியே! நீர் இந்த்ரிய ஸமூஹங்களை ஜயித்து இதரவிஷயங்களில் ஆஶாரஹிதருமாய் என் விஷயத்தில் பரிபூர்ணமான பக்தியையும் செய்தீர். ஆகையால் உம்விஷயத்தில் அனுக்ரஹமுள்ளவனுன நான் உமக்கு மோக்ஷத்தைக் கொடுக்கிறேன். பரிஶுத்தமாயும் ஶாஶ்வதமாயுமிருக்கிற பரமபதத்தைச் சீக்கிரமாக அடையக்கடவீர்.

இத்யுக்தஸ்து முஹூர்த்தே ஸமுநிர்ஜாலிநாஸஹ,
தத்யாஜ தேஹம் தேவர்ஷே த்வசம் ஜீர்ணுமிவோரக:.$(269\frac{1}{2})$

பின்பு அந்த அத்ரிமஹாமுனியானவர் ஸ்வாமியினுல் இப்படி சொல்லப்பட்டவராய் ஜாலிமஹர்ஷியுடனேகூட, ஸர்ப்பமானது ஜீர்ணமான தோலை விடுமாபோலே ஶரீரத்தை விட்டார்.

ஸவிஸ்ருஜ்ய ஶரீரந்து தருணுதித்யஸந்நிப:,
விமாநேநார்க்கவர்ணேந பஶ்யதாஞ்ச திவௌகஸாம். $(270\frac{1}{2})$

ப்ரயயௌ பரயா லக்ஷ்ம்யா பூஜ்யமாநஸ்ஸஹர்ஷிபி:,
த்ரிவிஷ்டபம் மஹாதேஜாஸ் தூர்ணம்வை ஜாலிநாஸஹ. ()

அந்த மஹர்ஷியானவர் இப்படி தேஹத்தை விட்டு ஸூர்யன் போலே ப்ரகாஶமான விமானத்தில் தேவதைகள் பாராநிற்க மஹர்ஷிகளால் பூஜிக்கப்பட்டவராய் பாலஸூர்யஸமராய்க் கொண்டு அதிஶோபாஸம்பந்நராய் ஜாலிமஹர்ஷியோடேகூட ஶீக்ரம் பரமபதத்தை அடைந்தார்.

ததாப்ரப்ருதி தத்ரைவ தேவதேவோ ஜகத்குரு:,
துலஸீகாநநே ரம்யே பூஜ்யதே ஸர்வதைவதை:. $(272\frac{1}{2})$

கர்மபூமௌ மநுஷ்யாணும் ஹிதாயார்ச்சாத்மநா ஸ்வயம்,
விஹாய பரமந்தாம தச்ச நிர்மலமவ்யயம். $(273\frac{1}{4})$

ஸர்வலோக குருஸ்ஸர்வ கதஸ்ஸர்வேஶ்வரோஹரி:,
காருண்யாத் கருணுவாஸோ வர்த்ததேzத்ர மஹாமுநே.$(274\frac{1}{4})$

அன்று முதல் மனோஹரமான ப்ருந்தாவனத்தில் ஸகல தேவதைகளாலும் பூஜிக்கப்பட்டு லீலாவிபூதிகளிலுள்ள ஸகல ஜனங்களுடைய ஹிதத்தின் பொருட்டு ஸகலலோககுருவாயும் ஸர்வவ்யாபகராயும் ஸகல நியாமகராயுமிருக்கிற ஶ்ரிய:பதியானவர், நிர்மலமாயும் நித்யமுமான பரமபதத்தைவிட்டு இவ்விடத்தில் அர்ச்சாரூபியாய் நிர்ஹேதுக க்ருபாவிசேஷத்தாலே வஸிக்கிறார்.

இதி ஸ்ரீப்ரஹ்மாண்டபுராணே மஹேஶ்வரநாரத ஸம்வாதே ஸ்ரீப்ருந்தாரண்ய மாஹாத்ம்யே ஷஷ்ட்டோऽத்யாய:.

ஆறுவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீமத்வரவரமுநயேநம:

---

# ஏழாவது அத்யாயம்

---

ருத்ர:—பூயஏவபுநர்வாக்யம் ஶ்ருணுஷ்வஸுமஹாமதே,
வக்ஷ்யாமியதஶேஷேண ஸமாஹிதமநாமுநே. (275½)

புத்திமானான நாரதரே! பின்னையும் விசேஷமாகச் சொல்லுகிற வார்த்தையை நிஶ்சலமான சித்தத்தையுடையராய்க் கேளும்.

புரா த்ரேதாயுகே விஷ்ணுர் ஜாத இக்ஷ்வாகுஸந்ததௌ,
ராமோ மாநவரூபேண ரக்ஷஸாம் நிதநாயஹி. (276½)

முன்னே த்ரேதாயுகத்திலே ஶ்ரிய:பதியானவர் ராக்ஷஸவதார்த்தமாக இக்ஷ்வாகுவம்ஶத்திலே ராமரென்று நாமமுடையவராய் மனுஷ்ய ரூபியாய் அவதரித்தார்.

ஸ நிஹத்ய ஸ்வவீர்யேண ராவணம் ராக்ஷஸேஶ்வரம்,
ஸமித்ரபுத்ரம் ஸாமாத்யம் ப்ராப்தவாந் ஜாநகீம் புந:. (277½)

பின்னையும் அந்த ஸ்வாமியானவர் (ஸூர்யகுமாரனான ஸுக்ரீவனை மந்த்ரியாக அடைந்து) தம்முடைய பராக்ரமத்தாலே ராக்ஷஸேஶ்வரனான ராவணனைப் புத்ரமித்ர மந்த்ரீஸஹிதனாக ஸம்ஹரித்துத் திரும்பியும் ஸீதையை அடைந்தார்.

ஸக்ருத்வா ஸுசிரம் காலம் ராஜ்யம் தர்மேண ராகவ:,
ஸ்வஸ்தாநமகமத் பூயோ ப்ராத்ருபிஸ்த்ரிபிரந்வித:. (278½)

அனந்தரம் அந்த சக்ரவர்த்தித் திருமகனானவர் பஹுகாலம் ந்யாயமாக ராஜ்யபரிபாலனஞ்செய்து திரும்பியும் ப்ராதாக்களோடே பரமபதத்துக்கு எழுந்தருளினார்.

தஸ்மிந் ப்ராப்தே திவம் ராமே ஸமித்ரப்ராத்ருபாந்தவே,
பாண்ட்யேஷு பாண்டரோநாம பர்வதஶ்சித்ரதாதுக:.(279½)
தஸ்மிந் ஶஶபதோநாம தபோஜபபராயண:,
கஶ்சிதாஸீந்முநிவரோ நியதேந்த்ரிய மாநஸ:,
தபஶ்சசார ருசிரம் ஹுதஹவ்யவஹப்ரப:. (281)

இப்படிக்கு அந்த சக்ரவர்த்தித் திருமகனுனவர் இளைய பெருமாளென்ன பந்துக்களென்ன இவர்களோடேகூட பரம பதத்துக்கு எழுந்தருளினா. இது நிற்க: அப்போது பாண்ட்ய தேசங்களிலே கைரிகாதிதாதுக்களோடே கூடின பாண்டர மென்று பெயரையுடைய ஒரு பர்வதம் உண்டு. அதில் தபஸ் ஸிலேயும் ஜபத்திலேயும் ஆஸக்தி யுக்தராயும் இந்த்ரிய ஜய முள்ளவராயும் அக்னிதுல்யமான காந்தியையுடையவராயுமுள்ள ஶஶபதரென்று பெயரை உடைத்தான ஒரு முனிஶ்ரேஷ்ட்ட ரானவர் மனோஹரமான தபஸ்ஸைப் பண்ணினுர்.

தஸ்மிந் சரத்யதீவோக்ரம் தபஶ்ஶஶபதேமுநௌ,
ஸேந்த்ரா தேவகணாஸ்ஸர்வே ஜாதஶங்காஸ்ததோऽபவந். ()
ததஸ்ஸமேத்ய தே ஸர்வே தேவாஸ்ஸாக்நிபுரோகமா:,
அப்ருவந் மதுரம் வாக்யம் ஹேலாம்நாமாப்ஸரோவராம். (283)

அந்த ஶஶபதமஹாரிஷியானவர் அத்யுக்ரமான தபஸ் ஸைப் பண்ணுகிறவளவில், இந்த்ரன் முதலான தேவதைகள் அவரிடத்தில் பயத்தையுடையவர்களானுர்கள். பின்பு அக்னி முதலான அந்த தேவதைகளானவர்கள் ஒன்று கூடி ஹேலை யென்கிற பெயரை யுடைய அப்ஸரஸ்ஸைப் பார்த்து மதுரமாக ஒரு வார்த்தை சொன்னுர்கள்.

தேவகார்யமிதம் பத்ரே! த்வயா கர்த்தவ்யமத்ய ஹி,
த்வம்வை ஸுகுஶலா ஸௌம்யே ந்ருத்தகீதகலாஸுச. (284)
தத்கத்வா பாண்டரம் ஶீக்ரம் பர்வதம் தாதுமண்டிதம்,
முநிஶ்ஶஶபதஸ்ஸோऽயம் வஶமாநீயதாம் தவ. (285)

வாராய் மங்களகரையே! இப்போது உன்னுலே இந்த தேவகார்யமானது பண்ணத்தக்கது. நீ ந்ருத்த கீத வித்யைகளில் ஸமர்த்தையன்ரூே. ஆகையால், கைரிகாதிதாதுக்களாலே அலங் கரிக்கப்பட்ட பாண்டர பர்வதத்தை நீ அடைந்து ஶஶபதரென் கிற முனியை உனக்கு ஸ்வாதீனராகப் பண்ணக்கடவாயென்று தேவதைகள் சொன்னுர்கள்.

ஏவமுக்தா ஸுரவரைர் ஹேலாநாமாப்ஸரோவரா,
ரமணீயம் வபு:க்ருத்வா பாண்டரம் பர்வதம்கதா. (286)

தத்ர கத்வா விஶாலாக்ஷீ ஸர்வாபரணபூஷிதா,
முநேரதூரதஸ் தஸ்ய ஸ்தித்வாபஶ்யத்ததோ முநிம். (287)

ஹேலையென்று பெயரையுடையவளும் நீண்டகண்களை யுடையவளுமான அந்த அப்ஸரஸ்ஸானவள் இப்படி தேவதைகளால் சொல்லப்பட்டு அந்த பாண்டர பர்வதத்தை ப்ரவேஶித்து ஸகலாபரணங்களால் பூஷிக்கப்பட்டு ஸமீபத்தில் இருந்துகொண்டு அந்த ஶுபதரைப் பார்த்தாள்.

தம்த்ருஷ்ட்வாது முநிஶ்ரேஷ்டம் தீப்தபாவகஸந்நிபம்,
ஸஞ்சசால பயாத்தஸ்ய தர்ஶநாதேவ ஸா முநே:. (288)

ஸாZபஸ்ருத்ய பயாத்கிஞ்சித் தேவதாகார்யகௌரவாத்,
நிஶ்சித்ய மநஸேத்யேவம் பாதபாந்தர்ஹிதா தத:. (289)

அந்த அப்ஸரஸ்ஸானவள் ஜ்வலிக்கிற அக்னியைப் போன்ற காந்தியை உடைத்தான அந்த மஹாரிஷியைப் பார்த்த மாத்ரத்தாலேயே பீதையாய் சலித்தாள். முதலில் பயத்தால், கொஞ்சம் ஒதுங்கிப் பிறகு தேவதாகார்யகௌரவத்தால் மனோநிஷ்கர்ஷ முள்ளவளாய், ஒரு வ்ருக்ஷத்தின் பக்கத்தில் மறைந்திருந்தாள்.

வாமபார்ஶ்வே முநேஸ்தஸ்ய ஹேலாது பரமாப்ஸரா:,
காயந்தீ மதுரம் கீதம் தஸ்தௌவை மதுராக்ஷரம். (290)

அந்த ஹேலையென்கிற அப்ஸரஸ்ஸானவள் அந்த முனிக்கு இடப்பக்கத்தில் மதுரமான கானம் பண்ணிக்கொண்டிருந்தாள்.

காயந்த்யாமேவ தஸ்யாந்து ஹேலாயாம் கீதமுத்தமம்,
முநிருந்மீல்ய நயநே திஶஸ்ஸமவலோகயத்,
நததர்ஶ க்வசிச்சாபி கிஞ்சித் ஸத்த்வம் ஸமீபத:. (291½)

அந்த ஹேலையானவள் ஶ்ரேஷ்டமான கானம் பண்ணுநிற்கும்போது அந்த ஶுபதரானவர் கண்களைத் திறந்து ஸமஸ்தமான திக்குக்களையும் பாராநின்றுகொண்டு ஒரிடத்திலேயும் ஸமீபத்தில் ஒரு ஜந்துவையும் பார்க்கவில்லை.

அபஶ்யதஸ்ததஸ்தஸ்ய கிஞ்சிதப்யமலாத்மந:,
விஸ்மய: பரமோ ஹ்யாஸீத் கீதி: கிந்ந்வேதத்யபி. (292½)

ஏவம் ஸம்பஶ்யமாநந்தம் திஶஸ்ஸர்வா மஹாமுநிம்,
விலோக்ய ஹேலா பரமாம் முதமாப ஶுசிஸ்மிதா. (293½)

N53
110008

இப்படி ஒரு வஸ்துவையும் காணுதவராய் நிர்மலமான ஸ்வ ரூபத்தை உடைத்தான அந்த மஹர்ஷிக்கு அதிகமான ஆச்சர் யம் உண்டாச்சுது. இப்படி நாலு திக்குக்களேயும் பாரா நிற்கிற அந்த மஹர்ஷியை, புன்சிரிப்புள்ள இந்த ஹேலேயானவள் பார்த்து அதிஸந்தோஷத்தை அடைந்தாள்.

ததோ நிமீலிதாக்ஷஸ்ஸ பபூவ த்யாநமாஸ்தித:,
முநிஶ் ஶமபதோ பூயோ ஹ்யத்ருஷ்ட்வா தஸ்ய காரணம். ()

அந்த ஶமபத மஹர்ஷியானவர் அந்த கான காரணத்தைத் தெரிந்து கொள்ளமுடியாமல் திரும்பியும் கண்களே மூடிக் கொண்டு த்யானத்தை அடைந்தார்.

புநரேவச ஸா ஹேலா ஜகௌ கீதம் மநோஹரம்,
ஸசோந்மீல்யாக்ஷிணீ பூயஸ் ஸமபஶ்யத்திஶோதஶ. (2؛ 5½)

பின்பும் அந்த ஹேலேயானவள் அதிமனேஹரமான கானத் தைப் பண்ணினுள். அந்த மஹர்ஷியானவர் அந்த கானத்தைக் கேட்டு, திரும்பியும் கண்களேத் திறந்து பத்துத் திக்குக்களேயும் நன்ருகப் பார்த்தார்.

தேநசாதிமநோஜ்ஞேந கலகீதேநவை முநி:,
லக்ஷீக்ருதஶ் ஶராணுந்து காமஸ்ய ஸஹஸா முநே. (296½)
ஶ்ருத்வா தம்கீதநிநதம் திஶோதஶ விலோகயந்,
ஸ யஸ்மாத் ஸம்ஶ்ருதஶ்ஶப்தஸ் தந் தேஶமுபசக்ரமே. (297½)

அந்த ரிஷியானவர் அந்த கானத்தைக் கேட்டு அதிமனே ஹரமான அந்த கானஶப்தத்தாலே மதனஶர பரவஶராய் எல்லாத் திக்குக்களேயும் பார்த்துக்கொண்டு, எந்ததேஶத்திலே ஶப்தம் கேட்கப்பட்டதோ, அந்த ஸ்தலத்தைக் குறித்து நடந்தார்.

தத்ரகத்வா ஶமபதஸ் ஸம்ஸ்திதா யத்ர ஸாऽப்ஸரா:,
அபஶ்யததிஹ்ருத்யாங்கீம் தாஞ்ச ஹேலாம் ஶுசிஸ்மிதாம். ()

அந்த ரிஷியானவர் அந்த கானஸ்தலத்தை அடைந்து அவ் விடத்தில் வாஸம் பண்ணுநிற்கிற அதிமனேஹரங்களான அங்கங் களே உடைத்தாய் நற்சிரிப்புள்ள அந்த ஹேலேயைப் பார்த்தார்.

பாலாமஸித கேஶாந்தாம் பூர்ணசந்த்ரநிபாநநாம்,
நவராஜீவ பத்ராக்ஷீம் ரத்நகுண்டல ஶோபிதாம். (299½)
ஸுநாஸாஞ் சாருதந்தோஷ்ட்டீம் கம்புபந்துரகந்தராம்,
உத்துங்கபீநவ்ருத்தாப்யாம் குசாப்யாம் பூஷிதோரஸம். (300½)

கண்டார்பிதப்ருஹத்தாராம் கமநீயககர்ணிகாம்,
க்ருஷ்ணஸர்ப்பாபயா தந்வ்யா ரோமராஜ்யா விராஜிதாம். ()
கேயூரகடகாநத்தாம் கோமலாயதபாஹுகாம்,
கம்பீரநாபிகுஹராம் விஶாலஜகநஸ்தலீம். (302½)
ஹஸ்திஹஸ்தோபமாநோரும் வ்ருத்தாஞ்சிதஸுஜங்கிகாம்,
பத்ம கோஶப்ரதீகாஶ விராஜித பதத்வயாம். (303½)
தாம் த்ருஷ்ட்வா ரூபஸம்பந்நாம் நவயௌவந ஶாலிநீம்,
மந்மதாக்ருஷ்ட ஹ்ருதயோ வாக்யமேத துவாசஹ. (304½)

அந்த ஹேலேயானவள் எப்படி இருக்கிறுளென்றுல், பாலேயாயும் கறுத்த மயிர்களே உடையளாயும் பரிபூர்ணமான சந்த்ரனேப்போன்ற முகத்தை உடையளாயும் நூதனமான தாமரஸ புஷ்பங்கள் போன்ற கண்களே உடையளாயும் ரத்னகுண்டலங்களால் ப்ரகாசியா நிற்பவளாயும் அழகான மூக்கை உடையளாயும் மனேஹரமான தந்தங்களென்ன அதரமென்ன இதுகளே உடையளாயும் உன்னதங்களாயும் பெருத்தும் வ்ருத்தமாயுமிருக்கிற குசங்களால் அலங்கரிக்கப்பட்ட மார்பையுடையளாயும் கண்டத்தில் அணியப்பட்ட பெரிய ஹாரங்களே உடையளாயும் சுந்தரமான கர்ணபூஷணங்களே உடையளாயும், க்ருஷ்ணஸர்ப்பம் போன்ற சோபாவத்தான ரோமாவலியினுலே ப்ரகாஶியாநிற்பாளாயும் தோள்வளேகளாலும் கங்கணங்களாலும் ப்ரகாஶிக்கிற கைகளே யுடையளாயும் கம்பீரமான நாபியையுடையளாயும் விஶால்மான கடிபுரோபாகத்தை உடையளாயும் யானையினுடைய தும்பிக்கைபோன்ற தொடைகளே உடையளாயும் வர்த்துலமும் ப்ரகாசமுமான முழங்கால்களே உடையளாயும் பத்மம்போலே ப்ரகாசிக்கும் பாதங்களே உடையளாயும் உள்ளாள் : இப்படிப்பட்ட ரூபமுடையவளும் நூதனமான யௌவனமுடையவளுமான அந்த ஹேலேயைப் பார்த்து மன்மதனுல் கவரப்பட்ட மனஸ்ஸை உடையராய் அந்த ரிஷியானவர் ஒருவார்த்தை சொன்னுர்.

கா த்வம் பவஸி கல்யாணி பத்மபத்ர நிபேக்ஷணே,
தேவீவா மாநுஷீவா த்வம் யக்ஷீ வித்யாதரீச வா. (305½)
அப்ஸராவா குருஶ்ரோணி த்வமந்யா கா ஶுபாநநே,
லக்ஷ்மீர்வாzத பவாநீவா பாரதீவா ரதிர்நு கிம். (306½)
ஏஹ்யாஶ்ரமபதம் மே த்வம் காமபாணபரிப்லுதம்,
அங்கீகுருஷ்வ மாம் பத்ரே மாபூத்தே மநஸோ பயம். (307½)

வாராய் மங்களகரையே! தாமரையிதழ்போன்ற கண்களே யுடைத்தானவளே! நீ யார்? தேவதாஸ்த்ரீயா? மனுஷ்யஸ்த்ரீயா? யக்ஷஸ்த்ரீயா? வித்யாதரியா? விபுலமான கடிபஸ்சாத்பாகமுடையவளே! நீ அப்ஸரஸ்ஸா? பின்னேயும் வேறே ஒருத்தியா? அழகிய முகமுடையவளே! லக்ஷ்மியா? பார்வதியா? ஸரஸ்வதியா? ரதிதேவியா என்ன? என்னுடைய ஆஶ்ரமஸ்தானத்தைக் குறித்து வரக்கடவாய். மன்மதபாணங்களால் பாதிக்கப்பட்ட என்னே அங்கீகரி. உனக்கு இனி பயம்வேண்டாம்.

ருத்ர:—இத்யேவமுக்தா ஹேலா ஸா முநிநா பரமாப்ஸரா:,
உவாச ப்ரஹஸந்தீவ வாக்யம் மதுரயா கிரா. (308½)

இந்தப்படி அந்த மஹர்ஷியால் சொல்லப்பட்ட ஹேலேயென்கிற அந்த அப்ஸரஸ்ஸானவள் மதுரமான வாக்கினுலே சிரிக்கிறவள்போல் ஒருவார்த்தை சொன்னுள்.

ஸாஹம் த்வாமேவ தர்மஜ்ஞ ஸத்ருஶம் பதிமாத்மந:,
ஆகதாzஸ்மி மஹாபாக யதி தே ரோசதே முநே. (309½)
ஏவமுக்தஸ்தயா ப்ரீத்யா முதா பரமயா யுத:,
விஜஹார சிரங்காலம் ஹேலயா முநிஸத்தம:. (310½)
தஸ்யைவம் ரமமாணஸ்ய தயாஸஹ முநேஸ்ஸுகம்,
பாண்டரே பர்வதேந்த்ரேது வ்யதீயுர்தஶ வத்ஸரா:. (311½)

வாரீர் தர்மஜ்ஞரான மஹாமுனியே! உம்மை எனக்குத் தகுதியான பர்த்தாவாக நினைத்து நான் வந்தவளாவேன். உமக்கு ருசித்தால் பரிக்ரஹிக்கலாமென்று அந்த ரிஷியைக் குறித்துச்சொன்னுள். இப்படி சொல்லப்பட்ட அந்த ரிஷியானவர் அதிப்ரேமயுக்தராய் அந்த ஹேலேயோடுகூடி பஹுகாலம் ரமித்தார். இப்படி அவளுடன்கூடிப் பாண்டரபர்வதத்தில் ரமியாநிற்கையில் ஸம்வத்ஸரங்கள் பத்து அதிக்ரமித்ததுகள்.

ததஸ்ஸாzஸூத தநயம் பாலார்க்க ஸமரோசிஷம்,
ஸர்வலக்ஷண ஸம்பந்நம் அபிரூபம் மஹாத்யுதிம். (312½)

பின்பு அந்த ஹேலேயானவள் பாலஸூர்யனேப்போன்ற காந்தியையுடையனுயும் ஸகலலக்ஷணஸம்பன்னனுயும் அதிஸுந்தரனுயும் விஶேஷகாந்தியையுடையவனுயுமிருக்கிற ஒருகுமாரனேப் பெற்றுள்.

ததஸ்தம் பாலகம் ஜாதம் விஸ்ருஜ்ய கிரிகந்தரே,
ஹேலா ஶஶபதேநைவ ரேமே நித்யம் ஶுசிஸ்மிதா. (313½)

பின்பு அந்த ஹேலையானவள் இப்படி பிறந்த குமாரனைப் பர்வதகுஹையில்விட்டு, திரும்பியும் அந்த ரிஷியுடனேகூட ரமித்தாள்.

ஸ ஶிஶு: கந்தரே க்ஷிப்த: க்ஷுதார்த்த: ப்ரருரோதஹ,
உத்தாநஶாயீ விக்ஷிப்ய பாஹூ பாதளச ஸஸ்வநம்,
ததஸ்தத்வதநே தைவாந் மதுதாரா பபாதஹ. (315)

இப்படி பர்வத குஹையில் விடப்பட்ட ஊர்த்வமுகனும் பசியினாலே பீடிதனுமிருக்கிற அந்த ஶிஶுவானவன் கைகளையும் கால்களையும் உதறிக்கொண்டு த்வனியுக்தமாக ரோதனஞ் செய்தான். இப்படியிருந்தவளவில் அந்த ஶிஶுவினுடைய வதனத்தில் தைவவஶத்தாலே மதுதாரையானது விழுந்தது.

உதயாத்ரேஸ் ஸமுத்திஷ்ட்டன் ஆதித்ய இவ பாலக:,
வவ்ருதேZநுக்ஷணம் ஸோZத மதுநைவச நாந்யத:. (316)

வாரீர் நாரதரே! பின்பு அந்த பாலகனானவன் உதயபர்வதத்தினின்று முண்டாகிற பாலஸூர்யன்போல் ப்ரதிதினமும் அந்தமதுவைத்தானே பானம் பண்ணிக்கொண்டு வ்ருத்தி அடைந்தான்.

ஏவந்து வர்த்தமாநந்தம் ருஷயோZந்யே மஹாமுநே,
அவர்த்தயந் ஸ்வாஶ்ரமேஷு ஜ்ஞாத்வா ஶஶபதாத்மஜம். ()

இப்படி வ்ருத்தி அடைகிற அந்த ஶிஶுவை ஶஶபதகுமாரனென்று தெரிந்துகொண்டிருக்கிற ரிஷிகள் அந்த ஶிஶுவை எடுத்துத் தங்களுடைய ஆஶ்ரமத்தில் வைத்துப் போஷித்தார்கள்.

பலம்வா மதுரம் மூலம் நீவாராத்யந்நமேவச,
அதீதஶைஶவோZப்யேஷ நாஶ்நாதி ஸுமஹாத்யுதி:,
ததஸ்தே தஸ்ய நாமாத மதுமாநிதி சக்ரிரே. (318½)

பின்பு அந்த குமாரனானவன் பால்யத்தை அதிக்ரமித்தவனாலும் மதுரமான பழங்களையாவது கிழங்குகளையாவது நீவாராதி அன்னங்களையாவது பக்ஷியாது தேனையே யுண்பதனால் இவனுக்கு மதுமானென்று நாமகரணம் செய்யப்பட்டது.

உபநீதஶ்ச விதிநா முநிபிஸ்ஸம்ஶிதவ்ரதை:,
வேதாம்ஶ்சாங்யாநி ஶாஸ்த்ராணி ஜக்ராஹ ஸுமஹாமுநி:. ()

பின்பு அந்த மதுமானுனவர் வ்ரதஸீலர்களான மஹர்ஷி களால் யதாசாஸ்த்ரமாக உபநயனமும் பண்ணப்பட்டு ஸகல வேதங்களேயும் ஶாஸ்த்ரங்களேயும் அப்யஸித்தார்.

ஏதஸ்மிந்நந்தரே கஶ்சித் கார்க்யோநாம மஹாமுநி:,
தந்தேஶ முபசக்ராம யத்ராயம் மதுமாந் முநே. (320½)

வாரீர் நாரதரே! இப்படிப்பட்ட காலத்தில் கார்க்யரென்கிற மஹர்ஷியானவர் மதுமான் எவ்விடத்தில் இருக்கிருரோ அந்தவனத்தை ப்ரவேஶித்தார்.

தந்த்ருஷ்ட்வா கார்க்யமாயாந்தம் மதுமாந் மதுரஸ்வர:,
அபிவாத்யாப்ரவீத்தீமாந் ஜ்வலந்தமிவ பாவகம். (321½)

ஶ்ராவ்யமான த்வனியை யுடைத்தான மதுமானுனவர் ஜ்வலிக்கிற அக்னியைப்போல வருகிற கார்க்ய மஹர்ஷியை தண்டன் ஸமர்ப்பித்து அபிவாதனேபண்ணி ஒருவார்த்தை சொன்னுர்.

மதுமாந்—கஸ்த்வம் முநே மஹாபாக கஸ்மாத்தேஶாதிஹாகத:,
குத்ரவா கம்யதே ப்ரஹ்மந் ஸர்வமாக்யாஹி தத்த்வத:.(322½)

வாரீர் மஹரிஷியே! நீர் ஆர்? எந்த தேஶத்திலிருந்து வருகிறீர்? எவ்விடத்துக்குப் போகிறீர்? இந்த ஸகலத்தையும் யதார்த்தமாகச் சொல்லும்.

ருத்ர:—ஏவமுக்தோ மதுமதா கார்க்யோ பார்க்கவஸந்நிப:,
உவாச மதுரம் வாக்யம் அதிஶ்லக்ஷ்ணபதாக்ஷரம். (323½)

பார்க்கவரிஷியோடே ஸமானரான கார்க்ய மஹாமுனியானவர் மதுமானுலே இப்படி சொல்லப்பட்டவராய் பஹுமாம்ருது பதாக்ஷரத்தை உடைத்தாயிருக்கும்படி ஒருவார்த்தையைச் சொன்னுர்.

கார்க்யோऽஹமநகோநாம யஸ்யமே ஸகுருஶ் ஶுசி:,
அத்யாஹமாஶ்ரமபதாத் வால்மீகேஸ்து மஹாத்மந:. (324½)
கமிஷ்யாம்யாஶ்ரமபதம் கும்பயோநேர் மஹாத்மந:,
வால்மீகிநா மஹாபாக ப்ரேஷிதோऽகஸ்த்ய ஸந்நிதிம். (325½)

நான் கார்க்யரென்று பெயரையுடையவன். அனக மஹாமுனி என்னுடைய குரு. நான் இப்போது வால்மீகியினுடைய ஆஶ்ரமத்தில்நின்றும் அவராலே அகஸ்த்யஸன்னிதியைக் குறித்து அனுப்பப்பட்டு அகஸ்த்யமஹர்ஷியினுடைய ஆஶ்ரமத்துக்குப் போகிறேன்.

மதுமாந்:—

குதஶ்சித் காரணாத் ஸௌம்ய மஹ்யந் தத் கத்யதாம் த்வயா,
இத்யுக்த: புநரேவாத கார்க்யோ வாசம் ஸமாததே. (326½)

வாரீர் கார்க்யரே! என்ன காரணத்தாலே போகிறீர்? அத்தை என்னுடன் சொல்லக்கடவீர். இப்படி மதுமானுலே கேட்கப்பட்ட கார்க்யமஹாமுனியானவர் திரும்பியும் ஒரு வார்த்தையைச் சொன்னுர்.

கார்க்ய:—

ஶ்ரூயதாம் கதயிஷ்யாமி யத்தத் ப்ருச்சஸி காரணம்.

வாரீர் மதுமானே! போகிற காரணத்தைச் சொல்லுகிறேன்: கேளும்.

ராமோநாம மஹாபாஹுர் ஜஜ்ஞே விஷ்ணுஸ்ஸநாதந:,
இக்ஷ்வாகோர்வை தஶரதாத் க்ருத்வாத்மாநம் சதுர்விதம். ()
ஸசிரம் பாலயித்வேமாம் மேதிநீம் தர்மதோ குணை:,
இதாநீம் புநரேவஸ்வம் ஸ்தாநம் ப்ராப்தோ மஹாயஶா:.(329)
ஏதத்வக்தும் மஹர்ஷேஸ்து கும்பயோநேர்மஹாத்மந:,
கச்சாம்யஹம் மஹாபாக தத்ஸகாஶம் மஹாத்யுதே:. (330)

நித்தியரான விஷ்ணுவானவர் தம்மை நாலுவிதமாகச் செய்து ராமரென்று ப்ரஸித்தராய் இக்ஷ்வாகுவம்சத்திலுண்டான தஶரதமஹாராஜனிடத்தில் நின்றும் அவதரித்தார். அந்த சக்ரவர்த்தித்திருமகனுன ராமரானவர் பஹுகாலம் இந்த பூமியைப் பரிபாலனஞ்செய்து திரும்பியும் ஸ்வஸ்தானத்தை ப்ரவேஶித்தார். இந்த வ்ருத்தாந்தத்தை அகஸ்தியருக்குச் சொல்லும் பொருட்டு நான் அவர் ஸந்நிதியைக் குறித்துப் போகிறேன்.

ருத்ர:—

ஏதச்ச்ருத்வா ஸமதுமாந் புநரேவாப்ரவீதிதம்,
கிம் விஷ்ணுரேவ பகவாந் ஜாத இக்ஷ்வாகுஸந்ததௌ,
தேஹி தந்யா மஹாத்மாநோ யேபஶ்யந்தி ஜகத்குரும். (331½)

இந்த வார்த்தையைக் கேட்டு மதுமான் திரும்பியும் சொன்னுர். இக்ஷ்வாகுகுலத்தில் பகவானுன விஷ்ணுவானவர் அவதரித்தாரன்றே! எவர்கள் லோககுருவான ஸ்வாமியை தண்டன் ஸமர்ப்பிக்கிறுர்களோ, அவர்கள் மஹானுபாவர்களன்றே.

விஷ்ணும் ஸநாதநம் நித்யம் வாஸுதேவம் ஜகத்பதிம்,
ஜாதம் மாநுஷரூபேண தந்யா: பஶ்யந்தி சக்ரிணம். (332½)

8A
A-112

அநாதிநிதநம் விஷ்ணும் ஸர்வலோக மஹேஶ்வரம்,
பஶ்யந்தி யே மஹாத்மாநம் ஸுக்ருதந் தைர் மஹத்தப:. ()

விஷ்ணுவாயும் ஸநாதனராயும் நித்யராயும் வாஸுதேவராயும் ஜகந்நாயகராயும் மனுஷ்யரூபமாக அவதரித்த ஶ்ரிய:பதியை தன்யாளான பேர்கள் ஸேவிக்கிறார்கள். ஆத்யந்தரஹிதராயும் விஷ்ணுவாயும் ஸர்வலோக மஹேஶ்வரராயுமுள்ள பரமாத்மாவை எவர்கள் ஸேவிக்கிறார்களோ, அவர்களாலே விஸ்தாரமான தபஸ்ஸானது செய்யப்பட்டது.

யதீஹ லோகே பகவாந் வாஸுதேவஸ் ஸநாதந:,
ஜாயதே நரரூபேண லோகாநாம் ஹிதகாம்யயா. (334½)

தந்த்ருஷ்ட்வாச ஸமப்யர்ச்ய யதாவத் பரயாமுதா,
கேநவா லப்யதே மோக்ஷோ நரேண மநீஷிணா. (335½)

இந்த லோகத்தில் ஶாஶ்வதராயும் வாஸுதேவராயுமிருக்கிற ஶ்ரிய:பதியானவர் ஜந்துக்களுடைய ஸௌக்யத்தையும் பொருட்டு மனுஷ்யஸ்வரூபராய் உண்டாகிறார். அப்படிப்பட்ட ஸ்வாமியை யதாஶாஸ்த்ரமாக ஸந்தோஷத்துடன்கூட ஸேவித்தும் பூஜித்தும் எவராலேதான் மோக்ஷம் அடையப்படாது?

ருத்ர:—

ஏவம் ப்ருவாணம் தம் ஸோऽத மதுமந்தம் மஹாத்யுதிம்,
ஏவமேவேதி சோக்த்வாஸ ப்ரயயௌ ஶுசிஸம்பவ:. (336½)

பின்பு கார்க்யமஹாரிஷியானவர் இப்படி சொல்லாநிற்கிற பஹுகாந்திவிசிஷ்டரான மதுமானைக்குறித்து இந்தப்ரகாரமேயென்று சொல்லி நடந்தார்.

அத கார்க்யே கதே தஸ்மிந் மதுமாந் வ்யாகுலோ த்விஜ:,
கதம் த்ரக்ஷ்யாம்யஹம் விஷ்ணு மிதிசிந்தாபரோऽபவத். ()
லோகாநாமீஶ்வரம் தேவம் விஷ்ணும் ஸர்வகதம் விபும்,
முக்திம்ப்ராப்ஸ்யாம்யஹம்த்ருஷ்ட்வா கதம்வா ஸர்வவத்ஸலம்.
ஏவம் சிந்தயதஸ்தஸ்ய ப்ராபாஸ்தம் தேஜஸாம்பதி:,
ரஜநீ சாபவத் ஸோऽபி சக்ரே ஸாயாஹ்நிகீ: க்ரியா:. (339½)

அத தஸ்ய ரஜந்யாந்து ப்ரஸுப்தஸ்ய மஹாத்மந:,
ப்ராதுராஸ ஜகந்நாதஸ் தஸ்ய கார்க்யஸ்ய ரூபத்ருத். (340½)

இப்படி சொல்லி கார்க்யமஹாரிஷியானவர்போனவளவில், மதுமானானவர் வ்யாகுலமான மனஸ்ஸை உடையவராய் விஷ்ணு

வை எப்படி ஸேவிப்பேனென்று மிகவும் சிந்தையை உடைத்தானவரானார்: லோகங்களுக்கெல்லாம் ஈச்வரனையும் தேவனையும் விஷ்ணுவாயும் ஸமஸ்தத்தையும் அடைந்தவராயும் விபுவாயும் ஸர்வவத்ஸலராயுமிருக்கிற ஸ்வாமியை எந்த உபாயத்தால் நான் ஸேவித்து மோக்ஷத்தை அடைவேனென்று சிந்தையைப்பண்ணிக்கொண்டிருக்கும் அந்த மதுமானானவர் அஸ்தமயமானவுடனே ஸாயம் ஸந்த்யாதி அனுஷ்டானங்களையும் செய்தார். பின்பு ராத்ரியில் நித்ரையை அடைந்த அந்த மதுமானுடைய ஸ்வப்னத்தில் ஶ்ரிய:பதியானவர் அந்த கார்க்ய மஹாரிஷியினுடைய ரூபமுடையவராய் ஸேவைஸாதித்தார்.

பகவாந்:—

மதுமந் போ மஹாபாக மமேதம் வசநம் ஶ்ருணு,
ப்ருந்தாவநம் ஸமாகச்ச தத்ர ஶ்ரேயோ பவிஷ்யதி. (341½)

வாராய் மஹானுபாவனான மதுமானே! என்னுடைய வார்த்தையைக் கேளும். ப்ருந்தாவனத்தையடையும். அவ்விடத்தில் ஸௌக்யம் உண்டாகப்போகிறது.

தத: ப்ரபுத்தோ மதுமான் சிந்தயாமாஸ கிந்விதி,
முஹூர்த்தம் சிந்தயித்வாது நிஶ்சயஜ்ஞஸ்ஸ நிஶ்சயம். (342½)
க்ருதவாந் விஷ்ணுரேவேஹ மாமாஹைவந் நஸம்ஶய:,
தத: ப்ரபாதே விமலே க்ருதபௌர்வாஹ்ணிகக்ரிய:,
ப்ரயயௌயத்ரதத்திவ்யம் ப்ருந்தாரண்யம்ஸ புத்திமாந். (344)

இப்படி ஸ்வப்னத்தில் ஸேவையானவுடனே விழித்துக்கொண்ட அந்த மதுமானனவர் இதென்னவென்று க்ஷணம் சிந்தித்து பின்பு பகவானான விஷ்ணுவே தன்னைக்குறித்து இப்படி ஸாதித்ததாக ஸம்ஶயமில்லாமல் நிர்ணயித்துக்கொண்டு நிர்மலமான ப்ராதக்காலத்தில் எழுந்திருந்து ஸந்த்யாவந்தனாதி ஸகலானுஷ்டானங்களையும் பண்ணிக்கொண்டு திவ்யமான ப்ருந்தாவனத்தைக்குறித்து நடந்தார்.

தத:கைஶ்சிதஹோராத்ரைர் கத்வா ப்ருந்தாவநம் ஶுபம்,
கைரவிண்யாம் விகாஹ்யாஶு தத்ர ஹ்ருஷ்டோऽவஸந் முநே.
சிந்தயந் ஸததம்ராமம் விஸ்மிதம் ப்ராத்ரு ஸம்யுதம்,
யதாஹ கர்க்யஸ்ஸ ததா தத்ரோவாஸ சிரம்வநே. (346)

அனந்தரம் சில அஹோராத்ரங்களாலே ஶுபமான ப்ருந்தாவனத்தை ப்ரவேஶித்துக் கைரவிணியென்கிற புஷ்கரிணியில்

ஸ்நானம்பண்ணி ஸந்துஷ்ட மனஸ்ஸை யுடையராய் கார்க்ய மஹாமுனியினல் சொல்லப்பட்ட ப்ரகாரம் ப்ராத்ருஸஹிதரான சக்ரவர்த்தித்திருமகனை மனஸ்ஸிலே த்யானம்பண்ணிக்கொண்டு அந்த ப்ருந்தாரண்யத்திலே பஹுகாலம் வாஸம்பண்ணினர்.

கேநசித்த்வத காலேந த்யாயதஸ்தஸ்யவை முநே:,
உதங்முகஸ்ய புரத: ப்ராதுராஸ ஜகத்குரு:. (347)
யோநஶக்யஸ்ஸுரஶ்ரேஷ்ட்டைஸ்ஸநகாத்யைஶ்ச யோகிபி:,
ஸ காருண்யாஜ்ஜகந்நாதஸ் தஸ்ய ப்ராதுரபூத் புர:. (348)
யாத்ருகாஸீத்புராராமோ ராஜ்ஞோ தஶரதஸ்யஹி,
ப்ராத்ருபிஸ்ஸஹிதஸ்தாத்ருக் ஸஸீத: ப்ரத்யத்ருஶ்யத. (349)

இப்படி உத்தராபிமுகமாக த்யானம்பண்ணுகிற அந்த மதுமானுக்கு முன்னே பஹுகாலானந்தரம் ஜகத்குருவான ஸ்வாமி உண்டானர். ஜகந்நாயகரான எந்த ஸ்வாமியானவர் தேவதைகளாலும் ஸனகாதிமஹர்ஷிகளாலும் அடையக்கடவரன்றே அப்படிப்பட்ட ஸ்வாமி ப்ரத்யக்ஷரானர். பின்னையும் முன்னே தஶரத மஹாராஜனுக்குப்போலே இந்த மஹர்ஷிக்கு ப்ராத்ருஸஹிதராயும் ஸீதாஸஹிதராயும் ஸேவை ஸாதித்தார்.

ஸ சோத்தாய ஜகந்நாதம் த்ருஷ்ட்வா ஹ்ருஷ்டோ மஹாமதி:,
மதுமாந் ப்ரணநாமாஶு ப்ரீத்யா நம்ரஶிரோதர:,
ஸப்ரணம்யாதிஹ்ருஷ்டாந்த: க்ருத்வாபூய: ப்ரதக்ஷிணம். ()

இப்படி மதுமானனவர் சக்ரவர்த்தித் திருமகனன ஜகத்ஸ்வாமியை ஸேவித்து எழுந்திருந்து வணங்கின கழுத்தை உடையவராய் பக்தியுடனே ஸேவித்தார். அந்த மஹர்ஷியானவர் அனேகவாரம் ப்ரதக்ஷிண பூர்வமாக தண்டன் ஸமர்ப்பித்து அதிஸந்தோஷமுடைய அந்தக்கரணமுடையவரா யிருந்தார்.

ததர்ஶ தம் மஹாபாஹும் பத்மபத்ரநிபேக்ஷணம். (351)
பூர்ணசந்த்ர ப்ரதீகாஶவதநம் மகுடோஜ்ஜ்வலம்,
கம்புக்ரீவம் மஹோரஸ்கம் வ்ருத்தாயத புஜத்வயம். (352)
வஸாநம் பீதவஸநம் ஸர்வாபரண பூஷிதம்,
காலாம்புதமிவாகாஶே வித்யுத் ஸம்வலிதாந்தரம். (353)

அனந்தரம் அந்த மதுமானனவர், மஹாபாஹுவாயும் தாமரஸபுஷ்பம்போன்ற கண்களையுடையராயும் பூர்ணசந்த்ரன்

போன்ற முகத்தை உடையவராயும் கிரீடத்தால் ப்ரகாஶிதராயும் ஶங்கம் போன்ற கழுத்தை உடையவராயும் வ்ருத்தமாயும் நீண்டுமிருக்கிற புஜங்களை உடையவராயும் பீதாம்பரதாரராயும் ஸகலாபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறராகையால் ஆகாஶத்தில் மின்னலுடன் கூடிக்கொண்டிருக்கிற மேகம்போலே ப்ரகாஶிக்கிறவராயுமுள்ள சக்ரவர்த்தித் திருமகனை ஸேவித்தார்.

ததஸ்தத்பார்ஶ்வதோ ப்ராத்ரூந் தபநீயஸுகுண்டலாந்,
தாஞ்ச ஸீதாம் மஹாபாகாம் ஸர்வலக்ஷணஸம்யுதாம். ()

த்ருஷ்ட்வா தாந் மதுமாந் ஸோऽத ஸம்ப்ரஹ்ருஷ்டதநூருஹ:,
பஶ்யமாநஶ் சிரங்காலம் நத்ருப்திமுபஜக்மிவாந். (355)

அப்படிப்பட்ட சக்ரவர்த்தித் திருமகனுடைய பார்ஶ்வத்தில் ஸ்வர்ணமயங்களான குண்டலங்களையுடைத்தான இளையபெருமாள் முதலான தம்பிமார்களையும் பூஜ்யையாய் ஸகல லக்ஷணங்களுடன்கூடியிருக்கிற ஸீதாபிராட்டியையும் பார்த்து மயிர்க்கூச்சையுடையவராய் பஹுகாலம் ஸேவித்தும் த்ருப்தியை அடையவில்லை.

தம் பஶ்யமாநம் நிப்ருதம் மதுமந்தமதாப்ரவீத்,
ராமோ ராஜீவதாம்ராக்ஷோ வசநம் மதுராக்ஷரம். (356)

பின்பு செந்தாமரைபோன்ற கண்களையுடைய ஸ்வாமி, இப்படி நிஶ்சலமாகப் பாராநிற்கிற மதுமானைக்குறித்து மதுரமாக ஒருஶ்ரீஸூக்தியை அருளிச்செய்தார்.

ஶ்ரீபகவாந்:—

யத்தேऽபிலஷிதம் ஸௌம்ய மமரூபமிதந்தவ,
தர்ஶிதம் வரயஸ்வேஹ கிமந்யத்தவ வாஞ்ச்சிதம். (357)

வாராய் ஸாதுவே! உன்னால் அபிலஷிக்கப்பட்ட நம்முடைய ஸ்வரூபமானது காண்பிக்கப்பட்டது. இத்தைக்காட்டிலும் வேறான இச்சை உண்டானால் கோரிக்கொள்ளும்.

இத்யுக்தஸ்தமுவாசேதம் மதுமாந் ஸம்யுதாஞ்சலி:,
வஸ்துமத்ரார்ஹஸி சிரம் த்வாமாராதயிதும் மம. (358)

இப்படி ஸ்வாமியினால் சொல்லப்பட்ட மதுமானவர் அஞ்சலிபந்தமுடையவராய், வாரீர் ஸ்வாமின்! நான் ஆராதிப்பதற்காக இவ்விடத்தில் வாஸம்பண்ணக்கடவீரென்று சொன்னார்.

ஏவமஸ்த்விதி தஞ்சோக்த்வா தயயா ஸ ஜகத்குரு:,
தத்ரைவ வாஸமகரோத் லோகாநாம் ஹிதகாம்யயா. (359)

பின்பு ஸ்வாமியும் அப்படியேயென்று அங்கீகரித்து அவ்விடத்தில் லோகஹிதத்தையும்பொருட்டு தயையினுல் வாஸம் பண்ணினுர்.

சிரமாராதிதஸ்தேந தத்வா தஸ்ய பதம் ஸ்வகம்,
அத்யாபி த்ருஶ்யதே லோகை: ஸஹிர்தயயா முநே. (360)

பின்பு ஸ்வாமி பஹுகாலம் அவரால் ஆராதிக்கப்பட்டவராய் அந்த மதுமானுக்குப் பரமபதத்தையும் கொடுத்து அந்த ஸ்தலத்தில் இப்போதும் ஜனங்களால் ஸேவிக்கப்பட்டுக்கொண்டு எழுந்தருளியிருக்கிறுர்.

இதி ஶ்ரீப்ரஹ்மாண்டபுராணே மஹேஶ்வரநாரதஸம்வாதே ஶ்ரீப்ருந்தாரண்ய மாஹாத்ம்யே ஸப்தமோऽத்யாய:.

ஏழாவது அத்யாயம் முற்றிற்று.

ஶ்ரீமத்வரவரமுநயேநம:

---

## எட்டாவது அத்யாயம்

---

யோந்யஸ்தத்ர மஹாபாகோ முநிஸ்ஸுமதிராத்மவாந்,
தத்ரோவாஸ தப:குர்வந் ஸுசிரம் ஸுமஹாமதி:. (361)

மேலும், அந்த ப்ருந்தாவனத்தில் அதிக ஜ்ஞானமுடையவராயும் மஹானுபாவராயுமிருக்கிற ஸுமதியென்கிற ஒரு ரிஷியானவர் தபஸ்ஸைப்பண்ணுநின்றுகொண்டு வெகுகாலம் வாஸம் பண்ணினுர்.

ஏதஸ்மிந்நந்தரே தேவா: ஸுப்ருஶம் தைத்யபீடிதா:,
ஸமேத்ய மாதவம் ஸர்வே ப்ரணதா வாக்யமப்ருவந். (362)

இப்படிப்பட்ட ஸமயத்தில் தேவதைகளானவர்கள் அஸுரர்களால் பீடிக்கப்பட்டவராய் அனைவரும் ஸமூஹமாய்க்கூடிக்கொண்டு ஶ்ரிய:பதியை தண்டன் ஸமர்ப்பித்து ஒரு வார்த்தையைச் சொன்னுர்கள்.

தேவதேவ ஜகந்நாத ஜநார்தந ஜகத்குரோ,
ஶரணந்த்வாம் ப்ரபந்நாஸ் ஸ்மஸ் ஸர்வேதே வயமச்யுத. ()

காலநேமிமுகா தைத்யா: காலாந்தகயமோபமா:,
ஜாதா மாநுஷரூபேண பீடயந்தி ஜகத்ஸதா. (364)

தர்மஹாநிம் ப்ரகுர்வந்த: பீடயந்தோ மஹாமுநீந்,
அஸ்மாநபி ஸமுத்யேரகம் ஜேதுங்குர்வந்தி ஸர்வதா. (365)
த்வந்நாதாந் ப்ரணதாநஸ்மாந் பகவந் த்ராதுமர்ஹஸி,
அஶரண்ய ஶரண்யஸ்த்வம் ஸர்வேஷாம் ஶரணார்த்திநாம். ()

வாரீர் தேவதேவரே! ஜகத்துக்கு நாயகரே! ஜனார்த்தனரே! ஜகத்குருவே! அச்யுதரே! தேவரீரை ரக்ஷகரென்று நாங்கள் அனைவரும் வந்தடைந்தோம். ப்ரளயகாலத்தில் நாஶத்தைப் பண்ணுகிற்கிற யமனோடே ஸமானர்களாய்க் காலநேமி முதலான அஸுராளானவர்கள் மனுஷ்யரூபம் உடையவர்களாய் எப்போதும் ஜகத்தைப் பீடிக்கிறார்கள்: தர்மஹானியைப் பண்ணுநின்றுகொண்டும் மஹாமுநிகளைப்பீடியாநின்றுகொண்டும் எங்களையும் ஜயிக்க எப்பொழுதும் ப்ரயத்னம் பண்ணுநிற்கிறார்கள். பகவானே! தேவரீரையே நாதராகவுடைய உம்மையே வணங்கும் எங்களை ரக்ஷிக்கக்கடவீர். ரக்ஷகாந்தர ரஹிதாளாய் ஶரணாகதாளான ஸர்வ ஜனங்களுக்கும் ரக்ஷகரன்றோ நீர்?

ருத்ர:—

இத்யுக்தோ தேவதேவேஶோ தேவதாநாங்கணைஸ்ததா,
உவாச மதுரம் வாக்யம் ஸாந்த்வயந் ஸுரஸத்தமாந். (367)

தேவதைகளுடைய ஸமுதாயத்தால் இப்படி சொல்லப்பட்ட ஸ்வாமியானவர், அந்த தேவதைகளைப்பார்த்துத் தேற்றாநின்றுகொண்டு மதுரமாய் ஒரு நல்வார்த்தை சொன்னார்.

ஸ்ரீபகவாந்—

அபயம்வ: ப்ரதாஸ்யாமி பயம் த்யஜத தேவதா:,
தாநஹம் நாஶயாம்யாஶு யுஷ்மாகம் யேZபராதிந: ! (368)
நிர்ப்பயா கச்சத ஸ்வர்க்கம் ஶரணம் வோ பவாம்யஹம்,
அஹமேவாஶு ஸம்ப்ராப்ய மேதிநீம் நாஶயாமி தாந். (369)

வாரீர் தேவதைகளே! உங்கள் பொருட்டு அபயம் கொடுக்கிறேன். பயத்தை விடுங்கள். உங்களுக்கு அபராதிகளான அந்த ராக்ஷஸர்களைச் சீக்கிரத்தில் நஶிப்பிக்கப்போகிறேன். பயமில்லாமல் ஸ்வர்க்கத்தைக்குறித்துப் போங்கோள். நான் உங்களுக்கு ரக்ஷகனாகிறேன். நானே பூமியை அடைந்து அவர்களை நசிப்பிக்கப் போகிறேனென்று ஸ்வாமியானவர் ஸாதித்தார்.

ருத்ர:—

இத்யுக்தாஸ் தேந தே ஹ்ருஷ்டா: ப்ரணம்ய மதுஸூதநம்,
ஆயயுஸ்த்ரிதிவம் தூர்ணம் ஸர்வே தேவா யதாகதம். (370)

அந்த தேவதைகளானவர்கள் ஸ்வாமியினாலே இப்படி சொல்லப்பட்டு ஸந்தோஷமடைந்தவர்களாய் அந்த ஸ்வாமியை ஸேவித்து வந்த வழியே ஸ்வர்க்கத்தை ப்ரவேஶித்தார்கள்.

ஸச தேவோ ஜகந்நாத: பீதவாஸா ஜநார்த்தந:,
வஸுதேவமஹிஷ்யாந்து தேவக்யாம் ஸம்பபூவஹ. (371)

ஜகந்நாயகராயும் பீதாம்பரதாரியாயுமிருக்கிற அந்த ஸ்வாமியும் வஸுதேவபத்னியான தேவகியினிடத்தில் ஆவிர்ப்பவித்தார்.

நீதோZத வஸுதேவேந நந்தகோபவ்ரஜம் ஶுஞத்,
தத்ராவஸச்சிரம் காலம் பூதநாதீந் நிஹத்யஸ:. (372)

பின்பு வஸுதேவராலே நந்தகோபருடைய இடைச்சேரியை அடைவிக்கப்பட்ட அந்த ஸ்வாமியானவர் அவ்விடத்தில் பூதனாதிகளை ஸம்ஹரித்து பஹுகாலம் வாஸம் பண்ணினார்.

தத: கம்ஸமுகாந் ஸர்வாந் ஆஸுரப்ரக்ருதீந் ஹரந்,
தஸ்மிந் பாரதஸங்க்ராமே பூத்வா பார்த்தஸ்ய ஸாரதி:. (373)

பூமேர் பாராவதரணம் க்ருத்வா தர்மஸ்யச ஸ்திதிம்,
ஜகாம பூயஸ் ஸ்வபதம் ஸர்வலோககுருர்ஹரி:. (374)

பின்பு ஸர்வலோக குருவான ஸ்வாமியானவர் க்ரூரஸ்வபாவத்தை உடையவர்களான கம்ஸன் முதலானவர்களை ஸம்ஹரியாநின்றுகொண்டு, அந்த பாரதயுத்தத்தில் பார்த்தனுக்கு ஸாரதியாய் பூபாரத்தைப் போக்கடித்து தர்மஸம்ஸ்தாபனத்தைப் பண்ணித் திரும்பியும் ஸ்வஸ்தானத்தை ப்ரவேஶித்தார்.

தஸ்மிந் கதே திவம் தேவே வ்யாஸஶிஷ்யோ மஹாமதி:,
ஆத்ரேயோ நாம கஶ்சித்து வவந்தே தம் மஹாமுநிம். (375)

பாராஶர்யம் மஹாத்மாநம் க்ருஷ்ணத்வைபாயநம் முநிம்,
ப்ரணம்ய ப்ராஞ்ஜலிர் வாக்ய மிதமாஹ மஹாமதி:. (376)

அந்த ஸ்வாமியானவர் பரமபதத்துக்குப் போனவளவில், வ்யாஸருடைய ஶிஷ்யராயும் விவேகியாயும் ஆத்ரேயரென்கிற பேரை உடைத்தாயுமிருக்கிற ஒரானொரு மஹாரிஷியானவர் பராஶரகுமாரராயும் மஹாத்மாவுமாயிருக்கிற க்ருஷ்ணத்வைபாயனரை நமஸ்கரித்து அஞ்சலிபந்தத்துடன்கூடினவராய் இப்படி ஒரு வாக்யத்தைச்சொன்னார்.

ஆத்ரேய:—

பகவந் பகவாந் தேவோ வாஸுதேவோ ஜகத்பதி:,
த்ரிதிவம் தநுஜாராதிர் கதோ யோ நஸ்ஸதா கதி:. (377)

யஶ்சாஸ்ய ஜகத: கர்த்தா ஸம்ஹர்த்தா ப்ரபுரேவச,
ப்ரமாணஞ்ச ப்ரமேயஞ்ச நாமரூபாதிக்ருத் ததா. (378)
யோऽவ்யயஶ்சாப்ரமேயஶ்ச நித்யஸ் ஸர்வகதஶ் ஶுசி:,
நிர்மலோ நிர்விகாரஶ்ச புருஷஶ்சோத்தமஸ் ஸ்ம்ருத:. (379)
அஜய்ய: புண்டரீகாக்ஷ: பீதவாஸா ரமாபதி:,
ஶங்கசக்ரகதாபாணிர் யோ நாராயணநாமவாந். (380)
ஸ தேவோऽத்ய மஹாபாஹுர் தர்மஸம்ஸ்தாபகோ புவி,
வஸுதேவாத்மஜ: க்ருஷ்ணோ கதஸ்ஸ்வம் ஸ்தாந முத்தமம்.()

பூஜ்யரே! எவனுல் பகவானும் தேவனும் வஸுதேவ புத்ரனும் ஜகத்பதியாயும் அஸுரஶத்ருவாயும் இருக்கிறானே, எவனுல் இந்த ஜகத்துக்குக் கர்த்தாவும் பாலகனும் ஸம்ஹாரகனுமோ, எவனுல் ப்ரமாணப்ரமேயஸ்வரூபியோ, எவனுல் நாமரூப கர்த்தாவோ, எவனுல் நாஶரஹிதனே, அப்ரமேயனே, நித்யனே, ஸமஸ்தத்தையும் அடைந்தவனே, பரிஶுத்தனே, தோஷ ரஹிதனே, விகார ரஹிதனே, உத்தம புருஷனுக ஸ்மரிக்கப்பட்டானே, எவனுல் ஜயிக்கக்கூடாதவனே, தாமரஸ புஷ்பம் போன்ற கண்களை உடைத்தானவனே, எவனுல் பீதாம்பரதரனும் லக்ஷ்மீபதியாயும் ஶங்கசக்ரகதாபாணியாயும் நாராயணனென்கிற நாமமுடையவனும் மஹத்தான புஜங்களை உடைத்தானவனும் வஸுதேவபுத்ரனுமிருக்கிறானே, அந்த ஸ்ரீக்ருஷ்ணனுனவர் பூமியில் தர்மஸம்ஸ்தாபனத்தைப் பண்ணித் தம்முடைய ஸ்தானமான பரமபதத்தை ப்ரவேஶித்தார்.

கால: கலிஶ்சாப்யாஸந்நோ பவத்யநதிகம் ப்ரபோ,
குத்ர வர்த்தாமஹே ப்ரஹ்மந் வயம் வக்தும் த்வமர்ஹஸி. ()

வாரீர் ப்ரஹ்மஜ்ஞானியே! கலிகாலமானது ஸமீபஸ்தமாயிருக்கிறது. நாம் எவ்விடத்தில் வஸிப்போம்? இத்தைச் சொல்லக்கடவீர்,

இத்யுக்தோ ஹேதுமத்வாக்யம் வேதவ்யாஸோ மஹாமுநி:,
ப்ரத்யுவாச ஶுபம் வாக்யம் ஆத்ரேயம் முநிஸத்தமம். (383)

ஆத்ரேயராலே இப்படி காரணகர்ப்பமான வார்த்தையைச் சொல்லப்பட்ட வேதவ்யாஸரானவர் முனிஶ்ரேஷ்டரான ஆத்ரேயரைப் பார்த்து ப்ரதிவசனத்தைச் சொன்னர்.

வ்யாஸ:—
ஶ்ரூயதாம் தவ வக்ஷ்யாமி யத்ப்ரவீஷி மஹாமதே.

வாரீர் மஹாமதியே! யாதொன்றைக் கேட்கிறீரோ அத்தை உமக்குச் சொல்லுகிறேன், கேட்கக்கடவீர்.

ஸம்யகுக்தம் த்வயா ஸௌம்ய கால: க்ரூரோ பவிஷ்யதி. (384)
கதஶ்ச தேவதேவேஶோ வஸுதேவாத்மஜோ ஹரி:,
க்ருத்வா பாராவதரணம் பூமேஸ்த்ரிஜகதீஶ்வர:. (385)

உம்மாலே நன்றாகச் சொல்லப்பட்டது. கலிகாலமானது க்ரூரமாகப்போகிறது. தேவநாயகராயும் வஸுதேவபுத்ரராயுமிருக்கிற ஜகத்ஸ்வாமியானவர் பூபாரநிவ்ருத்தியைப் பண்ணிப் பரமபதத்தை அடைந்தார்.

கால: கலிஶ்ச துர்த்தர்ஷோ பவிஷ்யதி நஸம்ஶய:,
தர்மலோபோ பவேந்நித்யம் அதர்மஶ்ச மஹாந் பவேத். (386)

க்ரூரமான கலிகாலமானது உண்டாகப்போகிறது, எப்போதும் தர்மலோபமும் அதர்மவ்ருத்தியும் உண்டாகும். ஸம்ஶயம் இல்லை.

அஸ்மிந்நேவம் கதே கார்யே யத்ப்ரவீமி ஹிதந்தவ,
ததேவாசர ஸௌம்ய த்வம் அசிராதாத்மநோ ஹிதம். (387)

வாரீர் ஸௌம்யரே! இப்படிப்பட்ட ரீதியை உடைத்தான கார்ய விஷயத்தில் நான் உமக்கு ஹிதமாக எதைச் சொல்லுகிறேனோ, நீர் அதையே ஶீக்ரமாக அனுஷ்டியும்.

தக்ஷிணஸ்யாம் மஹாபாக திஶி ப்ருந்தாவநாபிதம்,
மநோஜ்ஞமாஶ்ரமபதம் முநீநாம் பாவிதாத்மநாம்,
அஸ்தி கிஞ்சித்வநம் திவ்யம் நந்தநோபமமத்புதம். (388½)

வாரீர் மஹானுபாவரே! தக்ஷிண திக்கிலே ப்ருந்தாவனமென்று பெயரை உடைத்தாயும் மனோஹரமாயும் தத்த்வஜ்ஞானமுடைத்தான மஹர்ஷிகளுக்கு ஆஶ்ரமஸ்தானமாயும் நந்தனவனத்தோடே ஸமானமாயும் ஆஶ்சர்யகரமாயுமிருக்கிற ஓரானொரு வனமானது இருக்கிறது.

ப்ருக்வாத்யா முநயோ யத்ர தப: குர்யுரநுத்தமம். (389)
தத்ர கைரவிணீநாம ஸரஸீ விமலோதகா,
புல்லபத்மோத்பலவதீ காசிதஸ்தி மநோஹரா. (390)

யாதொருவனத்திலே ப்ருகுமுதலான மஹாரிஷிகளானவர்கள் உத்தமமான தபஸ்ஸைப் பண்ணுகிறார்களோ, அந்த வனத்தில் நிர்மலமான உதகத்தை உடைத்தாயும் விகஸித்த தாமரஸ

புஷ்பங்களேயும் கருநெய்தல்களேயும் உடைத்தாய் கைரவிணி யென்று ப்ரஸித்தமான ஓரானெரு ஸரஸ்ஸானது இருக்கிறது.

ததுத்தரம் மஹாபாக முக்திக்ஷேத்ரம் ந்ருணும் புவி,
ப்ருந்தாவநமிதி க்யாதம் துலஸீகாநநாயுதம். (391)
யத்ர ஸந்நிஹிதோ தேவ: புராணஶ் ஶார்ங்கத்ருக் ஸ்வயம்,
ஸந்நிதிம் குருதே ஸௌம்ய ஸதா லோகஹிதாய வை,
தத்ராஸ்தே ஸுமதிர்நாம கஶ்சிந்முநிவரோத்தம:. (392½)

அந்த கைரவிணியென்கிற ஸரஸ்ஸுக்கு வடக்காயும் துளஸீகானனங்களேயுடைத்தாயும் ப்ருந்தாவனமென்று ப்ர ஸித்தமாயும் மனுஷ்யர்களுக்கு மோக்ஷப்ரதமாயுமுள்ள க்ஷேத்ரமானது இருக்கிறது. அனுதியாயும் தேவனுயுமிருக்கிற ஶ்ரிய:பதியானவர் ஜனங்களுடைய க்ஷேமத்தையும்பொருட்டு ஸமீபவர்த்தியாக எந்த வனத்திலே எப்போதும் வாஸம் பண்ணு கிருரோ, அந்த வனத்திலே ஸுமதியென்று ப்ரஸித்தரான முனி ஶ்ரேஷ்டரானவர் வஸிக்கிருர்.

ந தஸ்யாஸ்தி ஸம: கஶ்சித் தபஸா மேதயாபிவா,
தஸ்யாஶ்ரமஸமீபே த்வம் தேநைவ ஸஹ நித்யஶ:,
வஸைகாக்ரமதிர்விஷ்ணௌ தத்ர ஶ்ரேயோ பவிஷ்யதி. (394)

தபஸ்ஸினுலேயாவது புத்தியினுலேயாவது அவருக்கு எவ ரும் ஸமானரல்லர். அந்த வனத்தில் அவருடைய ஆஶ்ரமஸமீ பத்தில் நீர் விஷ்ணுவிஷயத்தில் நிஶ்சலபக்தியையுடைத்தான வராய் எப்போதும் அவருடன்கூட நித்யமாக வஸியும். அவ் விடத்தில் உமக்கு ஶ்ரேயஸ்ஸு உண்டாகும்.

ருத்ர:—

இத்யுக்த்வா ஸமுநிஸ் தூர்ணம் க்ருத்வா ப்ரதிக்ருதிம் ஹரே:,
ஆவாஹ்ய விதிவத் தஸ்யாம் வாஸுதேவம் ஸநாதநம்,
தமப்யர்ச்ய யதாந்யாயம் பார்த்தஸாரதிமவ்யயம். (395½)
வஹந்தம் தக்ஷிணே ஹஸ்தே பாஞ்சஜந்யமநுத்தமம்,
வாமேச பாணிகமலே தாநமுத்ராவிபூஷிதம். (396½)
ஆத்ரேயஸ்ய ததௌ ஹஸ்தே பாராஶர்யோ மஹாமுநி:,
தத: புநருவாசேதம் க்ருஷ்ணத்வைபாயநோ முநி:. (397½)

வ்யாஸமஹாமுனியானவர் இப்படி சொல்லி ஸ்வாமியினு டைய ப்ரதிக்ருதியைச் சீக்ரமாக ஏறியருளப்பண்ணி ஶாஶ்வத

ரான வாஸுதேவரை அந்த பிம்பத்திலே ஶாஸ்த்ரப்ரகாரம் ஆவாஹனம் பண்ணி உத்தமமான ஶங்கத்தை வலத்திருக்கையிலே வஹித்துக்கொண்டும் தாமரஸபுஷ்பம்போன்ற இடத்திருக்கையிலே தானமுத்ரையை உடைத்தாயுமிருக்கிற அந்த பார்த்தஸாரதியை ஶாஸ்த்ரப்ரகாரம் ஆராதித்து ஆத்ரேயருடைய ஹஸ்தத்திலே கொடுத்துத் திரும்பியும் ஒரு வார்த்தை சொன்னர்.

ஆத்ரேய த்வம் மஹாபாக கத்வா ப்ருந்தாவநம் ஶுபம்,
ஸுமதேராஶ்ரமம் ஸௌம்ய வஸ தேந மஹாத்மநா. (398½)
தத்ர ரம்யே வநோத்தேஶே ஸம்ஸ்தாப்ய ப்ரதிமாமிமாம்,
வைகாநஸேந விதிநா ஸமர்ச்சய ஜகத்குரும். (399½)

மஹானுபாவரான ஆத்ரேயரே! நீர் மங்களகரமான ப்ருந்தாவனத்தை அடைந்து ஸுமதியென்கிற மஹாரிஷியோடேகூட வாஸம் பண்ணிக்கொண்டு அந்த ரம்யமான வனப்ரதேசத்தில் இந்த விக்ரஹத்தை ப்ரதிஷ்டை பண்ணி வைகானஸவிதியினல் ஸ்வாமியை ஆராதியும்.

ஏவமுக்த: ப்ரணம்யைநம் ஆத்ரேயோ ஹ்ருஷ்டமாநஸ:,
ஹரிம் மூர்த்நா ததாநஸ்து தூர்ணம் ப்ருந்தாவநம் யயௌ. (400½)

இப்படி சொல்லப்பட்டவரும் ஸந்தோஷமுடைய மனஸ்ஸை உடையவருமான ஆத்ரேயமஹர்ஷியானவர் வ்யாஸரை தண்டன் ஸமர்ப்பித்துப் பார்த்தஸாரதியை ஶிரஸ்ஸால் தரியாநின்றுகொண்டு ப்ருந்தாவனத்தை அடைந்தார்.

ஸது கத்வாஶ்ரமம் தூர்ணம் ஸுமதேஸ்து மஹாத்மந:,
தத்ரத்வாலோகயாமாஸ தமேவ முநிஸத்தமம். (401½)

அந்த ஆத்ரேயரானவர் ஸுமதி மஹாரிஷியினுடைய ஆஶ்ரமத்தைச் சீக்ரமாக அடைந்து அவ்விடத்தில் முநிஶ்ரேஷ்டரான அந்த ஸுமதியைப் பார்த்தார்.

தேந த்ருஷ்டஸ்ஸுமதிநா யதாவத்பூஜிதஸ்ததா,
ஸர்வமேதத் யதாதத்த்வம் கதயாமாஸ தத்த்வத:. (402½)

ஆத்ரேயரானவர் ஸுமதியினல் பார்க்கப்பட்டு ஶாஸ்த்ரோக்தமாகப் பூஜிக்கப்பட்டவராய் ஸகலமான இந்த வ்ருத்தாந்தத்தை யதார்த்தமாகச் சொன்னர்.

ஶ்ருத்வா தத் வசநந்தஸ்ய ஸுமதிர் ஹ்ருஷ்டமாநஸ:,
யதாவத் பூஜயாஞ்சக்ரே தம்ருஷிம் பாவகப்ரபம். (403½)

இப்படி ஸுமதியானவர் ஆத்ரேயருடைய வார்த்தையைக் கேட்டு ஸந்துஷ்டசித்தராய் அக்னிபோலே தேஜஸ்வியான அந்த ஆத்ரேயரை யதாஶாஸ்த்ரமாகப் பூஜித்தார்.

ஸோऽபி தத்ர ப்ரதிஷ்டாப்ய ப்ரதிமாந்தாம் முரத்விஷ:,
வைகாநஸேந விதிநா சிரகாலமபூஜயத். (404½)

அந்த ஆத்ரேயரும் அவ்விடத்தில் பார்த்தஸாரதிவிக்ரஹத்தை ப்ரதிஷ்டை செய்து வைகானஸவிதியினால் பஹு காலம் ஆராதித்தார்.

ஸ ஸமாராத்ய ஸுசிரம் வாஸுதேவம் ஜகத்குரும்,
ஆத்ரேய: பரமந்தாம ஜகாம மதுவித்விஷ:. (405½)

ஆத்ரேயரானவர் இப்படி பார்த்தஸாரதியை பஹுகாலம் ஆராதித்துப் பரமபதத்தை அடைந்தார்.

ஸ இதாநீமபி முநே த்ருஶ்யதே தத்ர மாநவை:,
ருக்மிண்யா சாநிருத்தேந ப்ரத்யும்நேந ச ஸேவித:. (406½)
ஹலாயுதேந ஸஹிதஸ் ததா ஸாத்யகிநா ஸஹ,
பார்த்தஸாரதிரித்யேவ விஶ்ருதோ ஜகதீபதி:. (407½)

ஆத்ரேய மஹாமுனியினால் ப்ரதிஷ்டை பண்ணப்பட்டும் ருக்மிணி அனிருத்தர் ப்ரத்யும்னர் இவர்களாலே ஸேவிக்கப்பட்டும் பலராம ஸாத்யகிகளோடே கூடியுமிருக்கிற ஸ்வாமியானவர் பார்த்தஸாரதியென்று ப்ரஸித்தராய் இப்போதும் ஜனங்களால் ஸேவிக்கப்படாநிற்கிறார்.

இதஞ்சைவ புராவ்ருத்தம் ஶ்ரோது மர்ஹஸி நாரத,
யந்மயா கத்யதே தஸ்ய வாஸுதேவஸ்ய ஶார்ங்கிண:. (408½)

வாரீர் நாரதரே! என்னால் சொல்லப்படுகிற பார்த்தஸாரதியினுடைய பூர்வ வ்ருத்தாந்தத்தைக் கேட்கக்கடவீர்.

பூர்வமாஸீந் மஹரப்ராஜ்ஞோ ராஜா துண்டீரமண்டலே,
ஸுமதிர் நாம நாம்நாது ஸர்வலக்ஷண ஸம்யுத:. (409½)
ஸர்வ ஶாஸ்த்ரார்த்த தத்த்வஜ்ஞ: ப்ரஜாபாலந தத்பர:,
கல்யாண வசநோ தீர: கந்தர்ப்பஇவ மூர்த்திமாந்.
ஸ ரரக்ஷ க்ஷிதிம் ராஜா யுக்ததண்டோ யதாவிதி. (411)

பூர்வகாலத்தில் துண்டீரமண்டலத்தில் மிகவும் ஜ்ஞானியாயும் ஸகல லக்ஷணங்களோடே கூடினவனாயும் ஸகல ஶாஸ்த்ரார்த்தத்தையும் அறிந்தவனாயும் ப்ரஜாபரிபாலனத்தில் ஆஸக்தனாயும்

மங்களமான வார்த்தையையுடையவனும் தைர்யசாலியாயும் மன்மதனைப்போன்ற ரூபத்தை உடைத்தானவனும் ஸுமதி யென்று பேரை உடைத்தானவனுமுள்ள ராஜாவானவன் ஶாஸ்த்ரோக்த தண்டனை பண்ணிக்கொண்டு ஶாஸ்த்ரானுஸார மாக பூமியைப் பரிபாலித்தான்.

ஸமுவாஹ த்ருடாம் பக்திம் ஹரேள முரவிமர்த்தநே,
ஸ ஸமாராதயத் விஷ்ணும் ஸுமதிர் ந்ருபஸத்தம:. (412)

ராஜ ஶ்ரேஷ்டனான அந்த ஸுமதியானவன் முராஸுர ஸம்ஹாரகனான ஶ்ரிய:பதியினிடத்தில் நிஶ்சலமான பக்தியை வஹித்து, விஷ்ணுவை ஆராதித்தான்.

ஸ ஸம்ப்ராப்ய மஹீபாலோ வேங்கடாசலமவ்யயம்,
அநேகதருஸம்பாதம் நாநாபக்ஷிஸமந்விதம். (413)
பஹுகந்தர ஸங்கீர்ணம் நைகநிர்ஜ்ஜர ஶோபிதம்,
விசித்ரைர் தாதுபிர்யுக்தம் ஶிகரைருந்நதைரபி. (414)
ஸேவிதம் முநிவர்யைஶ்ச பகவத்பக்தி கோவிதை:,
அவகாஹ்யாமலே ராஜா ஸ்வாமிபுஷ்கரிணீஜலே,
ஸுராஸுரகுருந் தேவம் வவந்தே ஹ்ருஷ்டமாநஸ:. (415½)

மேலும் அந்த ஸுமதிமஹாராஜாவானவன் அனேகங்களான வ்ருக்ஷங்களாலே நெருக்கமாயும் அனேக பக்ஷிகளோடே கூடியும், அனேக குகைகளுடன் கூடியும் பல அருவிகளால் சோபிதமாயும், உன்னதங்களான ஶிகரங்களோடே கூடிக்கொண்டும் பகவத்பக்தி சீலாளான அனேக ரிஷிகளாலே ஸேவிக்கப்பட்டிருப்பதும் நாஶரஹிதமுமான வேங்கடாசலத்தை அடைந்து நிர்மலமான ஸ்வாமி புஷ்கரிணி தீர்த்தத்தில் ஸ்னானம்பண்ணி ஸந்துஷ்டமான மனஸ்ஸை உடைத்தானவனாய் தேவாஸுர பூஜ்யனான திருவேங்கடமுடையானை ஸேவித்தான்.

காலாம்புதமிவாகாஶே ப்ராவ்ருட்காலே ஸமுச்ச்ரிதம். (416)
ஸ்புரத்ரத்நவிசித்ரேண கிரீடேந விராஜிதம்,
குண்டலாப்யாம்மநோஜ்ஞாப்யாம்ஶோபிதம்கர்ணயோர்த்வயோ:,
க்ரைவேய ஹார கேயூர கர்ணிகாஸமலங்க்ருதம்,
மஹத்ப்யாம் ஶங்கசக்ராப்யாம் ஶோபிதம்பார்ஶ்வயோர்த்வயோ:,
ஸேவிதம் சந்த்ரஸூர்யாப்யாமிவ காலவலாஹகம்,
பஶ்யமாநஶ்சிரம் தேவம் ஸுமதிர் ஹ்ருஷ்டமாநஸ:,
ஸாநந்தபாஷ்பநயநோ மநஸைவமசிந்தயத். (419½)

பின்னையும் அந்த ஸுமதியானவன் வர்ஷாகாலத்தில் ஆகாஶத்தில் இருக்கும் உன்னதமான கறுத்த மேகம் போன்றவரும் ப்ரகாஶியாநிற்கிற ரத்னங்களால் நானாவர்ணமான கிரீடத்தால் விளங்காநிற்பவரும் மனோஹரங்களான இரண்டு கர்ணகுண்டலங்களாலே ஶோபிதரும் கண்ட்டபூஷணமுக்தாஹாரங்களென்ன தோள்வளைகளென்ன கர்ணபத்ரங்களென்ன இவைகளால் அலங்கரிக்கப்பட்டவரும், இரண்டு பார்ஶ்வங்களிலேயும் ஶ்ரேஷ்ட்டங்களான ஶங்கசக்ரங்களால் ப்ரகாசிக்கிறாராகையால் ஸூர்யசந்த்ராளால் உபபார்ஶ்வங்களில் சூழப்பட்ட கறுத்தமேகம் போன்றவருமான திருவேங்கடமுடையானை பஹுகாலம் ஸேவியாநின்றுகொண்டு ஸந்துஷ்டசித்தனாய் ஆநந்தபாஷ்பயுக்தங்களான கண்களை உடைத்தானவனுமாய் மனஸ்ஸால் இப்படி சிந்தித்தான்.

அயம் ஸ விஷ்ணுர் பகவாந் த்ரிதாமா ஶங்கசக்ரப்ருத்,
ஸம்ஸாராம்புதிமக்நாநாம் ஹிதார்த்தம் தேஹிநாம் ஸ்வயம்,
ஆஸ்தே ஸதாத்ர பகவாந் யோகிநாமபி துரக:. (421)
அயம் ஹி தஸ்மிந் ஸங்க்ராமே ஸாரத்யந்து கிரீடிந:,
சக்ரே தயாபரவஶ: ஸாக்ஷாச்சக்ரதரோ ஹரி:. (422)
அபிதேநைவ ரூபேண ஸ்புரத்ஸாரத்யலக்ஷ்மணா,
மமாத்ய தயயா தேவ: ஸ்யவமாவிர்பவிஷ்யதி. (423)

பகவானும் ஶங்கசக்ரதரரும் த்ரிதாமாவும் யோகிகளுக்குக் கூட அடையக்கூடாமலிருக்கிற ஸ்வாமியுமான இந்த விஷ்ணுவானவர் ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தில் முழுகியிருக்கிற ப்ராணிகளுடைய க்ஷேமத்தையும்பொருட்டு ஶேஷாசலத்தில் தயையினாலே வஸிக்கிறார். சக்ரதரரான இந்த ஸ்வாமியானவர் தயாபரவசராய் பாரத யுத்தத்தில் அர்ஜுனனுக்கு ஸாரத்யத்தைப் பண்ணினார். ப்ரகாஶமான ஸாரத்ய சிஹ்னத்தை உடைத்தான ஸ்வரூபத்தோடு கூடினவராய் அடியேனுக்கு ஸேவை ஸாதிக்கப் போகிறாரா?

ஏவம் சிந்தயமாநேது ஸுமதௌ தர்மவத்ஸலே,
ஆபபாஷே மஹாதேஜாஸ் ஸஹிவேங்கடநாயக:. (424)

தர்மவத்ஸலனான ஸுமதிமஹாராஜனானவன் இப்படி சிந்தியாநின்றவளவில், மஹத்தான காந்தியையுடைய அந்த திருவேங்கடமுடையான் ஒரு வார்த்தை சொன்னார்.

யத்தேzபிலக்ஷிதம் ராஜந் தத்ததைவ பவிஷ்யதி,
யத்து ப்ருந்தாவநந்நாம விபிநம் முநிஸேவிதம்.
தத்ர தே தர்ஶயேzஹம் வை யத்ருபந்து தவேப்ஸிதம். (425½)

வாராய் ஸுமதிமஹாராஜனே! எது உம்மால் இச்சிக்கப் பட்டதோ அது அப்படியே ஆகப்போகிறது. ப்ருந்தாவன மென்று ப்ரஸித்தமான எந்த க்ஷேத்ரம் உண்டோ, அதைக் குறித்துப்போம். அவ்விடத்தில் உம்மால் சிந்திக்கப்பட்ட ஸ்வரூ பத்தைக் காண்பிக்கப்போகிறேன்.

இத்யேவ முக்தஸ்ஸுமதிஸ் தஸ்மாத் ப்ருந்தாவநம் யயௌ,
தத்ர ப்ரகாஶமாநந்தம் தமாலாக்யமிவ த்ருமம்,
வஹந்தம் ஶங்கராஜாநம் தக்ஷிணே கரபல்லவே,
தாநமுத்ராஞ்ச ஸவ்யேது ஸர்வாபரணபூஷிதம். (427½)
ஸ ப்ரணம்ய முநிஶ்ரேஷ்டஸ் ஸுமதிர் ஹ்ருஷ்டமாநஸ:,
வாஸுதேவம் ஜகந்நாதம் அதிமாத்ரம் முதம் யயௌ. (428½)

திருவேங்கடமுடையானுல் இப்படி சொல்லப்பட்ட அந்த ராஜாவானவன் திருமலையில்நின்றும் ப்ருந்தாவனத்தை அடைந்த வனுய் அந்த அரண்யத்தில் ப்ரகாஶியாநின்றும் தமாலவ்ருக்ஷம் போல் கறுத்த திருமேனியை உடைத்தாயும் வலத்திருக்கையில் பாஞ்சஜன்யத்தை வஹியாநின்றும் இடத்திருக்கையில் தான முத்ரையை உடைத்தாயும் ஸகலாபரணங்களால் அலங்க்ருதரான பார்த்தஸாரதியை ஸந்துஷ்ட சித்தனுய் தண்டன் ஸமர்ப்பித்து மிகவும் ஸந்தோஷத்தை அடைந்தான்.

ஸ தஸ்ய விதிவத்ராஜா தேவதேவஸ்ய ஶார்ங்கிண:,
உத்ஸவம் காரயாமாஸ சைத்ரமாஸே ஶுபோதயே. (429½)

அந்த ஸுமதிமஹாராஜாவானவன் ஸ்வாமிக்கு ஶுபமான ஆவிர்ப்பாவத்தை உடைத்தான சைத்ரமாஸத்தில் உத்ஸவத்தைப் பண்ணிவைத்தான்.

இதம் மயா யதாக்யாதம் புராவ்ருத்தம் மஹாமுநே,
ஸங்க்ஷேபேண யதாவ்ருத்தம் கோவக்தும் ஶக்நுயாந் நர:. ()

வாரீர் நாரதரே! இந்த பூர்வகால வ்ருத்தாந்தமானது ஸங் க்ஷேபமாக என்னுலே சொல்லப்பட்டது. இத்தை நன்றுகச் சொல்ல ஸமர்த்தன் ஆர்?

யஇதம் ஶ்ருணுயாத்விப்ர பக்த்யா பாபப்ரணஶநம்,
ஆக்யாநம் ஸஹரேர்தாம யாதி பாபயுதோzபிவா. (431½)

எந்தப் புருஷனானவன் பக்தியினாலே இந்த வ்ருத்தாந்தத்தைக் கேட்கிறானோ, அந்தப் புருஷன் பாபஸஹிதனானாலும் பரம பதத்தை அடைவான்.

அதாந்யஸ்தத்ர யோZப்யஸ்தி ஸப்தரோமேதி விஶ்ருத: (432)
முநி: பரமதர்மிஷ்ட்டஸ் ஸர்வபூதஹிதே ரத:.
வைநதேயாதிரூடந்து ஸ க்ருத்வா விஷ்ணுமவ்யயம். (433)
ஶங்கசக்ரதரம் தேவம் வஹந்தமபயம் முநே.
வைகாநஸேந விதிநா ஸம்ஸ்தாப்ய புருஷோத்தமம், (434)
சிரமாராத்ய விதிவத் வரதம் ப்ரணமந்ருணும்.
தேஹாவஸாநே தத்திவ்யம் பதம் ப்ராப முரத்விஷ:. (435)

பின்னையும் அவ்விடத்தில் ஸப்தரோமாவென்று ப்ரஸித்தரான ஒரு மஹர்ஷியானவர் இருந்தார். அந்த ரிஷியானவர் கருடாரூடராயிருக்கிற வரதனை ஏறியருளப்பண்ணி வைகாநஸ விதியினாலே ஸ்தாபித்து பஹுகாலம் ஶாஸ்த்ரோக்தமாக ஆராதித்து தேஹாவஸான காலத்தில் முரத்விட்டாயிருக்கிற ஸ்வாமியினுடைய திவ்யமாயிருக்கிற ஸ்தானத்தை அடைந்தார்.

ஸோZபி ஸம்ப்ரதி ஸர்வேஷாம் ப்ராணிநாம் கோசரீபவந்,
வரதோ நாம தேவேஶோ த்ருஶ்யதே தத்ரவை ஹரி:. (436)

இப்போது வரதனென்று ப்ரஸித்தரான அந்த ஸ்வாமியும் மனுஷ்யாளுடைய கண்களுக்கு விஷயராய்க்கொண்டு எழுந்தருளியிருக்கிறார்.

ஏவம் பஞ்ச ஸமாக்யாதா மூர்த்தயோ முநிஸத்தம,
யா: ப்ருஷ்டவாநஸி புரா விஷ்ணோஸ்து தநுஜத்விஷ:. (437)

வாரீர் நாரதரே! அஸுராந்தகரான எந்த விஷ்ணுவினுடைய எந்த எந்த மூர்த்திகளைக் கேட்டீரோ அந்த மூர்த்திகள் இப்படி அஞ்சு ப்ரகாரங்களாகச் சொல்லப்பட்டதுகள்.

இதி ஸ்ரீப்ரஹ்மாண்டபுராணே மஹேஶ்வரநாரத ஸம்வாதே ஸ்ரீப்ருந்தாரண்ய மாஹாத்ம்யே அஷ்டமோZத்யாய:.

எட்டாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீமத்வரவரமுநயேநம:

# ஒன்பதாவது அத்யாயம்

நாரத:—விஜ்ஞாதா மூர்த்தய: பஞ்ச விஷ்ணோரத்ர மஹாத்மந:,
தீர்த்தஸ்ய வைபவஞ்சாபி வக்துமர்ஹஸி ஶங்கர. (438)

வாரீர் ஶங்கரரே! அந்த ப்ருந்தாவனத்திலே எம்பெருமானுடைய மந்நாதாதிகளான அஞ்சு திருக்கோலங்களானவை உம்மிடத்தில்நின்றும் என்னாலே நன்றாக அறியப்பட்டன. கைரவிணீதீர்த்தத்தினுடைய வைபவத்தையும் சொல்லுவீராக.

ருத்ர:—கோநாம முநிஶார்தூல ஶக்தோ வக்தும் ஹி வைபவம்,
தஸ்ய தீர்த்தஸ்ய மஹதோ மனுஷ்யோ தேவஏவவா. (439)

வாரீர் முனிஶ்ரேஷ்ட்டரான நாரதரே! மனுஷ்யனாவது தேவனாவது எவன்தான் மஹத்தரமான அந்தத் தீர்த்தத்தினுடைய வைபவத்தைச் சொல்லுகிறதின்பொருட்டு ஸமர்த்தனாக இருக்கிறான்?

இதம் குஹ்யதமம் லோகே தஸ்ய தீர்த்தஸ்ய வைபவம்,
யத் ப்ருஷ்டவாநஸி முநே வம் த்மாமத்ய மஹாவ்ரத. (440)

வாரீர் மிகுந்த வ்ரதத்தை உடைத்தான நாரதரே! இப்போது நீர் எத்தை ப்ரஶ்நம் பண்ணினீரோ இந்த லோகத்திலே இந்த தீர்த்தத்தினுடைய வைபவமானது மிகவும் குஹ்யதமமாயிரா நிற்கிறது.

ஸாஹி கைரவிணீநாம கைரவோத்பல ஶோபிதா,
ஸம்புல்ல பத்மஸஞ்சந்நா ஸரஸீ விமலோதகா. (441)

ஹம்ஸைஸ்ச மாநஸாவாஸேஸ் ஸர்வதா ஸங்கஶோ யுதா,
காரண்டவைஸ் ஸாரஸைஸ்ச நித்யமத்தைஸ்ஸதா வ்ருதா. ()

மிதுநைஸ் சக்ரவாகாநாம் மதுராரவ ஸம்யுதை:,
ஸேவிதா விஹகைரந்யை ரதிஹ்ருத்யவிராவிபி:. (443)

ஆம்பல்களென்ன செங்கழுநீர்புஷ்பங்களென்ன இதுகளினாலே ஶோபிதையாயும் விகஸித்த பத்மங்களினாலே மறைக்கப்பட்டதாயும் நிர்மலமான தீர்த்தத்தை உடைத்தானதாயுமிருக்கிற அந்த ஸரஸ்ஸானது கைரவிணியென்று ப்ரஸித்தையாயிருக்கிறது. இன்னம் எப்படி இருக்கிறதென்றால் மானஸஸரஸ்ஸிலே வாஸம் பண்ணுநிற்கிற ஹம்ஸங்களினாலே எப்போதும்

கூடிக்கொண்டும் எப்போதும் மதித்திருக்கிற காரண்டவ ஸாரஸ பக்ஷிகளினாலே எப்போதும் சூழப்பட்டும் மதுரமாக ஶப்தியா நிற்கிற சக்ரவாகமிதுனங்களோடே கூடினதாயும் மிகவும் மனோஹரமாக ஶப்தியாநிற்கிற அனேகபக்ஷிவிஶேஷங்களாலே ஸேவிதையாயும் வண்டுகளுடைய ஜங்காரங்களாலே வ்யாப்தையாயும் கரையிலே உண்டான ஸகலவ்ருக்ஷவிஶேஷங்களோடே கூடினதாயும் எந்த ஸரஸ்ஸானது ப்ரகாஶியா நிற்கிறதோ.

தஸ்யா: பஞ்ச ப்ரஶஸ்தாநி தீர்த்தாநி பரிதோ முநே,
தேஷாம் மத்யே கைரவிணீ ஸ்திதா ஸா ஸரஸீ ஶுபா(444)

வாரீர் நாரதரே! அந்தக் கைரவிணியினுடைய நாலு பக்கத்திலேயும் ப்ரஶஸ்தங்களான அஞ்சு தீர்த்தங்கள் இருக்கின்றன. அந்தத் தீர்த்தங்களுடைய மத்யையிலே பாவனையான அந்தக் கைரவிணி இராநிற்கிறது.

ஸா த்ருஷ்டாzபி ந்ருணாம் பாபம் நாஶயத்யமலோதகா,
கிம்புநஸ் ஸ்பர்ஶநஸ்நாநைர் துர்லபம் புவி மாநவை:. (445)

அந்தக் கைரவிணியானது த்ருஷ்டமாத்ரையாயிருந்துகொண்டு மனுஷ்யாளுக்குப் பாபங்களை நஶிப்பியாநிற்கிறது. அந்தக் கைரவிணீஸ்பர்ஶனஸ்னானங்களாலே பூமியிலே அடையக்கூடாத புருஷார்த்தமானது என்ன இருக்கிறது?

ஶ்ரியமாயுர்யஶ: காந்திமாரோக்யபஶுபுத்ரகாந்,
ப்ராப்நோதி துர்லபஞ்சாபி பதம் ஸ்நாதஸ்திதோ நர:. (446)

அந்தக் கைரவிணியிலே.யாதொரு புருஷனானவன் ஸ்னானம் பண்ணுகிறானோ அவன் ஆயுராரோக்ய யஶ: காந்தி பசுபுத்ராளையும் மற்றும் துர்லபமான புருஷார்த்தத்தையும் அடைகிறான்.

ந ஜந்ம புநராயாதி தஸ்யாம் ஸ்நாதோ நர: க்வசித்,
நாயஶோ நைவ நரகம் நசாபக்திம் ஜநார்தநே. (447)

மனுஷ்யனானவன் ஒருகால் அந்த ஸரஸ்ஸிலே ஸ்னானம் பண்ணினவனாய்க்கொண்டு மறுபடியும் ஜன்மத்தை அடையான். அபயஶஸ்ஸையும் நரகத்தையும் பகவத்பக்தியில்லாமையையும் அடையமாட்டான்.

தஸ்யாம் ஸ்நாதஸ் ஸக்ருந்மர்த்யோ முச்யதே ஸர்வகில்பிஷை:,
பதம் ததபிசாப்நோதி யதநந்தமநாதிச. (448)

அந்த ஸரஸ்ஸிலே ஸ்நாதனான நரனானவன் ஸமஸ்த பாபங்களினாலேயும் விடுபடுகிறான். எந்த ஸ்தானமானது

அனந்தமாயும் அனுதியாயும் இருக்கிறதோ, அப்படி ப்ராப்யமான பரமபதத்தையும் அந்தத்திலே அடையா நிற்கிருன்.

மாத்ருஹா பித்ருஹா சாபி ப்ரஹ்மஹா கோக்நஏவச,
மாஸமேகந்நர: பாபைஸ்தத்ர ஸ்நாத்வா விமுச்யதே. (449)

யாதொரு மனுஷ்யனுனவன் பித்ருமாத்ருப்ரஹ்மகோக்னனு கிலும் அந்த ஸரஸ்ஸிலே ஒரு மாஸம் ஸ்னுனம் பண்ணினுனுகில் கீழ்ச்சொன்ன பாபங்களினுலே விடுபடுகிருன்.

ஸ்வர்ணஸ்தேயீ ஸுராபஸ்ச யஸ்சாந்ய: பாபக்ருந்நர:,
ஸ்நாத்வா மாஸம் ஸதஸ்யாம் வை முச்யதே நாத்ர ஸம்ஸய:.()

யாதொரு புருஷனுனவன் ஸ்வர்ணுபஹாரியாயும் மத்ய பாயியாயும் இருப்பனே அவனும் மற்றும் பாபக்ருத்தான புருஷனும் அந்தக் கைரவிணியிலே நியமமாக ஒரு மாஸம் ஸ்னுனம் பண்ணுவனேயானுல் அவன் ஸகல பாபங்களினின்றும் விடுபடுகிருனென்பதில் ஸந்தேஹமில்லை.

கார்த்திகஸ்யது மாஸஸ்ய க்ருஷ்ணபக்ஷேzஷ்டமீதிதௌ,
யஸ் ஸ்ராத்தகர்ம குருதே ஸபித்ரூணும் ப்ரியோ மத:. (451)

யாதொரு புருஷனுனவன் கார்த்திக மாஸத்தில் க்ருஷ்ண பக்ஷத்தில் அஷ்டமீதிதியில் அந்தக் கைரவிணீதீரத்தில் பித்ருஸ்ராத்தத்தைப் பண்ணுகிருனே அந்தப் புருஷனுனவன் பித்ருக்களுக்கு மிகவும் அபிமதனுகிருன்.

நகயா நைவகாஸீச நக்ஷேத்ரம் கௌரவந்ததா,
ந புஷ்கரஞ்ச ஸத்ருஸம் தஸ்ய க்ஷேத்ரஸ்ய வை முநே. (452)

வாரீர் நாரதரே! அந்த ப்ருந்தாவனத்துக்குக் காஸியும் கயையும் குருக்ஷேத்ரமும் புஷ்கரமும் ஸமானமாகமாட்டாது.

கீதோ யஸ்து புராவித்பிர் முநிபிர் முநிஸம்மத:,
ஸ்லோகம் ஸ்ருணுஷ்வ தேவர்ஷே தம்வக்ஷ்யாமிஸமாஹித:.

யாதொரு ஸ்லோகமானது ரிஷிஸம்மதமோ அப்படிப்பட்ட இந்த ஸ்லோகமானது புராவித்துக்களான ரிஷிகளாலே கானம் பண்ணப்பட்டிருக்கிறது. வாரீர் நாரதரே! அந்த ஸ்லோகத்தை உமக்குச் சொல்லுகிறேன். நீர் ஸமாஹிதமனஸ்கராய்க் கேளும்.

ஸஹஸ்ராண்யபி ஜந்மாநி ஜஹ்நுகந்யாநிஷேவணுத்,
ஸக்ருத் கைரவிணீஸ்நாநம் அதிகம் நாத்ர ஸம்ஸய:. (454)

ஜன்மஸஹஸ்ரங்களிலே கங்கையிலே ஸ்னானம் பண்ணுகிற திலுங்காட்டில் கைரவிணியில் ஒருகால் ஸ்னானமானது அதிஶயித மென்கிறதில் ஸந்தேஹமில்லை.

நியதோ நியதாஹாரோ நியதேந்த்ரியமாநஸ:,
ஸ்நாயாத் தஸ்யாம் ஸரஸ்யாந்து மந்த்ரமேத முதீரயந். (455)

புருஷனானவன் நியதனாயும் நியதாஹாரியாயும் மனஸ்ஸு முதலான இந்த்ரிய ஜயமுடையவனாயுமிருந்துகொண்டு மேலே சொல்லப்படுகிற மந்த்ரத்தை ஜபியாநின்றுகொண்டு ஸ்னானம் பண்ணக்கடவன்.

அபஹர மம துரிதாநி ப்ரதிஶத்வம் நிருபமாம் யஶோலக்ஷ்மீம்,
பகவதி கைரவிணி த்வாம் ப்ரணமாமி ஜநார்தநப்ரியேஸூபகே.

எம்பெருமானுக்கு அர்க்யபாத்யாத்யுபசாரங்களுக்கு அர்ஹையாய் அத்தால் அவனுக்கு ப்ரியையாய் பாக்யவதியாயிருக்கிற கைரவிணியே! உன்னை தண்டன் ஸமர்ப்பிக்கிறேன். என்னுடைய ஸகல பாபங்களையும் அபஹரி. உபமானரஹிதமான யஶோலக்ஷ்மியை உண்டாக்கு.

ஏஷ மந்த்ரஸ்து ஸூமஹாந் வஸிஷ்ட்டேந மஹாத்மநா,
ஸகாஶாத் ப்ரஹ்மண: ப்ராப்த: பரமஶ் சதுராநநாத். (457)

இப்படி கீழே சொல்லப்பட்ட ச்லோகரூபமாய் பரமமான இம்மந்த்ரமானது நாலு வேதங்களையும் நாலு முகங்களிலே தரித்த ப்ரஹ்மாவினிடத்தினின்று மஹாத்மாவான வஸிஷ்ட்டராலே அடையப்பட்டது.

ஏவமுக்த்வாவகாஹ்யாம்பஸ்யமலே விமலாம்பஸ:,
மநுஜஸ்தஸ்ய ஸரஸோ மாதவம் ப்ரதிபத்யதே. (458)

மனுஷ்யனானவன் நிர்மலமான தீர்த்தத்தை உடைத்தான அந்தக் கைரவிணியினுடைய பாபஹரமான தீர்த்தத்தில் இந்த மந்த்ரத்தை ஜபித்துக்கொண்டு ஸ்னானம் பண்ணி எம்பெருமானை அடையாநிற்கிறான்.

அத்ர த்வயேதம் ஶ்ரோதவ்யம் இதிஹாஸம் புராதநம்,
ஶார்தூலஸ்ய முநேஶ்சாபி ஸம்வாதோ வ்யாக்ரஜந்மந:. (459)

வாரீர் நாரதரே! இந்தத் தீர்த்தத்தினுடைய வைபவவிஷயத்திலே ஶார்தூலரென்கிற மஹர்ஷிக்கும் வ்யாக்ரஜன்மாவென்கிற ரிஷிக்கும் ஒரு ஸம்வாதம் பூர்வத்திலே உண்டாயிருக்கிறது.

அப்படி ப்ரவ்ருத்தமாயும் புராதனமாயுமிருக்கிற இந்தக் கதை யானது உம்மாலே கேட்கப்படத்தக்கதென்று ஶிவன் சொன்னான்.

ஶார்தூல:—

இதமுக்தம் த்வயா ப்ரஹ்மந் மாஹாத்ம்யம் பஹுஶோமுநே,
கங்காயா ஜஹ்நுகந்யாயாஸ் ஸர்வஸ்மாததிகம் புவி. (460)

யதா மஹாநதீஷ்வேஷா ப்ரஶஸ்தா தேவவாஹிநீ,
ஏவம் ஸரஸ்ஸு கிந்தீர்த்தம் தத்வதஸ்வ மஹாமுநே. (461)

வாரீர் ப்ரஹ்மநிஷ்டரான வ்யாக்ரஜன்மரே! உம்மாலே ஜஹ்னுகன்யையான கங்கையினுடைய மாஹாத்ம்யமானது பூமியிலே ஸர்வதோதிகமாய்ச் சொல்லப்பட்டது. மஹாநதிகளுக்குள்ளே தேவவாஹினியான கங்கையானது எப்படி ப்ரஸித்தையோ அப்படி ஸரஸ்ஸுக்களுக்குள்ளே எந்த ஸரஸ்ஸானது ப்ரசஸ்தமாயிருக்கிறதென்று வ்யாக்ரஜன்மாவை ஶார்தூலர் ப்ரஶ்னம் பண்ணினார்.

வ்யாக்ரஜந்மா —

ஸாது ப்ருஷ்டம் த்வயா தாத ஶ்ருணுஷ்வ கதயாம்யஹம்,
கங்காயா அபி யத்தீர்த்தம் ப்ரஶஸ்தம் ஜகதீதலே. (462)

வாரீர் ஶார்தூலரே! உம்மாலே வெகுநன்றாக ப்ரஶ்னம் பண்ணப்பட்டது. கங்கையைக்காட்டிலும் பூமியிலே எந்தத் தீர்த்தமானது ப்ரஶஸ்தமோ அந்தத் தீர்த்தவைபவத்தைச் சொல்லுகிறேன், கேளும்.

யத்து ப்ருந்தாவநந்நாம வநம் மதுநிகாதிந:,
ஜகத்யாம் ப்ரியமத்யர்த்தம் நாநாதரும்ருகத்விஜம். (463)

நானாவிதங்களான வ்ருக்ஷங்களென்ன, ம்ருகங்களென்ன, பக்ஷிகளென்ன, இவைகளை உடைத்தாய் ப்ருந்தாவனமென்ற எந்த துளஸீவநமானது மதுஸூதனனுக்கு இந்தப் பூமியிலே அதிப்ரியதமமோ.

தத்ர கைரவிணீ நாம ஸரஸீ முநிஸத்தம,
காசிதச்சோதகாऽநேகவிஹங்கமவிராஜிதா. (464)

வாரீர் ஶார்தூலரே! நிர்மலோதகையாய் நானாவித பக்ஷி விராஜிதையாயிருக்கிற கைரவிணியென்கிற ஒரானொரு ஸரஸ்ஸானது அந்த ப்ருந்தாவனத்திலே இருக்கிறது.

தத்ஸமம் ஜகதீப்ருஷ்ட்டே நகுத்ராபிச த்ருஶ்யதே,
ஸரோவாபி தடாகோவா நதீவா கூபஏவவா. (465)

இந்தப் பூமியிலே எந்த இடத்திலேயும் அந்தக் கைர விணியோடே துல்யமான ப்ரபாவத்தை உடைத்தான ஸரஸ் ஸாவது தடாகமாவது நதியாவது கிணறுவது கிடையாது.

கங்காயாமபிச ஸ்நாத: ஸ்வர்க்கமேத்ய புநர்புவி,
ஜந்ம ஜந்துரவாப்நோதி தத்ஸ்நாநீ நபுநர்பவம். (466)

கங்கையிலே ஸ்நானம் பண்ணின புருஷனும் ஸ்வர்க்கத்தை அடைந்து புண்யம் க்ஷீணமானவுடனே மறுபடியும் பூமியிலே ஜனிக்கிறான். அந்தக் கைரவிணியிலே ஸ்நானம் பண்ணினவனோ வென்றால் மறுபடியும் ஜன்மத்தை அடையான்.

பஹுநாத்ர கிமிஹோக்தேந வக்ஷ்யே ஸங்க்ஷேபதஶ் ஶ்ருணு,
தர்மார்த்தகாமமோக்ஷாணும் ஸாதநம் தத்ஸரோ மதம். (467)

இந்த ஸரோவைபவவிஷயத்தில் மிகவும் சொல்ல வேண் டியது என்ன? ஸங்க்ஷேபமாகச் சொல்லுகிறேன், கேளும். அந்தக் கைரவிணி தர்மார்த்த காம மோக்ஷங்களுக்கு முக்கிய ஸாதனமாக ரிஷிகளினாலே ஸம்மதிக்கப்பட்டிருக்கிறது.

வக்தும்வா வைபவந்தஸ்ய ஶக்தோ நைவ நரோ புவி,
தேவோவா தேவராஜோவா ஸோபி ஸாக்ஷாத்ப்ருஹஸ்பதி:.

இந்தப் பூமியிலே ஓரானொரு புருஷனும் இதன் வைபவத் தைச் சொல்லுகிறதையும் பொருட்டு ஸமர்த்தனேயன்று. தேவ னாவது தேவராஜனாவது ப்ருஹஸ்பதியாவது இவர்களும் தத்வை பவகத்தனத்திலே ஸமர்த்தாளன்று.

ஶ்ரூயதே ஹி புராவ்ருத்தம் இதம் முநிவரோத்தம,
விஶ்வாவஸோ: க்ருதஜ்ஞஸ்ய கந்தர்வாதிபதேர் மஹத். (469)

வாரீர் ஶார்தூலரே! க்ருதஜ்ஞனாய் கந்தர்வாதிபதியான விஶ்வாவஸுவினுடைய ஸம்பந்தியாய் மஹத்தரமான ஓரா னொரு கதையானது கேட்கப்படா நிற்கிறது.

ஸ கதாசிந் மஹாபாக விமாநம்வரமாஸ்தித:,
சசார விமலே வ்யோம்நி கந்தர்வவரஸத்க்ருத:. (470)

வாரீர் நாரதரே! அந்த விஶ்வாவஸுவானவன் கந்தர்வ ஶ்ரேஷ்டர்களாலே ஸத்கரிக்கப்பட்டவனாய்க்கொண்டும் விமானா ரூடனாய்க்கொண்டும் நிர்மலமான ஆகாஶத்திலே ஸஞ்சரித்தான்.

தஸ்ய ஸஞ்சரதோ வ்யோம்நி கந்தர்வாதிபதேர்முநே,
அதஸ்தாதரஜோநாம ஸரஸ்ஸுவிமலோதகம். (471)

வாரீர் நாரதரே! அப்படிக்கு ஆகாஶத்திலே ஸஞ்சரியா நிற்கிற கந்தர்வாதிபதியான விஶ்வாவஸுவினுடைய கீழே நிர்மலோதகமான ஒராஞெரு அரஜஸ்ஸென்கிற ஸரஸ்ஸானது இருந்தது.

விந்த்யஸ்ய தக்ஷிணே பார்ஶ்வே ஹேமோநாம மஹாகிரி:,
த்ரீணி ஶ்ருங்காணி தஸ்யாபி ப்ருஶமுச்சைஸ்தராணிவை. ()

விந்த்யபர்வதத்துக்கு தக்ஷிணபார்ஶ்வத்திலே ஹேமமென்று பேரை உடைத்தான ஒரு மஹாபர்வதமானது இருக்கிறது. அதுக்கு மிகவும் உன்னதங்களான மூன்று ஶிகரங்கள் இருக்கிறதுகள்.

தத்ர ஶ்ருங்கே ப்ரதீசீநே மத்தவாரணஸம்ஜ்ஞிதே,
மஹத்யப்ரம்லிஹே ரம்யே ஸ்திதந்ததரஜஸ்ஸர:. (473)

பெரிதாயும் ஆகாயத்தை அளாவியும் ரம்யமாயும் மத்தவரணமென்று பேரை உடையதுமான மேற்கு திக்கிலே இருக்கிற சிகரத்திலே அந்த அரஜஸ்ஸென்கிற ஸரஸ்ஸானது இருக்கிறது.

தத்ராத்ரிபுத்ரோ பகவாந் துர்வாஸா முநிஸத்தம:,
தபஶ்சசார ஸுப்ருஶம் வர்ஷாணி ஸுபஹூநிவை. (474)

அத்ரிபுத்ரராய் தபஸ்வியாய் முனிஶ்ரேஷ்டரான துர்வாஸாவானவர் அந்த அரஜஸ்ஸென்கிற ஸரஸ்ஸின் கரையிலே பஹுஸம்வத்ஸரங்கள் தபஸ்ஸு பண்ணிக்கொண்டிருந்தார்.

தஸ்யோர்த்வம் கச்சதஸ்தத்ர வ்யோம்நி விஶ்வாவஸோர்முநே:,
துர்வாஸஸஶ்ஶரீரேச சாயாவை நிபபாதஹ. (475)

வாரீர் நாரதரே! அந்த ஸரஸ்ஸின் கரையிலே தபஸ்ஸு பண்ணுநிற்கிற அந்த துர்வாஸாவினுடைய ஶரீரத்திலே ஆகாஶத்திலே ஸஞ்சரியாநிற்கிற விஶ்வாவஸுவினுடைய சாயையானது விழுந்தது.

தத: க்ருத்தோ மஹாபாகோ துர்வாஸா முநிஸத்தம:,
கந்தர்வராஜம் கச்சந்தம் அபஶ்யத் வ்யோம்நி நிர்மலே. (476)

தந்த்ருஷ்ட்வா ஸுப்ருஶம் க்ருத்தோ வாக்யமேதவாசஹ.

அந்தச் சாயாநிபாதத்தினலே மஹாதபஸ்வியாய் ரிஷிஶ்ரேஷ்டரான துர்வாஸாவானவர் கோபிஷ்டராய்க்கொண்டு நிர்மலமான ஆகாஶத்திலே ஸஞ்சரியாநிற்கிற கந்தர்வராஜா

வான விஶ்வாவஸுவைப் பார்த்துக் கோபிஷ்ட்டராய்க்கொண்டு வக்ஷ்யமாணப்ரகாரமாய் ஒரு வார்த்தை சொன்னார்.

துர்வாஸா:—

யஸ்மாத் கச்சஸி துர்புத்தே மமோபரி திவி த்ருதம்,
மாமநாத்ருத்ய தஸ்மாத் த்வம் அஶரீரோ பவிஷ்யஸி,
ஏவமுக்த்வா ருஷாபஶ்யந்நிர்தஹந்நிவ சக்ஷுஷா. (478)

வாராய் துர்புத்தியான விஶ்வாவஸுவே! எந்த ஹேது வினாலே என்னுடைய மேலே ஆகாஶத்திலே என்னை லக்ஷ்யம் பண்ணாமல் ஸஞ்சரித்தாயோ அந்தக் காரணத்தினாலே நீ அஶரீர னாகப் போகிறாய். இந்த ப்ரகாரமாகச் சொல்லிக் கோபத்தி னால் கண்ணாலே தஹிக்கிறவர்போல் பார்த்தார்.

வ்யாக்ரஜந்மா—

ஏவமுக்தேது வசநே ஶரீரமபதத் புவி,
தஸ்ய விஶ்வாவஸோர் விப்ர ஜகாம ஸுமஹத் பயம். (479)

வாரீர் சார்தூலரே! துர்வாஸாவினாலே விஶ்வாவஸுவா னவன் இப்படி ஶபிக்கப்பட்ட மாத்ரத்திலே அந்த விஶ்வாவஸு வினுடைய ஶரீரமானது பூமியிலே விழுந்தது. அவனுக்கு மஹத்தரமான பயம் உண்டாச்சுது.

அஶரீரஸ்ததோ கத்வா வாயுபூதோ மநோஜவ:,
ப்ரணம்ய ப்ராஞ்ஜலிர்வாக்ய மிதமாஹ தநாதிபம். (480)

அதுக்குமேலே அந்த விஶ்வாவஸுவானவன் வாயுபூதனாய் அஶரீரனாய்க்கொண்டு மனோவேகத்தை உடைத்தானவனாய் அல காபுரியை அடைந்து பத்தாஞ்சலிபுடனாய்க்கொண்டு குபேரனைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னான்.

விஶ்வாவஸு:—

பஶ்ய தேவ மம ப்ராப்த மீத்ருஶம் கர்ம குத்ஸிதம்,
த்ராஹித்ராஹி தநாத்யக்ஷ ஶரணந்த்வா முபாகத:. (481)

வாராய் அலகாதிபதியே! என்னாலே அடையப்பட்ட குத்ஸிதமான இந்த கர்மத்தைப் பார். ரக்ஷிரக்ஷி. உன்னை ஶரணமாக அடைந்தேன்.

அஜாநதைவஹி மயா ப்ராப்தம் கர்மேத்ருஶம் ப்ரபோ,
துர்வாஸஸாதிதபஸா ஸமுத்ஸ்ருஷ்டந் தநாதிப. (482)

வாராய் அலகாதிபதே! அதிக தபஸ்வியான துர்வாஸஸ்ஸினாலே ஶபிக்கப்பட்டதால் குத்ஸிதமான இப்படிப்பட்ட கர்மமானது அபுத்திபூர்வகமாக என்னாலே அடையப்பட்டது.

தமேவ முக்தவந்தந்து ப்ரத்யுவாச தநாதிப:,
ஸாந்த்வயந் ஶ்லக்ஷ்ணயா வாசா மாகமோமாகமோ பயம். ()

குபேரனானவன் இப்படி சொல்லாநிற்கிற விஸ்வாவஸுவைப் பார்த்து, பயப்படாதே பயப்படாதேயென்று வ்யக்தமாக ஒரு வார்த்தை சொன்னான்.

அவஶ்யமநுபோக்தவ்யம் ஸுக்ருதந் துஷ்க்ருதந்ததா,
ஸ்வேனைவ ஸ்வக்ருதந்தாத நாபரஸ்யாபரேணஹி. (484)

வாராய் விஸ்வாவஸுவே! தன்னாலே பண்ணப்பட்ட ஸுக்ருதமும் துஷ்க்ருதமும் தன்னாலே அவஶ்யம் அனுபவிக்கத் தக்கது. அன்யனுடைய ஸுக்ருதமும் துஷ்க்ருதமும் அன்யனாலே அனுபவிக்கத்தக்கதன்று.

தர்மாதர்மௌ ஸுகம் து:கம் லாபாலாபௌ ஜயாஜயௌ,
ஸ்வேச்சயா நைவ ஜாயந்தே ப்ராணிநாம் ப்ராணவத்தம. ()

வாராய் புருஷஶ்ரேஷ்டனான விஸ்வாவஸுவே! தர்மாதர்மங்களும் ஸுகாஸுகங்களும் லாபாலாபங்களும் ஜயாபஜயங்களும் ப்ராணிகளுக்கு ஸ்வேச்சையினாலே லபியாது.

ததத்ர த்வம் ஶுசம் த்யக்த்வா தருணீவ ஜராந்விதம்,
தபஶ்சரஸ்வ ஸுமஹத் யதாஸ்யாத் தேஹஸம்பவ:. (486)

வாராய் விஸ்வாவஸுவே! இந்த ஶாபவிஷயத்திலே தருணியான ஸ்த்ரீயானவள் வ்ருத்தனை விடுமாபோலே ஶோகத்தை த்யஜித்து எப்படி தேஹம் உண்டாகுமோ அப்படிப்பட்ட தபஸ்ஸைப் பண்ணென்று குபேரன் சொன்னான்.

ஏவமுக்த: ப்ரணம்யைந மஶரீரோ தநாதிபம்,
ததேத்யுக்த்வா ஜகாமாத ஶிதிகண்ட்டம் மஹேஶ்வரம். (487)

இப்படி குபேரனாலே சொல்லப்பட்ட விஸ்வாவஸுவானவன் குபேரனை நமஸ்கரித்து அப்படியே தபஸ்ஸு பண்ணுகிறேனென்று சொல்லி மஹேஶ்வரனான ஶிவனை அடைந்தான்.

வ்ருஷபத்வஜமாஸாத்ய ப்ரணம்ய ப்ராஞ்ஜலிஸ்ததா,
பார்வத்யா ஸஹிதந் தேவமிதம் வசநமப்ரவீத். (488)

விஶ்வாவஸுவானவன் வ்ருஷபத்வஜனாய் பார்வதியோடே கூடிக்கொண்டிருக்கிற ஶிவனை அடைந்து ப்ரணாமம் செய்து பத்தாஞ்சலிபுடனாய்க்கொண்டு வக்ஷ்யமாணப்ரகாரம் ஒரு வார்த்தை சொன்னான்.

விஶ்வாவஸு:—

பகவந் தேவதேவேஶ த்ராஹிமாம் ஶரணாகதம்,
குத்ராஹம் தபஸஸ்ஸித்திம் ஸத்ய: ப்ராப்ஸ்யாமி ஶங்கர,
தத்வதஸ்வ மஹாதேவ த்வஸ்யமே ஶரணார்த்திந:. (489½)

வாரீர் த்ரிகாலஜ்ஞராய் தேவஶ்ரேஷ்டரான மஹாதேவரே! ஶரணாகதனான என்னை ரக்ஷியும்? எவ்விடத்திலே தபஸ்ஸித்தியை தத்க்ஷணத்திலே எந்த ஶுபாசரணத்தாலே அடைவேனோ, ஶரணாகதனான இந்த எனக்கு அந்த இடத்தைச் சொல்லுமென்று விஶ்வாவஸு கேட்டான்.

வ்யாக்ரஜந்மா—

ஏவமுக்தேது வசநே நீலகண்ட்டோzப்ரவீதிதம். (490)

இப்படி விஶ்வாவஸு சொல்லுகையில் ஶிவன் ஒரு வார்த்தை சொன்னான்.

ருத்ர:—

துலஸீகாநநந்தாத கந்துமர்ஹஸி ஸுவ்ரத,
யத்ர கைரவிணீ நாம ஸரஸீ ஸா மஹத்தரா,
தத்ர ஸித்திஸ்தவ பவேத் ஸத்ய ஏவ மஹாதபா:. (491½)

வாராய் நல்ல வ்ரதத்தை உடைத்தான விஶ்வாவஸுவே! நீ எவ்விடத்திலே கைரவிணியென்கிற மஹாஸரஸ்ஸானது இருக்கிறதோ, அதன் கரையிலே இருக்கிற ப்ருந்தாவனத்தைச் சேரும்பொருட்டு அர்ஹனாகாநிற்கிறாய். அந்த ப்ருந்தாவனத்திலே உனக்குத் தபஸ்ஸித்தியானது உண்டாகும். தத்க்ஷணத்திலே மஹாதபஸ்வியும் ஆவாய்.

வ்யாக்ரஜந்மா—

ஏவமுக்தஸ்து தேவேந ஹ்ருஷ்டோ விஶ்வாவஸுஸ்ததா,
துலஸீகாநநம் ஶீக்ரமாஜகாம மஹாமதி:. (492½)

அப்போது விஶ்வாவஸுவானவன் ருத்ரனாலே இப்படி சொல்லப்பட்டவனாய்க்கொண்டு ஸந்துஷ்டனாய் ப்ருந்தாவனத்தைச் சீக்ரமாக அடைந்தான்.

ப்ருந்தாரண்யம் தத்தோ கத்வா த்ருஷ்ட்வா கைரவிணீம் ஶுபாம்,
ஹ்ருஷ்டஸ்தத்ர தபஶ்சக்ரே கிஞ்சித்காலம் மநோரமே. (493½)

அதுக்கு மேலே அந்த விஶ்வாவஸுவானவன் ப்ருந்தாரண்யத்தை அடைந்து பாபஹரையான கைரவிணியையும் ஸேவித்து ஸந்துஷ்டனுய்க்கொண்டு மனோஹரமான அந்தக்கைரவிணீதீரத்திலே கொஞ்ச காலம் தபஸ்ஸு பண்ணிக்கொண்டிருந்தான்.

ஏவந்தபோசரத்தத்ர ஸஹி விஶ்வாவஸுர் முநே. (494)

வாரீர் நாரதரே! அந்த விஶ்வாவஸுவானவன் அவ்விடத்திலே இப்படி தபஸ்ஸு பண்ணிக்கொண்டிருந்தான்.

ஏவமாஹ மஹாபாக வ்யாக்ரஜந்மா மஹாமுநி:,
அதஸ்தத்ஸத்ருஶம் கிஞ்சித் த்ருஶ்யதே நஸர: க்வசித்,
தத்ஸ்நாநாத் துர்லபம் கிஞ்சித் ந்ருணும் புவி நஜாயதே. (495½)

வாரீர் நாரதரே! வ்யாக்ரஜன்மாவென்கிற மஹாரிஷியானவர் இந்த ஸரஸ்ஸின் வைபவத்தை இப்படிப்பட்டதாகச் சொன்னுர். ஆகையால் அந்த கைரவிணியோடே ஸத்ருஶமான ஓரானெரு ஸரஸ்ஸானது ஓரிடத்திலேயும் என்னுலே பார்க்கப்படவில்லை. இந்த பூமியிலே மனுஷ்யாளுக்கு ஓரானெரு இஷ்டமும் அந்தக்கைரவிணீஸ்னனத்தினலே துர்லபமாக ஆகிறதில்லை.

இதி ஸ்ரீப்ரஹ்மாண்டபுராணே மஹேஶ்வரநாரதஸம்வாதே ப்ருந்தாரண்ய மாஹாத்ம்யே நவமோऽத்யாய:.

ஒன்பதாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீமத்வரவரமுநயேநம:.

# பத்தாவது அத்யாயம்.

யதுக்தந் தேவதேவேஶ த்வயா வ்ருஷபலாஞ்ச்சந,
பஞ்ச தீர்த்தாநி தஸ்யேதி புரதஸ்தாநி மே வத. (496½)

வ்ருஷபத்வஜனான தேவஶ்ரேஷ்ட்டனே! அந்தக் கைரவிணிக்கு நாலு பக்கத்திலேயும் அஞ்சு தீர்த்தங்கள் இருக்கிறதென்று உம்மாலே சொல்லப்பட்டதன்றோ? அந்தத் தீர்த்தங்களையும் தத்தத்வைபவத்தையும் சொல்லுமென்று நாரதர் ருத்ரனைக் கேட்டார்.

ருத்ர:—

கைரவிண்யாஸ்ஸரஸ்யாஸ்து ஸ்திதமுத்தரபூர்வத:,
விமலாம்பஸ்ஸர: கிஞ்சி திந்த்ரதீர்த்தமிதி ஸ்ம்ருதம். (497½)

அந்தக் கைரவிணிக்கு உத்தரபூர்வதிக்கிலே நிர்மலமான தீர்த்தத்தை உடைத்தான ஓரானொரு ஸரஸ்ஸானது இந்த்ர தீர்த்தமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்நாநே தாநே க்ருதே தத்ர நரோ நித்யோ பவிஷ்யதி,
வாஜிதாநம் க்ருதந்தத்ர விஶேஷேண ப்ரஶஸ்யதே. (498½)

அந்த இந்த்ர தீர்த்தத்திலே ஸ்னானமாவது தானமாவது பண்ணப்பட்டிருந்துள்ளவளவில் அப்படிப்பட்ட தாதாவான புருஷனானவன் சிரஞ்ஜீவியாக ஆகாநிற்கிறான். அந்த இந்த்ர தீர்த்தத்திலே அஶ்வதானம் மிகவும் ஶ்லாக்யமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அதாந்யத் தக்ஷிணே பாகே ஸ்திதம் கிஞ்சித்ஸரோவரம்,
ஸோமதீர்த்தமிதி க்யாதம் ஸர்வபாபப்ரணாஶநம். (499½)

அதற்குமேல் கைரவிணிக்கு தக்ஷிணபார்ஶ்வத்திலே ஸர்வ பாபஹரமாய் ஸோமதீர்த்தமென்கிற ஓரானொரு ஸரஶ்ஶ்ரேஷ்ட்டமானது இருக்கிறது.

க்ஷீராணாம் நவநீதாநாம் க்ஷௌமஸ்ய ச படஸ்யச,
தத்ரதாநம் ப்ரஶஸ்தம் ஸ்யாத் தத்நஶ்ச முநிஸத்தம. (500½)

வாரீர் நாரதரே! அந்த ஸோம தீர்த்தத்திலே பால் தயிர் வெண்ணெய் பட்டு வஸ்த்ரம் இந்த தானங்கள் மிகவும் ப்ரஶஸ்தமாயிருக்கிறதுகள்.

தத: தக்ஷிணத: பஶ்சாத் மீநதீர்த்தமிதி ஶ்ருதம்,
மஹாபாபப்ரஶமநம் ஸர்வஸித்திகரம் ந்ருணாம். (501½)

தத்ரசாபி விஶேஷேண முக்தாதாநம் ப்ரஶஸ்யதே,
ப்ரவாலஸ்ய மணீநாஞ்ச மதுநஸ்ஸர்ப்பிஷஸ்ததா. (502½)

அந்தக் கைரவிணிக்குத் தென்மேற்குத் திக்கிலே மனுஷ்யாளுக்கு ஸர்வஸித்திகரமாய் ஸர்வபாபஹரமாய் ஓராநொரு ஸரஸ்ஸானது மீனதீர்த்தமென்று ப்ரஶஸ்தமாயிருக்கிறது. அந்த மீனதீர்த்தத்திலே ப்ரவால மௌக்திக மது ஸர்ப்பிஸ்ஸுக்களுடைய தானமானது மிகவும் விஶேஷமாயிருக்கிறது.

தத உத்தரத: பஶ்சாத் அக்நிதீர்த்தாபிதம் ஸர:,
மஹதாம் பாதகாநாஞ்ச குலிஶந் தந் நிவாரணே. (503½)

மேஷதாநம் ப்ரஶஸ்தம் ஸ்யாத் க்ருதந் தத்ர மஹாமுநே,
ஆரோக்யதம் புஷ்டிகரம் ஐஸ்வர்யஸ்யாபி தாயகம். (504½)

அந்தக் கைரவிணிக்கு வடமேற்கு திக்கிலே மஹாபாதகங்களுடைய நிவாரணத்திலே வஜ்ராயுதமாயிருக்கிற ஓராநொரு ஸரஸ்ஸானது அக்னிதீர்த்தமென்று ப்ரஸித்தமாயிருக்கிறது. அந்தத் தீர்த்தத்திலே அஜதானம் ப்ரஶஸ்தமாயிருக்கிறது. அந்தத் தீர்த்தத்தில் ஸ்னானம் பண்ணுகிற மனுஷ்யாளுக்கு அது ஆயுராரோக்ய ஐச்வர்ய புஷ்ட்யாதி புருஷார்த்தப்ரதமாக ஆகாநிற்கிறது.

உத்தரஸ்யாந்திஶிததா கைரவிண்யாஸ் ஸ்திதம் ஶுபம்,
விமலாம்பஸ் ஸர: கிஞ்சித் விஷ்ணுதீர்த்தமிதி ஶ்ருதம். (505½)

யம்யம் காமயதே காமம் தந்தமாப்நோதி மாநவ:,
தத்ர ஸ்நாத்வா மஹாபாபைர் முச்யதே நாத்ர ஸம்ஶய:. (506½)

அந்தக் கைரவிணிக்கு உத்தர திக்கிலே நிர்மலமான தீர்த்தத்தை உடையதும் பாபஹரமுமான ஓராநொரு ஸரஸ்ஸானது விஷ்ணுதீர்த்தமென்று மிகவும் ப்ரஸித்தமாயிருக்கிறதென்று கேட்கப்பட்டிருக்கிறது. அந்த விஷ்ணுதீர்த்தத்திலே ஸ்னானம் பண்ணுகிற மனுஷ்யன் மஹாபாதகங்களினின்று விடுபட்டவனாய்க்கொண்டு எத்தெத்தை அபேக்ஷிக்கிறானோ அந்தந்த புருஷார்த்தத்தை அடைகிறான்.

தத்ர தாநம் மஹாபாக ஸர்வேஷாஞ்ச ப்ரஶஸ்யதே,
ஸர்வேஷாமேவ தீர்த்தாநாம் உத்தமம் வைஷ்ணவம்
ஸ்ம்ருதம். (507½)

வாரீர் நாரதரே! அந்த விஷ்ணுதீர்த்தமானது எல்லாத் தீர்த்தங்களுக்கும் உத்தமமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்த்தத்தில் ஸகலதானங்களும் ப்ரஶம்ஸிக்கப்படாநிற்கிறதுகள்.

தத்ர ஸ்நாநம் ப்ரஶஸ்தம் ஸ்யாத் முநிவர்க்காபவர்க்கதம். (508)

அந்த விஷ்ணுதீர்த்தத்திலே ஸ்னானமானது ரிஷிஸ்ரேஷ்ட்டாளுக்கும் முக்திப்ரதமாக ப்ரஶஸ்தமாகா நிற்கிறது.

பஞ்சதீர்த்தஸமாயுக்தாமீத்ருஶீந்தாம் ஸரோவராம்,
ஸ்நாயாத் கைரவிணீம் விப்ர யதீச்சதி ஹரே: பதம். (509)

எந்த மனுஷ்யனாகிலும் பகவத்ஸாயுஜ்யத்தை அடைய வேணுமென்று இச்சித்தானாகில் அவன் இந்த அஞ்சு தீர்த்தங்களாலே சூழப்பட்டதாயும் ஸரஶ்ஸ்ரேஷ்ட்டையாயும் இப்படிப்பட்ட வைபவத்தை உடைத்தாயுமிருக்கிற கைரவிணியிலே ஸ்னானம் பண்ணக்கடவன்.

ஏதச்ச ஸரஸிஹ்யங்யத் அத்புதம் ஶ்ரோதுமர்ஹஸி,
தேவர்ஷே வததோ மத்தோ யதநாதி மஹாமதே. (510)

ஸர்வஜ்ஞரான நாரதரே! எந்த ஸரஸ்ஸானது அநாதியோ, அப்படிப்பட்ட இந்த ஸரஸ்ஸுக்கு அத்யத்புதமான இந்த வைபவத்தைக் கேட்கிறதின் பொருட்டு அர்ஹராகா நிற்கிறீர்.

முத்கலோநாம கஶ்சித்து முநி: பரமதார்மிக:,
கண்வபுத்ரோ மஹாதேஜாஸ் தபஸ்ஸ்வாத்யாய தத்பர:. (511)

ரம்யேது கோமதீதீரே கோவிதாரவநே ஸ்தித:,
ஸக்ருத் பித்ராந்வித:குர்வந் தப: பரமதுஶ்சரம். (512)

தத்ரைவ வஸதஸ்தஸ்ய கோவிதாரவநே ஶுபே,
ரம்யமாஶ்ரமமாஜக்முர் முநயஸ்தத்த்வதர்ஶிந:. (513)

கோஷிலோ கௌதமஶ்சைவ கதகோ விமலோ விது:,
பஞ்சைதே பாவநப்ரக்யா முத்கலஸ்ய மஹாமுநே. (514)

தபஶ்சரண தத்பரராயும் மஹாதேஜஸ்வியாயும் பரம தார்மிகராயும் கண்வபுத்ரராயும் முத்கலரென்று பேரை உடைத்தாயுமிருக்கிற ஓராளொரு ரிஷியானவர் கோமதீதீரத்திலேயிருக்கிற கோவிதார வனத்திலே பிதாவோடுகூட ஒருத்தராலும் பண்ண முடியாத தபஸ்ஸைப் பண்ணிக்கொண்டிருந்தார். ஶுபமான கோவிதாரவனத்திலே தபஸ்ஸு பண்ணா நிற்கிற அந்த முத்கலருடைய ஆச்ரமத்தைக் குறித்து தத்வதர்ஶிகளாயும் பாவன

மான யஶஸ்ஸை உடைத்தானவாளாயுமிருக்கிற கோஹிலர் கௌதமர் கதகர் விமலர் விது என்கிற இந்த ஐந்து ரிஷிகள் வந்தார்கள்.

பூஜிதாஶ்ச யதாந்யாயம் தேநதே முநயஸ்ததா,
ரம்யே தஸ்யாஶ்ரமே ராத்ரி முஷுர் விமலமாநஸா:. (515)

அந்த கோஹிலாதி மஹர்ஷிகளானவர்கள் ந்யாயமாக அந்த முத்கலராலே ஆராதிக்கப்பட்டவாளாய்க்கொண்டு அந்த முத்கலருடைய ரம்யமான ஆஶ்ரமத்திலே நிர்மலமனஸ்காளாய்க் கொண்டு அந்த ராத்ரி வஸித்துக்கொண்டிருந்தார்கள்.

தாநப்ரவீந் மஹாதேஜா முத்கலோ முநிஸத்தம:. (515½)

முநிஶ்ரேஷ்டராய் மஹாதேஜஸ்வியான முத்கலரானவர் அந்த கோஹிலாதி மஹர்ஷிகளைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னர்.

க்வ கச்சத மஹாபாகா: பஶ்யதோ மம ஸம்ஶய:. (516)

வாரீர் மஹாபாகாளான ரிஷிகளே! உங்களைப் பாரா நிற்கிற எனக்கு ஸம்ஶயம் உண்டாயிருக்கிறது. நீங்கள் எங்கே போகப் போகிறீர்களென்று முத்கலரானவர் ப்ரஶ்னம் பண்ணினர்.

ருத்ர:—

அத ப்ரத்யூசுரேநந்தே கோஹிலாத்யாஸ்தபோதநா:. (517)

பிறகு கோஹிலர் முதலான அந்த தபஸ்விகளானவர்கள் இப்படி கேளாநிற்கிற முத்கலரைப் பார்த்து ப்ரத்யுத்தரம் சொன்னர்கள்.

முநய:—

ப்ருந்தாரண்யம் கமிஷ்யாமோ யத்ராஸ்தே பகவாந் ஹரி:,
யத்ர ஸா ஸரஸீ ரம்யா நாம்நா கைரவிணீ ஶுபா. (518)

எவ்விடத்திலே மங்களகரையாயும் பாவனமாயும் கைரவிணீ நாமகமுமான ஸரஸ்ஸானது இருக்கிறதோ, எவ்விடத்திலே ஷாட்குண்ய பூர்ணரான ஶ்ரிய:பதியானவர் வஸித்துக்கொண்டிருக்கிருரோ அந்த ப்ருந்தாரண்யத்தைக் குறித்துப் போகிறோம்.

ப்ருக்வாத்யா முநயோ யத்ர தபஶ்சக்ருஸ்ஸுதுஷ்கரம்,
தத்ர கத்வா வயம் ஸர்வே தப: கர்த்தும் க்ருதக்ஷணா:,
தத்ஸமம் த்ருஶ்யதே க்வாபி முக்திக்ஷேத்ரந்ந பூதலே. (519½)

எந்த ப்ருந்தாரண்யத்திலே ப்ருக்வாதி ரிஷிகளானவர்கள் ஒருத்தராலேயும் பண்ணமுடியாத தபஸ்ஸைப் பண்ணிக்கொண்டிருந்தார்களோ, இந்த பூமியில் ஒரு இடத்திலேயும் அந்த ப்ருந்தாரண்ய க்ஷேத்திரத்துக்கு ஸமானமான முக்திக்ஷேத்திரமானது எந்த ஹேதுவினலே இல்லையோ, அந்த ஹேதுவினலே ப்ருந்தாரண்ய க்ஷேத்திரத்திலே நாங்களும் போய் தபஸ்ஸு பண்ண நிஶ்சயித்திருக்கிறேமென்று கோஹிலாதி ரிஷிகள் சொன்னர்கள்.

ருத்ர:—

இத்யுக்தஸ் தைர் முநிவரைர் முத்கலோ முநிஸத்தம:,
தாநப்ரவீதஹஞ்சாபி † யாஸ்யாமி துலஸீவநம். (520½)

ரிஷிஶ்ரேஷ்டர்களாலே இப்படி சொல்லப்பட்ட முநிஶ்ரேஷ்டரான முத்கலரானவர் உங்களோடேகூட நானும் அந்தத் துளஸீவனத்தைக்குறித்து வருகிறேனென்று சொன்னர்.

ஸம்ப்ராப்தா முநயஸ் தேச ஸசாபி முநிஸத்தம:,
ப்ருந்தாரண்யந் ததோ கத்வா ரம்யபக்ஷிம்ருகத்விபம். (521½)
அலங்க்ருதம் முநிகுலைஸ் தபஶ்சரணதத்பரை:,
தாமபஶ்யந் முநிவராஸ் தபஶ்சக்ரு: ப்ருதக்ப்ருதக். (522½)

அந்த கோஹிலாதி முனிஶ்ரேஷ்டர்களும் அந்த முனிஶ்ரேஷ்டரான முத்கலரும், ரம்யமான பக்ஷிகள் ம்ருகங்கள் யானைகள் இதுகளை உடைத்தாயும் தபஸ்ஸு பண்ணுகிறதிலே ஆஸக்தமாயிருக்கிற ரிஷிஸமூஹங்களாலே அலங்கரிக்கப்பட்டுமிருக்கிற ப்ருந்தாரண்யத்தை அடைந்து கைரவிணியைப்பாரா நின்றுகொண்டு அவ்விடத்திலே வேறுவேறுகத் தபஸ்ஸு பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

தத்ரதத்ர ஸ்ரஸ்தீரே ரம்ய பாதபஸங்குலே,
முத்கலஸ்து மஹாதேஜா முநி: பரமதார்மிக:,
ததம்பஸ்யவகாஹ்யாந்தஸ் தத்ர சக்ரே மஹத்தப:. (524)

மஹாதேஜஸ்வியாயும் பரமதார்மிகராயுமிருக்கிற முத்கலரானவர் நானவிதமான செடிகளாலே சூழப்பட்ட அந்த ஸரஸ் தீரத்திலே அந்தக் கைரவிணியிலே நித்யஸ்னனம் பண்ணிக்கொண்டு துஷ்கரமான தபஸ்ஸைப் பண்ணிக்கொண்டிருந்தார்.

† ஆயாஸ்யாமி என்று இருந்தால் மணிப்ரவாள நடைக்குச்சேரும்.

தஸ்யைவம் கைரவிண்யம்பஸ்யவகாஹ்ய ஸ்திதஸ்யது,
பஹவோ வத்ஸரா யாதாஸ் ஸுகேனைவ மஹாத்யுதே:.(525)

அந்தக் கைரவிணீதீர்த்தத்திலே நீராடி இப்படி தபஸ்ஸைப் பண்ணுபவரும் மஹாதேஜஸ்வியுமான அந்த முத்கலருக்கு ஸுகமாய் அநேகஸம்வத்ஸரங்கள் நடந்ததுகள்.

தத: கதாசிதுந்மீல்ய சக்ஷுஷீ ஸர்வதோ திஶ:,
விலோகயந்ததர்ஶாக்ரே ஸ்திதம் மீநம் மஹாதநும். (526)

அதற்குமேல் ஸமாதியிலேயிருக்கிற முத்கலரானவர் ஒருகால் கண்களை விழித்து நாலுபக்கத்திலேயும் பாராநின்றுகொண்டு எதிரே இராநிற்கிற ஒருபெரிய மீனைப் பார்த்தார்.

தாரை: புத்ரைஶ்ச பௌத்ரைஶ்ச பந்துபிஶ்சாப்யதேதரை:,
பரிதஸ்ஸம்வ்ருதம் கஞ்சிந் மநோஹரதராக்ருதிம். (527)

தந்த்ருஷ்ட்வா தபஸோவிக்நம் அமந்யத மஹாத்யுதி:,
முத்கலோ முநிஶார்தூல: ஸம்ஸ்திதஸ்ய மமாத்ரஹி. (528)

மஹாதேஜஸ்வியாய் முனிஶ்ரேஷ்ட்டரான முத்கலரானவர் பார்யைகளோடும் புத்ராளோடும் பௌத்ராளோடும் பந்துக்களோடும் இன்னம் இதராளோடும் கூடிக்கொண்டு மனோஹரதரமான ஆகாரத்தை உடைத்தாயிருக்கிற மத்ஸ்யத்தைப் பார்த்து இங்கே இருக்கிற என்னுடைய தபஸ்ஸுக்கு விக்னமென்று நினைத்தார்.

தமுவாச ஶுபம் வாக்யம் ஸாந்த்வயந் பரயா கிரா. (528½)

முத்கலரானவர் அந்த மத்ஸ்யத்தைப் பார்த்து ச்லாக்யமான வார்த்தையினாலே ஸமாதானம் பண்ணிக்கொண்டு ஶுபமான ஒருவார்த்தையைச் சொன்னார்.

மீநமீந மஹாபாக ஸத்வரோzத்ய த்வமந்யத:,
கச்சைபிர் பந்துபிர் யுக்தோ நத்வம் வஸ்துமிஹார்ஹஸி.(529½)

வாராய் மஹாபாக்கியவானான மஹாமத்ஸ்யமே! நீ இந்த பந்துக்களோடு கூடினவனாய்க்கொண்டு வேறே ஒரு தடாகத்திலே போய்விடு. நீ இவ்விடத்திலே வஸிக்க யோக்யனன்று.

யேச த்வதீயாஸ்ஸரஸி யத்ரவாஸந்தி வாரிஜ,
ம்ருதப்ராயா பவிஷ்யந்தி ஶ்வஸ்தே ஸூர்யோதயாத்பரம் ()

வாராய் மத்ஸ்யஶ்ரேஷ்டமே! உன்னுடைய ஸம்பந்திகளான இந்த மத்ஸ்யங்கள் நாளையதினம் ஸூர்யோதயத்துக்கு

மேல் இந்த ஸரஸ்ஸிலே வஸித்ததுகளேயானல் ம்ருதப்ராயங் களாக ஆய்விடும்.

மமாத்ர ஸரஸி ப்ராஜ்ஞ குர்வதஸ் தப உத்தமம்,
தர்ஶநந்தே மஹாவிக்நோ பவிஷ்யதி நஸம்ஶய:. (531½)

வாராய் மத்ஸ்யமே! இந்த ஸரஸ்ஸிலே உத்தமமான தபஸ்ஸு பண்ணுநிற்கிற எனக்கு உன் தர்ஶநம் நிஸ்ஸம்ஶயமாக மஹாவிக்னத்தை உண்டாக்குமென்று முத்கலர் அந்த மத்ஸ்யத்தைப் பார்த்துச் சொன்னர்.

இத்யுக்தோ பந்துபிஸ்ஸர்வைஸ் தத்க்ஷணதேவ ஸோzந்யத:,
ஜகாம மீனோ தேவர்ஷே நாத்யாபி பரித்ருஶ்யதே. (532½)

வாரீர் நாரதரே! அந்த மத்ஸ்யமானது முத்கலராலே இந்தப்ரகாரம் சொல்லப்பட்டதாய்க்கொண்டு பந்துக்களோடு கூடினதாய் அந்த க்ஷணத்திலேயே வேறொரு ப்ரதேஶத்துக்குப் போய்விட்டது. ஆகையால் அதில் இப்போதும் ஒரு மத்ஸ்யமும் காணப்படவில்லை.

ஏதத்தே கதிதம் ஸர்வம் யத்ப்ருஷ்டோzஹம் மஹாமுநே,
ப்ருந்தாரண்யஸ்ய மாஹாத்ம்யம் தீர்த்தஸ்யச விஶேஷத:. ()

வாரீர் ரிஷிஶ்ரேஷ்ட்டரான நாரதரே! எதைக்குறித்து நான் ப்ரஶ்னம் பண்ணப்பட்டேனே, ப்ருந்தாரண்ய மாஹாத்மியம் என்ன கைரவிணீதீர்த்த வைபவமென்ன இந்த ஸமஸ்த வைபவமும் என்னலே உம்மையும்பொருட்டு விஶேஷமாகச் சொல்லப்பட்டது.

கச்சித்தே ஸம்ஶயோ நஷ்ட: கச்சித்தே நைவ விஸ்ம்ருதி:,
கச்சிச்சாதிகதஶ்சார்த்த: கச்சித்தே ஸபலஶ்ஶ்ரம:. (534½)
கச்சித்தே ஸபலோதர்ம: கச்சித்தே ஸபலோநய:,
இச்சாதே ஸபலா கச்சித் கச்சித் த்ருப்திஸ்தவாபவத். (535½)
ஏதத்தே பரிவிஜ்ஞாதம் கச்சிந் மாஹாத்ம்ய முத்தமம்,
நைவமர்த்தம் விஜாநந்தி ஜநாஹி ஜகதீதலே,
மநுஜ: குத்ரசித் கஶ்சிஜ் ஜாநாதி ஸுக்ருதீ க்ருதீ. (537)

வாரீர் நாரதரே! உம்முடையஸம்ஶயம் தீர்ந்ததா? இந்தக் கதையில் உமக்கு விஸ்ம்ருதி இல்லாமலிருக்கிறதா? இதில் அர்த்தமானது உமக்கு நன்ருக அறியப்பட்டிருக்கிறதா? உம்முடைய பரிஶ்ரமம் கைகூடிற்ரு? உம்முடையதர்மம் ஸபலமாச்சுதா? உம்முடைய ந்யாயம் ஸபலமாச்சுதா? உம்முடைய இஷ்டம் ஸபல

மாச்சுதா? உமக்குத் த்ருப்தி உண்டாச்சுதா? இந்த உத்தம மான மாஹாத்மியமானது உம்மால் நன்ருக அறியப்பட்டதா? இந்த பூமியிலே வஸியாநிற்கிற ஜனங்களானவர்கள் உத்தம மான இந்த அர்த்தத்தை ஒருத்தரும் அறியமாட்டார்கள். புண்ய வானுயும் ஸமர்த்தனுயுமிருக்கிற ஓராளொரு புருஷனுனவன் இதின் வைபவத்தை அறியமாட்டுவன்.

நாவைஷ்ணவாய வக்தவ்யம் நைவாபாகவதாயச,
நஶூத்ராயச வக்த்வ்யம் யதேஷ்டந்து தநேச்சயா. (538)
நவாச்யம் மூர்க்கமத்யேவா நபாஷண்டகணேzதவா,
நநாஸ்திகாநாம் மத்யேச ப்ருந்தாரண்யஸ்ய வைபவம். (539)

இந்தப் புராணவேத்தாவினுலே இதன்வைபவமானது அவைஷ்ணவன்பொருட்டும் அபாகவதன்பொருட்டும் கேவல சூத்ரனையும்பொருட்டும் சொல்லத்தக்கதன்று. இந்தப் புராண மானது கேவலம் தனேச்சையாலே மூர்க்காளுடைய மத்யத்திலே யும் பாஷண்டாளுடைய ஸமூஹத்திலேயும் நாஸ்திகாளுடைய மத்யத்திலேயும் சொல்லத்தக்கதன்று.

ப்ராஹ்மணு: க்ஷத்ரியா வைஶ்யாஶ் ஶூத்ராஶ்ச க்ருதலக்ஷணு:,
ஶ்ரோதுமர்ஹந்தி தேவர்ஷே துலஸீவந வைபவம். (540)

பஞ்சஸம்ஸ்காரபராளான ப்ராஹ்மணுள் க்ஷத்ரியாள் வைஶ்யாள் சூத்ராள் இவர்கள் ப்ருந்தாவன வைபவத்தைக் கேட் கிறதின்பொருட்டு யோக்யராகிருர்கள்.

ஶ்ருண்வந்தி யே நரா பக்த்யா விமலாநந்யமாநஸா:,
தேஷாந்ந துர்லபம் லோகே கிஞ்சிதஸ்தி மஹாமுநே. (541)

வாரீர் நாரதரே! எந்த மனுஷ்யாளானவர்கள் நிர்மலமாய் அவ்யபிசாரமான மனஸ்ஸை உடைத்தானவர்களாய்க்கொண்டு இதன் வைபவத்தை பக்தியாலே கேட்கிருர்களோ, அவர்களுக்கு இந்த லோகத்தில் துர்லபமான வஸ்து ஒன்றுமில்லை.

யே ஶ்ருண்வந்தி நராபக்த்யா வைபவம் ப்ரதிவாஸரம்,
தே zதுர்வந்நஶ்வமேதாதி மஹாயஜ்ஞாந் திநேதிநே. (542)

எவர்கள் இந்த ப்ருந்தாரண்யவைபவத்தை திநந்தோ றும் பக்தியாலே கேட்கிருர்களோ அவர்கள் திநந்தோறும் அஶ்வமேதாதி மஹாயஜ்ஞங்களைப் பண்ணினவர்களாகிருர்கள்.

அத்யாய மேகமதவா ஶ்லோகமேகமதாபிவா,
அதவா பாதமேகந்து ஶ்ருணுயாத் ப்ரதிவாஸரம். (543)

ஸாத்விகனானவன் இந்த ப்ருந்தாவநவைபவத்தில் ஒரு அத்யாயமாவது ஒரு ஶ்லோகமாவது ஒரு பாதமாவது திநந் தோறும் கேட்கக்கடவன்.

அநந்யமாநஸாஶ் ஶ்ருத்வா துலஸீவநவைபவம்,
ஸர்வ காமாநவாப்யேஹ மஹீயந்தே ஹரே: பதே. (544)

இந்த துலஸீவநவைபவத்தை அநந்யமனஸ்கராய்க் கேட்டார்களேயானால் இந்த லோகத்திலே ஸர்வ காமங்களையும் அடைந்து பரமபதத்தில் ஸத்க்ருதாளாக ஆகிறார்கள்.

வித்தார்த்தீ வித்தமாப்நோதி புத்ரார்த்தீ புத்ரமேவச,
வித்யார்த்தீச ததா வித்யாம் ஐஶ்வர்யார்த்தீததைவதத். (545)

துலஸீவநமாஹாத்ம்யம் ஶ்ருத்வா பக்த்யா நரஸ்ஸுதீ:,
ரோகாத் விமுச்யதே ரோகீ பந்தநாத் பந்தவாநபி. (546)

பயாத் விமுச்யதே பீதோ விபந்நோ விபதஸ்ததா,
கர்ப்பிணீ லபதே புத்ரம் கந்யா விந்ததி ஸத்பதிம்,
பக்த்யேதம் வைபவம் ஶ்ருத்வா பர்த்து: ப்ரியதமாபவேத். ()

நல்ல மனஸ்ஸை உடைத்தானவன் பக்தியினாலே ப்ருந்தாவந மாஹாத்மியத்தைக் கேட்டு தநார்த்தியானவன் தனத்தையும் புத்ரார்த்தியானவன் ஸுபுத்ரனையும் வித்யார்த்தியானவன் வித்யையையும் ஐஶ்வர்யார்த்தியானவன் ஐஶ்வர்யத்தையும் அடையா நிற்கிறான். இதன் வைபவத்தைக் கேட்டு கர்ப்பிணியானவள் ஸுபுத்ரனையும் கந்யகையானவள், ஸுதர்ஶநனான பர்த்தாவையும் அடைகிறாள். அந்தக் கன்யகையானவள் பர்த்தாவுக்கு ப்ரியதமையாயுமாகிறாள். இந்த ப்ருந்தாவந வைபவத்தை பக்தியோடே கேட்ட புருஷன் ரோகியானால் ரோகத்தினின்றும் காராக்ருஹவாஸியானால் அந்த பந்தனத்தினின்றும் பீதனானால் அந்த பயத்தினின்றும் ஆபத்கதனானால் அந்த ஆபத்தினின்றும் விடுபடுகிறான்.

ப்ராஹ்மணஸ்து ஸமாகர்ண்ய பக்த்யா வேதாந்தகோ
பவேத். (548)

விஜயம் லபதே ராஜா வைஶ்யஸ்து தநமாப்நுயாத்,
ஶூத்ரஸ்து ஸுகமாப்நோதி பூஜ்யதேச ஸ்வபந்துபி:. (549)

இந்த ப்ருந்தாவந மாஹாத்ம்யத்தை பக்தியோடே ப்ராஹ்மணனானவன் கேட்டால் வேதாந்த பாரங்கதனாகிறான். க்ஷத்ரியனானவன் கேட்டால் யுத்தத்தில் ஜயத்தை அடைகிறான். வைஶ்

யன் கேட்டால் புஷ்கலமான தநத்தை அடைகிருன். ஶூத்ரன் கேட்டால் ஸுகத்தை அடைந்து பந்துக்களாலேயும் பூஜிக்கப்படு கிருன்.

ஶ்ருண்வதாஞ்ச நராயேவை துலஸீவநவைபவம்,
உபகுர்வந்தி தேzப்யந்தே மஹீயந்தே ஹரே:பதே. (550)

துலஸீவன வைபவத்தைக் கேட்கிறவர்களுக்கு எந்த புருஷர்கள் உபகாரம் பண்ணுகிருர்களோ அவர்களும் ஸ்ரீ வைகுண்டத்திலே கொண்டாடப்படுகிருர்கள்.

ஶ்ருண்வந் படந் லிகந் பிப்ரத் அதவா ஶ்ராவயந் பராந்,
துலஸீவந மாஹாத்ம்யம் வைகுண்ட்டேது மஹீயதே. (551)

எந்த பக்திமாஞன பாகவதனுனவன் இந்த ப்ருந்தாவந மாஹாத்ம்யத்தைக் கேளாநின்றுகொண்டும் எழுதாநின்று கொண்டும் இந்த ஸ்ரீகோஶத்தைத் தன்னிடத்தில் வைத்துக் கொள்ளா நின்றுகொண்டும் இந்த ப்ருந்தாவன மாஹாத்ம்யத்தை இதராளைக் கேட்பியாநின்றுகொண்டும் இருக்கிருனே, அந்த மஹாபாகவதனுனவன் ஸ்ரீவைகுண்டத்திலே தேவிமாராவார் திருமகள் பூமி யென்கிறபடியே நித்யமுக்தாளாலே அநவரத பரிசர்யமாண சரண நளினனுய்ப் பெரிய பிராட்டியார் முதலான நாய்ச்சிமார்களோடே வீற்றிருந்தேழுலகுந் தனிக்கோல் செல்ல எழுந்தருளியிருக்கிற ஸ்ரீவைகுண்டநாதனை ஶ்ரிய:பதிக்குச் ‘சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே’ என்கிறபடியே நித்யஸூரிகளோடே ஒரு கோவையாய் மங்களாஶாஸனபரனுய் வாழ்ந்திடுவன்.

இதி ஸ்ரீப்ரஹ்மாண்ட புராணே மஹேஶ்வர நாரதஸம்வாதே
ஸ்ரீப்ருந்தாரண்ய மாஹாத்ம்யே தஶமோzத்யாய:.

பத்தாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீமத்வரவர முநயே நம:.

---

# ப்ருந்தாரண்ய மாஹாத்மிய அநுபந்தம்.

ஸ்வஸ்தி ப்ரஜாப்ய: பரிபாலயந்தாம்
ந்யாய்யேந மார்க்கேண மஹீம் மஹீசா:,
கோப்ராஹ்மணேப்யச்சுபமஸ்து நித்யம்
லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகிநோ பவந்து.

காலே வர்ஷது பர்ஜந்ய: ப்ருதிவீ ஸஸ்யசாலிநீ,
தேசோZயம் க்ஷோபரஹிதோ ப்ராஹ்மணாஸ்ஸந்து நிர்ப்பயா:.
காவேரீ வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:,
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீஶ்ச வர்த்ததாம்.

---

வந்துதைத்த வெண்திரைகள் செம்பவளவெண்முத்தம்
அந்திவிளக்குமணிவிளக்காம்—எந்தை
ஒருவல்லித்தாமரையாள் ஒன்றியசீர்மார்வன்
திருவல்லிக்கேணியான் சென்று.

தாளாலுலக மளந்தவசைவே கொல்
வாளாகிடந்தருளும் வாய்திறவான்—நீளோதம்
வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக்கேணியான்
ஐந்தலைவாய் நாகத்தணை.

விற்பெருவிழவும் கஞ்சனும் மல்லும் வேழமும்
பாகனும் வீழச்
செற்றவன் தன்னைப் புரமெரிசெய்த சிவனுறு
துயர்களை தேவை
பற்றலர் வீழக் கோல் கையிற் கொண்டு பார்த்தன்தன்
தேர்முன் நின்றானைச்
சிற்றவை பணியால் முடி துறந்தானைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே.

வந்தே ப்ருந்தாவநாந்தே மணிகண
விலஸத்ஸௌதஹர்ம்யே க்ருஹாட்யே
ஸம்ராஜத் கைரவிண்யாஸ்தடபுவி
க்ருணிமத்கோபுரே ஸாலரம்யே,
ஆநந்தாக்யே விமாநே முநிகணவிநுதம்
பார்த்தஸூதஞ்ச ராமம்
ரங்கேசம் ஸ்ரீந்ருஸிம்ஹம் கஜவரவரதம்
ஸ்ரீக்ஷிதிப்யாம் ஸமேதம்.

---

# ஸ்ரீ பார்த்தஸாரதி மங்கலம்.

ப்ருந்தாரண்யநிவாஸாய பலராமாநுஜந்மநே,
ருக்மிணீப்ராணநாதாய பார்த்தஸூதாய மங்கலம். 1

ஶ்ரிய: காந்தாய கல்யாணநிதயே நிதயேऽர்த்திநாம்,
ப்ருந்தாரண்ய நிவாஸாய பார்த்த ஸூதாய மங்கலம். 2

லக்ஷ்மீ ஸவிப்ரமாலோக ஸுப்ரூ விப்ரம சக்ஷுஷே,
சக்ஷுஷே ஸர்வலோகாநாம் பார்த்த ஸூதாய மங்கலம். 3

நித்யாய நிரவத்யாய நித்யாநந்த சிதாத்மநே,
ஸர்வாந்தர்யாமிணே ஸ்ரீமத் பார்த்தஸூதாய மங்கலம். 4

ஸ்வதஸ்ஸர்வவிதே ஸர்வபக்த ஸர்வஹிதைஷிணே,
ஸுலபாய ஸுஶீலாய பார்த்தஸூதாய மங்கலம். 5

பரஸ்மை ப்ரஹ்மணே பூர்ண காமாய பரமாத்மநே,
ப்ரயுஞ்ஜே பரதத்த்வாய பார்த்தஸூதாய மங்கலம். 6

ஆகாரத்ரய மஶ்ராந்தம் ஆத்மநா மநுபஶ்யதாம்,
அத்ருப்தாம்ருத ரூபாய பார்த்தஸூதாய மங்கலம். 7

ப்ராயஸ்ஸ்வசரணௌ பும்ஸாம் ஶரண்யத்வேந பாணிநா,
ஸ்வயம்தர்ஶயதே ஸ்ரீமத் பார்த்தஸூதாய மங்கலம். 8

ஸ்ரக்பூஷாம்பர ஹேதீநாம் ஸுஷமாவஹ மூர்த்தயே,
ஸர்வார்தி ஶமநாயாஸ்து பார்த்தஸூதாய மங்கலம். 9

ஸ்ரீ வைகுண்ட விரக்தாய ஸ்ரீமத் கைரவிணீதடே,
ருக்மிண்யா ரமமாணாய பார்த்தஸூதாய மங்கலம். 10

ஸ்ரீமத் ஸுந்தர ஜாமாத்ரு முநி மாநஸவாஸிநே,
ஸர்வலோகநிவாஸாய பார்த்தஸூதாய மங்கலம். 11

ஸ்ரீமத் ப்ருந்தாவநாந்தஸ்த மங்கலாபரணாங்க்ரயே,
மங்கலாநாம் நிவாஸாய பார்த்தஸூதாய மங்கலம். 12

மங்களாஶாஸந பரை: மதாசார்யபுரோகமை:,
ஸர்வைஶ்ச பூர்வைராசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்கலம்.

ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்.
ஆசாரியர் திருவடிகளே சரணம்.

---

The Kamala Printing Press, 103, Armenian Street, Madras-1.

ஸ்ரீ

## கீதாசார்யரே எம்பெருமானாராக அவதரித்தல்

ஸர்வேச்வரன் ஆச்ரித ஸம்ரக்ஷணார்த்தமாக ஸ்ரீப்ருந்தாரண்ய க்ஷேத்ரமான திருவல்லிக்கேணியில் கீதாசார்யராக சேவை சாதித்து சௌலப்ய குணத்தை ப்ரகாசப்படுத்துகிறார். கலியுகத்தில் ஆஸூரி கேசவ சோமயாஜியாரும் அவர் பத்னியான காந்திமதியம்மையாரும் புத்ர சந்தானார்த்தமாக கைரவிணி தீர்த்தக் கரையில் ஸ்ரீ கீதாசார்யரை த்யானித்துக் கொண்டு சிலகாலம் ஆராதித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு நாள் அவர்கள் ஸ்வப்னத்தில் கீதாசார்யர் எழுந்தருளி நாமே உமக்கு புத்ரனாக அவதரிக்கிறோம் என்று சாதித்தார். பிறகு இருவரும் ஸ்ரீபெரும்பூதூரில் எழுந்தருளி வாசம் செய்து கொண்டிருந்தார்கள். சில நாள் கழித்து காந்திமதியம்மையார் கர்ப்பவதியாகி பத்து நாளுங்கடந்த இரண்டாம் நாள் சித்திரைத் திருவாதிரை நன்னாளில் ஓர் ஸத்புத்திரன் ராமாநுஜ திவாகரராக அவதரித்து உலகில் அஜ்ஞானவிருளைப் போக்கி ஜ்ஞான ஒளியைப் பெருக்கி உலகத்திலுள்ளவர்களை திருமகள் கேள்வனுக்காக்கியருளினார். பிறகு இவர் இளையாழ்வார் என்னும் திருநாமத்துடன் விளங்கியருளினார் ஸ்ரீ கீதையருளிச் செய்த ஸ்ரீ கீதாசார்யர்தானே ராமாநுஜ திவாகரராய்த் தோன்றி, கீதையின் செம்மைப் பொருளைப் பாரினில் உய்யும்பொருட்டு கீதா பாஷ்யமாக அருளிச்செய்தருளினார். பிறகு திருவல்லிக்கேணிக்கு எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தருளினார். ஆகையால் இவருக்கு சித்திரையில் எய்ந்த திருவாதிரை ப்ரஹ்மோற்சவத்தில் இரண்டு வேளை திருவீதிப் புறப்பாடும் நாலாயிர திவ்ய ப்ரபந்த சேவையும் நடந்து வருகிறது. ஆக, கீதாசார்யரே உடைவராகத் தோன்றி கீதையின் பொருளை விளங்க வைத்தார் என்றும், உடையவர் திருவல்லிக்கேணிக்கு எழுந்தருளி மங்களாசாசனம் செய்தருளினார் என்றும் திருவல்லிக்கேணிக்கு உண்டான பெருமைகளை சொல்லப்பட்டது. இவ்விஷயம் ராமாநுஜார்ய திவ்யஸூரி சரிதையில் கூறப்பட்டிருக்கிறது.

---

ஸ்ரீ

# பேயாழ்வார் திருமழிசையாழ்வார் நித்யவாஸம்

மாடமா மயிலையில் பேயாழ்வார் திருவவதாரம் செய்தருளி க்ராமைக ராத்ரராய் வாசம் செய்தார். பிறகு முதலாழ்வார்கள் மூவரும் திருக் கோவலூரில் சந்தித்து, பொய்கையாழ்வார் வையந்தகளி திருவிளக் கேற்றி, பூதத்தாழ்வார் அன்பேதகளி திருவிளக்கேற்றி பேயாழ்வார் "திருக்கண்டேன்" என்று ச்ரிய:பதியான ஸர்வேச்வரனை ஸாக்ஷாத் கரித்தருளினார். பிறகு திருவல்லிக்கேணிக்கு எழுந்தருளி பஹு காலம் நித்தியவாசம் செய்தருளினார். அங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமானைக்கண்டு களித்து அநுபவித்து சௌலப்யத்துக்குத் தோற்று அடிமை செய்ய விரும்பி ஒரு திருநந்தவனம் வைத்து துளபத்தொண்டு செய்து வாழ்ந்து கொண்டிருந்தார். இந்த திருநந்தவனம் திருவல்லிக் கேணியில் பேயாழ்வார் சந்நதி பக்கத்திலுள்ளது. அங்குள்ள கிணறும் பேயாழ்வாரால் ஏற்பட்டது. இப்படி துளபத்தொண்டிலே வாழ்ந்தருளும் காலத்திலே ஒரு நாள் சைவ சமய ப்ரவர்த்தகரான சிவவாக்கியர் என்பவர் திருநீறும் ருத்ராக்ஷமும் அணிந்து அவ்வழியே வந்தார். அதைக் கண்ட பேயாழ்வாரும் சிவவாக்கியரை திருத்தவேணும் என்று கருதினார். பரம க்ருபையுடன் அங்குள்ள செடிகளை தலைகீழாக நட்டு இல்லிக் குடத்தில் தண்ணீர் எடுத்து இறைத்துக் கொண்டிருந்தார். இதைக்கண்ட சிவவாக் கியர் பேயாழ்வாரைப் பார்த்து, ஓய் நீர்பேயரோ என்று கேட்டார். அதற்கு பேயாழ்வார் யான் எம்பிரானுக்கு பேயனே நான் பேயோடாடிக்கு பேய னல்ல என்று அருளிச் செய்தருளினார். உடனே இருவருக்கும் காரணப் பொருள் இன்னது என்று நிர்ணயிக்க வாக்வாதம் நடந்தது. "நாராயணன் நான்முகனைப் படைத்தான் நான்முகனும் தான்முகமாய் சங்கரனை தான் படைத்தான்" என்று சிவவாக்கியர் தம் வாயாலே அருளிச்செய்து தன் கழுத்தில் அணிந்திருந்த ருத்ராக்ஷத்தை இடது கையால் அறுத்து வெரட்டி எசினார். உடனே பேயாழ்வார் திருவடித் தாமரைகளில், சாஷ் டாங்க தண்டன் சமர்ப்பித்து அங்கீகரிக்கும்படி ப்ரார்த்தித்தருள, தாமும் பரம கிருபையுடன் அங்கீகரித்தருளி ஸ்ரீவைஷ்ணவராகத்திருத்தி திரு மழிசையாழ்வார் என்று திருநாமம் சாற்றி தனக்கு சிஷ்யராக்கி யருளி னார். அன்று முதல் திருமழிசையாழ்வார் ஆசார்யர் சந்நிதியில் நித்ய வாசம் பண்ணத் திருவுள்ளங்கொண்டு 400 வருஷங்கள் கைரவிணி புஷ்கரிணிக் கரையில் போகத்தில் எழுந்தருளியிருந்தார். இக்காரணத் தைக் கொண்டே திருமழிசைபிரான் சாற்று முறையில் பேயாழ்வார் சூடிக்களைந்த துழாயும், உடுத்துக்களைந்த பீதகவாடையும் கலத்ததுண் கைக்கு ப்ரசாதங்களும் வந்து திருமழிசைப்பிரானுக்கு கண்டருளச் செய்து பிறகு சாற்றுமுறை நடப்பது வழக்கமாக இருக்கிறது. ஆகை யால் பேயாழ்வார் திருநந்தவன கைங்கர்யம் செய்தருளின ஏற்றமும் திருமழிசைப்பிரான் யோகத்தில் எழுந்தருளியிருந்த ஏற்றமும் திருவல் லிக்கேணிக்குண்டு. இக்காரணங்களாலேயே பேயாழ்வாருக்கும் திரு மழிசையாழ்வாருக்கும் ஐப்பசி சதயத்திலும் தையில்மகத்திலும் நாலாயிர திவ்யப்ரபந்த சேவை சாற்று முறைகள் ப்ரதி தினமும் நடந்து வருவது திருவல்லிக்கேணியில் வழக்கமாக இருக்கிறது. (திவ்யஸூரி சரிதையில் கூறப்பட்டிருக்கிறது).

ஸ்ரீ

# வேங்கட க்ருஷ்ணன் கிதாசார்யர் வைபவம்

## (திருமலை ஸ்தலபுராணாந்தர்கதம்)

தொண்டைமான் சக்ரவர்த்தி என்பவர் திருமலையை அரசாண்டு கொண்டிருந்தார். அவர் திருவேங்கடமுடையானிடத்தில் அதிக அன்பு பூண்டவர். தினந்தோறும் திருவேங்கடமுடையான் திருவடிகளில் 1008 ஸ்வர்ண புஷ்பங்களினால் அர்ச்சித்து வணங்கி வழிபட்டுக் கொண்டிருந் தார். திருமலை வட திசைக்கும் தென் திசைக்கும் அணிவிளக்காயிருக் கிறது. ஆகையால் எல்லா சிற்றரசர்களும் திருமலையைக் கைப்பற்றி அரசாள ஆசை கொண்டிருந்தார்கள். தொண்டைமான் சதுரங்க பலத் துடன் பிறரால் ஜயிக்க முடியாத நிலையில் அரசாண்டு கொண்டிருந்தமை யால் ஒருவராலும் ஜயிக்க இயலாதிருந்தது. ஒரு நாள் வேட்டையாட இச்சை கொண்டு குதிரையின் மேலேறி ஸ்ரீப்ருந்தாரண்ய க்ஷேத்திரத்தில் வேட்டையாடும் சமயத்தில் சூரியன் மறைந்து இருட்டாகிவிட்டது. அந்த சமயத்தில் மயிலை நகர்க்கதிபதியான அரசனிடம் வேவுகாரர்கள் தொண்டைமான் தனித்து வேட்டையாடிக்கொண்டிருந்து ஸ்ரீப்ருந்தா ரண்யத்தில் இரவு தங்கியிருப்பதை தெரிவித்தனர். உடனே மயிலை அரசன் சதுரங்க சைன்யங்களுடன் புறப்பட்டு வந்து தனித்திருந்த தொண்டைமானை எதிர்த்தான். தொண்டைமான் சக்ரவர்த்தி திருவேங் கடவரை தியானித்து, எனக்கு சேவை தந்தருளவேணும் என்று ப்ரார்த் தித்தார். உடனே திருவேங்கடமுடையான் ப்ரத்யக்ஷமாக சேவை தந்து தொண்டைமான் சக்ரவர்த்தியினுடைய பக்திக்கு உகந்து தன் கையிலேந் திய சக்ராயுதத்தை தொண்டைமான் சக்ரவர்த்திக்குக் கொடுத்து இதைக் கொண்டு ஜயித்து நம் ஊருக்கு வாரும் என்று சாதித்தருளி சங்கத்தை வலது திருக்கையில் எந்தி, இடது திருக்கையை 'மாமேகம் ஶரணம் வ்ரஜ' என்று அடிக்கீழ் அமருங்கோள் என்று தன் திருவடியைக்காட்டி நின்ற திருக்கோலமாக சேவை தந்தருளினர். அப்போது திருமலையில் திருவேங்கடமுடையான் திருக்கைகளில் சங்கு சக்ராயுதங்கள் மறைந்தன. பிறகு தொண்டைமான் எதிரிகளை ஜயித்து சக்ராயுதத்தை திருவேங்கட முடையானிடம் சமர்ப்பித்தார். திருவேங்கடவர் தாம் எந்திக்கொள்ளா மல் உம்மிடத்தில் திருவாராதனத்தில் வைத்து ஆராதியும். நான் பிற் காலத்தில் என் அந்தரங்க பக்தர் மூலமாக வாங்கிக் கொள்ளுகிறேன் என்று சாதித்தருளினர். பிறகு ஸ்வாமி எம்பெருமானர் திருவேங்கட வர் திருக்கையில் சமர்ப்பிக்க எந்திக்கொண்டு இராமானுஜரை ஆசார்ய ராக அங்கீகரித்தருளினர். ஆகையால் தொண்டைமான் சக்ரவர்த்திக்கு சக்ராயுதத்தைக் கொடுத்து திருவேங்கடமுடையான் சங்கம் மாத்திரம் வலது கையில் எந்தி சேவை சாதித்தருளினமையால், மூலவருக்கு ஸ்ரீ வேங்கடகிருஷ்ணன் என்று திருநாமம் அமைந்தது.

ஸுமதி என்னும் மஹருஷி ஒருவர் கைரவிணி தீர்த்தக் கரையில் தவம் செய்து கொண்டிருந்தார். அவர் பாரதயுத்தத்தில் ஜ்ஞானாதிகரான பீஷ்மாச்சாரியருக்கு சேவை சாதித்தருளின முறையை தரிசனம் பண்ண வேணும் என்று தவம் புரிந்தார். துர்யோதனன் ஆயுதமெடேன் என்

னும் வரம் வாங்கிக்கொண்டு அஸ்திநபுரத்திற்கு வந்ததும் ஆயுதமெடுக்கும்படி நான் செய்கிறேன் என்று பீஷ்மாச்சாரியர் ப்ரமாணம் பண்ணினர். தன்னுடைய ப்ரதிஜ்ஞையை மாற்றியாகிலும் அடியவர்களுடைய ப்ரதிஜ்ஞையை பூர்த்தி செய்தருள்வது பகவானுடைய தன்மை என்பதையறிந்த ஜ்ஞானதிகர் பீஷ்மாச்சாரியர். ஆகையால் ஆயுதம் எடுக்கும்படி செய்கிறேன் என்று ப்ரமாணம் பண்ணினர். பிறகு பாரத யுத்தத்தில் முன்னணியில் பீஷ்மருக்கும் பார்த்தனன அர்ச்சுனனுக்கும் போர் துடங்கியது. பார்த்தனுக்கு சாரதியான கண்ணனை பீஷ்மர் அநேக அம்புகளினல் முகத்திலே இரத்தம் பெருகும்படியாக அடித்தார். கண்ணன் புன்முறுவலாக சிரிக்கத் துடங்கினன், பீஷ்மரும் துக்கப்பட்டு தன் பிரதிஜ்ஞையை நிறைவேற்றக் கருதி "மம ப்ராணஹி பாண்டவா:" என்கிறபடி கண்ணனுக்கு பாண்டவர்கள் ப்ராண பூதர்களாகையால் ப்ராண பூதனன அர்ஜ்ஜுனனை பலபடி பல அம்புகளினல் அடித்தார். உடனே கண்ணனுக்கு சீற்றம் பிறந்து திருவாழியை நினைத்து கையிலேந்தி இரதத்திலிருந்து கீழே குதித்து பீஷ்மாசாரியரிடம் ஓடிவந்தார். உடனே பீஷ்மாசாரியர் தன் கையிலுள்ள ஆயுதங்களை கீழே போட்டு கண்ணனிடம் சரணகதி பண்ணி பலவிதமாக தோத்திரம் செய்து ஆனந்த பாஷ்பம் பெருக்கினர். பிறகு ஆயுதமெடுக்கும்படி பண்ணின ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றவும் சக்ரமேந்திய அழகை சேவிக்கவும், உன் செந்தாமரை போன்ற திருக்கண்களை சேவிக்கவும் இம்மாதிரி போர்புரிந்தேன், என்னுடைய இஷ்டம் சித்தித்து விட்டது, இனி என்னுடைய அபராதங்கள் எல்லாவற்வற்றையும் பொருத்தருளவேணும் என்று ப்ரார்த்தித்து அபராதக்ஷாபணம் பண்ணிக் கொண்டார். போரில் இந்த நிலையோடு நின்ற கண்ணனை சேவித்த பீஷ்மாச்சாரியர் மிக்க சந்தோஷம் கொண்டு பக்தி மிகுந்து யுத்தத்திலிருந்து மீண்டு சரதல்பத்தில் படுத்து தர்மபுத்திரரை வ்யாஜமாக்கி ஸஹஸ்ரநாம தோத்திரத்தை கண்ணன் விஷயமாகச் செய்து லோகத்திலுள்ளவர்களுக்கு உபகாரகரானர். அடியார்களுக்காகத்தான் தன் ப்ரதிஜ்ஞையை மாற்றிக்கொள்ளும் தன்மையும், பார்த்தனன அருச்சுனனுக்கு சௌசீல்ய குணத்துடன் ஒரு நீராகக் கலந்து பரிமாறின தன்மையும், தன் திருமேனியில் பல ஆயுதங்கள் ஏந்தி புஷ்பமாக நினைத்து சந்தோஷித்த தன்மையும், சக்கரத்தை கையிலேந்திய ஸ்வாமித்வ தன்மையும், ப்ரத்யக்ஷமாகத் தோன்றுகையால் ஸௌலப்யத் தன்மையும், பீஷ்மருடைய தோஷங்களையும் பாண்டவர்களுடைய தோஷங்களையும் போக்யமாகக்கொண்ட வாத்ஸல்யத் தன்மையும் அமைந்த நிலையை சேவிக்க வேணும் என்று ஸுமதி என்னும் மஹருஷி பல வருஷங்கள் தவம் புரிந்தார். பிறகு கண்ணனும் பீஷ்மாச்சாரியருக்கு சேவை சாதித்தருளியவண்ணமே ஸுமதி ருஷிக்கு சேவை சாதித்தருளினர். பார்த்தனுக்கு ஸாரத்பம் செய்த நிலையில் சேவை சாதித்தமையால் பார்த்தஸாரதி என்னும் திருநாமத்துடன் பீஷ்மாச்சாரியருடைய அம்பினல் அடிபட்ட நிலையை தன் திருமுக மண்டலத்தில் காட்டியருளினர். தன் பக்தரும் ஜ்ஞானதிகருமான பீஷ்மாச்சாரியருடைய அம்பை புஷ்பம்போல் தன் மார்பில் ஏற்றுக்கொண்டார். இப்போது ஆனி மாதம் ஜ்யேஷ்டாபிஷேகத்தன்று கவசம் களைந்து திருமஞ்சனம் கண்டருளும்போது அந்த அம்புகளை திருமார்பில் ப்ரத்யக்ஷமாகக் கண்டு சேவிக்கலாம். பாாத்தனுக்கு கண்ணன் ஸாரத்யம் பண்ணும் சமயத்தில்

O28:38·2111 Hru
N53



லோகோபகாரார்த்தமாக அருளிச் செய்த கீதோபநிஷத் தாத்பர்யமான சரம ச்லோகார்த்தத்தை அர்ச்சையில் ப்ரத்யக்ஷமாகக் காட்டியருளினார். அதாவது பூர்வார்த்தத்தில் "மாமேகம் ஶரணம்" என்று மூலவரான வேங்கடக்ருஷ்ணன் இடது திருக்கையால் என் திருவடிகளையே பற்றுங்கோள் என்று தன் திருவடியைக்காட்டி சேவை சாதித்தருளுகிறார். உற்சவ மூர்த்தியான பார்த்தஸாரதி உத்தரார்த்தத்தில் "அபயம் ஸர்வ பூதேப்ய:" என்று வலது திருக்கையால் ஸர்வருக்கும் அபயப்ரதானம் பண்ணி காட்டியருளுகிறார். ஸ்ரீ கீதையை திருத்தேர்த்தட்டிலே அருளிச்செய்தமையால் கீதாசார்யன் என்று திருநாமம். லோகத்திலுள்ள பல சமயத்தவர்களுக்கும் சாஸ்த்ரார்த்தங்களையும் உபநிஷத் அர்த்தங்களையும் ஸ்ரீ கீதை வாயிலாக சாதித்தருளுகையால் ஜகத்குருவென்று திருநாமம். இவ்வர்த்தங்களை யுட்கொண்டே ஸ்ரீ க்ருஷ்ணாஷ்டகத்தில் ஒவ்வொரு ஶ்லோகங்களிலும் க்ருஷ்ணம் வந்தே ஜகத் குரும் என்று அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. மாமேகம் ஶரணம் என்று உபாயத்தையும், அபயம் ஸர்வ பூதேப்ய: என்று எல்லோருக்கும் உஜ்ஜீவன காரணமான அபயப்ரதானத்தையும், தத்பலமான மோக்ஷப்ரதத்வத்தை மோக்ஷயிஷ்யாமி என்று சாதித்து அர்ச்சையில் அநுஷ்டான பர்யந்தமாக காட்டியருளுகிறான். இவ்வர்த்தங்களை யுட்கொண்ட பிள்ளை பெருமாள் ஐயங்கார் நூற்றெட்டு திருப்பதியந்தாதியில் திருவல்லிக்கேணி 94-வது பாவில் "கருவல்லிக்கு மருந்தாம்" என்றும் "மாகதிக்கு ஏணியாம்" என்றும் சரமச்லோகார்த்தம் அநுஷ்டான பர்யந்தமுள்ள திவ்ய தேசம் என்று கூறியுள்ளார். அதாவது மாமேகம் ஶரணம் என்பதை கருவல்லிக்கு மருந்தாம் என்றும், அபயம் என்பதை ஏணி என்றும், மோக்ஷயிஷ்யாமி என்பதை மாகதி என்றும் விளக்கமாகக் கூறியுள்ளார்.

ஆக, திருவேங்கடமுடையானே திருவல்லிக்கேணியில் தொண்டைமான் சக்ரவர்த்திக்கு ப்ரத்யக்ஷமானார் என்றும், அவரே ஸ்ரீருக்மிணீ பலராம ப்ரத்யும்ன அநிருத்த ஸாத்யகிகளுடன் ஸகுடும்பமாக வ்யாசருக்கு சேவை சாதிக்க ப்ரதிஷ்டிப்பித்தார் என்றும் ஸுமதி என்னும் மஹரிஷிக்கு கீதாசார்யன் சேவை சாதித்தருளினார் என்றும் சரமச்லோகார்த்தத்தை மூலவரும் உற்சவரும் ப்ரகாசிப்பித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் சரமச்லோகார்த்த ப்ரகாசத்தில் பிள்ளைப் பெருமாள் ஐய்யங்கார் நூற்றெட்டு திருப்பதி யந்தாதியில் ஈடுபட்டார் என்றும் பேயாழ்வார் திருநந்தவனம் வைத்து கைங்கர்யம் பண்ணினஸ்தலம் என்றும் திருமழிசைப்பிரான் பேயாழ்வாரால் ஸ்ரீவைஷ்ணவராய் 400 வருஷகாலம் யோகத்தில் எழுந்தருளியிருந்த ஸ்தலம் என்றும் திருமங்கையாழ்வார் பஞ்ச மூர்த்திகளையும் தனித்தனியாக மங்களாசாஸனம் பண்ணின ஸ்தலம் என்றும் ருஷிகள் பலரும் தவம் புரிந்து ஸித்தி பெற்ற ஸ்தலம் என்றும் ஸ்ரீப்ருந்தாரண்ய க்ஷேத்திரமான திருவல்லிக்கேணி ஸ்தல மாஹாத்ம்யத்தைக் கூறப்பட்டது.

---

TAMIL NADU ARCHIVES LIBRARY
110008

## ஸ்ரீ க்ருஷ்ணஷ்டகம்.

1. வஸுதேவ ஸுதம் தேவம் கம்ஸ சாணூர மர்த்தநம்
தேவகீ பரமாநந்தம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.

2. அதஸீபுஷ்ப ஸங்காஶம் ஹார நூபுர ஶோபிதம்
ரத்ந கங்கண கேயூரம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.

3. குடிலாலக ஸம்யுக்தம் பூர்ண சந்த்ர நிபாநநம்
விலஸத் குண்டல தரம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.

4. மந்தார கந்த ஸம்யுக்தம் சாருஹாஸம் சதுர் புஜம்
பர்ஹி பிஞ்சாவ சூடாங்கம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்

5. உத்புல்ல பத்ம பத்ராக்ஷம் நீலஜீமூத ஸந்நிபம்
யாதவாநாம் ஶிரோரத்நம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.

6. ருக்மிணீ கேளிஸம்யுக்தம் பீதாம்பர ஸுஶோபிதம்
அவாப்த துலஸீகந்தம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.

7. கோபிகாநாம் குசத்வந்த்வ குங்குமாங்கித வக்ஷஸம்
ஸ்ரீநிகேதம் மஹேஷ்வாஸம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்

8. ஸ்ரீவத்ஸாங்கம் மஹோரஸ்கம் வநமாலா விராஜிதம்
ஶங்க சக்ர தரம் தேவம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.

9. க்ருஷ்ணஷ்டக மிதம்புண்யம் ப்ராதருத்தாய ய:படேத்
கோடிஜந்ம க்ருதம் பாபம் ஸ்மரணேந விநஶ்யதி.

ஸ்ரீக்ருஷ்ணஷ்டகம் ஸமாப்தம்

ப்ருந்தாரண்ய நிவாஸாய ப்ரணதாபீஷ்டதாயினே
ஸ்ரீமத் வேங்கடக்ருஷ்ணய கீதாசார்யாய மங்களம்.

---

Printed at the Kamala Printing Press,
103, Armenian Street, Madras-1.



ஸ்ரீ மானம் நரஸிம்மலு நாயுடு குமாரரும்,
M. N. ஆளவந்தார் இராமாநுஜ தாஸர் ஜ்யேஷ்ட ப்ராதாவுமான
ஸ்ரீமான் M. N. வரதராஜராமாநுஜ தாஸர்.

ஸ்ரீ. உ. வே. மஹாவித்வான். ஸ்ரீ காஞ்சீபுரம் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின் திருவடிஸம்பந்தியும், ஸ்ரீ உழுதமங்கலம் ஸ்ரீ [illegible] நரஸிம்மலு நாயுடுவின் குமாரருமான M. N. அய்யுலு நாயுடு என்கிற M. N. ஆளவந்தார் இராமாநுஜ தாஸர் அவர்களால், தமது ஜ்யேஷ்டப்ராதாவான ஸ்ரீமான் M. N. வரதராஜராமாநுஜ தாஸர் அவர்களின் ஞாபகார்த்தமாக இந்த ஸ்ரீப்ருந்தாரண்ய மாஹாத்மியம் அச்சிட்டு, விஜய சித்திரை திருவோணத்தன்று வெளியிடப்பட்டது.

DIGITIZED